# பூவும் பொட்டும்

கலைவாணி சொக்கலிங்கம்



# பூவும் பொட்டும்!

## 1



விடாமல் அழுதுகொண்டே
இருந்தாலும் ரசிக்கத்தான்
செய்கிறோம் மழையை!

இரண்டு நாட்களாய் விடாமல் பெய்து கொண்டிருந்தது மழை. காலை நேரமா, மாலையாகிவிட்டதா என யூகிக்க முடியாத அளவிற்கு இருள் சூழ்ந்திருக்க, வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இன்னும் இரண்டு நாட்கள் மழை நீடிக்கும் என அறிவிப்புகள் வந்துகொண்டே இருந்தன.

வெளியூரில் இருந்து பதினாறாம் நாள் காரியத்திற்கு வந்திருந்த உறவினர் கூட்டம், மழையைக் காரணம் காட்டி வீட்டோடு தங்கிவிட்டனர். அவர்களுக்குச் சமைத்துப் பரிமாறிக் கவனித்துக் கொள்ளப் பெரும்பாடுபட்டுப் போனாள் கற்பகம்.

கடைத் தெருவிற்குக்கூடப் போகமுடியாமல் வீட்டில் இருந்த பொருட்களைக் கொண்டு சமைத்த உணவைச் சிலபல குறைகளைச் சொல்லிக்கொண்டே உண்டுகளித்தன உறவினர் கூட்டம்.

"இந்த மழைக்கு நண்டுக் குழம்பைக் காரசாரமா வெச்சா நல்லா இருக்கும். ஜலதோஷமும் பிடிக்காது."

"மட்டன் குழம்புல மசாலாவுக்குப் பதிலா மிளகையும் இஞ்சியையும் அரைச்சிப் போட்டா தெருவே மணக்கும். ஏன் கற்பகம்... இந்த ஊருல ஆட்டுக் கறி கிடைக்காதா?" - கணவர் வழி உறவினர் கேட்க, கடுப்பானாள் கற்பகம்.

"எல்லாம் கிடைக்கும். ஆனா நீங்க வந்த நேரம் சனியன் பிடித்த மழை விடமாட்டேங்குதே. இந்த மழையில எங்கே போய்க் கறி வாங்குவேன்?"

கூடத்துத் தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்திருந்த நர்மதாவின் கண்கள் சரம்சரமாய் நேர்கோடாய் இறங்கிக் கொண்டிருந்த மழையை வெறித்துக் கொண்டிருந்தன.

என்ன மனிதர்கள் இவர்கள்! இழவு நடந்த வீட்டில் நண்டுக் குழம்பும் கறிச் சோறும் கிடைக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார்களே!

அதுவும் இறந்தது ஒன்றும் வாழ்ந்து முடிந்து கண் மூடிய வயதானவர்கள் அல்ல. வாழ வேண்டிய வயதில் திருமணமாகி ஆறே மாதத்தில் தன் மனைவியின் வயிற்றில் வாரிசைக் கொடுத்துவிட்டுப் போன தன் கணவன்.



இந்தக் குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசு. வேலை செய்து கொண்டிருக்கும்போது மின்சாரம் தாக்கிக் கொடூரமாய் இறந்து போனவன். அவனை எண்ணியோ அவனால் பூவையும் பொட்டையும் இழந்து நிற்கும் தன்னை எண்ணியோ இவர்கள் அழ வேண்டாம்.

தன் வயிற்றில் வளரும் நான்கே மாதங்களான சிசுவிற்காக வருத்தப்பட வேண்டாமா? அனுதாபம் கொள்ள வேண்டாமா?

வந்தார்கள். ஊருக்காக அழுதார்கள். காரியம் செய்கிறோம் என்ற பெயரில், சங்கரனுக்குப் பிடித்த உணவு வகைகளைச் சமைத்துச் சாப்பிட்டனர்.

போதாதென்று இந்த இரண்டு நாட்களாய்க் கூடவே இருந்து கொண்டு கற்பகத்திற்குத் தூபம் வேறு போட்டுக் கொண்டிருந்தனர்.

"இனிமே என்ன செய்யப் போற, கற்பகம்? இந்த விடியா மூஞ்சிய சங்கரனுக்குக் கட்டி வெச்சதே தப்பு."

"நான்கூட வேண்டாம்னேன். கேட்டியா... என் சம்பந்தி மகளைக் கட்டியிருக்கலாம். உன் மகன் தீர்க்காயுசா இருந்திருப்பான்."

"சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு போயும் போயும் இவளைப் போய்த் தேடிப் பிடிச்சியே. இப்பப் பாரு... வந்த ஆறே மாசத்தில குடும்பத்தையே சீர்குலைச்சிட்டாளே."

"இவளும் இவ மூஞ்சும்... ஒரு நகை நட்டு உண்டா? ஒரு சீரு உண்டா? சங்கரனுக்கு என்ன வேறு பொண்ணா கிடைக்காது. இந்தப் பிச்சைக்காரியக் கட்டி வெச்சிட்டியே..."

"இதோ பாரு கற்பகம்... ஏற்கெனவே உனக்கு மூணு பொட்டப் புள்ளைங்க. அதுல ஒன்னைத்தான் கட்டிக் கொடுத்திருக்க. மிச்சம் உள்ள ரெண்டையுமே உன்னால கரையேத்த முடியுமோ முடியாதோ...

"அதுல இவளையும் வெச்சிக்கிட்டு அழுந்தப் போறியா? இவளும் சும்மா இல்ல. வயித்தில சுமையோட நிக்கிறா. இவ பெத்துப் போடுறதையும் நீதான் ஆளாக் கணும். முடியுமா உன்னால?"

நர்மதாவின் கண்கள் பாலைவனமாகியிருந்தன. தொடர்ச்சியாய் அழுதுகொண்டே இருந்ததில் இனித் தன்னிடம் கண்ணீர் எதுவும் மிச்சமில்லை என்றன கண்கள்.

அதற்கும் சேர்த்து இதயம் அழுதது. கணவன் இருந்த வரையில் கொண்டாடிய உறவுகள், திடீரென எப்படி மாறிப் போயின!

இதோ இந்த அம்மாள்தானே அன்று விருந்திற்கு அழைத்தபோது, 'சங்கரனுக்கு இப்படி ஒரு பொண்ணான்னு எங்க தெருவே வாயைப் பிளக்குது. வீட்டுல போய்ச் சுத்திப் போடும்மா!' என்றாளே.

'பணமும் நகையுமா முக்கியம். பொண்ணு தங்க விக்ரஹம் மாதிரி இருக்காளே. இது போதாதா?' - என்றவள், இப்போது விடியாமூஞ்சி என்கிறாளே.

'நம்ம குடும்பத்திலேயே படிச்ச பொண்ணு. அழகான பொண்ணு உம் மருமகதான் கற்பகம்!' - என்றவர்கள்,



இன்று ஒட்டுமொத்தமாக வாரித் தூற்றுகிறார்களே, ஏன்? எதற்காக?

இதுநாள் வரையிலும் உழைத்த பணத்தை உற்றார் உறவினர்களுக்காகவே செலவழித்தானே தன் கணவன்... இனி அதற்கு வழியில்லை என்ற ஆதங்கமா?

நினைத்தபோது வந்து வாரக்கணக்கில் தங்கி, வாய்க்கு ருசியாய்ச் சாப்பிட, ஊர் சுற்ற முடியாதே என்ற ஏமாற்றமா?

எதுவாக இருந்தாலும் இப்படியா பேசுவார்கள்? சின்னப் பெண், வயிற்றுப் பிள்ளையோடு வாந்தி மயக்கம் என்று வதங்கிக் கிடப்பவளை ஒரு வார்த்தை இதமாய்ப் பேசக்கூட முடியாதா?

இதமாய்ப் பேசாவிட்டாலும்கூட இப்படித் துண்டாட வேண்டுமா? பெற்றவளாய் இருந்தால் இப்படிப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டிருப்பாளா? என்னதான் மாமியாரைத் தாயாய் நினைத்தாலும் அவள் அப்படி நினைக்க வில்லையோ?

அப்படி நினைத்திருந்தால் இவர்கள் இத்தனை பேசும் போது ஒரு வார்த்தையாவது பரிந்து பேசியிருப்பாளே! பேசவில்லையே.

இதுதான் உறவுகளா? இந்த உறவுகளுக்காகவா தன் வருமானம் முழுவதையும் செலவழித்தான்? இந்த உறவுகளையா தலையில் வைத்துக் கொண்டாடினான்?

மனம் மேலும் புண்ணாக, இறுகிப் போய் அமர்ந் திருந்தவளைக் கையில் காபியோடு நெருங்கினாள் சங்கரனின் மூத்த தங்கை உமா.

"அண்ணி! இப்படிச் சாப்பிடாமலே இருந்தா உடம்பு என்னாகும்? இந்தாங்க... காபியாவது குடிங்க அண்ணி."

பெருமூச்சோடு திரும்பி உமாவைப் பார்த்தாள் நர்மதா.

"வேண்டாம் உமா. பசிக்கல்ல."

"இப்படியே சொன்னா எப்படி அண்ணி?"

"என் பசி, தூக்கம் எல்லாம் உன் அண்ணனோடயே போயிடுச்சு."

"ம்க்கும்... எப்படிப் பசிக்கும்? அதான் புருஷனை முழுசா முழுங்கிட்டு உட்கார்ந்திருக்காளே." - நொடித்தாள் ஒருத்தி.

"பெரியம்மா! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க?" - கோபமாய்க் கேட்டாள் உமா.

"நான் என்னடி தப்பாப் பேசினேன்?"

"பின்னே? அண்ணன் பண்ணின தப்புக்கு அண்ணி என்ன பண்ணுவாங்க? அண்ணியே கொலை பண்ணின மாதிரிப் பேசுறீங்க."

கற்பகம் மகளை நெருங்கினாள். "ஏய்! எம் புள்ளை என்னடி தப்புப் பண்ணினான்?"

"தப்புதானேம்மா. மழை பெய்து ஒழுகின வீட்ல ஈரச் சுவர்ல இவன் கரண்ட் வேலை செய்யலாமா? அதானே இப்படி ஆச்சு."

"ஏய்! உன் அண்ணன் ஒன்னும் இந்த வேலைக்குப் புதுசில்ல."



"அதைத்தாம்மா நானும் சொல்றேன். விபரம் தெரிஞ்ச நாள் முதலா கரண்ட் வேலைதானே செய்யுறான். ஈரச் சுவர்ல கரண்ட்ல கை வெக்கலாமா? அவனே போய்ச் செய்த வேலைக்கு அண்ணி மேலே எப்படி நீங்க பழிபோடலாம்?"

"உமா! நீ வாயை மூடு. இதெல்லாம் பெரியவங்க விஷயம்."

"வாயை மூடுங்க பெரியம்மா. பெரியப்பா கூடத்தான் உங்களைக் கல்யாணம் பண்ணின கொஞ்ச நாள்லயே இறந்தாங்க. அதுக்காகப் பாட்டி உங்களையா கரிச்சுக் கொட்டினாங்க?"

உமா ஆவேசமாய்க் கேட்க, அந்த அம்மாள் வேகமாய் வாயில் அடித்துக் கொண்டாள்.

"அய்யோ! அய்யோ! கற்பகம்! உம் மக என்னவெல்லாம் பேசுறா பார்த்தியா? பார்த்திட்டே இருக்கியே."

"உமா! என்ன இது? பெரியவங்கன்ற மரியாதை இல்லாம?" - அதட்டிய அன்னையை முறைத்தாள்.

"சும்மா இரும்மா. யாரு பெரியவங்க? சாவு வீட்டுக்கு வந்தா, வந்தோமா போனோமான்னு இல்லாம வக்கணையா சாப்பிட்டுக்கிட்டு, புருஷனை இழந்துட்டு வயித்துல புள்ளை யோட நிக்கிறவங்களை இப்படியா பேசுறது? இவங்க வீட்லயும் பெண் பிள்ளைகள் இருக்குதில்ல. நாக்குல நரம்பில்லாமப் பேசலாமா?"

அந்த அம்மாள் கோபமாய் எழுந்து கொண்டாள். "போதுண்டிம்மா போதும். நீங்க உபசரிச்சதும் போதும். இப்படிச் செருப்பால அடிச்ச மாதிரி பேசினதும் போதும். நான் இப்பவே கிளம்புறேன்."

கற்பகம் அவசரமாய்த் தடுத்தாள். "அக்கா! அவதான் ஏதோ பேசறான்னா நீங்களும் கோவிச்சுக்கிட்டா எப்படி?"

"உம் பொண்ணு வயசுக்குத் தகுந்த மாதிரியா பேசறா?"

"பெரியம்மா! நான் சாதாரணமாப் பேசினதுக்கே இவ்வளவு கோபப்படுறீங்களே... இவ்வளவு நேரமா என்னவெல்லாம் பேசுனீங்க. அதைக் கேட்டு எங்க அண்ணி மனம் என்ன பாடுபட்டிருக்கும்?"

"பொல்லாத அண்ணி! நீயே கையோட கூட்டிட்டுப் போயிருவே போலிருக்கே!"

"ஆமாம்! எனக்கும் அந்த ஆசை இருக்கு. ஆனா என் மாமியார் உங்களை மாதிரியில்ல அமைஞ்சிருக்காங்க."

"என்னடி மரியாதை இல்லாமப் பேசிட்டே போற?"

"அம்மா! நியாயமா இதெல்லாம் நீங்க பேசணும். நீங்க மௌனியா நின்னதால நான் பேச வேண்டியதாகிப் போச்சு."

"நான் என்னடி பண்ணினேன்?"

"அம்மா! வீட்டுக்கு வந்த மருமக சரியில்லாம இருந்தாக்கூட வெளிய யாருகிட்டயும் விட்டுக் கொடுக்கக் கூடாது. அதுவும் நம்ம அண்ணி நம்மை எல்லாம் எவ்வளவு அன்பா வெச்சிருக்காங்க.

"இதுநாள் வரை உங்க வார்த்தையை எதிர்த்துப் பேசியிருக்காங்களா? மரியாதைக் குறைவா நடக்கிறாங் களா? அண்ணிக்கு அம்மா இல்லை. உங்களைத்தானே



அம்மான்னு கூப்பிடுறாங்க. இவங்க பேசுறதைக் கேட்டுட்டுச் சும்மா நிற்கலாமா? நாலு வார்த்தை திருப்பிக் கேட்டு இவங்க வாயை அடைக்க வேண்டாமா?"

"ஏய்! அவங்க எல்லாம் பெரியவங்க!"

"ஆனா, அவங்க பேச்சு அப்படி இல்லையே!" - தாய்க்கும் மகளுக்கும் வாக்குவாதம் நீண்டுகொண்டே போக, வேதனையாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் நர்மதா.

இந்த வீட்டில் எப்போதுமே நியாயம் பேசுபவள் உமா. அவளும் இன்றோ நாளையோ, கணவன் வீட்டிற்குப் போய்விடுவாள். பிறகு என் கதி?

கற்பகம் நல்லவள்தான். ஆனால் மகன் போனபிறகு இந்த இரண்டு வாரங்களில் நிறையவே மாறியிருந்தாள். உறவினர்கள் அவளை மாற்றியிருந்தனர்.

முன்பெல்லாம் தலை சுற்றி வாந்தியெடுக்கும் போது பரிவோடு அருகே வந்து மருமகளின் நெற்றியைப் பிடித்துக் கொள்வாள். முதுகை வருடி விடுவாள்.

ஓடிச்சென்று சுடுதண்ணீர் எடுத்து வந்து வாயைக் கொப்புளிக்கச் செய்வாள். ஆனால்... இப்போது அப்படி எதையும் செய்வதில்லை.

அருகில் வருவதுகூட இல்லை. முகத்தைச் சுழித்துக் கொண்டு போய் விடுகிறாள்.

நான்கு மாதம் முடிவடைகிற நிலையில்கூட வாந்தியும் தலைசுற்றலும் நிற்கவே இல்லை. பரிவோடு தாங்கிக் கொள்ளத் தாயும் இல்லை.

நிலை. மகனிடம் தந்தை இருந்தும் இல்லாத நிலை. மகனிடம் இடிசோறு சாப்பிடுபவரை நம்பி எப்படிப் போகமுடியும்?

இரண்டு நாள் இருந்தால் எங்கே தன்னுடன் அனுப்பி விடுவார்களோ என்று பயந்து, கொட்டும் மழையைப் பற்றித் துளியும் கவலைப் படாமல் காரியம் முடிந்ததும் மனைவியோடு கிளம்பி விட்டான் அண்ணன்.

"அவங்க வீட்டு வாரிசைச் சுமக்கிறா. இங்கே இருப்பதுதான் அவளுக்கு நல்லது." - என மற்றவர்கள் காதில் விழும்படி சொல்லிவிட்டே சென்றான்.

"எதுவா இருந்தாலும் இங்கேயே இருந்து கொள். என்னைத் தேடி வராதே!" - எனச் சொல்லாமல் சொல்லி விட்டுச் சென்றவனைத் தேடிப் போக முடியுமா?

கற்பகமும் இரண்டு நாட்களாய் ஜாடைமாடையாகச் சொல்கிறாள்.

"கட்டின புருஷனும் போயிட்டான். பெத்த புள்ளையும் போயிட்டான். இனி எப்படி மத்ததை ரெண்டையும் கடத் துவேன். இதுல இவளையும் விட்டுட்டு அவன் பாட்டுக்குப் போயிட்டானே."

"நாமளா கழுத்தைப் பிடிச்சுத் தள்ள முடியும்? அவளுக்கே புத்தி இருக்கணும். அண்ணன்காரன் பின்னால கிளம்பியிருக்கணும்."

"இங்கே என்ன சொத்தும் பணமும் குவிஞ்சா கிடக்கு? அடுத்த வேளைக் கஞ்சிக்குப் பீடி சுத்தினாத்தான் உண்டு. இதுல மசக்கை பிரசவம்னு நான் எங்கே கூட்டிட்டு அலைய முடியும்? இதெல்லாம் தெரிய வேண்டாமா?"



இப்படியாகப் பேச்சும் ஜாடையும் கூடிக்கொண்டே போக, நர்மதா நொறுங்கிப் போனாள்.

லேசாய் மேடிட்ட வயிற்றை இரு கரங்களாலும் தாங்கிக் கொண்டாள். மன உளைச்சல் அதிகமாக இருந்தால் கர்ப்பம் கரைந்து விடும் என்பார்களே. இதுவும் கரைந்து விட்டால்...?

"அண்ணி! நீங்க இந்த வீட்டுப் பொண்ணு. இந்த வீட்டுக்கு வாழ வந்தவங்க. உங்களை வெளியே அனுப்ப யாருக்கும் உரிமை கிடையாது." - உமா சொல்ல, அவளைப் பற்றித் திருப்பினாள் கற்பகம்.

"நீ உள்ளே போடி. என்ன செய்யணும்னு எங்களுக்குத் தெரியும். போ."

"அம்மா! இவங்ககூட சேர்ந்து உன் புத்தியும் கெட்டுப் போச்சு."

"உள்ளே போன்னு சொன்னேனே. மாப்பிள்ளை வந்ததும் கிளம்பச் சொல்வாரே. உன் துணிமணியெல்லாம் எடுத்து வை."

"எப்படியோ போங்க. ஆனா ஒன்னு மட்டும் சொல்றேன். அண்ணிய அம்போன்னு விட்டுடாதீங்க. அந்தப் பாவம் நம்மை வாழ விடாது." - சொல்லிவிட்டுப் போய்விட்டாள் உமா.

"அது ஒன்னுமில்ல. இவ கல்யாணத்துக்கு அவ அண்ணி தன்னோட நகையைக் கொடுத்தாள்ல. அந்த நன்றி விசுவாசம்." - பெரியம்மா நக்கலாய்க் கூற உறவினர் கூட்டமும் தலையசைத்தது.

மீண்டும் பேச்சு நர்மதாவைப் பற்றியே ஆரம்பிக்க, காது கொடுத்துக் கேட்க முடியாமல் செவி அடைத்தது. கண்கள் இருட்டின.

பசியா மயக்கமா என யோசிக்கும் முன் கண்கள் செருகிவிட, அமர்ந்த நிலையிலேயே மயங்கிச் சரிந்தாள் நர்மதா.

# 2



கறிவேப்பிலை என்று
என்னைத் தூக்கியெறிந்தாய்!
இன்று - நான் நோய் தீர்க்கும்
வேப்பிலை ஆனேன்!

கெட்டி மேளம் முழங்க, மணமகளின் கழுத்தில் மாங்கல்யத்தைக் கட்டினான் மணமகன். ஊரும் உறவும் அட்சதை தூவி வாழ்த்த, முன் இருக்கையில் அமர்ந்திருந்த சிவசங்கரியும் மனோகரும் தங்கள் கையில் இருந்த அட்சதைகளைத் தூவினர்.

"கடவுளே! மணமக்கள் கடைசிவரை சந்தோஷமா வாழணும்."

மனதிற்குள் வேண்டிக்கொண்டே, எழுந்து நின்றாள் சிவசங்கரி.

"மனோ! போலாமா?"

"கிப்ட் கொடுக்கணுமே. வாக்கா, கொடுத்திட்டு வந்திடலாம்," - என்றவாறே மனோகரும் எழுந்து கொண்டான்.



"நானுமா? வேண்டாம், மனோ. நான் வெளியே வெயிட் பண்றேன். நீ போய்க் கொடுத்திட்டு வந்திடு."

"ஏங்க்கா?"

"ம்ப்ச்! வேண்டாம்னா விடு."

"சரி வா. பொண்ணோட அப்பா கையிலே கொடுத்துட்டுப் போகலாம்." - கையிலிருந்த பரிசுப் பொட்டலத்தோடு மனோகர் நகர, தனது பட்டுப் புடவையை நீவிவிட்டுக் கொண்டவாறே தம்பியைப் பின்தொடர்ந்தாள் சிவசங்கரி.

அக்காள் தம்பி இருவரும் மருத்துவர்கள். சிவசங்கரி, பெண்கள் நலச் சிறப்பு மருத்துவர். மேலும் சர்க்கரை வியாதிக்கான ஆராய்ச்சிப் படிப்பைப் படித்துக் கொண்டிருப்பவள்.

மனோகர் குழந்தைகள் நல மருத்துவர். இளம் வயதிலேயே கைராசியான மருத்துவர் என்ற பட்டம் பெற்றவன். புன்னகையும் கனிவான பேச்சும் இவனது ப்ளஸ் பாயிண்ட்.

சிவசங்கரி, தனது மயில் கழுத்து நிறப் பட்டுப் புடவையைக் குனிந்து சரி செய்துகொண்டே வர, எதிரே வந்தவன் மீது மோதி நின்றாள்.

"ஐயாம் ஸோ ஸாரி." - பதட்டமாய்க் கேட்டவாறே நிமிர்ந்தவளின் முகம் கருத்தது. எதிரே புன்னகையோடு நின்றிருந்தான் டாக்டர் பிரபாகர்.

"இவனா? இங்கேயா? ச்சே! இவன் முகத்தில் விழிக்கும்படி ஆயிற்றே!" - கடுப்பாய் விலகி நடக்க முயன்றவளைப் பிரபாகரின் குரல் தடுத்து நிறுத்தியது.

"ஹாய் சங்கரி! எப்படி இருக்கே?" - கேட்டவனை ஆத்திரமாய் முறைத்துவிட்டு விலகிச் சென்றாள்.

"இடியட்! எந்த முகத்தை வைத்துக் கொண்டு பேசுகிறான். நான்சென்ஸ்!" - முனகியவாறே வந்த சகோதரியைத் திரும்பிப் பார்த்தான் தம்பி.

"அக்கா! என்னாச்சு?"

"ஒன்னுமில்ல..."

"இல்ல... ஏதோ இருக்கு. இப்ப யாரைத் திட்டினே?"

"ம்... அந்த இடியட்டைத்தான்." - கடுப்பாய்ச் சொன்னாள்.

"எந்த இடியட்டை?"

"அதான்... அந்தப் பிரபாகர்."

"அட! பிரபாகர்கூட மேரேஜுக்கு வந்திருக்காரா? நான் பார்க்கலியே!"

"நீ வேற கடுப்பேத்தாதே."

"நீ ஏங்க்கா டென்ஷனாகுறே. இது நம்ம சக டாக்டர் வீட்டுக் கல்யாணம். பிரபாகர் அவர் வீட்டுக்கு வர்றதுல உனக்கு என்ன கோபம்?"

"கல்யாணத்துக்கு வந்தவன் எங்கிட்ட ஏன் பேசணும்?"

"என்னக்கா நீ? உன்னோட க்ரூப் ஸ்டுடண்ட். ஒரே ஹாஸ்பிடல்ல வேலை செய்திருக்கீங்க. அந்தப் பழக்கத்தில பேசியிருக்கலாம்."

"புரியாமப் பேசாதடா. அவனைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கல்ல." - சிவசங்கரியின் குரலில் தொனித்த வெறுப்பு, அவனை மேலே பேசவிடாமல் தடுத்தது.



அமைதியாகச் சென்றவன், மணப் பெண்ணின் தகப்பனாரைக் கண்டதும் நின்றான். முகமலர்ச்சியோடு அவர்களை நெருங்கினார் பத்ரிநாத்.

"வாங்க. சாப்பிட்டீங்களா?"

"இல்ல. ஹாஸ்பிடல்ல கொஞ்சம் வேலை இருக்கு. கிளம்பறோம்."

"என்ன மனோ நீங்க? நமக்கு என்னிக்குத்தான் வேலை இல்ல. இன்னிக்குக் கண்டிப்பாச் சாப்பிட்டுட்டுத்தான் போகணும். வாங்க என்கூட." - கைப்பற்றி அழைத்தவரிடம் நாசூக்காக மறுத்தாள் சிவசங்கரி.

"மன்னிக்கணும் டாக்டர். நாங்க இன்னிக்கு விரதம்."

"விரதமா? இன்னிக்கு என்ன விரதம்?"

"அது... இன்னிக்கு வியாழக்கிழமை."

"ஸோ வாட்?"

"இன்னிக்கு எங்க அப்பாவோட நினைவு நாள்." - இறுகிய குரலில் சிவசங்கரி சொல்ல, பத்ரிநாத்தின் முகம் மாறியது.

"ஓ... ஸாரிம்மா. நான் மறந்திட்டேன். வெரி ஸாரி."

"இட்ஸ் ஓ.கே. டாக்டர். நாங்க கிளம்பறோம். மனோ! கிப்டைக் கொடுத்திட்டு வா."

"இருங்கம்மா. ஒரு போட்டோவாவது எடுத்திட்டுப் போங்களேன்."

சிவசங்கரி அவஸ்தையாய் மேடையைத் திரும்பிப் பார்த்தாள். நீண்ட வரிசை கையில் பரிசுப் பொருளோடு காத்திருந்தது. நிச்சயம் இரண்டு மணி நேரம் வீணாகும்.

புன்னகையோடு பத்ரிநாத்தை ஏறிட்டாள். "கூட்டம் ஜாஸ்தியா இருக்கு டாக்டர். ஹாஸ்பிடலுக்கு லேட்டாயிடும். பரவால்ல, நாங்க வர்றோம்."

"அட... வாங்கம்மா என்கூட கல்யாணத்திற்கு வந்திட்டு ஒரு போட்டோகூட எடுக்கலன்னா எப்படி?" - என்றவர் மனோவின் கையைப் பற்றிக் கொண்டு வேகமாய் மணமேடையை நெருங்கினார்.

வரவழைத்துக் கொண்ட புன்னகையோடு, வேறு வழியின்றி அவர்களின் பின்னே சென்று, மேடையேறி, மணமகளிடம் இரண்டு வார்த்தை பேசி வாழ்த்திவிட்டுப் பரிசுப் பொருளைக் கொடுத்துப் புகைப்படத்திற்காகப் புன்னகைத்துவிட்டுக் கீழே இறங்கும்போது பத்ரிநாத் மனைவி பிடித்துக் கொண்டாள்.

"என்ன சங்கரி, உடனே புறப்பட்டுட்டே!"

"கொஞ்சம் வேலையிருக்கு... அதான்..."

"இருக்கட்டும். ஒரு நிமிஷம் இரேன்," - என்றவள் அங்கே இருந்த சற்றே வயதான பெண்மணி இருவரை அழைத்தாள்.

"நான் சொன்னேனில்ல, அது இவதான். பேர் சிவசங்கரி. பெரிய டாக்டரா இருக்கா. நம்ம விஸ்வநாதன் டாக்டரோட பொண்ணு!" - என அறிமுகம் செய்ய, இரண்டு பெண்மணிகளும் சிவசங்கரியை மேலிருந்து கீழாக அளவெடுத்தனர்.

திருப்தியாய்ப் புன்னகைத்தவாறே, "ம்... பொண்ணு கண்ணுக்கு லட்சணமாத்தான் இருக்கா. வயசுதான் கொஞ்சம் மூப்பாத் தெரியுது." என்றனர்.



"முப்பத்தஞ்சு வயசுதான் ஆகுது. நிறையப் படிச்சிட்டே இருக்கா. அதனால கல்யாணத்தைப் பத்தி யோசிக்காம இருக்கா."

"அந்தந்த வயசுல நடக்கிற காரியம் நடந்திடணும்மா. படிக்கிறது எப்ப வேணா படிக்கலாமே. பருவத்தே பயிர் செய்ன்னு சும்மாவா சொன்னாங்க பெரியவங்க."

சிவசங்கரி சற்றுக் குழப்பமாகவும் கோபமாகவும் பத்ரிநாத்தின் மனைவியை ஏறிட்டாள்.

"மேடம்! என்ன இதெல்லாம்?"

"சங்கரி! இவங்க என்னோட ரிலேஷன். இவங்க பையனுக்குப் பொண்ணு தேடிட்டு இருக்காங்க. நான்தான் உன்னை..."

"உங்களிடம் எனக்கு மாப்பிள்ளை பாருங்கள் என்று நான் கேட்கவில்லையே!" - குரலில் கோபம் கூடியது.

"இல்ல சங்கரி! பையன் நல்ல பையன். அதான்..."

"ஷட்அப். இந்த மாதிரி அதிகப் பிரசங்கி வேலையெல்லாம் செய்வது எனக்குப் பிடிக்காது."

"என்னடியம்மா... நீ இவ்வளவு கோபப்படுறே? பொண்ணுன்னு இருந்தா நாலு பேர் கேட்டுத்தான் வருவாங்க."

"மன்னிக்கணும். எனக்குக் கல்யாணம் பண்ற ஐடியாவே இல்ல."

"என்னம்மா இப்படிச் சொல்ற?"

"நான் நிறையப் படிக்கணும். எனக்கு வேலை செய்யவே நேரம் போதாது. இதுல கல்யாணம் குடும்பமெல்லாம் தேவைப்படாது."

"சங்கரி! நீ உன்னைப் பத்தியே யோசிக்கிறியே தவிர, உனக்குப் பிறகு ஒரு தம்பி இருக்கிறதை நினைக்க மாட்டியா?"

"ஏன்? அவனுக்கென்ன?"

"என்ன இப்படிக் கேட்கிற? அவனுக்கும் வயசு முப்பதைத் தாண்டிப் போச்சே! அவனுக்கும் கல்யாணம் பண்ண வேண்டாமா?"

"தாராளமாப் பண்ணிக்கட்டும். நான் ஏன் தடை சொல்லப் போறேன்?" என்றாள் மனோகரைப் பார்த்த வாறே.

"அதெப்படி? வீட்ல வயசுக்கு மூத்தவளை வெச்சிண்டு சின்னவன் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்?" - அந்தப் பெண்மணி விடாமல் கேட்க, இடையில் புகுந்தான் மனோகர்.

"ஆன்ட்டி! எங்க ரெண்டு பேருக்குமே மேரேஜ் லைப்ல ஆர்வம் கிடையாது. எங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கு. இதுமாதிரி தேவையில்லாத பேச்செல்லாம் பேசி எங்க டயத்தை வேஸ்ட் பண்ண வேண்டாம்."

"என்ன மனோ... நீயும் உன் அக்கா மாதிரியே பேசற?"

"உள்ளதைச் சொல்றேன். நாங்க வர்றோம். அக்கா, போலாம்."

"அட இருப்பா! நீங்க ரெண்டு பேரும் இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படியே இருப்பீங்க?"

சிவசங்கரி பொறுமை இழந்தாள். "அதைப்பற்றி நீங்க ஏன் கவலைப்படறீங்க?"



"நான் மட்டும் கவலைப்படலம்மா."

"பின்னே?"

"உன் அம்மாவும்தான்." - பத்ரிநாத்தின் மனைவி அமைதியாய்ச் சொல்ல, இருவரும் அமைதியாயினர்.

"சங்கரி! நீங்க ரெண்டு பேரும் ஹாஸ்பிடலே கதின்னு கிடக்கிறீங்க. ஆனா உன் அம்மாவைப் பத்தி ஒரு நிமிஷமாவது நினைச்சுப் பார்க்கிறீங்களா?"

சிவசங்கரி கண்களை இறுக மூடினாள். ஒரு பெருமூச்சோடு கண்களைத் திறந்தாள்.

"மேடம்! இது கல்யாண வீடு. இங்க வெச்சு எங்க குடும்ப விஷயம் பேசவேண்டாம். மனோ! வா போலாம்."

"சங்கரி..."

"ப்ளீஸ். டோண்ட் டிஸ்டர்ப் மீ!" - என்றவாறு விடுவிடு வென வெளியேறினாள் சிவசங்கரி.

"என்ன ஆன்ட்டி நீங்க?" - என்றவாறே மனோகரும் வெளியேறினான். பார்க்கிங் பகுதியில் நிறுத்தியிருந்த காரை எடுத்துக்கொண்டு வந்ததும், காரில் ஏறி அமர்ந்து கதவை அறைந்து சாத்தினாள்.

அக்காவின் கோபம் புரிய, அமைதியாகவே காரைச் செலுத்தினான் மனோகர்.

இப்போது மட்டுமல்ல... கிட்டத்தட்ட எட்டு வருடங் களாய்த் திருமணம் என்ற பேச்சை எடுத்தாலே கொதித்து விடுகிறாள்தான்.

இன்று இப்படிப் பொது இடத்தில் அந்த அம்மாள் கேட்டிருக்க வேண்டாம். இனி இன்றையப் பொழுது முழுவதும் டென்ஷனாகவே இருப்பாள்.

இதில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப் போல், அந்தப் பிரபாகர் வேறு பேச்சுக் கொடுத்திருக்கிறான். இது போதாதா?

"மனோ!" - சிவசங்கரியின் குரலில் கலைந்தான்.

"அக்கா!"

"இனிமே இந்த மாதிரி ஃபங்ஷனெல்லாம் நாம அவாய்ட் பண்ணிடணும்."

"சரிக்கா."

"பத்ரிநாத் கம்ப்பெல் பண்ணிக் கூப்பிட்டாரேன்னு வந்தது தப்பாப் போச்சு."

"ம்..."

"கொஞ்சம்கூட மேனர்ஸே கிடையாதா அந்தப் பொம்பளைக்கு. சும்மா ஏன் டார்ச்சர் பண்றாங்க?"

"விடுக்கா..."

"இல்லடா! எனக்கு எரிச்சலா இருக்கு. எனக்கு மாப்பிள்ளை பார்க்க இவங்க யாரு?"

"இதுல ஒன்னும் தப்பில்லக்கா!"

"என்ன?"

"பத்ரிநாத் நம்ம குடும்ப நண்பர். அப்பாவோட சிநேகிதர். நம்ம மேல அவங்களுக்கு அக்கறை இருக்கிறதுல என்ன தப்பு?"

"அதுக்காக? எந்த இடத்தில என்ன பேசறதுன்னு இல்ல. நான்தான் வேண்டாம்னு சொன்னேனில்ல."

"எப்போக்கா வேணும்னு சொல்வே?"



திடுக்கிட்டுத் தம்பியை ஏறிட்டாள். "ஏ... என்னடா?"

"எப்போக்கா கல்யாணம் பண்ணிப்ப?"

சிவசங்கரியின் முகம் கருத்தது. "அப்போ... இதெல்லாம் உன் வேலையா?"

"சேச்சே! என்னக்கா நீ?"

"இதோ பார் மனோ! உனக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்னு விருப்பம் இருந்தா பண்ணிக்கோ. அதுக்காக என்னை ஏன் கம்ப்பெல் பண்றே?"

"அக்கா! அப்படியெல்லாம் எந்த விருப்பமும் எனக்குக் கிடையாது. ஆனா... அம்மாவோட மனசையும் நாம புரிஞ்சுக்க வேண்டாமா?"

"என்ன?"

"ஆமாங்க்கா! அம்மாவும் பாவமில்லையா? நம்ம குடும்ப வாரிசைப் பார்க்கணும்னு ஏங்க மாட்டாங்களா?"

பதிலின்றி அமைதியானாள் சிவசங்கரி.

"இன்னும் எத்தனை வருஷம் அக்கா இப்படியே அடம் பிடிப்பே?"

சற்றே வருத்தமாய் மனோகர் கேட்க, கலங்கிச் சிவந்த கண்களோடு தம்பியை வெறித்தாள்.

"நான்... அடம் பிடிக்கிறேனா?"

"பின்னே இல்லியா? நீ ஒன்னும் சின்னக் குழந்தை இல்லக்கா!"

"ஆமாம். நான் குழந்தை இல்ல. குழந்தையாவே இருந்திருந்தா ஏமாற்றமும் வலியும் இழப்பும் தெரியாது. தேவையில்லாத நினைப்புகள் நெஞ்சை அறுக்காது."

"அக்கா..." - திகைப்போடு பார்த்தான் மனோகர்.

"மனோ! நீங்கள்லாம் என் கல்யாணப் பேச்சை எடுக்கும்போது எனக்கு... எனக்கு நம்ம அப்பாவோட நினைப்புதான் வருது."

"அக்கா!"

"என் கண் முன்னால நெஞ்சைப் பிடிச்சிட்டுத் துடிச்ச துடிப்புதான் நினைவு வருது. கடைசியாக் கண் மூடினதுதான் நினைவு வருது. வேற எந்த நினைப்பும் வரல்ல... வராது."

"அக்கா! இது நடந்து எத்தனையோ வருஷம் ஆச்சே!"

"ஆனா எனக்கு இப்போ நடந்த மாதிரிதான் இருக்கு. என்னால அதை அத்தனை சுலபமா மறக்க முடியாது. அதை மறக்காம இன்னொரு கல்யாணத்தைப் பத்தி நினைக்கவும் முடியாது." - தீர்மானமாகச் சொன்னவளைக் கலங்கிய மனதோடு பார்த்தான்.

மனம் பாரமாகிப் போனது. இவள் அதை மறக்கவே மாட்டாளா?

அந்தப் பொல்லாத நாள் ஏன் வந்தது? அந்தச் சம்பவங்கள் மட்டும் நடக்காமல் போயிருந்தால், தன் வீ( எப்படி இருந்திருக்கும்?

அக்கா, தன் கணவன், குழந்தைகளோடு, பூரிப்பா மின்னியிருப்பாள். அப்பாகூட மரித்திருக்க மாட்டார். அம்மா இப்படி நடைபிணமாகி இருக்கமாட்டாள். இந்த நிலை எப்போது மாறும்?

ஏக்கம் பெருமூச்சாய் வெளியேறியது.





# 3

முள்ளால் ஆன படுக்கைதான்!
என்றாலும் சுகமாய்த்
துயில்கிறது காக்கையின் குஞ்சு!

முகத்திலறைந்த குளிர்ந்த நீரால் சட்டெனக் கண் விழித்தாள் நர்மதா. கூடியிருந்தவர்கள் சலிப்போடு விலக, பெரிய மாமியார் சிவகாமி, கற்பகத்தைத் தனியே அழைத்துப் போனாள்.

"பார்த்தியா! நான் சொன்னேனில்ல. இவ இப்படிப் பட்டினி கிடந்து ஏதாவது ஒன்னு ஆச்சின்னா என்ன பண்ணுவ நீ?"

கற்பகம் பதறிப் போய் இருந்தாள். "அக்கா! நான் என்ன பண்றது?"

"இதோ பாரு! அவ அண்ணனுக்குப் போன் பண்ணி வரச்சொல்லு. இவளைக் கூடவே அனுப்பிடு."

"அந்தப் பயகிட்ட பேசிப் பிரயோசனமில்லக்கா. நான் சொன்னதைக் காதில வாங்கலையே அவன்."

"அப்போ இவ அப்பனை வரச் சொல்லு."

"அவர் என்ன பண்ணுவாரு. பாவம். வயசான காலத்துல அவர் வயித்துக்கே சரியாச் சாப்பாடு கிடைச்ச மாதிரித் தெரியல்ல."

"ம்க்கும்... இப்படியே பாவம் பார்த்திட்டே இரு. அதான் எல்லாரும் உன் தலையில மொளகா அரைச்சிடுறாங்க."

"அக்கா! பாவம், புள்ளத்தாச்சிப் பொண்ணு. இங்கேயே இருந்திட்டுப் போகட்டுமே. அவளுக்கும் வேற நாதியில்லையே...!"

"அடி கூறுகெட்டவளே! இவ உண்டான நேரம்தான் உம் மகனை முழுங்கிடுத்து. இன்னும் இவளைக் கூடவே வெச்சிட்டு இருந்தே... உனக்குத்தான் கஷ்டம். யார் யாரையெல்லாம் தொலைப்பியோ?"

"ஐயோ! அப்படியெல்லாம் பேசாதீங்க, அக்கா!"

"உண்மையாத்தான்டி சொல்றேன். நம்ம பெரியப்பா ஜாதகம் எழுதினா துளிகூடத் தப்பாது. அவர் இதைச் சொன்னார் எங்கிட்ட."

"எ... என்ன சொன்னார்?"

"இவ உண்டான கிரகம் சரியில்லையாம். மோசமான நட்சத்திரமாம். இது பொறந்தா பெரிய உசுரு ஒன்னு அடிபடுமாம்."

"எ... என்ன?"

"இந்த வீட்ல பெரிய உசுரு யாரு? நீதானே...!"

"அ... அக்கா!"

"நீயே போயிட்டா, வீட்ல உள்ள பெண் பிள்ளைங்க கதி என்னாகும்னு யோசி. எவளோ ஒருத்திக்காக உன் உயிரையும் உன் பிள்ளைங்களோட வாழ்க்கையும் வீணாகணுமா?"

சிவகாமியின் தொடர்ச்சியான பயமுறுத்தலில் மிரண்டு போனாள் கற்பகம். கண்களில் மரண பயம் தோன்ற பயமாய் எச்சில் விழுங்கினாள்.



"அ... அக்கா! இதெல்லாம் உண்மையா?"

"பின்னே? நான் என்ன பொய்யா சொல்லப் போறேன். சங்கரன் சாவுக்கு வந்தப்பவே பெரியப்பா எங்கிட்ட இதைச் சொல்லிட்டாரு. நான்தான் புள்ளைய இழந்து தவிக்கும்போது சொல்ல வேண்டாம்னு விட்டுட்டேன்.

"காரியத்துக்குப் பிறகு பொறந்த வீட்டுக்குப் போயிடுவான்னு பார்த்தா, எல்லாரும் கைகழுவிட்டுப் போயிட்டானுங்க. இவ இங்கே இருந்தா உனக்குத்தான் ஆபத்து. உஷாரா இருந்துக்கோ."

"அக்கா! நான்... நான் என்ன செய்யறது?"

"தயவு தாட்சண்யம் பார்த்திட்டு இருந்தா நமக்குத்தான் இழப்பு. பேசாம அவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிடு. அவ பாடு... அவ அண்ணன் பாடு. நமக்கென்ன வந்தது?"

"அவன்... சேர்த்துக்கலன்னா...?"

"அவ அப்பன் பார்த்துக்கட்டும். நீ ஏன் வருத்தப் படுறே?"

"இ... இல்லக்கா. என்ன இருந்தாலும் அவ இந்த வீட்டு மருமக இல்லியா?"

"மகனே இல்ல... பிறகென்ன மருமக?"

சிவகாமியைப் போல் கற்பகத்தால் நர்மதாவை எடுத்தெறிய முடியவில்லை.

சில மாதங்களே இந்த வீட்டில் வாழ்ந்திருந்தாலும் மருமகள் மீது சிறிதும் குறை சொல்ல முடியாது.

கணவனிடமோ மாமியாரிடமோ நாத்தனாரிடமோ துளியும் கோபமோ வெறுப்போ காட்டியதில்லை. தனக்கென்று எதையும் ஒதுக்கி வைத்துக்கொள்ள மாட்டாள். ஒதுங்கியும் இருக்க மாட்டாள்.

எந்த விதத்திலும் குறை சொல்லும்படி நடக்கவில்லை. தன் மகனின் மரணத்தால் ஒரேயடியாய் இவளைத் தூக்கி யெறிய முடியுமா?

யோசனையில் இருந்தவளை அசைத்தாள் சிவகாமி.

"என்ன கற்பகம். இப்படியே இருந்தா எப்படி?"

"அக்கா! எனக்கென்னவோ மனசே கேட்கலை."

"ஏன்?"

"வயித்துப் பிள்ளைக்காரிய அம்போன்னு தெருவில விடமுடியுமா? எனக்கும் பெண் பிள்ளைங்க இருக்குதே!"

"மண்டு! நீ என்ன அவளைத் தெருவிலயா விடப்போற? அவ அப்பன் வீட்டுக்குத்தானே அனுப்பச் சொல்றேன்."

"அதில்லக்கா! இருந்தாலும்..."

"என்ன... இருந்தாலும்?"

"அவ வயித்தில வளர்றது நம்ம குடும்ப வாரிசு."

"அது வாரிசு இல்ல, எமன்."

"அக்கா! அப்படிச் சொல்லாதே!"

"நீ திருந்தமாட்டே. பட்டுத்தான் திருந்துவ."

"அக்கா!"



"இதோ பார் கற்பகம். நான் நாளைக்கு ஊருக்குக் கிளம்புறேன். இனி நீயாச்சு, உன் மருமகளாச்சு!"

"அக்கா! என்ன அவசரம்? கூட ரெண்டு நாள் இருந்திட்டுப் போயேன்."

"வேண்டாம்மா. எனக்கென்னவோ இந்த வீட்ல இருக்கவே ரொம்பப் பயமா இருக்கு."

"ஏங்க்கா?"

"உம் மருமகளைப் பார்த்தாலே பயம் வருது. எப்போ யாருக்கு என்ன நடக்குமோன்னு உதறலாவே இருக்கு. படுத்தாத் தூக்கமே வர மாட்டேங்குது."

"அக்கா!"

"பாரு, கற்பகம். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். இனிமே நீதான் எச்சரிக்கையா நடந்துக்கணும்... பார்த்துக்கோ."

"அக்கா! அப்படியெல்லாம் எதுவும்..." - கற்பகம் மறுப்பாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சமையல் அறையில் இருந்து உமாவின் அலறல் கேட்டது.

"அம்மா... மாமா..."

கூடத்தில் இருந்த அனைவரும், மயக்கமாய்ச் சோர்ந்திருந்த நர்மதாவும்கூட, எழுந்து சமையலறைக்குள் ஓட, அனைவரும் அதிர்ந்து போயினர்.

பெரிய சோற்றுப் பானை கொதி சோறோடு கீழே விழுந்து நசுங்கிப் போயிருக்க, உமாவின் உடல் முழுக்க, சோற்றுப் பருக்கைகள் சிதறியிருந்தன.

கொதிநீர் பட்டுக் கைகால்களில் கொப்புளித்திருந்தது. எரிச்சலும் வலியும் தாளாமல் கத்தினாள் உமா.

"அம்மா! தாங்க முடியலம்மா. வலிக்குதும்மா. எரியுதும்மா."

"ஐயோ! எம்புள்ள... எம்புள்ளைக்கு என்னாச்சு?" - கற்பகம் ஓடிச்சென்று மகளை நெருங்கி அவள் மீது ஒட்டிக் கொண்டிருந்த சோற்றைத் தட்டிவிட, தோலோடு உரிந்து விழத் துடித்துப் போனாள் உமா.

நான்கு பேர் சேர்ந்து கைத்தாங்கலாய் உமாவை அழைத்து வந்து கட்டிலில் படுக்க வைத்தனர். கற்பகம் ஈரத்துணியைப் பிழிந்து மகளின் உடம்பை மெதுவாய்த் துடைத்தாள்.

உமா வலி தாளாமல் துடிக்க, "கற்பகம்! ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போலாமா?" - என்றாள் ஒரு பெண்.

"ஐயோ! இந்த மழையில நான் எங்கே போயி ஆட்டோ பிடிப்பேன்? எந்த ஆஸ்பத்திரிக்குப் போவேன்?" - மகளின் இழப்பு அப்போதுதான் பலமாய்த் தாக்க, சத்தமாய் அழ ஆரம்பித்தாள் கற்பகம்.

"சரி, சரி! அழாதே கற்பகம். காயம் ஒன்னும் பெரிசில்லை. வாழைத்தண்டைப் பிழிஞ்சிவிட்டா எரியாது. புண் சீக்கிரம் ஆறிடும்." - என்ற சிவகாமி, கத்தியையும் குடையையும் எடுத்துக்கொண்டு வீட்டின் பக்கவாட்டில் நின்ற வாழைக்கன்றை நோக்கிச் சென்றாள்.

ஒரு பெண் விசிறியால் வீச, மற்றொரு பெண் களிம்பைத் தடவினாள். கையில் சிறிய வாழைத்தண்டோடு



வந்த சிவகாமி, தண்டை இறுகப் பிழிந்து, சாறைக் காயத்தில் விட, உமாவின் கதறல் அடங்கியது.

தீயாய் எரிந்த காயம் சில்லெனக் குளிர்ந்துவிட, அழுவதை நிறுத்தினாள். கண்களைத் துடைத்தவாறே எழுந்து அமர்ந்தாள் உமா.

"வலி எப்படிம்மா இருக்கு?"

"ம்... பரவால்லம்மா. லேசா எரியுது."

"ஏன்டி! பார்த்து வடிக்கக் கூடாதா? இப்படி உடம்பெல்லாம் புண்ணாகிப் போச்சே!"

"எப்பவும் வடிக்கிறதுதானேம்மா. இன்னிக்குக் கூடுதலா ஒரு படி அரிசி போட்டேன். பெரிய பானைன்றதால கீழே இறக்கும்போது நழுவிடுச்சி."

"உன் புருஷன் வந்து கேட்டா என்னடி பண்ணுவேன்?"

"ம்ப்ச்! சமைக்கும்போது இதெல்லாம் படுறதுதானே. விடும்மா."

"எதுக்கும் மழை விட்டதும் ஆஸ்பத்திரிக்குப் போயிடலாம்."

"சரிம்மா!"

"ரொம்ப வலிக்குதா, உமா?" - பரிவாய்க் கேட்டாள் நர்மதா.

"இல்ல அண்ணி. இப்போ பரவால்ல."

"நான் கொஞ்சம் களிம்பு போட்டு விடவா?"

"வேண்டாம்டிம்மா. நீ அவளை விட்டு எட்டியே நில்லு." - சிவகாமி சொல்ல, திடுக்கிட்டுத் திரும்பினாள் நர்மதா.

"ஏன் அத்தே?"

"ஏழெட்டு வருஷமாச் சாப்பாடு ஆக்கினவ இன்னிக்கு இப்படி உடம்பெல்லாம் ஊத்திக்கிட்டான்னா அதுக்கு யார் காரணம்?"

"யார்? யார் காரணம்?"

"நீதான். உன் வயத்தில உண்டாகியிருக்கே அந்த எமன்தான்."

"அத்தே...!"

"ஏன்டி கத்துற? நான் உண்மையைத்தான் சொல்றேன்."

"பெரியம்மா! என்ன பேசுறீங்க? என் கை தவறி விழுந்ததுக்கு அவங்க என்ன பண்ணுவாங்க?" - உமா சீறினாள்.

"நீ சும்மா இருடி. உனக்கு ஒன்னும் தெரியாது. இத்தனை நாளாத் தவறாம, இன்னிக்கு எப்படித் தவறிச்சி?"

"ஐயோ பெரியம்மா! இத்தனை நாளா எங்க குடும்பத்துக்கு மட்டுமே சோறு வடிப்பேன். இப்போ உங்களுக்கெல்லாம் சேர்த்து..."

"அதான் இரண்டு வாரமா சேர்த்துத்தானே வடிக்கிற. இன்னிக்கு மட்டும் ஏன் இப்படி ஆச்சு?"

"நான்தான் கவனக் குறைவா இருந்திட்டேன்."

"இல்லடி. இவ கிரகம்தான் உங்களையெல்லாம் பிடிச்சு ஆட்டுது!"

"பெரியம்மா! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க?"



"உன் அம்மாகிட்ட இவ்வளவு நேரமா இதைப் பத்தித்தான் பேசினேன். அவ கேட்டாளா? இப்பப்பாரு, நீ துடிக்கிறதைப் பார்த்துக் கண்ணீர் விடுறா. இவளுக்கு எப்பவும் இதே வேலைதான். முதல்லேயே எதையும் யோசிக்க மாட்டா.

"இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகுதோ? எத்தனை உயிரைக் குடிக்கப் போறாளோ?" - சிவகாமி அரற்றிக்கொண்டே இருக்க, கண்களில் பொங்கிய கண்ணீரோடு உள் அறைக்குள் ஓடினாள் நர்மதா.

உமா வருத்தமாய் எழ முயற்சிக்க, தடுத்தாள் கற்பகம்.

"நீ ஏன்டி எழுந்துக்கிற? படு."

"அம்மா! அண்ணி பாவம்மா. அழுதிட்டே போறாங்க."

"அது அவ தலையெழுத்து. நாம என்ன செய்ய முடியும்?"

"அம்மா! நீயா இப்படிப் பேசுறே?"

"வேற என்னடி பண்றது? எனக்கு எம்புள்ளைங்கதான் முக்கியம்."

"அப்போ, அண்ணி யாரும்மா?"

"இதோ பார் உமா... வளவளன்னு பேசாதே. பெரியம்மா சொன்னதுல எனக்கே முதல்ல நம்பிக்கை இல்ல. ஆனா நடக்கிறதெல்லாம் பார்த்தா எனக்குப் பயமாத் தான் இருக்கு."

"அம்மா! நம்ம கவனக் குறைவுக்கு அந்தச் சிசு எப்படிக் காரணமாகும்? இது ரொம்பத் தப்பும்மா."

சிவகாமி முன்னே வந்தாள். "உமா! உன் அம்மா இப்பத்தான் கொஞ்சம் தெளிஞ்சிருக்கா. நீ திரும்பவும் குழப்பிடாதே."

"பெரியம்மா! நீங்கதான் அம்மாவைக் குழப்புறீங்க. என் அம்மா மனசுல விஷத்தை விதைக்கிறீங்க."

"வாயை மூடடி. நம்ம நல்லதுக்காகத்தானே சொல்றாங்க."

"அம்மா! இப்படிப் பத்தாம்பசலியா இருக்கியே. இந்தக் காலத்தில போயி கிரகம், நல்ல நேரம், கெட்ட நேரம்னு நம்புறியே."

"ஆமான்டி. நாங்க பழமையில ஊறினவங்க. எங்க நம்பிக்கையை மாத்திக்க முடியாது."

"அது உங்களோட இருந்தா சரி. அதை ஏன் மத்தவங்க மேலே சுமத்துறீங்க? இது பாவம்மா."

"எல்லாம் எனக்குத் தெரியும். நீ பேசாம இரு. நடக்க வேண்டியதை நாங்க பேசிக்கிறோம்," - என இருவரும் விலகிவிட, உமா ஆத்திரமாய் முறைத்தாள். செய்வ தறியாமல் திணறி நின்றாள். வலியையும் மீறி நர்மதாவின் நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்தினாள்.

இந்தப் பெரியம்மாவிற்குத் தன் அண்ணியின் மீது அப்படி என்ன கோபம்? ஏன் இப்படி வார்த்தையை அம்பாய்த் தொடுத்துக் குத்திக் கிழிக்கிறார்கள்?

அம்மா வெகுளி. அம்மாவை ஏமாற்றுவது சுலபம். அதைப் பெரியம்மா நன்றாகவே புரிந்து வைத்திருக் கிறார்கள். அப்படியென்ன விரோதம் ஒரு இளம் விதவை



மீது. அதுவும் வயிற்றுப் பிள்ளையோடு நிற்கும் அண்ணி யிடம் இப்படி வெறுப்பைக் கொட்டலாமா?

அண்ணியும்தான் எங்கே போவார்கள்?

பெண்டாட்டியின் காலடியில் கிடக்கும் அண்ணன் வீட்டில் அண்ணியின் அப்பாவிற்கு இடம் தந்ததே பெரிசு என அடிக்கடி அண்ணி சொல்வதுண்டு.

இதில் அண்ணிக்கு எப்படி இடம் கிடைக்கும்? வயிற்றில் சிசுவோடு தன்னந்தனியாய்த் தவிக்க விடலாமா? விடக்கூடாது. அண்ணியை விட்டுவிட்டு நம் வீட்டிற்குப் போய்விடக் கூடாது.

நானும் இல்லையென்றால் பெரியம்மாவின் ஆட்டம் அதிகமாகிவிடும். அம்மாவும் அடியோடு மாறிவிடலாம். அண்ணிக்கு ஏதேனும் வழி செய்யாமல் இந்த வீட்டை விட்டு நகரக்கூடாது என்ற முடிவுடன் கண்களை மூடினாள்.

ஆனால் சற்று நேரத்தில் வந்து நின்ற கணவன், மனைவியின் உடலில் உள்ள ரணத்தைக் கண்டு பதறி, உடனே தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தயாரானான்.

"இவ்வளவு காயம் பட்டிருக்கு... ஹாஸ்பிடல் போகாம கை வைத்தியம் செய்திருக்கீங்க. செப்டிக் ஆயிட்டா என்னாகும்? உமா! நீ உடனே கிளம்பு. ஹாஸ்பிடல் போயிட்டு நம்ம வீட்டுக்குப் போகலாம்," - எனத் திவாகர் சொல்ல, மறுக்க முடியாமல் சற்றே வருத்தமாய் இரக்கமாய் நர்மதாவைத் திரும்பிப் பார்த்தாள் உமா.

பதட்டமும் பரிதவிப்புமாய்க் கண்களில் நீர் மின்ன நின்றாள் நர்மதா.

# 4



சிற்பியின் உளியால்
விடாமல் அடி வாங்கினாலும்
சிரிக்கின்றதே சிலை!

உமா தன் புகுந்த வீட்டிற்குக் கிளம்பி விட்டாள் என்றதுமே தன் உடலில் கொஞ்சமாய் ஒட்டிக்கொண்டிருந்த தன்னம்பிக்கையும் பலமும் போய்விட, வெடவெடத்த உடலோடு நிற்கமுடியாமல் தரையில் அமர்ந்து கொண்டாள் நர்மதா.

இந்த வீட்டில் தனக்காக வாதாடும் ஒரே ஜீவனும் விலகிப் போகிறது. இனி என் கதி? சிவகாமி அம்மாளுக்குத் தன் மீது ஏன் இத்தனை குரோதம் என்பது நர்மதா அறிந்ததே.

தன் உறவுப் பெண்ணை எப்படியும் சங்கரனுக்கு முடித்து விட வேண்டும் என்று பெரும் போராட்டமே செய்திருக்கிறாள். ஆனால் சங்கரன் ஒப்புக்கொள்ள வில்லை.

அழகும் கனிவுமான இந்தப் பெண்தான் வேணும்னு என் பெரியம்மாகிட்டயும் அம்மாகிட்டயும் சண்டை போட்டு உன் வீட்டுக்குப் பெண் பார்க்க வந்தேன் எனச் சங்கரன் சொல்லியிருக்கிறான்.

அதோடு பெரியம்மாவிடம் சற்று எச்சரிக்கையோடு விலகியே இருக்கும்படியாகவும் சொல்லி வைத்திருந்தான்.



திருமணமான பத்தே நாளில் இந்தச் சிவகாமியின் வீட்டிற்கு விருந்திற்குச் சென்ற போதுகூட மனைவியை விட்டு ஒரு நிமிடம்கூட நகரவில்லை சங்கரன்.

கூடவே இருந்து விருந்து முடிந்ததும் இரவில் தங்காமல் மனைவியோடு கிளம்பி விட்டான்.

சிவகாமி எத்தனையோ வற்புறுத்தியும் விடாமல் மறுத்துவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

வரும் வழியில் நர்மதா வாய்விட்டுக் கேட்டேவிட்டாள்.

"ஏங்க! உங்க பெரியம்மாதான் இவ்வளவு ஆசைப்படு றாங்களே. இன்னிக்கு ஒரு நாள் தங்கியிருக்கலாமே!" - என்றவளைப் பார்த்து மறுப்பாய்த் தலையசைத்தான்.

"நர்மதா! எங்க பெரியம்மா தேனாய்ப் பேசுறாங்கன்னு நம்பிடாதே. உள்ளுக்குள்ள அத்தனையும் விஷம்."

"ஏங்க அப்படிச் சொல்றீங்க?"

"ஆமாம். எங்க குடும்பத்திலயே உன்னை மாதிரி அழகான பொண்ணு யாருக்கும் கிடைக்கல்ல. எனக்கு நீ கிடைச்சதுல எல்லாருக்கும் ரொம்பப் பொறாமை."

"விளையாடாதீங்க..." - லேசாய்ச் சிணுங்கினாள்.

"உண்மைதான் நர்மதா. அதிலயும் என் பெரியம்மா வுக்குத்தான் ரொம்ப வயித்தெரிச்சல். தன்னோட அண்ணன் பொண்ணை என் தலையில கட்டி வெச்சிடணும்னு போராடிப் பார்த்தாங்க. நான் அசையலியே."

"ஏங்க! ஏன் வேண்டாம்னு சொன்னீங்க?"

"பணமும் நகையும் இருந்தாப் போதுமா? மனசுக்குப் பிடிக்க வேண்டாமா? எனக்கு உன்னைத்தான் பிடிச்சது நர்மதா."

"சரிங்க. எல்லாரும் சந்தோஷமா சம்மதிச்சித்தானே நம்ம கல்யாணம் நடந்தது. பிறகென்ன?"

"சம்மதிச்சாங்க. ஆனா சந்தோஷமா சம்மதிக்கல்ல."

"ஏ... என்னங்க சொல்றீங்க?"

"ஆமா நர்மதா. நான்தான் பிடிவாதமா நின்னு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

நர்மதாவின் வயிற்றுக்குள் லேசாய்ப் பிசைந்தது. தயக்கமாய்க் கணவனை ஏறிட்டாள்.

"ஏங்க! அப்போ... உங்க வீட்லகூட யாருக்கும் என்னைப் பிடிக்கலியா? அத்தைக்கு?"

"அம்மாவைப் பத்தி நீ கவலைப்படாதே. அம்மா மனசு தங்கம். இந்தப் பெரியம்மாதான் விஷம். ஆனாலும் என் மேலே கோபப்பட மாட்டாங்க."

"ஏன்?"

"ஏன்னா பணத்தைத் தண்ணியாச் செலவழிப்பேனே. நர்மதா! என் சம்பாத்தியம் முழுசும் இவங்களுக்காகத்தான் செலவழிப்பேன். அதனால என்னைப் பகைச்சுக்க முடியாது இவங்களால..."

பதில் பேசாமல் அமைதியாய் வந்தாள் நர்மதா.

"நர்மதா! பெரியம்மா அடிக்கடி நம்ம வீட்டுக்கு வந்து போவாங்க. நான் இல்லாத நேரம் உங்கிட்ட ஏதாவது பேசினா, கொஞ்சம் பொறுத்துப் போ. சரியா?"



"ச... சரிங்க."

"பெரியம்மா நல்லவங்கதான். கொஞ்சம் வாய்தான் அதிகம்.."

"ம்..."

"குற்றம் பார்த்தா சுற்றம் இல்லைன்னு சொல் வாங்களே..."

"ம்..."

"அதனால நாம கொஞ்சம் பொறுத்துப் போயிடலாம்."

"சரிங்க."

"மத்தப்படி அம்மாவுக்கு என் தங்கைகளுக்கெல்லாம் உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. உனக்கு ஒரு குறையும் இல்லாமப் பார்த்துப்பாங்க."

"அது போதுங்க."

"என் பெரியம்மா கிட்ட மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையா இருந்துக்கணும். எது பேசினாலும் மௌனமா இருந்துடு."

"சரிங்க!" - என்றவள் கணவனின் வார்த்தைக்கேற்ப மௌனமாய்த்தான் இருந்தாள்.

அவ்வப்பொழுது வரும் சிவகாமி, "கற்பகம்! கலரும் அழகும் இருந்தாப் போதுமா? காசு பணம் வேண்டாமா? நான் சொன்ன பொண்ணை மட்டும் இந்தப் பய கட்டி யிருந்தா மாமனார் பெரிய கடையே வெச்சிக் கொடுத் திருப்பாரு.

"நீயும் இப்படி வாடகை வீட்டுல கிடந்து கஷ்டப்பட வேண்டாம். அரண்மனை மாதிரி பெரிய வீடு தெரியுமா?

ஒரே பொண்ணு. எல்லாச் சொத்தும் இவனுக்கே
வந்திருக்கும். என்ன பொண்ணு இவ? பூனை மாதி
பதுங்கியே இருக்கிறா. ஒரு வார்த்தை பேசுறா பாரேன்
உங்ககூடயாவது பேசுவாளா? மாட்டாளா?" - எ
ஒவ்வொரு முறையும் சீண்டும்போது மௌனமாகவே
இருந்து விடுவாள்.

கற்பகம் மட்டும் சில சமயம் பரிந்து பேசுவதுண்டு
ஆனால் இன்று? எறும்பு ஊரக் கல்லும் தேயுமாமே. இதே
இன்று தன் மாமியாரின் மனதையும் மாற்றிவிட்டாளே இந்
அம்மாள்.

உமாவும் போனபின்பு என்னை என்ன செய்வாளோ
பயமும் பதட்டமுமாய்த் தன்னிடம் விடைபெற வந்
உமாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள் நர்மதா.

"உமா! இன்னிக்கே போகணுமா?"

"எனக்குப் போக மனசில்ல அண்ணி. ஆனா அ
இந்தக் காயத்தைப் பார்த்திட்டுப் பயப்படுறார்."

"ஹாஸ்பிடலுக்குப் போயிட்டு வந்திடேன் உமா!"

திவாகர் புன்னகையோடு சொன்னான். "இ
மழையில அலைய முடியலக்கா. இவ காயம் ஆறட்
ஒரு பத்து நாள் வந்து இருப்பா. இப்போ கிளம்புறோம்."

"சரிங்க... அப்பப்போ போன் பண்ணுங்க."

"கண்டிப்பாப் பண்றேன் அண்ணி. நேரம் கிடைக்
போது வந்து பார்க்கிறோம். போயிட்டு வரட்டுமா?"

"ம்... சரி," - என்றவாறே எழுந்து நின்றாள்.



"அண்ணி! உடம்பைப் பார்த்துக்கங்க. வேளா வேளைக்குச் சாப்பிடுங்க."

"சரி உமா."

"யாருக்காகவும் எதுக்காகவும் பயப்படாதீங்க. இது உங்க வீடு."

"சரி உமா."

"அம்மாவைக் கூட்டிட்டு செக்-அப்புக்குப் போங்க."

"ம்..."

"நான் போயிட்டு வரட்டுமா?"

"ம்..."

"தைரியமா இருங்க அண்ணி. எல்லாம் நல்லபடியா நடக்கும்."

"சரி உமா."

"நான் போயிட்டு வர்றேன் அண்ணி."

"ம்... உடம்பைப் பார்த்துக்க."

"சரி அண்ணி. என்னங்க, போலாமா?"

"ம்... போலாம். வர்றேன் அக்கா. அத்தே! போயிட்டு வர்றோம்," என்றவாறு திவாகர் வாசலை நோக்கி நடக்க, உமாவுடன் தொடர்ந்த நர்மதாவைக் கைப்பற்றி நிறுத்தினாள் சிவகாமி.

"நீ எங்கே போறே?"

"வந்து... உமாவை வழியனுப்பிட்டு..."

"அதெல்லாம் அவளே போயிடுவா. நீ வழியனுப்ப வேண்டாம்."

"ஏன் அத்தே?"

"நீ என்ன குழந்தையா? அறுத்திட்டு நிக்கிறவ முகத்தைப் பார்த்திட்டு வெளியே கிளம்பினா போற காரியம் உருப்படுமா?"

சாட்டையால் அடி வாங்கியது போல் துடித்துப் போனாள் நர்மதா. சட்டெனக் கண் கலங்கியது.

"இந்த மாதிரி சும்மா சும்மா வாசலுக்குப் போக நினைக்காதே. வீட்டுக்கு வர்ற ஆம்பிளை முன்னே நிற்காதே. உமா வீட்டுக்காரர்கூடப் பேசுறத நிறுத்திக்க. அது அவளுக்கே ஆபத்தாப் போயிடும்." - சிவகாமியின் இடிக் குரலில் அரண்டு போனாள்.

உடல் சோர்ந்து துவண்டது. எந்த அர்த்தத்தில் பேசுகிறாள் எனப் புரிந்து போனதில் உடலும் மனமும் கூசிப் போனது. கணவனின் இழப்பு பூதாகரமாய் மிரட்டியது.

நல்லவனோ கெட்டவனோ உத்தமனோ குடிகாரனோ... பெண்ணுக்குக் கண்டிப்பாய்க் கணவன் உயிரோடு இருக்க வேண்டும். இல்லாமல் போனால் இத்தகைய பேச்சுக்களைக் கேட்க வேண்டுமோ?

இது ஆரம்பம்தானே. இன்னும் என்னவெல்லாம் பேசுவார்களோ? எதையெல்லாம் கேட்க வேண்டுமோ? மனவேதனையைச் சொல்லி அழக்கூட ஆளில்லையே. சாய்ந்து கொள்ள அன்னையின் மடி இல்லையே!

கணவனின் இழப்போடு தாயின் இழப்பின் தாக்கமும் சேர்ந்து கொள்ளத் தரையில் மடங்கி அமர்ந்து விம்மி அழ ஆரம்பித்தாள்.



"இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படி ஒப்பாரி வைக்கிற? வீட்டுப் பொண்ணு இப்பத்தான் புருஷனோட வெளிய போறா. இந்நேரம் அழுதா என்ன அர்த்தம்? நான் இப்படி வீட்டுக்குள்ள முடங்கிக் கிடக்கிறேன். இவ மட்டும் புருஷனோட சோடி போட்டுக் கிளம்புறாளேன்னு வயித்தெரிச்சல்தானே. பார்த்தியா கற்பகம்! உன் மருமகளுக்கு எவ்வளவு கெட்ட எண்ணம்!"

சிவகாமி கற்பகத்தை ஏற்றிவிட, சட்டென அழுகையை நிறுத்தி நிமிர்ந்தாள் நர்மதா.

"அத்தே! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க? நான் அப்படி நினைப்பேனா?"

"போதும்டி உன் நடிப்பு. இப்படி நடிச்சுத்தான் குடும்பத்தையே கைக்குள்ள போட்டுக்கிட்டியா?"

"அத்தே!"

"என்ன மாயம் பண்ணினியோ, மந்திரம் பண்ணினியோ... எங்க சங்கரன் உன் புராணம் பாடிட்டு உன் காலைச் சுத்திட்டே திரிஞ்சான். இப்போ போயிச் சேர்ந்திட்டான். இன்னும் யார் யாரையெல்லாம் காவு வாங்கணும்னு இங்கேயே குத்த வெச்சிக்கிட்டு இருக்கியோ. கழுத்தைப் பிடிச்சா வெளியே தள்ள முடியும்? தானா போகணும்."

நர்மதா பரிதாபமாய்க் கற்பகத்தை ஏறிட்டாள். "அத்தே! நான்... நான் எங்கே போவேன் அத்தே?"

"எங்கேயோ போ. இங்கே ஏன் இருக்கே?" - சிவகாமியே பதில் சொல்ல, நர்மதாவின் தன்மானம் தலை தூக்கியது.

நீங்க யாருங்க? என்னை வெளியே போகச் சொல்ல உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. எது பேசுறதா இருந்தாலும் எங்க அத்தையே பேசட்டும்." - வெடுக்கெனக் கூறியதும் வாயில் அடித்துக் கொண்டாள் சிவகாமி.

"ஐயோ! ஐயோ! பார்த்தியா கற்பகம்! உம் மருமக என்னவெல்லாம் பேசுறான்னு பார்த்தியா? உரிமையைப் பத்திப் பேசுறாளே. பூனை மாதிரி இருந்துக்கிட்டு என்ன பேசுறா பாரேன்!"

கற்பகம் நர்மதாவை நெருங்கினாள். "என்ன பேசுற நீ? வயசுல பெரியவங்கன்ற மரியாதை வேண்டாம்?" - முகத்தைப் பாராமலே சொன்னவளைப் பார்த்து மென்மை யாய்க் கேட்டாள் நர்மதா.

"அத்தே! இவங்க யாருத்தே என்னை வெளியே போகச் சொல்ல?"

"எங்க அக்கா சொன்னது என்னோட முடிவைத்தான்." - கடுப்பாய்ச் சொன்ன கற்பகத்தை நம்ப முடியாமல் பார்த்தாள்.

"அத்தே...!"

"ஆமா! என் புள்ளையத் தொலைச்சது போதும். இப்ப எம் பொண்ணும் உடம்பில கொதிநீரை ஊத்திக்கிட்டு உடல் வெந்து போறா. இனி என்ன நடக்கணும்?"

"அத்தே! நான்... நான் என்ன பண்ணினேன்?"

"நீ பண்ணினியோ... உன் கிரஹம் பண்ணிச்சோ! அதெல்லாம் எனக்குத் தேவையில்லை. நீ... நீ போயிடு."

"அத்தே!" - அதிர்ச்சியில் விழிகளில் நீர் தளும்பியது.



"என்னை அப்படிக் கூப்பிடாதே. எனக்கு ரொம்பக் கொடுமையாப் பேசத் தெரியாது. தயவு செய்து போயிடு." - முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கற்பகம்.

"அத்தே! நான்... எங்கே போவேன்?"

"ஏன்? உனக்கென்ன பொறந்த வீடு இல்லாமலா போச்சு? உன் அண்ணனும் அப்பனும் ஆம்பிளைங்க தானே. உனக்குச் சாப்பாடு போடமாட்டானுங்களா?" - சிவகாமி அலட்சியமாகக் கேட்க, நொறுங்கிப் போனாள் நர்மதா.

"இதோ பாருடியம்மா. கற்பகம் பாவம். புருஷன் இல்லாம ஒண்டியா நின்னு வீட்டு வேலை செய்து, பீடி சுத்திப் பிள்ளைகளை வளர்த்தா. எங்க சங்கரன் தலையெடுத்த பிறகுதான் கொஞ்சம் ஓய்வெடுத்தா.

"இப்போ எல்லாம் போச்சு. இனி அவ ஆயுசுக்கும் பாடுபட்டுத்தான் ஆகணும். இதுல நீயும் இப்படி உட்கார்ந்தா எப்படி? உனக்கும் உம் பிள்ளைக்குமா அவ பாடுபட அவளுக்கு என்ன வாலிப வயசா?

"ஒரு கிழவியோட சம்பாத்தியத்தை உட்கார்ந்து சாப்பிட்டா உனக்கு ஜீரணம் ஆகுமா? வீடு வாசல் இல்லாத அநாதையா நீ? உன் வீட்டு மனுஷங்களுக்கு இதெல்லாம் தோணாதா?

"கற்பகம் வார்த்தை கடத்திப் பேசப் பயப்படுவா. அதான் அவ சார்பா நான் பேசுறேன். இதுக்கு மேலயும் வாதம் பண்ணி நாளைக் கடத்தாம சட்டுபுட்டுன்னு கிளம்பு. அவளும் அடுத்தடுத்த பிள்ளைகளுக்கு நாலு காசு

சேர்க்கணுமில்ல. நல்ல காரியம் செய்யணுமில்ல. உன்னை வெச்சிக்கிட்டு ஏதாவது பண்ண முடியுமா, சொல்லு."

சிவகாமி மேலும் மேலும் பலவிதமான காரணகாரியங்களைச் சொல்லிக்கொண்டே போக, நர்மதாவின் கண்கள் சுத்தமாய் வற்றிப் போயின.

வெறுமையும் விரக்தியுமாய் மனமும் முகமும் இறுகிப் போயின.

# 5



அருகே நிற்பதைப் போல்
தோன்றினாலும் - எட்டிப்
பிடிக்க முடியவில்லையே
வானத்தை!

**கா**லை நேரப் பரபரப்பில் இருந்தான் பிரபாகர். குளித்து முடித்து அவசரமாய் உடைகளை அணிந்து கொண்டு சாப்பாட்டு மேசையை நெருங்கினான். கையில் பெரிய கனமான மருத்துவப் புத்தகம்.

"அம்மா! டயமாச்சு. டிபன் ரெடியா?" - குரல் கொடுத்தவாறே சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்து புத்தகத்தைப் பிரித்தான்.

"இதோ வர்றேன்..." - என்றவாறு டிபனுடன் வந்த சந்திரா, மகனின் செயலைக் கண்டு கடுப்பானாள்.



"ஏன்டா! சாப்பாட்டு மேஜையிலகூடத் தனியா உட்கார மாட்டியா? கூடவே ஒரு புத்தகத்தைத் தூக்கிட்டு வந்திடுவியா?"

"டயமாகுதும்மா. சீக்கிரம் டிபனைப் போடுங்க."

"நான் சொல்றதைக் காதில வாங்காதே." - அலுத்துக் கொண்டே தட்டில் இட்லியை வைத்துச் சாம்பாரை ஊற்றினாள்.

"போதும்... போதும்." - அவசரமாகச் சாப்பிட ஆரம்பித்தான்.

"என்னடா அவசரம்? மெதுவாச் சாப்பிடேன்."

"இன்னும் அரை மணியில ஆபரேஷன் தியேட்டர்ல நிக்கணும் நான்."

"இன்னிக்குமா?"

"ஏன்? இன்னிக்கு என்ன?" கேட்டுக் கொண்டே கைகழுவியவாறே எழுந்தான்.

"என்னடா! ரெண்டே இட்லியில எழுந்திட்டே?"

"போதும்மா... நான் கிளம்பறேன்."

"பிரபா! கொஞ்சம் நில்லுடா."

"ம்ப்ச்! என்னம்மா?" - நின்று திரும்பினான்.

"என்னடா! ஒன்னுமே சொல்லாமப் போற?"

"என்ன? என்ன சொல்லணும்?"

"நேத்து நைட் அவ்வளவு நேரம் சொன்னேனே."

"என்ன சொன்னீங்க?"

"விளையாடாதே பிரபா!"

"நீங்கதாம்மா விளையாடுறீங்க. நான் எவ்வளவு அர்ஜெண்டாப் போயிட்டு இருக்கேன். இப்ப வந்து..."

"இப்ப விட்டா உன்னை எப்படா பார்க்க முடியுது? ராத்திரி எத்தனை மணிக்கு வீட்டுக்கு வர்றே? சில நாள் ஹாஸ்பிடல்லயே தங்கிடுற."

"இது எப்பவும் நடக்கிறது தானேம்மா."

"எத்தனை நாள்தான் இப்படியே இருப்ப?"

பொறுமை இழந்தான் பிரபாகர். "அம்மா! எது பேசுறதா இருந்தாலும் நாளைக்குப் பேசுங்க. இன்னிக்கு ஃபுல்லா நான் பிஸி."

"நீ எப்பத்தான் ஃப்ரீயா இருந்தே? பெத்தவகிட்டப் பேசக்கூட உனக்கு டயமில்ல."

"அம்மா! என்னோட வேலை அப்படி. நான் என்ன பண்ணட்டும்?"

"என்ன பெரிய வேலை? இந்தப் படிப்புப் படிக்கும்போதே வேண்டாம்னு சொன்னேனே, கேட்டியா?"

"அம்மா!"

"பின்ன என்னடா? குடும்பத்தோட உட்கார்ந்து ஒரு வேளையாவது சாப்பிடுறியா? வெளியூர் போக முடியுதா? கல்யாணம் காட்சின்னு குடும்பமா போக முடியுதா?"

"இதெல்லாம் ஒரு பிரச்சனையாம்மா?"

"என்கூடப் பேசக்கூட உனக்கு நேரமில்ல. நான் சொல்றதைக் காது கொடுத்துக் கேட்க டயமில்ல. அப்ப ஒரு வேலை நமக்குத் தேவையா?"



"ம்மா! இது வேலையில்லம்மா. சேவை. சேவை செய்யக் காலம் நேரம் பார்க்கலாமா?"

"ஊருக்கெல்லாம் சேவை செய். பெத்தவ பேச்சைக் கேட்காதே."

"அம்மா! என்னாச்சு உங்களுக்கு?"

"எனக்கு இப்பவே பதில் தெரிஞ்சாகணும்."

"என்ன பதில்?"

"நேத்துச் சொன்னேனே ஒரு பொண்ணு... காஞ்சனான்னு..."

"ஸாரிம்மா, வேண்டாம்."

"ஏன்? ஏன் வேண்டாம்?"

"எனக்குக் கல்யாணம் பண்ற ஐடியாவே இல்ல."

"அதான் ஏன்னு கேட்கிறேன்."

"இப்போ நீங்க மட்டும் சண்டை போடுறீங்க. மேரேஜ் ஆன பிறகு மத்தளம் மாதிரி ரெண்டு பேருகிட்டயும் அடி வாங்கவா?"

"என்னடா சொல்றே?"

"ப்ளீஸ்மா. இப்படித் தேவையில்லாததைப் பேசி என் டயத்தை வீணாக்காதீங்க. நான் கிளம்புறேன்!" - வாசலை நோக்கி நடந்தவனின் பின்னேயே ஓடினாள் சந்திரா.

"அவங்க வந்தா என்னடா சொல்றது?"

"யாரு?"

"பொண்ணு வீட்டுக்காரங்க."

"என்ன?" - நின்று கோபமாய்த் திரும்பினான்.

"இன்னிக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு வர்றாங்க."

"யாரைக் கேட்டு வரச் சொன்னீங்க?" - சீறினான்.

"ஏன்டா, எனக்கந்த உரிமை இல்லையா? என் பிள்ளைக்குப் பெண் பார்த்து முடிக்க யாரைக் கேட்கணும்?"

"போதும். போதும். நீங்க எனக்காகப் பெண் பார்த்ததும் போதும்; பேசி முடித்ததும் போதும். இனி எதையும் செய்ய வேண்டாம்."

"பிரபா!"

"போதும்மா. ஒரு பெண்ணோட மனசைக் கொன்ன துக்கே இன்னிக்கு வரைக்கும் என்னால தூங்க முடியல்ல. இதுல மேல மேல ஏன் பாவத்தைச் சேர்க்கிறீங்க?"

"நான் என்னடா பாவத்தைச் சேர்த்தேன்?"

"பின்னே பாவமில்லையா? ஒரு பெண்ணைப் பார்த்துப் பேசி முடிச்சுக் கல்யாண மேடை வரைக்கும் வந்திட்டு கேவலம் பணத்துக்காக நிறுத்தினது பாவமில்லையா?"

"டேய்! பேசினபடி பணத்தைக் கொடுத்திருந்தா நான் ஏன்டா கல்யாணத்தை நிறுத்தப் போறேன்? அவ அப்பன்தான்டா நம்ப வெச்சு ஏமாத்தினான். சொல்லப் போனா நமக்குத்தான் நஷ்டம்... அசிங்கம்."

"நமக்கு என்னம்மா நஷ்டம்?"

"என்னடா இப்படிக் கேட்கிற? பொண்ணு பார்க்கப் போனப்ப, நிச்சயம் பண்ணினப்போன்னு எவ்வளவு செலவு! அதெல்லாம் நஷ்டம் இல்லையா?"



வெறுப்பாய்த் தாயைப் பார்த்தான். "இப்பவும் பணத்தை மட்டும்தாம்மா பார்க்கிறீங்க. ஆனா... அவங்க வீட்டுல... ஒரு... ஒரு உயிரே போயிடுச்சும்மா. அதை நினைச்சுப் பார்த்தீங்களா?"

"அவனே ஒரு நோயாளி. நம்மளை ஏமாத்தின குற்ற உணர்வில பொசுக்குன்னு போயிட்டான். என்னவோ நாமளே கொன்ன மாதிரிப் பேசுற!"

"நாமதாம்மா கொன்னோம். நாம என்ன? நான்... நான்தான் அவரைக் கொன்னுட்டேன்." - குரல் கம்மியது.

"நீ என்னடா பண்ணினே?"

"என்னை விலை பேசினது தெரியாம நீங்க செய்த காரியத்திற்கு நானும் ஒரு காரணமாகிட்டேனே. என்னால தான்... என்னாலதான்."

"பிரபா! போனதெல்லாம் விடு. விஷயத்துக்கு வா."

"என் முடிவில எந்த மாற்றமும் இல்ல. எனக்குக் கல்யாணமே தேவையில்ல. என்னை என் விருப்பத்திற்கு விட்டுடுங்க."

"அதெப்படி விட முடியும்? உனக்கென்ன இருபது வயசா ஆகுது?"

"அறுபது வயசானாலும் என் முடிவை மாத்திக்க மாட்டேன்."

"டேய் பிரபா! நீ எதை மனசில வெச்சிக்கிட்டு இப்படி யெல்லாம் பேசுறன்னு எனக்குத் தெரியும்."

"தெரியுதில்ல... விடுங்க."

"பிரபா! வரவர உன் பிடிவாதம் ரொம்ப அதிகமா போச்சு."

"அம்மா! ஏன் என்னை இப்படி டார்ச்சர் பண்றீங்க இன்னிக்கு மூணு ஹார்ட் ஆபரேஷன் இருக்கு. நான்தா பண்ணணும். அதுக்கு நான் ரெடி பண்ணிட்டு இருக்கு போது இப்படி டார்ச்சர் பண்ணினா என்னால எப்ப டியூட்டியில கவனத்தைச் செலுத்த முடியும்?"

"நீ இந்த வேலைக்குப் போறதே எனக்குப் பிடிக்கல சாப்பாடு, தூக்கம் இல்லாம அப்படியென்ன பெரிய வேலை முதல்ல இந்த வேலையை விடு."

"என் உயிரை விட்டுவிடட்டுமா?" - தாயை நெருங்கி கடுத்த முகமாய் ஆங்காரத்தோடு கேட்டவனைக் கண் மிரண்டு போனாள் சந்திரா.

"பி... பிரபா!"

"என் உயிரை விட்டாலும் விடுவேன். ஆனா எ வேலையை விட மாட்டேன்."

"ஏன்டா பெரிய வார்த்தையெல்லாம் பேசுற?"

"என்னைப் பேச வைக்கிறீங்க. இனிமே எனக்கு பிடிக்காத எதைப் பேசினாலும் என் முடிவு இதுவாகத்தா இருக்கும்." - விரல் நீட்டி எச்சரித்தான்.

"பிரபா!"

"எம் மேல உள்ள வெறுப்பால மொத்த ஆ வர்க்கத்தையே வெறுக்கிறா சங்கரி. அவளே தனி மர நிற்கும்போது எனக்குக் கல்யாணம் ஒரு கேடா?"



"அது அவ தலையெழுத்து. அதுக்கு நீ ஏன்டா..."

"வாயை மூடுங்கம்மா. அவ தலையெழுத்தை மாத்தி எழுதினதே நீங்கதான். எப்படி இருந்தவ! இப்ப என்னைப் பார்த்தாலே நெருப்பாத் தகிக்கிறா. எல்லாம் யாரால? உங்களாலதான்."

"என்னை ஏன்டா குறை சொல்ற? பொண்ணுக்கு அதைச் செய்யிறோம் இதைச் செய்யிறோம்னு சபையில சொல்லிட்டுக் கடைசி நேரத்தில கையை விரிச்சது அவ அப்பன்தான். அப்பன் பண்ணின தப்புக்குப் பொண்ணு இப்படி நிற்கிறா. அதுக்கு நாம என்ன செய்ய முடியும்? வாக்குச் சுத்தம் வேணும்டா."

"என்ன? வாக்குச் சுத்தமா? அது உங்களுக்கு இருக்கா?" - தாயை உற்றுப்பார்த்தான் பிரபாகர்.

"ஏன்டா! நான் என்ன செய்தேன்?"

"எனக்குச் சங்கரியைப் பிடித்திருக்கிறது. மணம் பேசி முடியுங்கள் என்றேனே. அதற்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"எ... என்ன சொன்னேன்?"

"உன் விருப்பம்தான் என் விருப்பம்னு சொன்னீங்களா இல்லையா?"

"ஆமாம், சொன்னேன். உன் விருப்பத்திற்காகத் தான் நம்மை விட வசதி குறைஞ்சவங்களா இருந்தாலும் பரவாயில்லன்னு நானே நேர்ல போய்ச் சம்பந்தம் பேசினேன்."

"சம்பந்தம் பேசல்ல... வியாபாரம் பேசியிருக்கீங்க."

"அதுல என்னடா தப்பு? கல்யாணம்னா கொடுக்கல் வாங்கல் சகஜம்தானே. என்னவோ கொலைக் குத்தம் பண்ணின மாதிரி விசாரிக்கிற?"

"கொலைக் குற்றமாத்தான் ஆகிப் போச்சு. அஞ்சு லட்ச ரூபாய்க்காக என்னை விலை பேசியிருக்கீங்க. அந்த விலையைக் கொடுக்க முடியாமத்தான் விஸ்வநாதன் ஸார் இறந்தாரு. இப்போ சங்கரி முன்னால நான் ஒரு கொலைகாரனாத்தான் நிக்கிறேன். கடைசி வரை அவ வெறுப்பும் மாறப் போறதில்ல. அவ இல்லாம எனக்கு வாழ்க்கையும் இல்ல."

"பிரபா!"

"என்னோட வேதனையையும் இழப்பையும் மறக்கத் தான் இப்படி வேலை வேலைன்னு ஓடுறேன். அதிலதான் நிம்மதி அடையுறேன். அம்மா! ப்ளீஸ்... எனக்கு இருக்கிற இந்த ஒரு நிம்மதியையும் கெடுத்திடாதீங்க." - கம்மிய குரலில் சொல்லிவிட்டுச் சரேலென வெளியேறி காரில் ஏறி வீட்டை விட்டு வெளியேறினான்.

அசைவற்று நின்றாள் சந்திரா. கோபமும் வருத்தமுமாய் மனம் கொதித்தது. என்ன பிள்ளை இவன்! வயது ஏறிக்கொண்டே போகிறதே என்ற எண்ணமே இல்லையே. கடைசிவரை இப்படியே இருந்து விடுவானா? என் பேச்சைக் கேட்கவே மாட்டானா?

நடைப்பயிற்சியை முடித்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்த ராமச்சந்திரன், கேட் திறந்து கிடப்பதையும் மனைவியின் முகத்தையும் பார்த்துவிட்டு மனைவியை நெருங்கினார்.

"என்ன... கேட்டைத் திறந்து வெச்சிட்டு இப்படி அசையாம நிற்கிற. எனக்காக வழி மேல் விழிவெச்சக் காத்து நிற்கிறியா?" - கேலியாய்க் கேட்ட கணவனை முறைத்தாள் சந்திரா.



"ம்க்கும். அது ஒன்னுதான் குறைச்சல்!"

"அதானே பார்த்தேன். சரி! வேற யாரை எதிர் பார்த்திட்டு நிற்கிற?"

"யாரையும் எதிர்பார்க்கல்ல." - கோபமாய்க் கேட்டைச் சாத்திவிட்டுத் திரும்பினாள்.

"என்ன? காலையிலேயே அனல் வீசுது. என்ன விஷயம்?" - எனக் கேட்ட ராமச்சந்திரனுக்கு இயல்பாகவே சிரித்த முகம். அறுபதைத் தொட்ட பிறகும் சற்றே இளமையோடு தெரிய, இந்தச் சிரிப்பும் கபடமற்ற மனமும் காரணமாக இருக்கலாம்.

இலேசாய் நரைக்கத் தொடங்கிவிட்ட தலையும் மீசையும் தவிர வயதானவர் என்று சொல்லக் கூடிய தள்ளாமையோ தளர்ச்சியோ இன்றி உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் கம்பீரமாகவும் வலம் வருபவர்.

கணவனுக்கு நேர் எதிர் சந்திரா. மாநிறம். சற்றே பருத்த உடல். முகத்தில் சிரிப்பு என்பதே இல்லாமல் சதா சர்வகாலமும் ஒரு சிடுசிடுப்பு. அதட்டல், மிரட்டல் என்றே காலம் கழித்ததில் சீக்கிரமே மூப்பை எட்டிப் பிடித்திருந்தாள்.

கணவனின் புன்னகையும் துள்ளலும் தங்கமான நிறமும் அடிக்கடி அவளது கோபத்தில் எண்ணெயை ஊற்றும். அனைத்திற்குமே சிரித்துக் கொண்டே போய் விடுவார் ராமச்சந்திரன்.

கணவன் மனைவி இருவரில் ஒருவர் இப்படி அமைந்து விட்டால் குடும்ப வண்டி தடுமாறாமல் ஓடும்.

ஒன்றையொன்று முட்டிக் கொண்டும் மோதிக் கொண்டு
இருந்தால் இல்வாழ்க்கை சிதைந்து போய்விடும்.

அந்த விதத்தில் தன் குடும்பத்தைத் தடம்புரளாம
வெகு நேர்த்தியாய்க் கொண்டு செல்லும் பெருமை ராம
சந்திரனையே சேரும். இந்த வயதிலும் தன் சிமெண்
பேக்டரியில் எந்த வேலையையும் ஒதுக்கி வைக்காம
முன்னின்று செய்து முன்னிலையில் வைத்திருப்பவர்.

மனைவியின் முகக் கடுப்பைக் கண்டது
புன்னகைத்தார்.

"என்ன? அம்மாவுக்கும் புள்ளைக்கும் காலையிலே
போர் தொடங்கி விட்டதா?"

"ம்... எல்லாம் என் நேரம். எனக்கு வந்தது
சரியில்ல, வாய்ச்சதும் சரியில்ல." - வெடித்தாள் சந்திரா.

"வந்தது எது? வாய்ச்சது எது?"

"இதோ பாருங்க... ஏற்கெனவே நான் கடுப்பு
இருக்கேன். நீங்க வேற நக்கல் பண்ணி என் ஆத்திரத்தை
கிளப்பாதீங்க."

"கூல் சந்து. இப்ப ஏன் இவ்வளவு கோபம்? பி.
ஏறிப் போகுது."

"ஏறினா ஏறிட்டுப் போகட்டும். இருந்து என்ன சாதிக்
போறேன்?"

"அட! நீ சாதிக்க வேண்டியது இன்னும் எவ்வளவோ
இருக்கே சந்து. என்னையும் எம் பிள்ளையையும் சமாளி
க்கிறதே ஒரு சாதனைதானே."



"இந்தப் பேச்சுக்கெல்லாம் ஒரு குறையில்லை."

"வேறு எதில் குறை வைத்தேன் என்கிறாய்."

"என்ன குறை இல்லை. நமக்கு என்ன வயசாகுது?"

"இப்ப என்ன திடீர்னு இந்தக் கேள்வி?"

"உங்களுக்கு அறுபத்திரண்டு வயசு. எனக்கு அம்பத்தி
அஞ்சாகுது."

"சரி! அதுக்கென்ன இப்போ?"

"அதுக்கு என்னவா? இந்த வயசுல உள்ளவங்க
எல்லாம் பேரன் பேத்திகளோட கொஞ்சிக்கிட்டு இருக்கும்
போது நாம மட்டும் எப்படி இருக்கோம்? அந்தக் கவலை
உங்களுக்குக் கொஞ்சமாவது இருக்கா?"

"நாம கவலைப்பட்டாப் போதுமா? இது பிரபாகரோட
வாழ்க்கை. அவன்தான் முடிவெடுக்கணும்."

"இப்படியே எத்தனை வருஷம்தான் சொல்லிட்டு
இருப்பீங்க?"

"அவன் சம்மதிக்கிற வரைக்கும்."

"ரொம்ப சாமர்த்தியமாப் பேசுறதா நினைப்பா? அவன்
இப்படிச் சொன்ன பேச்சைக் கேட்காம அலையுறதுக்கு
நீங்கதான் காரணம்."

"நானா?"

"ஆமா! இப்படி அவன் விருப்பத்திற்கே விட்டா எப்படி?"

"பின்னே! என்ன பண்ணணும்?"

"நீங்கதான் அவனை அதட்டி மிரட்டிச் சம்மதிக்க
வைக்கணும்."

"சந்து! பிரபா ஒன்னும் குழந்தை இல்ல... மிரட்டிப் பணிய வைக்க."

"குழந்தையா இருந்தா என்ன? வளர்ந்தா என்ன? நீங்க அவன் அப்பா. எந்த வயசுலயும் குழந்தைகளைத் தட்டி வைக்கலாம்."

"அப்போ முதல்ல எம் மாமனாரைத்தான் பார்க்கணும்!" - என்றார் நமட்டுச் சிரிப்போடு.

'பேச்சை மாத்தி என்னை வெறுப்பேத்தாதீங்க. ஏற்கெனவே நான் கொதிச்சுப் போயிருக்கேன்.'"

"சரி! இப்ப நான் என்ன பண்ணணும்?"

"இன்னிக்குச் சாயங்காலம் பொண்ணு வீட்ல இருந்து ஆட்கள் வர்றாங்க. அப்போ நீங்களும் உங்க மகனும் இங்க இருக்கணும்."

"விளையாடாதே சந்திரா. எல்லாத்தையும் அவசரப் பட்டுச் செய்து, பின்னால கஷ்டப்படுறதே உன் வேலையாப் போச்சு."

"இப்போ என்ன அவசரப்பட்டேன் நான்?"

"உன் பேச்சு, செயல்பாடு எல்லாமே அவசரம்தான். சொன்ன பேச்சைக் கேட்டு நடந்த பிள்ளையை இப்படி ஆக்கினதே உன் அவசரம்தான்."

"ரெண்டு பேரும் என்னையே குறை சொல்லுங்க. என்னை ஒரு மனுஷியாவே யாரும் மதிக்கிறதில்ல." - சந்திராவின் கண்கள் கலங்கின.



பரிவாய் மனைவியின் தோளைத் தொட்டார். "சந்து! நம்ம பிள்ளையோட மனசும் வாழ்க்கையும் மாறிப் போனதுக்கு முழுக்காரணம் நீதான். தப்பு செய்த நீதான் அதைச் சரி செய்யணும்."

புரியாமல் கணவனைப் பார்த்தாள்.

"பொறுமையா உட்கார்ந்து யோசி. நீ செய்த தப்பு புரியும். அதை எப்படிச் சமாளிக்கலாம்கிற ஐடியாவும் வரும். அதை விட்டுட்டு ஒரு தப்பைச் சரிபண்றதா நினைச்சி மேலும் மேலும் தப்பு பண்ணாதே.

"அப்புறம் பிரபாவோட மனசில உள்ள விரிசல் பெரிய பிளவா மாறிடும். பார்த்து நிதானமா நடந்துக்க. வன் மனசைப் புரிஞ்சுக்க முயற்சி செய்," என்று சொல்லிவிட்டு விலகி வீட்டிற்குள் நுழைந்தார்.

# 6



கூண்டுக் கிளியாய்
வாழ்வதைவிடச் சிறகடிக்கும்
பட்டாம் பூச்சியாய்
வாழ்வதே மேல்!

**கா**ல்கள் கடுக்கத் தொடர்ந்து நடக்க முடியாமல் சாலையோரமாய் நின்ற மரத்தடி நிழலில் ஒதுங்கி நின்றாள் நர்மதா. உச்சி வெயில் உக்கிரமாய்த் தகிக்க, தார்சாலை உருகிவிடும் போல் கொதித்தது அனல்.

லேசாய் வீசும் காற்றும் அனலை அள்ளி வீச, வியர்த்த முகத்தைத் தன் புடவைத் தலைப்பால் ஒற்றி

எடுத்தாள். சாலை முழுக்க வாகன நெரிசல். புகையைக் கக்கிக் கொண்டும் காதைச் செவிடாக்கும்படி அலறிக் கொண்டும் போக, தலை விண்ணென்று தெறித்தது.

சுவாசத்தில் வாகனப் புகை சேர்ந்து கொள்ள வயிற்றைப் புரட்டிக் கொண்டு குமட்டியது. தோளில் கிடந்த பையைக் கழற்றிக் காலடியில் வைத்துக்கொண்டு புடவைத் தலைப்பால் மூக்கை மூடிக் கொண்டாள்.

சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தாள். பழக்கமற்ற இடம். ஜனநெரிசலோடு தெரிய, சாலையோரமாய் ஏராளமான கடைகள் விரிக்கப்பட்டு, அந்த வெயிலிலும் விற்பனை அமோகமாய் நடந்து கொண்டிருந்தது.

கரும்புச் சாறும் இளநீர் வியாபாரமும் எதிர்த்திசையில் நடந்து கொண்டிருக்க, காய்ந்து போன தொண்டையை எச்சில் விழுங்கி ஈரமாக்கினாள்.

இளநீர் குடித்தால் கொஞ்சம் தெம்பாக இருக்குமே. வீடு போய்ச் சேர இன்னும் எவ்வளவு நேரமாகுமோ? இரண்டு நாட்களாய்ச் சாப்பிடாமல் நடமாடியதே பெரிய விஷயம்.

இப்போதே கண் இருட்டிக் கொண்டு வருகிறது. வயிற்றில் பிரளயம் நடப்பது போல் ஏதோ உருள்வதும் புரள்வதுமாய் இருக்கிறது. ஒருவேளை தன் குழந்தை முழு வளர்ச்சி அடைந்து விட்டதோ? அதற்குப் பசி எடுக்கின்றதோ?

ஆண்டவா! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! வயிற்றில் இருக்கும்போதே என் குழந்தை பசியில் வாட



வேண்டுமா? இதை எப்படிப் பெற்றெடுக்கப் போகிறேன்? எப்படி வளர்க்கப் போகிறேன்?

கண்களில் நீர் சுரந்தது. நர்மதாவிற்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. இத்தனை நாட்களாய்த் தொடர்ந்து அழுதும்கூட இந்தக் கண்ணீர் வற்றவே இல்லையே.

கண்கள்கூட ஒரு அட்சய பாத்திரம்தானோ! கண்ணீரை மட்டுமே விடாமல் சுரக்கின்ற அதிசய அட்சய பாத்திரம். பெண்களுக்கே உரிய வரம்.

போன கணவன் தன் பூவையும் பொட்டையும் மட்டும் பறித்துக்கொண்டு போகவில்லை. தன் நிம்மதி, வாழ்க்கை, சொந்தம் பந்தம் என அனைத்தையும் மொத்தமாய்ப் பறித்துக் கொண்டு நடுத் தெருவில் விட்டுவிட்டுப் போய்விட்டான்.

ஆமாம்! தெருவில்தான் விட்டு விட்டார்கள் அனைவரும். சிவகாமியின் விரட்டலுக்குப் பயந்து பணிந்து அண்ணனைத் தேடித் தனியே சென்றவளைப் பூட்டிய வீடுதான் வரவேற்றது.

மிரட்சியோடு அக்கம் பக்கம் விசாரித்ததில் அண்ணன் தன் வீட்டை விற்றுவிட்டு... மாமனார் ஊரில் சென்று செட்டிலாகிப் பத்து நாட்கள் ஆகிறது என்றார்கள்.

பிரமை பிடித்தாற்போல் நின்றாள் நர்மதா. இது உண்மையா? இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா? உடன் பிறந்த ஒரே தங்கை. தன் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு வயிற்றுப் பிள்ளையோடு இருக்கிறாள்.

ஊரை விட்டுப் போகும் முன் அவளைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுகூடவா தோணவில்லை.

சும்மாவே வறுத்தெடுப்பவர்கள் இந்த விஷயம் தெரிந்தால் சும்மா இருப்பார்களா?

அவர்களிடம் போய் வதைபடுவதை விட, அண்ணியிடம் இடிபடலாம் என்ற நப்பாசையோடு அண்ணனின் புதிய முகவரியைக் கேட்டுப் பார்த்தாள்.

"உன் அண்ணன் இத்தனை வருஷமாப் பழகியும் போகும்போது ஒரு வார்த்தைகூடச் சொல்லிட்டுப் போகல்ல. அட்ரசும் கொடுத்திட்டுப் போகல்ல.

"உன் அண்ணிதான் லேசுபாசாச் சொல்லிட்டுப் போச்சு. உன் அப்பாவைக்கூட ஏதோ முதியோர் இல்லத்தில் விட்டுட்டுப் போறதாப் பேச்சு அடிபட்டுது."

"இல்ல. கடைசி நேரத்தில மருமக, நம்மகூடவே கூட்டிட்டுப் பேயிடலாம். தோட்டத்தைப் பார்த்துக்க ஆள் வேணும்னு சொல்லிக் கூட்டிட்டுப் போயிட்டா. நீதான் பாவம் நர்மதா. புருஷனும் இல்ல. பொறந்த வீடும் இல்லன்னு ஆகிப்போச்சு. வாழ்வோ தாழ்வோ உன் புருஷன் வீட்லயே இருந்துக்கம்மா. அதுதான் உனக்கும் உன் புள்ளைக்கும் நிரந்தரம்!" - என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான அறிவுரைகளோடு திருப்பி அனுப்பியிருந்தனர்.

இனி மீண்டும் தன் புருஷன் வீட்டின் வாசலில் போய் நிற்க வேண்டும். சிவகாமி ஊருக்குப் போயிருந்தால் பரவாயில்லை. அவளும் வீட்டில் இருந்தால் போச்சு.

அவர்களும் விரட்டிவிட்டால் என்ன செய்வது? எங்கே போவது? வயிற்றுக்குள் மீண்டும் பிசைவது போல் இருந்தது. இடக்கரம் தானாகச் சென்று வயிற்றைப் பற்றிக் கொண்டது.



இது... இதற்காகவேனும் வாழ்ந்துதானே ஆக வேண்டும். போய்ப் பேசிப் பார்க்கலாம். அவர்களும் மனிதர்கள்தானே. அதுவும் கற்பகம் தன் மாமியார். நிச்சயம் தன்னைக் கைவிட மாட்டாள்.

அந்த நம்பிக்கையில் மீண்டும் திரும்பி வந்தாள். வரும் வழியில் தவறான பேருந்தில் ஏறி நடுவழியில் இறக்கி விடப்பட்டு, போவோர் வருவோரிடம் வழிகேட்டு, நடந்தே வந்ததில் மிகவும் களைத்துப் போனாள்.

கண்கள் மீண்டும் இருட்டிக் கொண்டு வர, அருகே இருந்த கடையை நெருங்கினாள். வளையல், சீப்பு, சோப்பு டப்பா என அனைத்துப் பொருட்களையும் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தாள் ஒரு பெண்.

"ஏம்மா! பஸ் ஸ்டாண்ட் போகணும். எந்தப் பக்கம் இருக்கு?"

"இப்படியே போனாக்கா ஒரு ரவுண்டானா வரும். அதைத் தாண்டிப் போனா பஸ் ஸ்டாண்ட் வந்திடும்."

"ரொம்பத் தூரமா?"

"பத்து நிமிஷ நடைதான். ரோட்டோரமாப் போம்மா."

"அம்மா! என் பேக் இங்கே இருக்கட்டும். நான் ஒரு இளநீர் குடிச்சிட்டு வர்றேன். பார்த்துக்கிறீங்களா?"

"போயிட்டு வாம்மா. பார்த்துக்கிறேன்."

"ரொம்ப தேங்க்ஸ்ம்மா." - என்றவாறு துணிகள் அடங்கிய பையை அந்த அம்மாவிடம் கொடுத்துவிட்டுச் சாலையை நெருங்கினாள்.

வரிசையாய், சீற்றமாய்ப் போய்க் கொண்டிருந்த வாகனங்களைப் பார்த்துக்கொண்டு சாலையைக் கடக்கக் காத்து நிற்கையில் யாரோ தோளைத் தொட்டார்கள்.

சட்டெனத் திரும்பினாள். வீட்டுக்கார அம்மாள் நின்று கொண்டிருந்தாள். நர்மதாவைப் பார்த்ததும் புன்னகையோடு நலம் விசாரித்தாள்.

"நர்மதாக் கண்ணு! நல்லா இருக்கியா?"

"ம்... நல்லா இருக்கேம்மா."

"முகமெல்லாம் வாடிக் கிடக்கே. இன்னும் வாந்தி நிற்கலியா?"

"இல்லம்மா! எது சாப்பிட்டாலும் வாந்தி வந்திடுது. அதனால சாப்பிடவே பயம்மா இருக்கு."

"ஐயோ! அதனால சாப்பிடாம இருக்கக் கூடாது. புள்ளைக்கு எதுவும் ஆயிடும். வேளாவேளைக்குச் சாப்பிடு, கண்ணு."

"சரிங்கம்மா!"

"புது வீடெல்லாம் பிடிச்சிருக்குதா? வீடு எங்கே இருக்கு?" - அந்த அம்மாள் ஆவலாய் விசாரிக்க, குழப்ப மானாள் நர்மதா.

"புது வீடா? என்னம்மா சொல்றீங்க?"

"என்னம்மா இப்படிக் கேட்கிற? சிவகாமியம்மா பார்த்து வெச்ச வீட்டுக்கு வந்திட்டீங்களே, அதைத்தான் கேட்கிறேன்."

நர்மதாவின் தலையில் மீண்டும் இடி இறங்கியது. கடவுளே! நான் போகும் இடமெல்லாம் பாதையே தெரிய



வில்லையே! இருளைத் தவிர வேறொன்றும் என் கண்ணில் படவில்லையே. நான் என்ன செய்யப் போகிறேன்?

"என்ன கண்ணு! ஒன்னுமே பேசமாட்டேங்குற?"

"அம்மா! உங்களுக்கு நல்லாத் தெரியுமா? எங்க வீட்ல எல்லாருமே காலி பண்ணிட்டுப் போயிட்டாங்களா?"

"அட ஆமாம்மா! நான் என்ன பொய்யா சொல்றேன்? முந்தா நாள்தான் சொன்னாங்க. நேத்து திடுதிப்புன்னு கிளம்பிட்டாங்க. எங்கே போறோம்னுகூடச் சொல்லல."

"அதெப்படி ஒரே நாள்ல காலி பண்ணினாங்க?"

"நாலஞ்சு பாத்திரம்தானேம்மா. சிவகாமியம்மாதான் வண்டி பிடிச்சிட்டு வந்தது. அரை மணி நேரத்தில கிளம்பிட்டாங்க. அட்வான்ஸ் பணத்தைக்கூட வேண்டாம்னு சொல்லிட்டாங்க."

"என்ன?"

"என்ன பெரிய அட்வான்ஸ். ரெண்டாயிரம்தான் தந்திருந்தா. இந்த ஒன்னரை மாசமா வாடகையும் தரலியே. அதில கழிச்சிடலாம்னு கணக்குப் பண்ணிட்டாங்க போலிருக்கு. சரி! வீடு எங்கே? தூரமா? இந்த வெயில்லே எங்கேம்மா வந்தே?"

"ம்...? நான்... நான் கடைக்கு வந்தேன்."

"பார்த்துப் போம்மா! வயித்துப் பிள்ளைக்காரி. இப்படி வேகாத வெயில்ல வெளியே வராதே."

"ச... சரிங்கம்மா."

"நான் என் மக வீட்டுக்கு வந்தேன். வரட்டுமா? நேரம் கிடைக்கும்போது வீட்டுக்கு வந்து போம்மா."

"சரிம்மா."

"நான் வரட்டுமா?"

"ம்..." - அந்த அம்மாள் விடைபெற்றுச் சென்றுவிட, உடல் மொத்தமும் தொய்ந்து போனாள் நர்மதா.

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது? என் வருகையை எண்ணிப் பயந்தா இரண்டு குடும்பமும் ஊரைவிட்டே ஓடிப் போயிற்று. அப்படியென்ன நான் பாரமாகிப் போனேன்?

ஒரு பெண் என்று இரக்கமில்லாமல், வயிற்றுப் பிள்ளைக்காரி என்ற பரிவும் இல்லாமல் உதறிவிட்டு ஓடிய பிறந்த வீடும் புகுந்த வீடும் நரகமாகத் தோன்றியது.

என்ன மனிதர்கள்! என்ன உறவுகள்! பணம் இருக்கும்வரை கூடவே இருக்கும் உறவுகள், கையில் பொருள் இல்லையென்றதும் காக்கைக் கூட்டமாய்ப் பறந்து விட்டதே.

இந்த உலகில் தனிமரமாய் நின்று என்ன செய்யப் போகிறேன்? எந்த நம்பிக்கையில் இனி உயிர் வாழ முடியும்? யாருக்காக வாழ வேண்டும்?

இரு கரங்களாலும் வயிற்றைப் பற்றிக்கொண்டாள். லேசாய்க் கண்கள் கலங்கின.

'கண்ணே! நீ ஆணோ பெண்ணோ எனக்குத் தெரியாது. இந்த உலகம் ரொம்பக் கொடியது, கண்ணே. சுயநலம் மிக்கது. கொடூரமானது. இனி இந்த உறவுகளும் உலகும் நமக்கு வேண்டாம், கண்ணே!



'நீ பிறக்கும் முன்பே இத்தனை துயரம் என்றால் பிறந்து எத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டுமோ? வேண்டாமடா கண்ணே! இந்தக் கொடிய பூமியில் நாம் வாழ வேண்டாம்.

'வா! என்னுடன் வந்துவிடு. நிம்மதியான மரணத்தைத் தழுவிக் கொள்வோம். என் வயிற்றில் ஜனித்த பாவத்திற்கு உனக்குக் கருவறையே கல்லறையாகட்டும். நாம் போய் விடலாம். இந்த உலகை விட்டே போய்விடலாம்.'

தாயின் கண்ணீரும் ஓலமும் கேட்டதோ என்னவோ, வயிற்றில் துளியும் சலனமில்லை. இதுவரை உருண்டு புரண்ட துடிப்பும் அடங்கியிருந்தது.

பொங்கிய கண்ணீரைத் துடைத்தெறிந்தாள். சாலையில் பார்வையைச் செலுத்தினாள். வேகமாகக் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்ற போக்குவரத்தைக் குறிவைத்துச் சாலையில் இறங்கினாள்.

வெறித்த பார்வையோடு எதைப் பற்றியும் கவலைப் படாமல் எந்த அசைவும் இன்றி நேராக நர்மதா நடக்க, போக்குவரத்துத் தடுமாறியது. ஆட்டோவும் பைக்கும் பிரேக்கிட்டு நின்று ஓட்டுநர்கள் தாறுமாறாய்த் திட்டிக் கொண்டிருக்க, எதையும் காதில் வாங்காமல் நடந்தாள்.

சீரான வேகத்தில் வந்து கொண்டிருந்த ஸாண்ட்ரோ கார் குறுக்கே வந்த நர்மதாவைக் கண்டு திணறி, பிரேக்கை அழுத்தும் முன் நர்மதாவை மோதிக் கீழே தள்ளியது.

சின்னச் சத்தம்கூடக் காட்டாமல் சற்றுத் தூரமாய்ப் போய் விழுந்தாள் நர்மதா. தலையில் ஏதோ பிசுபிசுத்தது. சுற்றுப்புறத்தின் ஓசைகள் அடங்கின.

மொத்தமாய் இருள் சூழ்ந்தாற்போல் தோன்ற, மன நிம்மதியானது. போதும்! இனி எந்தத் துயரமும் இல்லை எல்லாத் துன்பமும் முடிந்து போனது. நிம்மதி மூச்சுடன் கண்களை மூடினாள்.

காரை நிறுத்திவிட்டு இறங்கிய மனோகர் திணறி போனான். அதற்குள் கூட்டம் கூடிவிட, அவர்களை விலக் விட்டு முன்னே சென்றான்.

"ஏய்! இவன்தாம்ப்பா காரை ஏத்தி அடிச்சு போட்டிருக்கான். பிடிச்சு அடிங்கடா அவனை." - கூட்டத்தில் ஒருவன் குரல் கொடுக்க, அவசரமாக மறுத்தான் மனோகர்.

"நோ... நோ. நான் நார்மல் ஸ்பீடுலதான் வந்தேன் இந்தப் பொண்ணுதான் குறுக்கே வந்திட்டா."

"அட ஆமாம்பா. என் ஆட்டோ முன்னேயும் இவதான் வந்தா. மூளை கலங்கிப் போன பொண்ணா இருக்குமோ?"

"இருக்கும். நாம திட்டின எதையும் காதிலயே வாங்கலையே!"

"ஒருவேளை செவிடா இருக்குமோ. ஐயோ! தலையில அடிபட்டிருக்கே. உசிரு போயிடுச்சா?"

"போலீசுக்குத் தகவல் சொல்லுங்கப்பா."

"ஏய்! அந்தக் கார்க்காரனை விட்டுடாதீங்க. பிடிச் வையுங்க." - ஆளாளுக்குக் குரல் கொடுக்க மனோக பதட்டமாய் அவளருகே சென்றான்.

மண்டியிட்டு அமர்ந்து அவளைப் பரிசோதித்தான் நாடித் துடிப்பை உணர்ந்து கொஞ்சம் நிம்மதியோ நிமிர்ந்தான்.



"ஹலோ! யாராவது ஒரு கை பிடியுங்களேன். உயிர் இருக்கு. உடனே ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனாக் காப்பாத்திடலாம்."

ஒருவரும் முன்வரவில்லை. "ஏய்! கொலைக் கேஸாயிடும்ப்பா. போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுன்னு அலைய முடியாது. போலீஸ் வரட்டும்." - என்றான் ஒருவன்.

"யோவ்! நான் ஒரு டாக்டர்தான். என்னால இந்தப் பொண்ணைக் காப்பாத்த முடியும். நானே போலீசுக்கு இன்பார்ம் பண்ணிடுறேன். முதல்ல வழியை விடுங்க." - கோபமாய்க் கூறிவிட்டு நர்மதாவை இரு கரங்களாலும் வாரிக்கொண்டு காரை நெருங்கினான்.

கூட்டம் பதறி வழியைவிட, காரின் பின் இருக்கையில் அவளை - நர்மதாவைக் கிடத்திவிட்டுக் காரில் ஏறினான் மனோகர்.

"ஹலோ! என்ன ஸார், நீங்க பாட்டுக்கு இடிச்சீங்க. டாக்டர்ன்னு சொன்னீங்க. இப்போ இந்தப் பொண்ணைத் தூக்கிட்டுப் போறீங்க. உங்களை எப்படி ஸார் நம்புறது?"

"எம் பேர் மனோகர். நான் சைல்ட் ஸ்பெஷலிஸ்ட். என்னோட ஹாஸ்பிடல் கிண்டியில இருக்கு. யாராவது கூட வர்றதா இருந்தா தாராளமா வரலாம். வர்றீங்களா?"

"முதல்ல ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போகட்டும். இவர் டாக்டர்தான். எனக்குத் தெரியும்." - ஒரு பெண் சொல்ல, நன்றியோடு திரும்பினான் மனோகர்.

"தேங்க்யூ சிஸ்டர்."

"இட்ஸ் ஓ.கே. நீங்க புறப்படுங்க டாக்டர். அந்தப் பொண்ணுக்கு ப்ளட் ரொம்ப லாஸாகிட்டு இருக்கு."

"யா. இதோ கிளம்பிட்டேன்." - காருக்குள் ஏறி உசுப்ப, கார் கிண்டியை நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

# 7



குப்பையில் கிடக்கும்
குன்றிமணியாக இருந்தாலும்
வருடத்தில் ஒரு முறை
விநாயகரின் கண்கள்
ஆகின்றோம் நாங்கள்!

**பெ**ங்களூரு. சுற்றுப்புறம் மொத்தமும் குளிர்ந்திருக்க, சிவசங்கரி கையில் சூடான ஏலக்காய் டீயுடன் கண்ணாடிச் சுவரோரமாய் நின்று புத்தம் புதிதாய்ப் பூத்திருந்த மலர்களை ரசித்தவாறே தேநீரைப் பருகிக் கொண்டிருந்தாள்.

இந்த வீட்டைக் கட்டியவர் நிச்சயமாய் வெகு ரசனை உடையவராய்த்தான் இருக்க வேண்டும்.

முன்பக்க அறையின் சுவர் முழுக்கக் கண்ணாடியால் செய்யப்பட்டிருந்தது.

திரையை விலக்கினால் இயற்கைக் காட்சியைக் குளிருக்கு அடக்கமாய் அறைக்குள் இருந்தே ரசிக்கலாம். கொட்டும் மழையை, சாரலாய்த் தூறும் பனியை, விரிந்து சிரிக்கும் மலரை, பசுமையைப் படுத்துக் கொண்டோ, அமர்ந்து கொண்டோ ரசிக்கும்படி அந்த அறை அமைக்கப் பட்டிருந்தது.



மெடிக்கல் கான்ஃபெரன்ஸ் நடத்தும் தலைமை மருத்துவரின் விருந்தினர் மாளிகை அது. அப்பாவின் நண்பர் என்பதால் தங்கள் வீட்டிலேயே தங்கும்படி வற்புறுத்தி இருந்தார் அகர்வால்.

முதலில் சற்றுத் தயக்கமாய் இருந்தாலும் ஒரே நாளில் இயற்கையோடு ஒன்றிப் போனாள் சிவசங்கரி. மீட்டிங் முடிந்து மற்ற டாக்டர்கள் ஊரைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டுவிட, நாசூக்காய் மறுத்துவிட்டாள் சிவசங்கரி.

தனிமையில் இனிமை காண்பது சுகம். அதுவும் இந்தக் குளிரில் சூடான தேநீருடன் வீட்டில் இருந்து கொண்டே ரசிப்பது இன்னும் சுகம்.

காலியான தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு இரு உள்ளங் கைகளையும் தேய்த்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

சின்னதாய் ஒரு வாக் போய்விட்டு வரலாமா? எண்ணம் தோன்றியதும் தன்னுடைய பேக்கைத் திறந்து சால்வையை எடுத்துப் போர்த்துக் கொண்டாள்.

இது இல்லாமல் குளிரைச் சமாளிக்க முடியாது என்ற நினைப்போடு அறைவாசலை நெருங்கியபோது செல்போன் சிணுங்கியது.

டீப்பாய் மீதிருந்த செல்போனை எடுத்தாள். திரையில் மனோகரின் பெயரைக் கண்டதும் புன்னகையோடு காதில் வைத்தாள்.

"மனோ! சொல்லுடா!"

"அக்கா! கான்ஃபெரன்ஸ் ஹால்லயா இருக்கே?"

"இல்லடா. இப்பத்தான் முடிஞ்சது. அங்க்கிளோ
கெஸ்ட் ஹவுஸ்லதான் இருக்கேன்."

"மத்த டாக்டர்கள் யாரும் பக்கத்தில இருக்காங்களா?

"எல்லாரும் பெங்களூருவைச் சுத்திப் பார்க்க
போயிருக்காங்க."

"நீ போகலியா?"

"ம்ஹூம். ரொம்ப குளிருப்பா. அதோட இந்த
பங்களா சூப்பரா இருக்கு மனோ. வீட்டைச் சுத்தி கார்ட
விதம் விதமா பூக்கள். புற்கள்கூட ஒருவிதமா ரொம்ப அழ
இருக்கு."

"ஓ! நீ ரொம்ப ஹேப்பியா இருக்கியா அக்கா."

"நிச்சயமா, மனோ... நெக்ஸ்ட் மன்த்ல ஒரு நாள் ந
எல்லாரும் இங்க வந்திட்டுப் போலாமா? அகர்வால் அங்க்
ரொம்ப விரும்பிக் கூப்பிடுறார்."

"ம்... போகலாம்."

"என்னடா சுரத்தே இல்லாமச் சொல்றே? நீ மட்டு
வந்து பாரேன். இந்த இடத்தை விட்டு நகரவே உனக்
மனசு வராது."

"ம்... ம்..."

"மனோ! என்னாச்சு உனக்கு? டல்லா பேசுற."

"அக்கா! அது..."

"சொல்லு மனோ! எதுவும் ப்ராப்ளமா? ஹாஸ்பிட
வொர்க் எல்லாம் ஸ்மூத்தாப் போயிட்டு இருக்கா?"

"ம்... அதெல்லாம் ஸ்மூத்தாப் போயிட்டு இருக்கு."



"எல்லா டாக்டர்களும் லீவு போடாம வர்றாங்களா?"

"ம்... வர்றாங்க. ஒன்னும் பிரச்சனை இல்ல."

"பின்னே என்னடா?"

"அக்கா! நீ எப்போ வருவாய்?"

"நாளை மறுநாள் ஈவ்னிங் அங்கே இருப்பேன்."

"ரெண்டு நாளாகுமா?" – மனோகரின் குரல் உள்ளே போயிற்று.

"மனோ! என்னடா? என்னாச்சு உனக்கு?"

"அக்கா! இங்கே ஒரு சின்னப் பிரச்சனை."

"என்ன? என்ன பிரச்சனை?" – பதட்டமானாள்.

"இன்னிக்கு ஒரு ஆக்ஸிடென்ட் ஆயிடுச்சுக்கா."

"என்ன? ஆக்ஸிடென்ட்டா? என்ன மனோ, யாருக்கும் அடிபட்டதா? உனக்கு ஒன்னும் இல்லையே?"

"எனக்கு ஒன்னும் இல்லக்கா. ஒரு பொண்ணுதான் குறுக்கே வந்து விழுந்திட்டா."

"மை காட்! அந்தப் பொண்ணுக்கு ஒன்னும் ஆகலியே?"

"அக்கா! அந்தப் பெண்ணோட தலையில அடி பட்டிருக்கு. ப்ளட் ரொம்ப லாஸாகிடுச்சி. இப்போ ரெண்டு யூனிட் ப்ளட் ஏத்தியிருக்கேன்."

"அச்சோ! அடி பலமா மனோ?"

"கொஞ்சம் பலமாத்தான் இருக்கு. அக்கா. அந்தப் பொண்ணுக்கு இன்னும் மயக்கம் தெளியல்ல."

"சரி. அவ பேமிலில உள்ளவங்க பக்கத்தில இரு காங்களா?"

"இல்லக்கா. இந்தப் பொண்ணு தனியாத்தா வந்தா. கூட யாரும் இல்ல. இதுவரைக்கும் அவ பேருகூட தெரியல்ல."

"போலீஸ்ல இன்பார்ம் பண்ணிடேன்."

"ம்... இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் ஹாஸ்பிடலுக் வந்து விசாரிச்சுட்டுப் போயிருக்கார்."

"வேற ஒன்னும் பிரச்சனை இல்லையே."

"அக்கா! ட்ரீட்மெண்ட் எல்லாம் ஜான்ஸிராணிதா பண்ணினாங்க. பேஷண்ட்டை உன்னோட பிளாக்கிலதா தங்க வெச்சிருக்கேன்."

"சரி! நான் ஜான்ஸிகிட்ட பேசுறேன். எதுக்கும் நீயு அந்தப் பொண்ணைக் கவனிச்சுக்க. மயக்கம் தெளிஞ்சது அட்ரஸ் கேட்டு வீட்டுக்குத் தகவல் சொல்லு."

"சரிக்கா!"

"எத்தனை வயசிருக்கும்? சின்னப் பொண்ணா மேரீடா?"

"பார்க்கச் சின்னப் பொண்ணாத்தான் தெரியு கழுத்தில தாலி எதுவும் இல்ல."

"வயசுப் பொண்ணா இருக்கும் போலிருக்கே. வீ தேடுவாங்க. மனோ! நீ எதுக்கும் அந்தப் பொண்ணுகூட இரு."

"ம்... இப்போ பக்கத்திலதான் இருக்கேன். ட்ரிப் ஏறிட்டு இருக்கு."



"அடி ரொம்பப் பலமா மனோ?"

"தலையிலதான் கொஞ்சம் காயம். ரோட்ல விழுந்ததில அடிபட்டிருக்கும்னு நினைக்கிறேன். கைகால்ல லேசான காயம்தான். மருந்து போட்டு விட்டேன்."

"ஏன்டா! ரொம்ப ஸ்பீடா போனியா?"

"இல்லக்கா! இந்தப் பொண்ணுதான் எந்த வாகனத்தையும் பார்க்காம குறுக்கே வந்திட்டா. ரோடைக் கிராஸ் பண்ண வந்தான்னு நினைக்கிறேன்."

"சரி... நீ பார்த்துப்பியா? நான் வரணுமா?"

"அடிபட்ட இடத்தில ஸ்கேன் எடுத்திருக்கு. ரிப்போர்ட் வந்ததும் பார்த்திட்டு அவசரம்னா உனக்குக் கால் பண்றேன்."

"சரிடா. டேக் கேர்."

"ஓ.கே. அக்கா. பை. வெச்சிடு." - என்றவாறு போனைக் கட் பண்ணிவிட்டு நர்மதாவின் படுக்கை அருகே இருந்த ஸ்டூலில் அமர்ந்தான்.

சீரான சுவாசத்தோடு மயக்க நிலையில் இருந்தவளைக் கூர்ந்து பார்த்தான். யாராக இருக்கும்? ஏன் இப்படிக் கண்மூடித்தனமாய்ச் சாலையின் குறுக்கே பாய்ந்தாள்? கடவுளே! ஏதேனும் லாரியின் சக்கரத்தின் அடியில் மாட்டியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

அப்படி யென்ன பெண்ணே உனக்கு அவசரம்? யாரைக் காண அத்தனை வேகமாய்ச் சென்றாய்? உயிரின் அருமை தெரியாதா உனக்கு? நல்ல வேளையாய்க் கைகால்களுக்கு ஒன்றும் பழுதில்லை. அப்படி ஏதேனும்

...ஆகியிருந்தால் உன் வீட்டினருக்கு நான் என்ன பதில் சொல்வேன்?

வாழ வேண்டிய வயதில் இப்படி ஆகிவிட்டதே எனக் கண்ணீர் விடுவார்களே! நீயும்தான் வலி தாளாமல் துடிப்பாயே! கொஞ்சம் கவனமாய்ப் பொறுமையாய்ச் சாலையின் இருபுறமும் பார்த்துவிட்டுக் கடக்க வேண்டாமா? இப்போது பார்! நீ இப்படி மயக்கமாய் ஹாஸ்பிடலில் படுத்திருக்கிறாய். அங்கே உன் வீட்டில் எப்படியெல்லாம் தேடித் தவிக்கிறார்களோ?

யோசனையாய், தவிப்பாய் அவள் கண்விழிக்கக் காத்திருந்தான். மருத்துவன் என்ற பரிவையும் மீறி ஏனோ இந்தப் பெண்ணின் மேல் அதிக இரக்கம் சுரந்தது. ஏன்? இந்தப் பால்வடியும் முகமா? பரிதாபமான தோற்றமா? பல நாள் சாப்பிடாதது போல முகமும் உடலும் வாடி உலர்ந்து போயிருந்தது.

தலையில் போடப்பட்டிருந்த பாண்டேஜ் கட்டையும் மீறி லேசாய் இரத்தம் கசிந்திருந்தது. மின்விசிறியின் வேகத்தில் அவளது புடவை விலக, அவசரமாய் எழுந்து போர்வையைக் கழுத்து வரை இழுத்து மூடினான்.

மின்விசிறியின் வேகத்தைக் குறைத்து வைத்தான். அறையின் கதவைத் திறந்து கொண்டு நர்ஸ் உள்ளே வந்தாள். மனோகரைக் கண்டதும் வியந்தாள்.

"குட் ஈவ்னிங் டாக்டர்."

"குட் ஈவ்னிங். என்ன சிஸ்டர்?"

"ட்ரிப்ஸ் பாட்டில் தீர்ந்து போச்சான்னு பார்க்க வந்தேன்."



"நான் கவனிச்சுக்கிறேன். நீங்க மத்த பேஷன்ட்டைக் கவனிங்க."

"யெஸ் டாக்டர்."

"சிஸ்டர்! இந்தப் பேஷன்ட்டோட ரிப்போர்ட்ஸ் எல்லாம் வந்திடுச்சா?"

"ஜான்ஸி டாக்டர் பார்த்திட்டு இருக்காங்க டாக்டர்."

"ஓ.கே. ரிப்போர்ட் வந்ததும் என்கிட்ட கொண்டுவரச் சொல்லுங்க."

"ஓ.கே. டாக்டர்." - என்றவாறு நர்ஸ் அறையை விட்டு வெளியேற, மீண்டும் நர்மதாவின் புறம் திரும்பி அமர்ந்தான்.

கடவுளே! இந்தப் பெண்ணிற்குப் பயப்படும்படியாய் எதுவும் ஆகியிருக்கக்கூடாது. சீக்கரமாய்க் கண் விழிக்க வேண்டும்.

கண்மூடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது அறைக் கதவை மெலிதாய்த் தட்டும் ஒலி கேட்டது.

"எக்ஸ்கியூஸ் மீ டாக்டர்."

"கமின்." - என்றவாறு எழுந்தான். டாக்டர் ஜான்ஸிராணி கையில் சில பேப்பர்களோடு உள்ளே நுழைந்தாள்.

"டாக்டர்! பேஷன்ட்டோட ரிப்போர்ட்ஸ் எல்லாம் வந்திடுச்சி."

"ரிப்போர்ட்ஸ் பார்த்தாச்சா? ஒன்னும் பயப்படுற மாதிரி இல்லையே!"

"நோ டாக்டர். காயம் ஆழமா இல்ல. அதனால நோ ப்ராப்ளம். பட்...!"

"என்ன?"

அந்த இளம் பெண் மருத்துவர் சற்றே தயங்கினாள்.

"டாக்டர்! இந்தப் பொண்ணு கன்சீவ் ஆகியிருக்கா!"

"என்ன?" - அதிர்ந்து போய் நர்மதாவை ஏறிட்டான் மனோகர்.

ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தவளின் முகம் துடைத்து வைத்த பளிங்காய் மின்னியது. நெற்றியும் வகிடும் குங்குமம் இன்றி வெறுமையாய் இருந்தன. கழுத்தில் நூல் போல ஒற்றைச் செயின். தாலியோ மெட்டியோ இல்லை.

அப்படி யென்றால் இந்தப் பெண் திருமணம் ஆகாமலே கர்ப்பமாகி விட்டாளா? அதற்காகத்தான் தற்கொலை செய்ய முயன்றாளா? இது விபத்து இல்லை. தற்கொலை முயற்சி. அடிபட்டதில் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு ஏதேனும் ஆகி இருக்குமோ? பதட்டமாய் ஜான்ஸிராணியிடம் திரும்பினான்.

"ஜான்ஸி! ஆக்ஸிடெண்ட்ல பேபிக்கு எதுவும்..."

"ஸாரி ஸார்! ஃபோர் மன்த் பேபி! இப்போ அபாய கட்டத்தில இருக்கு."

"என்ன?"

"யெஸ் டாக்டர்! இது இல்லீகல் சைல்டுன்னு நினைக்கிறேன். இந்தப் பொண்ணு பல நாள் சாப்பிடாம இருந்திருக்கா. உடம்பு ரொம்ப அனாமிக்கா இருக்கு. குழந்தைக்கும் போதுமான ஹெல்த் இல்ல. அதோட



ஆக்ஸிடெண்ட்ல ஏற்பட்ட அதிர்ச்சியில கர்ப்பம் கலைஞ்சு போச்சுன்னு நினைக்கிறேன். துடிப்பே இல்ல."

"மை காட்!" - நெற்றியில் கை வைத்துக்கொண்டான்.

"ஸார்! நாம உடனே அந்தப் பொண்ணுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணியாகணும். லேட்டானா குழந்தை பிழைக்க வாய்ப்பே இல்லை."

"நோ. அந்தக் குழந்தைக்கு எதுவும் ஆகக்கூடாது. நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. பட் தாயும் சேயும் பத்திரமாப் பொழைக்கணும். கமான்! சீக்கிரமா ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிங்க."

"யெஸ் டாக்டர். டாக்டர் அம்பிகா இதுல ஸ்பெஷலிஸ்ட். அவங்களும் வந்தா கொஞ்சம் ஹெல்ப்புல்லா இருக்கும்."

"இன்னும் எத்தனை டாக்டரை வேணும்னாலும் கூப்பிடுங்க. குழந்தை ஸேஃபா இருக்கணும். கமான் க்விக்." மனோகரின் அவசரம் அனைவரையும் தொற்றிக்கொள்ள, ஐந்தே நிமிடத்தில் மருத்துவர் புடைசூழ நர்மதா அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

துடிக்கும் இதயத்தோடு அறைக்கு வெளியே நடமாடிக் கொண்டிருந்தான் மனோகர். இதயம் தாறுமாறாய்த் துடித்துக் கொண்டிருந்தது. இந்தப் பெண் யாரோ, எவளோ? திருமணம் ஆனவளா? இல்லை முறையற்று உருவான சிசுவா?

எது எப்படி இருந்தாலும் சிசுவிற்கு ஏதேனும் ஆகி விடக்கூடாது. பிழைத்தே ஆக வேண்டும். குழந்தைக்கோ அந்தப் பெண்ணிற்கோ ஏதேனும் ஆகிவிட்டால் அது என் பொறுப்பல்லவா? என் காரில்தானே வந்து விழுந்தாள்.

அவளைப் பத்திரமாய்க் காப்பாற்றியாக வேண்டுமே! சிசுவைப் பாதுகாக்க வேண்டுமே! பதட்டமாய் செல்போனை எடுத்துச் சிவசங்கரியைத் தொடர்பு கொண்டான்.

"சொல்லு மனோ. அந்தப் பெண் விழிச்சிட்டாளா?"

"அக்கா..."

"என்ன மனோ? சொல்லு."

"அக்கா! எனக்கு ரொம்பப் பயமா இருக்குக்கா!"

"ஏன்டா! ஏன் இப்படிப் பதறுற?"

"அக்கா! ஸ்கேன் ரிப்போர்ட் எல்லாம் வந்திடுச்சி."

"சரி... எதுவும் பிரச்சனை இல்லையே?"

"அக்கா! அந்தப் பொண்ணு கர்ப்பமா இருக்கா அக்கா!"

"என்னடா சொல்றே?" - சிவசங்கரியின் குரலில் அதிர்ச்சி தொனித்தது.

"அதான் எனக்குப் பயமா இருக்குக்கா!"

"ஏன்டா! பேபிக்கு எதுவும் ஆயிடுச்சா? எத்தனை மாசமாம்?"

"ஃபோர் மன்த் பேபியாம். அக்கா! ஆக்ஸிடெண்ட் ஆன அதிர்ச்சியில கர்ப்பம் கலங்கியிருக்குமோன்னு சொல்றாங்க ஜான்ஸிராணி."

"சேச்சே! உடனடியா அப்படிச் சொல்லிட முடியாது. அந்தப் பெண்ணோட வயித்துல எதுவும் அடிபட்டதா?"

"இல்லக்கா! தலையிலதான் பட்டிருக்கு."



"அப்போ ஒரு பயமும் இல்ல. ஒண்ணும் ஆகியிருக்காது."

"துடிப்பு இல்லன்னு சொன்னாங்க அக்கா."

"மனோ! அந்தப் பொண்ணு கீழே விழுந்த அதிர்ச்சியில குழந்தையும் அசைவில்லாம இருக்கும். மத்தப்படி நாலு மாதக் குழந்தை எப்பவுமே துடிப்போட இருக்கும்னு சொல்ல முடியாது. ஒண்ணும் பயப்பட வேண்டாம்."

நிம்மதியாய் மூச்சு விட்டான். "அப்படியா சொல்ற? நான் ரொம்பப் பயந்து போயிட்டேன் அக்கா!"

"ஸ்கேன் எடுத்தாங்கள்ல?"

"ம். இப்பத்தான் எமர்ஜென்ஸி வார்டுக்குள்ள கூட்டிட்டுப் போயிருக்காங்க. டாக்டர் அம்பிகா, சரோஜினி மேம் எல்லாருமே கூட இருக்காங்க."

"பிறகென்னடா! நீ எதுக்கும் பயப்படாதே! நான் அவங்களுக்கு போன் பண்ணி விபரம் கேட்டுக்கிறேன். நீ வீட்டுக்குப் போ."

"நோ நோ... அந்தப் பொண்ணை இந்த நிலையில விட்டுட்டு வீட்டுக்குப் போறதா? என்னால முடியாது."

"அம்மா தேடுவாங்க மனோ!"

"நான் போன் பண்ணிச் சொல்லிட்டேன்."

"அப்போ நைட் முழுக்க ஹாஸ்பிடல்லதான் இருக்கப் போறியா?"

"ஆமா! வீட்டுக்குப் போனாலும் என்னால சாப்பிடவோ தூங்கவோ முடியாதுக்கா."

"ஏன்டா?"

"என்னன்னு தெரியலக்கா. அந்தப் பொண்ணை இந்த வெள்ளமாப் பார்த்ததுல இருந்து எம் மனசு ரொம்பப் பதறிட்டே இருக்கு."

"சரிசரி... வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. அவசரம்னா எனக்குப் போன் பண்ணு."

"சரிக்கா! நீ எப்போ வருவே?"

"நான் நாளைக்கு ஈவ்னிங் ப்ளைட்ல புறப்பட்டு வர்றேன்."

"சீக்கிரம் வந்திடுக்கா. அக்கா! அப்புறம்..."

"சொல்லுடா."

"திரும்பவும் கேட்கிறேன்னு தப்பா நினைச்சுடாதேக்கா. பயப்படுற மாதிரி எதுவும் ஆகாதில்ல."

"மனோ! நாற்பது நாள் அம்பது நாள் ஆகியிருந்தாத்தான் அது கலைய வாய்ப்பிருக்கு. நாலு மாதம்னா குழந்தை ஓரளவுக்கு வளர ஆரம்பிச்சிருக்கும். அதனால சும்மா லேசான அதிர்வுக்கெல்லாம் ஒன்னும் ஆகாது. கர்ப்பப்பை அதைப் பாதுகாப்பா வெச்சுக்கும். அதனால நீ தேவையில்லாம பயப்படாதே. இந்நேரம் சரியானாலும் ஆகியிருக்கும். நீ போனை வை. நான் அம்பிகாகிட்டப் பேசுறேன்."

"சரிக்கா. நான் காலையில கால் பண்றேன்."

"ம்... வெச்சிடு." - என்றவாறு சிவசங்கரி போனை வைத்துவிட, மனதில் எழுந்த புத்துணர்வோடு போனை ஆப் பண்ணினான் மனோகர்.



'சில நிமிடத்தில் இப்படிப் பயந்து விட்டோமே. மகப்பேறுக்கான ஆராய்ச்சிப் படிப்பை முடித்திருக்கிறாள் அக்கா. அவள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். எத்தனை கேஸைப் பார்த்திருக்கிறாள். அவளுக்குத் தெரியாதா?' - நிம்மதி மூச்சோடு வரிசையாய்ப் போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

# 8



நீ
இறுக மூடிக்கொள்வது - உன்
கண்களை மட்டுமல்ல, இதயத்தையும்
சேர்த்துத்தான் - உன் இதயக்
கதவைத் தட்டிக்கொண்டே இருப்பேன்!

குளிரூட்டப்பட்ட அறையின் நடுவே வரிசையாய்ப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் பல்வேறு ஊர்களில் இருந்து வந்திருந்த மருத்துவர்கள் அமர்ந்திருக்க, நடுவே இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த வயதான மருத்துவர் தெளிவான ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தார்.

சிவசங்கரி பொறுமையின்றித் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். இன்னும் எவ்வளவு நேரம்தான் பேசுவார். சீக்கிரம் முடித்துவிட மாட்டாரா என்றிருந்தது. உடல் மட்டும்தான் இங்கிருந்ததே தவிர மனம் முழுக்கத் தம்பியிடமே இருந்தது.

இரவில் மிகுந்த மன வருத்தத்தோடு மனோகர் பேசியது மனதை வெகுவாய் வருத்திக் கொண்டிருந்தது.

அவன் மீது எந்தப் பிழையும் இல்லையே என்று எத்தனை முறை எடுத்துச் சொல்லியும் அவன் ஆறுதல் அடைய வில்லை. அவனது குரலும் வேதனையும் சிவசங்கரியை அமைதியாய் இருக்க விடவில்லை.

உடனே புறப்படலாம் என்றால் நான்கு நாட்களாய் நடந்த கூட்டத்தில் இன்றுதான் முக்கியமான முடிவுகள் வெளிப்படும். இந்த நேரத்தில் எங்கும் போக முடியாது. அதோடு மீட்டிங் முடியும்வரை யாரும் செல்போனில் உரையாடக் கூடாது.

ஸ்விட்ச் ஆஃப் பண்ணியிருந்த தனது செல்போனைப் பார்த்தாள். மனோ எத்தனை முறை போன் செய்தானோ! அந்தப் பெண் கண் திறந்ததும் அவளைப் பற்றி விசாரித்து விட்டுப் போன் செய்கிறேன் என்றான்.

காலை எட்டு மணிக்கு ஆரம்பித்த கூட்டம் இன்னும் நீண்டுகொண்டே இருக்க, அவஸ்தையோடு நெற்றியைப் பற்றிக் கொண்டாள். மருத்துவரின் பேச்சுத் தடைப்பட்டது. சிவசங்கரியைப் பார்த்தார்.

"மிஸ் சிவசங்கரி! வாட் ஹேப்பன்ட்?"

சட்டென எழுந்து நின்றாள். "நத்திங் ஸார்!"

"இல்ல. எதுவோ இருக்கு. இத்தனை நாளா கண்ணும் கருத்துமா நீங்க கவனிச்சதை நானும் பார்த்தேன். பட் இன்னிக்கு நீங்க நார்மலா இல்ல."

அவர் தெளிவான குரலில் அமைதியாய்ச் சொல்ல, அவஸ்தையாய்ப் புன்னகைத்தாள்.

"ஸாரி ஸார்! கொஞ்சம் ஃபீவரா இருக்கு."



நான்காவது இருக்கையில் அமர்ந்திருந்த பிரபாகரன் லேசாய்ப் பதறினான்.

"என்ன சங்கரி! ஃபீவரா இருந்தா ரெஸ்ட் எடுக்கலாமே. ஏன் இப்படி ஸ்ட்ரெயின் பண்ணிக்கிற? மெடிஸன் எடுத்தியா?"

"ஷட்-அப்." - பற்களைக் கடித்தவாறே அதட்டினாள்.

"மிஸ் சிவசங்கரி! அவரிடம் ஏன் கோபப்படுறீங்க? நாம டாக்டர்ஸ். நாமளே நம்ம உடம்பைப் பத்தி அக்கறை இல்லாம இருக்கலாமா?"

'ஸாரி ஸார். ஐயாம் ஆல்ரைட்."

"நோ நோ... நீங்க ரொம்ப டயர்டா இருக்கீங்க. ரூம்ல போய் ரெஸ்ட் எடுங்க. கமான்."

"நோ டாக்டர். முக்கியமான ரிப்போர்ட்ஸ் எல்லாம் ரெடி பண்ணணும்."

"நீ ரூமுக்குப் போ சங்கரி. உனக்கும் சேர்த்து நானே ரெடி பண்ணிடுறேன்!" - என்ற பிரபாகரனை முறைத்த வாறே அடிக் குரலில் சீறினாள்.

"மைண்ட் யுவர் ஓன் பிஸினெஸ். ஓ.கே.?"

"இல்ல சங்கரி. உனக்கு உடம்பு முடியாம.."

"ப்ளீஸ் கீப் கொய்ட்." - என்றவள், தன் அருகே அமர்ந்திருந்த பெண் மருத்துவரை ஏறிட்டாள்.

"மிஸ் பிரியங்கா. மீட்டிங் முடிஞ்சதும் உங்க ரிப்போர்ட்டை என்கிட்ட காட்டினா நான் காப்பி பண்ணிடுவேன். காட்ட முடியுமா?"

"யா. ஷ்யூர். நீங்க ரெஸ்ட் எடுங்க, சிவசங்கரி."

"தேங்க்யூ." - என்றவள், தலைமை மருத்துவரிட
திரும்பினாள்.

"தேங்க்யூ டாக்டர்."

"இட்ஸ் ஓ.கே. ப்ளீஸ் கோ அஹெட்."

"தேங்க்யூ டாக்டர்!" - என்றவாறு தன் முன் இருந் குறிப்பேடுகளைச் சேகரித்துக் கொண்டு செல்போனையு கையிலெடுத்தவாறே மீட்டிங் ஹாலை விட் வெளியேறினாள்.

முதல் வேலையாய்ப் போனை ஆன் செய் மனோகரன் செல்லுக்குத் தொடர்பு கொள்ள, பிஸியா இருந்தான். இரண்டு முறை முயற்சித்து விட்டுச் சலிப்பா போனை அணைத்தாள். தலை வலித்தது. சூடாய்க் கா சாப்பிட்டால் பரவாயில்லை என்று தோன்ற கேன்டீனை நோக்கி நடந்தாள்.

மனோவைப் பற்றிய நினைவை விட பிரபாகரனின் செயல்களால் மனம் தீயாய் எரிந்து கொண்டிருந்தது. எங் சென்றாலும் நிழலாய்த் தொடர்ந்து இம்சித்துக் கொண்டிரு பவனிடம் இருந்து விலக வேண்டும். இன்றே சென்னைக் கிளம்பி விட்டால் போதும் என்றிருந்தது.

எத்தனை முறை உதறினாலும் விடாமல் பற்றி கொள்ளும் இம்சை. என்ன பேசினாலும் திட்டினாலு கொஞ்சமும் முகம் மாறாமல் கேட்டுக் கொள்ளும் பணி ஓடி வந்து உதவி செய்வது. எதுவும் கேட்காமலே தேவையறிந்து பணிவிடை செய்வது... இதெல்லாம் ஒ காலத்தில் பிடித்திருந்ததுதான்.



ஏன், பெருமையாகக்கூட இருந்தது. தி ஃபேமஸ் ஹார்ட் சர்ஜன் என் எதிர்காலக் கணவன் என்ற கர்வமும் பூரிப்பும் ஆகாயத்தில் மிதக்க வைத்ததுதான். தான் தும்மினால் கூடப் பதறிவிடும் பிரபாகரனின் பரிவும் அக்கறையும் அப்போது தேனாய் இனித்தது.

ஆனால் எல்லாம் கானல் நீராகிப் போன பின்பு அவனது குரலைக் கேட்டாலே மனம் வேப்பங்காயைக் கடித்ததுபோல் கசந்தது. அவனது அண்மையும் பரிவும் கடுப்பேற்றியது. அவனைப் பாராமல் இருக்கும் வரை இந்த அவஸ்தைகள் இருப்பதில்லை. பார்த்துவிட்டால் இதே வெறுப்புதான். ச்சே!

மருத்துவர்களின் கலந்தாய்வுக் கூட்டம் இது. நிச்சயம் அவன் வருவான் என்று தெரியாமல் போயிற்றே. தெரிந்திருந்தால் பேசாமல் மனோவையே அனுப்பியிருக்கலாம். இவனிடமிருந்தும் தப்பித்திருக்கலாம். மனோவும் அப்படி ஒரு இக்கட்டில் மாட்டியிருக்க மாட்டான்.

"எக்ஸ்கியூஸ் மீ மேடம்! வாட் யூ வாண்ட்?" - பணிவாய்க் கேட்ட பேரரிடம் வாயைத் திறக்கும் முன் பிரபாகரனின் குரல் கேட்டது.

"பெப்பரும் ஜிஞ்சரும் தட்டிப் போட்டு சூடா ஒரு கப் பால்."

"யெஸ் ஸார்." - பேரர் நகர்ந்துவிட, உஷ்ணமாய் எழுந்தாள் சிவசங்கரி.

"உட்கார் சங்கரி. உனக்குத்தான் ஆர்டர் பண்ணினேன்."

"நான் கேட்டேனா?"

"நீ கேட்காவிட்டாலும் உன் மீது எனக்கு அக்க
இருக்கு சங்கரி."

"இந்த அக்கறையைக் காட்ட வேற எவ
கிடைக்கலியா?"

"சங்கரி!"

"ஷட்-அப். இந்தப் பரிவு பாசம் வேஷம் இதெல்
எங்கிட்ட காட்ட வேண்டாம். அதுக்கு வேற ஆளைப் பா

"டென்ஷனாகாதே சங்கரி. முதல்ல பெப்பர் மி
சாப்பிடு. தலைவலி குறையும். பிறகு பேசலாம். ப்
உட்கார்."

"நீ ஆர்டர் பண்ணின பாலை நான் சாப்பிடற
நெவர்."

"ஏன் சங்கரி?"

"இதோ பார். என்னோட கடைசி மூச்சுக்க
போராடும்போதுகூட உன் கையால சொட்டுத் தண்
குடிக்கமாட்டேன். அதைவிட மரணமே மேல்னு மூச்
விட்டுடுவேன்."

"ச... சங்கரி." - பிரபாகரனின் முகம் மாறியது.

"எம் பேரைச் சொல்லாதே. கேட்கவே நாராச
இருக்கு."

"ஏன் சங்கரி உனக்கு எம்மேல இவ்வளவு வெறுப்
அப்படி நான் என்ன தப்பு பண்ணினேன்?"

"ஓஹோ. அப்போ நீ பண்ணினது சரின்னுதா
நினைச்சிட்டு இருக்கியா?"



"தப்புதான். அம்மா உங்க வீட்ல வந்து டௌரி விஷயம் பேசினது எனக்குத் தெரியாதே. தெரிஞ்சிருந்தா இவ்வளவு பெரிய இழப்பு நடந்திருக்காது. ஸாரிம்மா..."

"ம்ஹூம். எவ்வளவு சுலபமாச் சொல்லிட்ட ஸாரின்னு. இந்த ஒரு வார்த்தை செத்துப்போன என் அப்பாவை மீட்டுக் கொடுக்குமா? சொல்லு! மீட்டுக் கொடுக்குமா?"

"இல்லம்மா. அது பெரிய இழப்புத்தான். மீட்கவே முடியாத இழப்புத்தான். ஆனா நான் எந்தத் தப்பும் செய்யலியே!"

"உன் அம்மா பேசும்போது... நீ கல்லு மாதிரி உட்கார்ந்திட்டுத்தானே இருந்தே. ஏதாவது தட்டிக் கேட்டியா?"

"ஐயோ சங்கரி! இதெல்லாம் நடந்தது உன் ரூம்ல. நான் மணவறையில ஐயர் முன்னால உட்கார்ந்து மந்திரம் சொல்லிட்டு இருந்தேன். உன் அப்பா மயங்கி விழுந்த பின்னாலதான் எனக்கே விஷயம் தெரியும்."

"கதை விடாதே."

"இல்லம்மா. நான் சொன்னது சத்தியம்."

"அப்போ பணம் கேட்டதுக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லன்றியா?"

"ஆமா சங்கரி. அம்மா இப்படி விலை பேசியது எனக்குத் தெரியவே தெரியாது."

"அப்படியா? மௌண்ட் ரோட்ல ஹாஸ்பிடல் கட்டணும்னு சொன்னியே!"

"ஆமாம்! சொன்னேன்."

"அதுக்குத்தானே ஏமாளி மாமனார்கிட்ட வர
சிணைன்ற பேர்ல பிச்சை கேட்டே?"

"அப்படிப் பிச்சை எடுத்து வர்ற பணத்தில நா
ஒன்னும் ஹாஸ்பிடல் கட்ட வேண்டிய அவசியம் இல்லை
அடுத்தவங்ககிட்ட கை நீட்டுற பழக்கமும் எனக்
கிடையாது."

"அதான் உன் அம்மாகிட்ட கேட்கச் சொன்னே?"

"திரும்பத் திரும்ப அதையே சொல்றியே. எம்மே
தப்பே இல்லன்னு நானும் எத்தனை தரம்தான் சொல்றது

"தப்பை நீ செய்தியோ... உன் அம்மா செய்தாளோ
ஆனா பாதிக்கப்பட்டது நாங்கதானே. உங்க பணத்தா
யால எங்க அப்பாவை இழந்தேன். என் அம்மா
முடக்கிட்டீங்க. என் குடும்ப நிம்மதியை மொத்த
அழிச்சிட்ட. இன்னும் என்ன பாக்கியிருக்குன்னு எ
பின்னால சுத்துற? நான்தான் உன்னைப் பார்த்தா
விலகிப் போறேனே! நீ ஏன் இப்படி நல்லவன் மாதிரி வே
போட்டுட்டுக் கூடவே வர்ற?"

"சங்கரி! வேண்டாம் சங்கரி. எப்பவுமே அதிர்
பேசாத நீ என்னால இப்படி நெருப்பா வார்த்தை
கொட்டாதே. வலிக்குது!" - என்றான் கண்கள் கசிய.

"வலிக்குதா? இதைவிட ஆயிரம் மடங்கு வலி
நான் தினமும் அனுபவிச்சிட்டு இருக்கேன். அது தெரியு
உனக்கு?"

"தெரியும். தெரிஞ்சதாலதான் நீ என்னை
குப்பையாத் தூக்கியெறிஞ்சாலும் நான் உன் பின்னா



நாயா சுத்தி வர்றேன். ஏன்னா... இன்னும் நான் உன்னை விரும்புறேன் சங்கரி."

"வாயை மூடு. என்னடா திடீர்னு இவ்வளவு கரிசனம்னு நினைச்சேன். இப்பத்தான் புரியுது."

"எ... என்ன புரியுது?"

"கேவலம்! அஞ்சு லட்ச ரூபாய்க்காகக் கல்யாணத்தையே நிறுத்தின புண்ணியவதியாச்சே உன் அம்மா. இப்போ எனக்குச் சொந்தமா ஹாஸ்பிடல் இருக்கு. வீடு இருக்கு. வசதி வந்திருக்கு. அதனால அவளையே கல்யாணம் பண்ணிக்கப்பான்னு சொல்லி அனுப்பினாளா?"

"சங்கரி."

"கத்தாதே. இதுக்கெல்லாம் பயப்படறவ நானில்ல."

"சங்கரி! ப்ளீஸ். இது பொது இடம். இங்க வெச்சு நம்ம சொந்த விஷயம் பேச வேண்டாம்."

"எங்க வெச்சும் உங்கூடப் பேச நான் தயாரா இல்லை." - விலகி நடக்க முயன்றவளின் முன் வந்து நின்றான்.

"எம் மேல உள்ள கோபத்தில ஏன் காபி சாப்பிடாமப் போற? ப்ளீஸ் காபி சாப்பிட்டுப் போம்மா!" - என்றவனைக் கை உயர்த்தித் தடுத்தாள்.

"இந்த அக்கறையெல்லாம் எங்கிட்ட காட்ட வேண்டாம்."

"சங்கரி!"

"பேசாதே. உன்னைப் பார்க்கவோ பேசவோ எனக்குச் சுத்தமாய்ப் பிடிக்கல்ல. இனி இப்படி என் முன்னால வந்து நிற்காதே."

"சங்கரி! நீ... நீ மாறவே மாட்டியா?"

"என்ன?"

"உன் கோபம் குறையும், என்னிக்காவது ஒரு நாள் என்னை ஏத்துப்பன்ற எண்ணத்திலதான் உனக்காகக் காத்திருக்கேன் சங்கரி."

"நீ நினைக்கிறது கனவுலகூட நடக்காது."

"ஏன் நடக்காது? நிச்சயமா நடக்கும்"

"வாட்?"

"ஆமா! நிச்சயம் நடக்கும். ஏன்னா... இன்னும் உன் மனசில நான் இருக்கேன்."

"வாட் நான்சென்ஸ்."

"நீ எவ்வளவுதான் கோபப்பட்டாலும் மறைச்சாலும் உண்மை அதுதான் சங்கரி. உம் மனசுல இப்பவும் நான்தான் இருக்கேன்."

"ஸ்டுப்பிட் மாதிரி உளறாதே! என் மனசில இருந்து உன்னைத் தூக்கியெறிஞ்சு எத்தனையோ வருஷமாச்சு."

"அப்போ ஏன் கல்யாணமே பண்ணிக்காம இருக்கே?"

"அது என் சொந்த விஷயம்."

"நான் நம்பமாட்டேன். உன்னால என்னை மறக்க முடியாது சங்கரி." - உறுதியாய்ச் சொன்னவனைக் கண்களில் நெருப்புப் பறக்கப் பார்த்தாள்.

"ஆமா! உன்னை என்னால மறக்கவே முடியாது. ஏன்னா என் அப்பாவைக் கொன்ன கொலைகாரன் நீ!"

"ச... சங்கரி."



"என் ஆயுள் முடியுற வரைக்கும் உன்னையும் மறக்க மாட்டேன். நீ செய்த காரியத்தையும் மறக்க மாட்டேன். குட் பை."

"சங்கரி... ப்ளீஸ்! போயிடாதே. உன்னைப் பார்க்கவே முடியறதில்ல. இன்னிக்காவது நான் பேசுறதை முழுசாக் கேளு. ப்ளீஸ் சங்கரி."

"இதோ பார்... உன்னைப் பார்க்கிறதையோ பேசுறதையோ நான் சுத்தமா வெறுக்கிறேன். இனிமே என்னைப் பார்க்கவோ பேசவோ முயற்சிக்காதே. மரியாதை கெட்டுடும்." - ஆத்திரமாய் மொழிந்துவிட்டு விடுவிடுவென நடக்க ஆரம்பித்தாள்.

எதிரில் கண்ணாடித் தம்ளரில் பாலுடன் வந்தான் பேரர். "மேடம்! பெப்பர் மில்க்!"

"இதை ஆர்டர் பண்ணினவன் தலையில ஊத்து." - என்றவாறு வேகமாய்ப் போனவளை மனம் வலிக்க, வேதனையோடு பார்த்துக்கொண்டு நின்றான் பிரபாகரன். ஆழமான பெருமூச்சு வெளிப்பட்டது.

# 9



கண்ணே!
உன் கண்ணீர்த் துளிகள்
விலைமதிப்பில்லா வைரத்
துணுக்குகள் - அவற்றைக்
கீழே சிதற விடாதே!

"மனோகர்! ஒன்னும் பிரச்சனை இல்ல. ஷீ இஸ் ஆல்ரைட்." - புன்னகையோடு சொன்ன அம்பிகாவை பார்த்து நிம்மதியாய்ப் புன்னகைத்தான் மனோகர்.

"மேம்! பேபி நார்மலா இருக்கா?"

"சூப்பரா இருக்கு. பாதுகாப்பா இருக்கு."

"ஓ! தேங்க் காட்." - பரவசமாகிக் கண்களை மூடினான்

"என்ன? ரொம்பப் பயந்திட்டீங்களா?"

"ஆமா மேம். குழந்தைக்கு ஹெல்த் கம்ப்ளை இருக்கு. துடிப்பே இல்லன்னு ஜான்ஸி சொன்னது ரொம்பப் பயந்திட்டேன்."

"நாங்ககூடப் பதறிட்டோம். ஆனா தரோவா செ பண்ணினதில பேபி நார்மலா இருக்கு. இந்தப் பொண்ணு தான் ரொம்ப வீக்கா இருக்கா. ட்ரிப்ஸ் ஏறட்டும். கண் விழிச்சப்புறம் சத்துள்ள ஆகாரமும் விட்டமின் டாப்லெட்ஸ் சாப்பிட்டாப் போதும்."

"இன்ஜெக்ஷன் எதுவும் போடலாமா மேம்?"

"தினமும் பி டுவெல் இன்ஜெக்ஷன் போடணும் இரும்புச் சத்து டானிக் எழுதியிருக்கேன். எல்லாம் ஜான் பொறுப்பில விட்டிருக்கேன். நான் மார்னிங் வந் பார்க்கிறேன்."

"ஓ.கே. மேம்."

"நீங்க இன்னும் வீட்டுக்கே போகலையே மனோகர்."

"இருக்கட்டும் டாக்டர். நீங்க கிளம்புங்க. நா பார்த்துக்கிறேன்."



"ஓ.கே." - என்றவாறு டாக்டர் அம்பிகா புறப்பட்டு விட, அறைக்குள் நுழைந்தான் மனோகர்.

புதிய பாட்டிலில் ஊசியைச் செருகி, அதைத் தலைகீழாய்த் தொங்கவிட்டுத் துளித்துளியாய் இறங்கும் டியூப்பைச் சரிசெய்து விட்டு நிமிர்ந்தாள் ஜான்ஸிராணி.

"வாங்க டாக்டர்."

"என்ன ஜான்ஸி! இப்படிப் பயமுறுத்திட்டீங்களே?"

"ஸாரி ஸார். பதட்டத்துல சரியாக் கவனிக்க முடியல்ல."

"இட்ஸ் ஓ.கே. ட்ரீட்மெண்ட் முடிஞ்சுதா?"

"இப்போ முடிஞ்சது டாக்டர். எப்படியும் ஒன் மந்த் ஃபுல்லா இவங்க பெட் ரெஸ்ட் எடுத்தாகணும். மருந்து மாத்திரை எல்லாம் கொடுக்கணும்."

"ஓ.கே. நான் பார்த்துக்கிறேன். நீங்க கிளம்புங்க."

"டாக்டர்?"

"ஜான்ஸி! நீங்க ரெஸ்ட்டே எடுக்கலியே. வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வந்தாப் போதும்."

"இவங்களை..."

"நான் பார்த்துக்கிறேன். மெடிஸன்ஸை மட்டும் எடுத்து வெச்சிட்டுப் போங்க."

"நீங்க வீட்டுக்குப் போகலியா டாக்டர்?"

"இல்ல. நான் இங்கேதான் ஸ்டே பண்ணப் போறேன்."

"ஸார்! அப்போ உங்க டியூட்டியை...?"

டாக்டர் சதீஷ் பார்த்துப்பார். நீங்க கிளம்புங்க."

"யெஸ் டாக்டர். மெடிஸன்ஸ் எல்லாம் கப்போர்ட்ல வெச்சிருக்கேன். இந்தப் பாட்டில் முடிஞ்சதும் அடுத்த பாட்டிலை ஏத்தனும்."

"சரி, நான் பார்த்துக்கிறேன்."

"நான் கிளம்பட்டுமா டாக்டர்?"

"யா... ஷ்யூர்."

புரியாத பார்வையோடு விலகினாள் ஜான்ஸிராணி. 'என்ன வேலையிருந்தாலும் பெண்கள் பிரிவிற்குள் நுழையவே மாட்டாரே. இன்று மட்டும் என்ன? இப்படித் தவம் கிடக்கிறார்? இந்தப் பெண் யார்? இவளுக்கும் டாக்டருக்கும் என்ன உறவு?'

இதே உணர்வில்தான் மனோகரும் இருந்தான். இத்தனை வருட சேவையில் பலவகை நோயாளிகளைப் பார்த்திருக்கிறோம். இந்தப் பெண்ணிடம் மட்டும் ஏன் இத்தனை பரிவு? இவளை விட்டு விலகிச் செல்ல ஒப்ப வில்லையே. இந்தப் பரிவிற்கு என்ன அர்த்தம்?

ஒன்றுமே இல்லை. அநாதையாய் அடிபட்டுக் கிடந்தவள். அதுவும் மோதியது தன் காரில். உற்றார் உறவினர் என்றும் யாரும் இல்லாத நிலையில் நானும் போய்விட்டால் நன்றாய் இராதே. முதலில் கண்விழிக்கட்டும் பிறகு போய் விடலாம்.

தன் மனதிடமே சொல்லிக் கொண்டு கைகளைக் கட்டியவாறே அறைக்குள் நடைபோட்டுக் கொண்டிருந்த போது நர்மதாவிடம் லேசான அசைவு தெரிய, வேகமாய் படுக்கையை நெருங்கினான்.



"ஹலோ! மேடம்... மேடம்..."

"ம்... ம்..." - மெலிதான முனகலோடு கண்களைச் சிரமமாய்த் திறந்தாள். பார்வையில் எதுவும் புலப்படாமல் திணறிக் கண்களை நன்றாய்த் திறந்தாள்.

கண்களில் இப்போது தெளிவு வர, தனக்கு வெகு அருகே நின்றவனின் முகத்தில் பார்வை பதிந்தது. 'யார் இவன்? இவன் முகத்தில் எத்தனை பரவசம்! என்ன ஒரு நிம்மதி! ஏன்? எதற்காக?' - மெல்ல எழ முயன்றவளை அவசரமாய்த் தடுத்தான்.

"வேண்டாம். எழுந்திருக்கக் கூடாது. ட்ரிப்ஸ் ஏறுது."

குழப்பமாய் ஏறிட்டாள். தனக்கு வெகு அருகே ஸ்டாண்டில் ஸலைன் பாட்டில் தொங்கிக் கொண்டிருக்க, டியூப் வழியாகத் தன் மணிக்கட்டில் செருகியிருந்த ஊசி வழியே உடலுக்குள் இறங்கிக் கொண்டிருந்தது.

எங்கிருக்கிறோம் என விழிகளைச் சுழற்றிப் பார்த்தவள், அது மருத்துவமனை என்று புரிய மீண்டும் எழ முயற்சித்தாள். இப்போது தலையில் வலி தெரிய, "அம்மா... ஆ..." - என முனகினாள்.

"எழுந்திருக்காதீங்க. தலையில அடிபட்டிருக்கு. வலிக்கும்!" - என்றான் மனோகர் பதட்டமாய்.

"தலையில..." - என்றவாறு வலது கரத்தை எடுத்துத் தொட்டுப் பார்த்தவள் அதிர்ந்தாள்.

சாலையில் இறங்கியதும் ஏதோ ஒரு வாகனத்தில் மோதி விழுந்ததும் தலையில் பிசுபிசுத்ததும் நினைவு வரப் பதறிப் போனாள்.

"ஐயோ! என் குழந்தை... என் குழந்தைக்கு ஒன்னும் ஆகலையே..." - பரிதவிப்போடு வயிற்றைப் பற்றிக் கொண்டாள்.

"ஒன்னும் பயப்பட வேண்டாம். உங்கள் குழந்தை பத்திரமாய் இருக்கு!" - என்ற மனோகரனின் பதிலில் நிம்மதியானாள்.

"வந்து... நான் எப்படி... இங்கே?"

"நேற்று நீங்க என் காரில் வந்துதான் விழுந்தீங்க. நான்தான் இங்கு கொண்டு வந்தேன்."

"ஏன்? ஏன் ஸார் என்னைக் காப்பாத்துனீங்க? பேசாம அடிச்சுப் போட்டுட்டுப் போயிருக்கலாமே!"

"என்னங்க பேச்சு இது? வயித்துல குழந்தையோட இப்படிப் பேசலாமா?"

"இல்ல. இப்ப என்னைக் காப்பாத்தி இவ்வளவு பெரிய ஹாஸ்பிடல்ல கொண்டு வந்து சேர்த்திருக்கீங்களே. பீஸ் கேப்பாங்களே..."

"கேட்க மாட்டாங்க." - என்றான் புன்னகையோடு.

"என்ன? இது கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடலா?"

"இல்ல. தனியார்தான்."

"பின்னே ஏன் பீஸ் கேட்க மாட்டாங்க?"

"ஏன்னா... இது என்னோட ஹாஸ்பிடல்தான்."

"எ... என்ன? நீங்க டாக்டரா?"

"ம்... நான் மனோகர். சைல்ட் ஸ்பெஷலிஸ்ட். என் அக்கா சிவசங்கரி. பெண்கள் நல மருத்துவர். இது எங்க ஹாஸ்பிடல்தான்."



"டாக்டர்! உங்களுக்குப் பீஸ் கட்ட எனக்கு... என்கிட்ட ஒத்த ரூபாகூட இல்லையே...!"

"அதெல்லாம் பிறகு பார்க்கலாம். மொதல்ல உங்க பேரைச் சொல்லுங்க."

"எம் பேர் நர்மதா."

"உங்க அட்ரஸ் சொல்லுங்களேன்."

"எ... எதுக்கு?"

"ஏங்க! நீங்க இப்படி இந்த நிலையில அடிபட்டுக் கிடக்கிறதை வீட்ல தெரிவிக்க வேண்டாமா?"

"வேண்டாம் டாக்டர்."

"ஏன்?"

"இல்ல, வேண்டாம்."

"ஏங்க! வீட்ல தேடுவாங்களே. சொல்ல வேண்டாமா?"

"என்னை யாரும் தேட மாட்டாங்க."

"என்ன?"

"எனக்குன்னு யாருமே இல்ல டாக்டர்." - சொல்லும் போதே கண்ணீர் சுரந்தது. தொண்டை அடைத்தது.

"என்ன ஆச்சுங்க? யாருமே இல்லன்னா... நீங்க லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டீங்களா?"

"சேச்சே!" - அவசரமாய்த் தலையாட்டி மறுத்தாள்.

"பின்னே?"

"எம் புருஷன் போன பின்னால எல்லாருக்கும் நா
பாரமாயிட்டேன். எனக்கு ஒரு வேளை சாப்பாடு போடக்
ஆளில்லை." - விம்மினாள்.

மனோகர் திகைத்துப் போனான். "எ... என்
சொல்றீங்க நர்மதா? உங்க ஹஸ்பண்ட்?"

"இறந்துட்டார்."

"என்ன? எப்போ... எப்படி?"

"இன்னும் ஒரு மாசம் ஆகல்ல. கரண்ட்ல வேல
பார்க்கும்போது கரண்ட் பாஸாகி இறந்துட்டார்."

"மை காட்! அப்போ... உங்க ஃபேமிலி?"

"டாக்டர்! இந்த நிமிஷம் எனக்குன்னு யாரு
இல்லை. என்னை அநாதையா தெருவில விட்டுட்டாங்
வயித்தில புள்ளையோட போக்கிடம் இல்லாமத்தான்..."
பேச முடியாமல் குமுறினாள்.

மனோகரின் கண்கள் கலங்கின. "நர்மதா! ப்ளீ
அழாதீங்க. உங்க உடம்பு இருக்கிற நிலையில அழு
குழந்தைக்கு ஆகாது."

"டாக்டர்! வாழ வழி தெரியாம சாகணும்னுதா
கார்ல வந்து விழுந்தேன். நீங்க என்னன்னா... என்னை
காப்பாற்றி வைத்தியம் பண்றீங்க. நான் பொழைச்சி என்ன
பண்ணப் போறேன் டாக்டர்?"

"இப்படியெல்லாம் பேசாதீங்க நர்மதா! நீங்க செய்
எவ்வளவு பெரிய தப்பு. ஆக்ஸிடெண்ட்ல குழந்தைக்
ஏதாவது ஆகியிருந்தா?"

"அந்த நிமிஷமே என் உயிர் போயிருக்கும்."



"திரும்பத் திரும்ப இதே வார்த்தையைச் சொல்லாதீங்க. கன்சீவா இருக்கும் போது நாம எப்படி இருக்கிறோமோ நடந்துப்போமோ அதே மாதிரிதான் வயித்துல உள்ள பேபியும் இருக்கும்."

"என்ன?"

"இப்போ நீங்க சிரிச்ச மாதிரி உற்சாகமா, சந்தோஷமா இருந்தாத்தான் பொறக்கப் போற குழந்தையும் சந்தோஷமா சிரிச்ச முகமா பொறக்கும்."

"சந்தோஷமா? எனக்கா? கல்யாணமான ஆறே மாசத்துல கட்டினவனைப் பறிகொடுத்துட்டு வயித்துல பிள்ளையோட போக்கிடம் இல்லாம அநாதையா நிக்கிற வளுக்கு என்ன சந்தோஷம் இருக்கும் டாக்டர்? என்னால எப்படிச் சிரிக்க முடியும்?"

"உண்மைதான். ஆனா நடந்து முடிஞ்சதைப் பத்தியே கவலைப்படுறதை விட, நடக்கப் போறதையும் நாம யோசிக் கணுமே!"

"டாக்டர்!"

"நர்மதா! போனது போகட்டும். எல்லாம் பொறுமையா பேசிக்கலாம். இப்போ உங்களுக்குத் தேவை நிம்மதியான ஓய்வு. அதுதான் உங்களுக்கும் குழந்தைக்கும் முக்கியம். அதனால அமைதியா கண்மூடி ஓய்வெடுங்க."

"டாக்டர்! நான்..."

"நோ... பேசக் கூடாது. க்ளோஸ் யுவர் ஐஸ்."

"டாக்டர்!"

"ம்..."

"உங்களுக்கு ஃபீஸ் தரக்கூட என்கிட்ட எதுவும் இல்லையே!"

"நான் கேட்கலியே."

"டாக்டர்! என்னால உங்களுக்கு எதுக்கு நஷ்டம்? என்னை ஏதாவது ஒரு கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கலாமில்ல..."

"நர்மதா! சொந்தமா ஹாஸ்பிடல் வெச்சிட்டு உங்களை வேற எங்கோ போய்ச் சேர்க்க மனம் வருமா? நீங்க எப்போ கண் விழிப்பீங்கன்னு காத்துக் கிடக்க முடியுமா? சீக்கிரமா ட்ரீட்மெண்ட் பண்ணுங்கன்னு உரிமையா விரட்ட முடியுமா?"

"டாக்டர்!"

"விபத்துல உங்க குழந்தைகிட்ட துடிப்பே இல்லை[illegible]தும் என் உயிரே போயிடுச்சு, தெரியுமா?"

"ஐயோ! குழந்தைக்கு என்ன ஆச்சு?"

"நல்ல வேளையா எதுவும் ஆகல்ல. அதை டாக்[illegible] வாயால கேட்கிற வரைக்கும் நான் பட்ட பாடு..." - வேதனையோடு அவன் சொல்ல, வியப்பாய் அவனை ஏறிட்டாள்.

தனக்காகவும், தன் வயிற்றுச் சிசுவுக்காகவும் இவன் பதறினானா? பரிதவித்தானா? இவன் யார் எனக்கு? என் உடன் பிறந்தவனோ புகுந்த வீட்டினரோ ஒருவர்கூடத் துடிக்கவில்லையே! இரக்கப்படவில்லையே! இவனுக்கு ஏன் இத்தனை பரிவு? ஓ! இவன் மருத்துவன். மருத்துவருக்கு உரிய பரிவும் மென்மையும் கனிவும் இவனிடம் [illegible] [illegible]. வியப்பில்லை.



ஒவ்வொரு உயிரின் மதிப்பும் இவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? அதனால் ஏற்பட்ட இரக்கமா? இல்லை... தன் காரில் வந்து விழுந்தவளுக்கு ஒன்று என்றால் தன் மீதுதானே பழி விழும் என்ற தற்காப்புச் செயலா? லேசாய் எழுந்த சந்தேகத்திற்கு மனோகரை ஏறிட்டாள்.

கனிவான சாந்தமான கண்கள். அதில் துளியும் சுயநலமோ கபடமோ தெரியவில்லை. களையான கம்பீரமான முகம். அதில் தெரிந்த படித்த மிடுக்கு. இயல்பாகவே புன்னகைத்த மென்மை. எத்தனை முறை பார்த்தாலும் இவனிடம் எந்தப் போலித்தனமும் தெரியவில்லை.

"என்ன ஆச்சு நர்மதா? இவனுக்கென்ன அக்கறை! எதற்காக நம்மைத் தூக்கி வந்து காப்பாற்றினான் என யோசிக்கிறீங்களா?"

பதட்டமாய் மறுத்தாள். "ம்ஹூம்! அப்படியெல்லாம் இல்லை."

"நீங்க அப்படி நினைச்சாலும் தப்பில்லை. ஆனா கண் முன்னே ஒரு உயிர் அடிபட்டுத் துடிக்கும்போது உடனே ஓடிப்போய்க் காப்பாத்தணும்னு முயற்சிக்கிறவன் தான் மனுஷன். அதிலயும் நான் ஒரு மருத்துவன். எப்படியோ போகட்டும்னு விட்டுட்டுப் போக என்னால முடியாது."

கண்கள் கசியப் புன்னகைத்தாள் நர்மதா. "ரொம்ப சந்தோஷமா இருக்கு."

"எதுக்கு?"

"முதன் முறையா ஒரு மனிதாபிமானமுள் மனிதனைப் பார்த்ததற்கு!"

"ஓ.கே. இதே சந்தோஷத்தோடே கண்மூடி ரெஸ் எடுங்க."

"டாக்டர்! இன்னும் எத்தனை நாள் நான் இங் இருக்கணும்?"

"எப்படியும் ஒன் மன்த் ரெஸ்ட் எடுக்க வேண் யிருக்கும்."

"ஒரு மாசமா?"

"ஆமா! ஏன் இங்கே இருக்கப் பிடிக்கலையா?"

"அப்படி இல்லை டாக்டர். நான்... என்னோட து இருந்த பேகை ரோட்டோரமா இருந்த கடைக்கார அம் கிட்ட கொடுத்தேன். மாத்துத் துணிகூட இல்லாம..."

"டோண்ட் வொர்ரி. அக்கா நாளைக்கு வந்திடு உங்களுக்குத் தேவையான எல்லாம் அவ மூல கிடைச்சிடும். எதைப் பத்தியும் கவலைப்படாம ரெ எடுங்க."

"என்னால உங்களுக்கு வீண் சிரமம் டாக்டர்!"

"இதுல என்ன சிரமம் இருக்கு. எப்பவுமே எங்களா முடிஞ்ச உதவியைச் செய்துட்டுத்தான் இருப்போம். இ உதவின்னுகூட சொல்ல முடியாது. எங்க கடமை."

"உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு டாக்டர்!"

"ஆண்டவனோட படைப்புல எல்லாருக்குமே பெ மனசுதான்.ஆனா ஒருசிலரோட சுயநலம் அவங்க மன சுருக்கிடுது."



"இல்லை டாக்டர். மனசே இல்லாமலும் சில ஜென்மங்கள் பிறந்திடுதே! அதை எந்தக் கணக்கில சேர்க்கிறதாம்?"

"நர்மதா!"

"ஆமாம் டாக்டர். நான் பார்த்த மனுஷங்கள்ல பலருக்கு இதயமே இல்லாம இருந்திருக்கு. என் புருஷன் செத்தது விதியா இல்ல... அஜாக்கிரதையான்னு தெரியலை. கொட்டுற மழையில ஈரச் சுவர்ல போய் கரண்ட் வேலை பார்த்ததாலதான் ஷாக்கடிச்சது.

"ஆனா அதுக்காக என்னையும் என் வயித்துல வளர்ற குழந்தையையும் குற்றம் சொல்றது எந்த விதத்துல நியாயம்? என்னைக் குற்றம் சொன்னதைக் கூட சகிச்சுக்கலாம். ஆனா கண்ணுக்குத் தெரியாத ஒரு சிசு மேல பழி போடலாமா டாக்டர்?"

"அதெல்லாம் சுத்த முட்டாள்தனம். நீங்க ஏன் இதைப் பெரிசு படுத்துறீங்க?"

"நான் பண்ணலை டாக்டர். ஆனா என் மாமியார் அவங்க உறவுக்காரங்க எல்லாரும் அப்படித்தான் சொன்னாங்க. அடிச்சி விரட்டாத குறையா வெளியே தள்ளினாங்க. பொறந்த வீட்டுக்குப் போனேன். தாய் போன தோட பொறந்த வீட்டுப் பந்தம் அறுந்து போச்சு.

"புருஷன் போனதோட புகுந்த வீட்டுப் பந்தமும் அறுந்து போச்சு. எங்கே போறது? எப்படி வாழறதுன்னு நடு ரோட்டில நின்னு நான் தவிச்சேன் டாக்டர்! இனியும் யாருக்காக வாழணும்னு ஒரு வெறுப்பு. வாழ்க்கையே வெறுத்துதான் சாகணும்னு முடிவெடுத்தேன்..." - கண்களில்

நீர்ப் பெருக்கோடு நர்மதா பேசிக் கொண்டே இருக் யோசனையாய் எழுந்தான் மனோகர்.

இந்தப் பெண் மனதளவில் மிகுந்த வேதனையி இருக்கிறாள். இந்த வேதனையோடு இவள் நிச்ச ஓய்வெடுக்க முடியாது. இவளைத் தூங்க வைத்தால்தா இவள் மனம் அமைதியாகும்.

அந்த அமைதியில் வேதனை குறையும். முதலி இவளைத் தூங்க வைக்க வேண்டும் என்ற முடிவுட மருந்துகள் வைக்கப்பட்டிருந்த அலமாரியைத் திறந்தான்.

சிறிய பாட்டிலில் இருந்த மஞ்சள் நிறத் திரவத் ஊசியில் ஏற்றிக் கொண்டு நர்மதாவை நெருங்கினான்.

"டாக்டர்! ஊசி எதுக்கு?"

"சும்மா... வலி தெரியாம இருக்கிறதுக்கு!" - என் வாறே ஊசியைப் புஜத்தில் செருகினான்.

"இதெல்லாம் ஒரு வலியே இல்லை டாக்டர்! எ மனசுல உள்ள வலியைவிட இதொன்றும் பெரிய வ இல்லை."

"நர்மதா! உங்களோட எல்லா வலியும் இப்போ காணாமப் போயிடும்."

"எப்படி?" - வியப்பாய்க் கேட்டாள்.

"கண்ணை மூடுங்க... சொல்றேன்."

"கண்ணை மூடினா?"

"மூடினாத்தான் சொல்ல முடியும். ம்... கண்ணை மூடுங்க!" - மனோகரின் மென்மையான அதட்டலில் மன இளகிக் கண்களை மூடிக் கொண்டாள்.



"ம்... இப்போ நான் கேட்கிற கேள்விக்கெல்லாம் கண்ணைத் திறக்காமலே பதில் சொல்லணும். சரியா?"

"ம்..."

"வெரிகுட். ஒரு பதினைஞ்சு பதினாறு வயசுல நீங்க எப்படி இருந்தீங்க?"

"எப்படின்னா?"

"கலகலப்பா... துறுதுறுன்னு படபடன்னு வாய் பேசிட்டு இருப்பீங்களா? இல்லை... மௌனமா அமைதியா இருப்பீங்களா?" - அவளது முகத்தைக் கூர்மையாய் ஆராய்ந்து கொண்டே, மனோகர் கேட்க நர்மதாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

"ஹய்யோ டாக்டர்! நான் ரொம்ப வாயாடி. ஒரு நிமிஷம்கூடப் பேசாம இருக்க மாட்டேன். அம்மாகூட ரொம்ப திட்டுவாங்க."

"எதுக்கு?"

"பெண்பிள்ளைங்க இப்படி வாயாடக் கூடாதுன்னு..."

"ஏனாம்?"

"அமைதியா இருந்தாத்தான் புகுந்த வீட்ல போய்க் குப்பை கொட்ட முடியுமாம். வாயாடிட்டே இருந்தா யாருக்கும் பிடிக்காமப் போயிடுமாம்."

"அம்மா எப்படி இருப்பாங்க, நர்மதா?"

"அம்மாவா? அம்மா ரொம்ப அழகு."

"உங்களை மாதிரியா?"

"ம்ஹூம். என்னைவிட ரொம்ப அழகு. மஞ்சள் பூசிய முகம். நெத்தியில பெரிதாய்க் குங்குமம். நெளிநெளிவா சுருள் கூந்தல்.. அப்புறம்..." ரசனையாய்த் தொடங்கியவள், அதற்கு மேல் பேசத் தோன்றாமல் மெல்ல, மெல்ல உறக்கத்திற்குத் தயாராகினாள்.

"ம்... தூக்கம் வருது. இனிமே பேச வேண்டாம். தூங்குங்க..." - மனோகர் இதமாய்ப் பேசிக் கொண்டே இருக்க, நர்மதா தன் வலி மறந்து, காயங்கள் மறந்து, கவலைகள் மறந்து உறங்கத் தொடங்கினாள்.

# 10



அவளிடம் பேசிய வார்த்தைகளை
விடப் பேச நினைத்த - பேச
முடியாமல் போன வார்த்தைகளே
அதிகம் - அவள் முன் ஊமையாகிப்
போகின்றேனே தினம் தினம்!

**வி**மான நிலையத்தில் இருந்து நேராய் மருத்துவ மனைக்கே வந்துவிட்டாள் சிவசங்கரி. முதல் வேலையாய் நர்மதாவின் அறைக்கு வந்து அவளைப் பற்றிய விவரங்களைத் தம்பியின் மூலம் தெரிந்து கொண்டவாறே பரிசோதனை செய்தாள்.

நர்மதாவின் நாடித் துடிப்பு சிசுவின் இதயத் துடிப்பு அனைத்தும் வெகு சீராக...



புன்னகைத்தாள். நிமிட இடைவெளிகூட இல்லாமல் பேசிக் கொண்டிருந்த தம்பியை ஏறிட்டாள்.

"மனோ! நீ பயந்த மாதிரி எதுவும் இல்லைடா. இந்தப் பொண்ணும் பேபியும் முழு ஆரோக்கியமா இருக்காங்க."

"தேங்க்யூ அக்கா! நர்மதா ரொம்ப வீக்கா இருக்காங்களே?"

"அது கர்ப்பிணிப் பொண்ணுங்க எல்லாருக்கும் இருக்கிற பிரச்சனைதான். வாமிட் அதிகமா இருந்திருக்கும். நல்லா சாப்பிட்டாலே போதும். தெம்பாகிடுவா!"

"அப்புறம் தலையில உள்ள காயம்?"

"அடி கொஞ்சம் பலமாத்தான் பட்டிருக்கு. காயம் ஆறக் கொஞ்ச நாளாகும். அதுவரை கம்ப்ளீட் ரெஸ்ட் எடுத்தாகணும்."

"பார்த்துக்கா.... பத்திரமா பார்த்துக்கோ!"

"அதான் நான் வந்திட்டேன்ல... இனி நீ போய் உன் வேலையைப் பார். உன் செக்ஷன்ல கூட்டம் ஜாஸ்தியா இருக்கு..." - கண்டிப்பாய்ப் பேசியவளைச் சற்றே மிரட்சியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் நர்மதா.

அக்காவும் தம்பியும் எதிர் எதிர்த் துருவங்கள் போலும். தம்பியின் மென்மை அக்காவிடம் இல்லை. பேச்சிலும் பார்வையிலும் ஒரு கம்பீரத் தோற்றம். கூர்மையாய் ஆராயும் கண்கள். சிரிப்பைத் தொலைத்த முகம்.

ஆனாலும் அலட்சியமோ அகம்பாவமோ இன்றி ஒரு தனி மரியாதையைத் தோற்றுவித்தது.

நல்ல உயரம். அதற்கேற்ற உடல்வாகு. பொ
நிறம். கண்களை உறுத்தாத அலங்காரம். மெத்தப் படி
களையான முகம். லேசாய்ப் பயத்தை உண்டு பண்ணு
கண்டிப்பான பேச்சு.

மனோகரிடம் இயல்பாய்ப் பேசியது போல் இவளி
பேச முடியவில்லை. மௌனமாய்த் தன்னையே பார்த்து
கொண்டு படுத்திருந்த நர்மதாவிடம் லேசான புன்னகை
யோடு நெருங்கினாள்.

"என்ன நர்மதா! இப்போ உடம்பு எப்படி இருக்கு?"

"ம்... பரவாயில்லை."

"தலையில வலி இருக்கா?"

"ம்... கொஞ்சம் வலிக்குது."

"மனோ! நைட் இன்ஜெக்ஷன் போட்டியா?"

"ஆமாக்கா."

"ஓ.கே. நர்மதா, டேக் ரெஸ்ட். மனோ! வா, போகலாம்"

"எங்கே அக்கா?"

"நம்ம கேபினுக்கு. பேஷண்ட்ஸ் வந்து வெயி
பண்றாங்கடா!"

"அப்போ... நர்மதாவை?"

"அவளை நர்ஸ் பார்த்துப்பா. இதென்ன புது
கேட்கிற?"

"இல்லை. வந்து... ஸாரிக்கா!"

"என்னடா... என்னாச்சு உனக்கு?"



"இல்லை... நர்மதாவைத் தனியா விட வேண்டாமே!"

"ஏன்?"

"அதான் எல்லாம் சொன்னேனே... அவங்க மனசு ரொம்ப காயம் பட்டு..."

"மனோ! யாரோட வலியையும் நாம தாங்கிக்க முடியாதுடா. அவங்களே சமாளிச்சுப் பழகிக்கணும்."

"எல்லாருக்கும் உன்னை மாதிரி மனோதைரியம் கிடையாதுக்கா. பாவம், சின்னப்பொண்ணு!" - தம்பியின் அக்கறையில் புருவம் சுருக்கினாள்.

"இப்ப என்ன சொல்ல வர்றே?"

"நர்மதாவைக் கவனிக்கத் தனியே ஒரு சிஸ்டரைப் போடுக்கா. டியூட்டி முடிஞ்சதும் நானும் வந்து பார்த்துக்கிறேன்."

"ஓ.கே. நான் ஏற்பாடு பண்றேன். நீ கிளம்பு."

"சரிக்கா... நர்மதா! நீங்க எதையும் நினைச்சு வருத்தப்படாதீங்க. நாங்க இருக்கோம்..."

"சரிங்க டாக்டர்!"

"நல்லா ரெஸ்ட் எடுங்க. நான் ஈவினிங் வந்து பார்க்கிறேன்."

"சரிங்க டாக்டர்!"

"சரிக்கா... நான் கிளம்பறேன்."

"டேய்! கேண்டீன்ல ஏதாவது சாப்பிட்டுட்டு அப்புறமா உன் கேபினுக்குப் போ."

"சரிக்கா!" - என்றவாறு மனோகர் வெளியேற, நர்மதாவிடம் திரும்பினாள் சிவசங்கரி.

"ஸாரி நர்மதா!"

"எதுக்கு டாக்டரம்மா?"

"நான் கடுமையா பேசுறேன்னு நினைக்காதே யதார்த்தத்தைச் சொன்னேன்."

"புரியலையே?"

"உன்னோட துயரம் ரொம்பக் கொடுமையானதுதான். ஆனா நடந்து முடிஞ்சதைப் பத்தியே நினைச்சு அழறதாலே நடந்தது எதையும் மாத்த முடியாது. இல்லியா?"

"ஆமா... மேடம்!"

"பிறகேன் அழணும்? இப்போ நீ மட்டுமில்ல... உன்னை நம்பி உன் வயித்துல ஒரு ஜீவனும் இருக்கு. அதுக்காகவாவது நீ உன்னைத் தேத்திக்கணும். சும்மா அழுது மனசையோ உடம்பையோ வருத்திக்கக் கூடாது."

"ச... சரிங்க மேடம்!"

"உன்னோட வருத்தம் குழந்தையைப் பாதிச்சிடக் கூடாது. நீ நல்லா சாப்பிட்டுத் தெம்பா பேசி, கலகலப்பா இருந்தாத்தான் பொறக்கப் போற... குழந்தை ஆரோக்கியமா பொறக்கும்."

"சரிங்க மேடம்!"

"சரி... இப்ப உன் விஷயத்துக்கு வருவோம். இனிமே என்ன பண்ணலாம்னு இருக்கே!" - சிவசங்கரி நேரிடையாய்க் கேட்க, பரிதாபமாய் விழித்தாள் நர்மதா.



"மேடம்?"

"நர்மதா! இப்போ உனக்குன்னு எந்த இடமும் இல்லைங்கிற. உடம்பு குணமான பிறகு என்ன பண்ணுவ? எங்கே போவாய்?"

"எங்கே போவேன்? எனக்கு... இந்த ஊர்ல யாரையும் தெரியாதே!" - சொல்லும்போதே கண்ணீர் பொங்கியது.

"ஷ்... அழக் கூடாது. யாருமே அழுறது எனக்குப் பிடிக்காது."

அவசரமாய்க் கண்களைத் துடைத்தாள். "ஸாரி மேடம்!"

"சரி, விடு. நான் உன்னை ஏதாவது ஹோம்ல சேர்த்து விடவா?"

"ஹோம்னா?"

"அதுவும் ஒரு வீடுதான். உன்னை மாதிரி யாருமே இல்லாதவங்க தங்குற புகலிடம்."

"அப்படின்னா? அநாதை ஆசிரமமா மேடம்?" - பரிதாபமாய்க் கேட்டவளைப் பார்க்க முடியாமல் தடுமாறிப் போனாள் சிவசங்கரி.

"இல்லை... அப்படின்னு சொல்ல முடியாது."

"பரவாயில்லை மேடம்! உண்மை அதுதானே... நானும் அநாதைதானே!"

"நர்மதா! நான் சொல்றதைப் புரிஞ்சுக்க. நீ சின்னப் பொண்ணு. உனக்கும் உன் குழந்தைக்கும் ஒரு பாதுகாப்பான இடம் வேண்டாமா?"

"வேணும்."

"அதுக்காகத்தான் சொல்றேன்."

நர்மதாவின் தொண்டை அடைத்தது. அப்பா, அண்ணன், அண்ணி, மாமியார், நாத்தனார்கள் என உறவினர்கள் இருந்தும் என் பிள்ளை அநாதை ஆசிரமத்திலா பிறக்க வேண்டும்? காலம் இனி என்னை எங்கெல்லாம் இழுத்துச் செல்லுமோ? கசிந்த கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நான்... நான் எப்போ மேடம் போகணும்?"

"ஒண்ணும் அவசரமில்ல... முதல்ல காயம் நல்லா ஆறட்டும். உன் உடம்பும் குணமாகட்டும். பிறகு போகலாம்."

"ரொம்ப நன்றி மேடம்!"

"பரவாயில்லை... எனக்கு டியூட்டிக்கு டயமாச்சு. கிளம்பறேன்."

"சரி மேடம்!"

"உன்னைக் கவனிச்சுக்க திவ்யான்னு ஒரு சிஸ்டரை அனுப்புறேன். அவ பார்த்துப்பா. உனக்கு மாத்திக்கத் துணி வேணுமில்ல... அவகிட்ட கொண்டு வரச் சொல்றேன். நல்லா ரெஸ்ட் எடு."

"சரிங்க மேடம்!" என்றதும் அறையை விட்டு வெளியேறினாள்.

அதுவரை அவளுக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருந்த கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டது. இனிமேல் உள்ள காலத்தை எப்படிக் கழிக்கப் போகிறோம் என்ற பயத்தில் கண்ணீர் பெருக்கெடுத்தது.



மரணம்கூட என்னை ஏற்றுக் கொள்ளவில்லையே! இனி நானும் என் குழந்தையும் நிரந்தரமான அநாதைகள் தானா? அம்மா! என்னை ஏனம்மா... இப்படித் தவிக்க விட்டுச் சென்றாய்? நீ மட்டும் உயிரோடு இருந்திருந்தால் எனக்கு இத்தனை அவசரமாய்த் திருமணம் நடந்திருக்குமா?

அதே வேகத்தில் எல்லாம் முடிந்து போயிருக்குமா? என்னை ஏன் யாருக்கும் பிடிக்கவில்லை? என்னை ஏன் பாரமாய் நினைத்துத் தெருவில் விட்டனர்? இதோ இந்த டாக்டரம்மாவிற்குக் கூட என்னைப் பிடிக்கவில்லையே! என்னை அநாதை ஆசிரமத்திற்கு அனுப்பப் போகிறார்களே!

இரத்த சொந்தங்களே உதறிவிட்டன. இவள் யார்? இவள் தம்பியின் காரில் வந்து விழுந்ததால் வைத்தியம் பார்க்கிறார்கள். குணமானதும் அனுப்பி விடப் போகிறார்கள்! வேறென்ன இவர்களிடம் எதிர்பார்க்க முடியும்? இவர்கள் எனக்கு எந்த வகையில் உறவு?

கண்ணீர் வழிந்து தலையணையை நனைக்கும் போது அறைக்குள் யாரோ நுழையும் ஓசை கேட்டது. இந்த நிலையில் யாரைப் பார்த்தாலும் அழுகைதான் வரும். பேசாமல் கண்களை மூடிக் கொள்ளலாம். தூங்குவதாக எண்ணிக் கொள்ளட்டும். கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

இரண்டு பெண்களின் குரல் கேட்டது. குளிர்ச்சியான மென்கரம் ஒன்று இடதுகை மணிக்கட்டில் நாடித்துடிப்பைப் பரிசோதித்தது.

"ஜான்ஸி! இந்தப் பொண்ணு தூங்குறா போல் இருக்கே. மயக்கம் தெளிஞ்சதோ என்னவோ தெரியலையே?"

"தெரியலை டாக்டர்! மனோகர் டாக்டர்தான் இந்த பொண்ணு கூடவே இருந்தார். என்னைக்கூட வீட்டுக்கு போகச் சொல்லிட்டார்."

"இந்தப் பொண்ணு வெரி லக்கி ஜான்ஸி!"

"எப்படிச் சொல்றீங்க டாக்டர்?" - கையிலிருந்த டியூ வழியாக ஏதோ மருந்து செலுத்தப்பட்டதை உணர்ந்தா நர்மதா. விழிகளை அசைக்காமல் செவியைக் கூர்மை யாக்கினாள்.

"நம்ம மனோ இத்தனை வருஷத்தில என்னிக்காவது இந்தப் பிளாக்ல வந்து ஒரு ரெண்டு நிமிஷம் நின்னிருப் பாரா?"

"ம்ஹூம்."

"ஆனா நேற்று மதியத்தில இருந்து இந்த ரூமை விட்டு வெளியே போகவே இல்லை. அதோட அவரோ துடிப்பைப் பார்க்கணுமே... எனக்கு அப்படியே புல்லரிச்சுப் போச்சு."

"ஏன் டாக்டர்?"

"கட்டின பொண்டாட்டிக்கு அடிபட்டாக்கூட ஒ புருஷன் அப்படித் துடிக்க மாட்டான். அவ்வளவு துடிப் தாயும் சேயும் பிழைச்சே ஆகணும்னு கண்டிஷ போட்டுட்டார்."

"ஆமா! என்கிட்டயும் பல முறை இதையேதா சொன்னார்."

"ம்... இந்தப் பொண்ணுக்கு ட்ரீட்மெண்ட் முடிஞ் இனி ஒரு பயமும் இல்லை... பேபியும் நல்லா இருக்குன்



சொன்ன பிறகுதான் அவருக்கு உயிரே வந்திருக்கும். அப்போ அவர் முகத்தைப் பார்த்தேன். ஏதோ ஒரு அசாத்திய ஒளி. பரவசம். இப்படி எதை வேணும்னாலும் சொல்லலாம்."

"எப்பவுமே அவரோட மனசு இளகினதுதானே டாக்டர். அதிலும் இந்தப் பெண் அவரோட கார்ல விழுந்திருக்கா. அந்தப் பயம். பதட்டமாக்கூட இருக்கலாம்."

"நோ... நோ... இது அதையெல்லாம் விட வேற ஏதோ ஒண்ணு!"

"அப்படின்னா?"

அந்தப் பெண் மருத்துவர் குரலைத் தழைத்துக் கொண்டார். "ஜான்ஸி! நான் நினைக்கிறேன். இந்தப் பொண்ணு மனோவுக்குத் தெரிஞ்ச பெண்ணாத்தான் இருக்கும்."

"டாக்டர்! நிஜமாவா சொல்றீங்க?"

"எக்ஸாக்ட்லி. ஏன்னா இப்போ வரும்போது மனோவைப் பார்த்தியா?"

"இல்லையே?"

"நான் பார்த்தேன். அவரோட முகத்தில புது தேஜஸ் வந்திருக்கு. பேச்சுல... செயல்ல ஒரு துறுதுறுப்பைப் பார்த்தேன்."

"டாக்டர்! அப்போ இவ யாராய் இருக்கும்?"

"வேறு யாரு? நம்ம மனோவோட உள்ளம் கவர்ந்த கள்ளியாத்தான் இருக்கும்..." - அந்தப் பெண்மணி கேலியாய்க் கூற, கேட்டுக் கொண்டிருந்த நர்மதாவின் உடல் உதறிக் கொண்டது.

என்ன சொல்கிறாள் இவள்? அந்த மனோகரை நான் இதுவரை பார்த்ததுகூட இல்லையே! அவர்கூட என்னிடம் கேட்டுத்தானே என் பெயரைத் தெரிந்து கொண்டார். அவளது சிந்தனையைத் தடை செய்தது ஜான்ஸியின் குரல்.

"என்ன சொல்றீங்க டாக்டர்?" - வியப்பும் ஆர்வமுமாய்க் கேட்டாள்.

"ஜான்ஸி! நான் நினைக்கிறேன். இந்தப் பொண்ணு மனோவோட பழைய லவ்வரா இருக்கும்னு...!"

"டாக்டர்!" - ஜான்ஸியை விடவும்... நர்மதா அதிர்ந்தாள்.

"மனோகர் இன்னும் கல்யாணமே பண்ணிக்காததுக்கு என்ன காரணம்னு தெரியுமா?"

"ம்... சிவசங்கரி மேம் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலையே! அதனால..."

"அதுவும் ஒரு காரணமா இருக்கலாம். ஆனா முழுக் காரணமா இருக்க முடியாது. இந்தப் பொண்ணும் கூட காரணமா இருக்கலாம்."

"குழப்புறீங்க டாக்டர்!"

"எனக்கும் கொஞ்சம் குழப்பம்தான். ஆனா இவ நினைவு திரும்பிட்டா எல்லாம் கிளியர் ஆகிடும்."

"டாக்டர்! நாம இப்படி பேசுறதே தப்பு. இப்ப இவ கல்யாணமான பொண்ணு. கர்ப்பமாவும் இருக்கா. நாம பேசறதைக் கேட்டா இவ மனசு கஷ்டப்படாதா?"

"நாம ஒண்ணும் தப்பாப் பேசலையே! சும்மா ஒரு யூகம்தானே! நிச்சயமா இவளுக்கும் மனோகருக்கும் ஏதோ இருக்கு!"



"அதைப் பத்தி நமக்கென்ன மேடம்! நம்ம டியூட்டியை நாம பார்க்கலாம்."

"சரி... சார்ட்ல எல்லா ரிப்போர்ட்டையும் எழுதிட்டு வா. நான் நெக்ஸ்ட் ரூமுக்குப் போறேன்!" - என ஒரு பெண் குரல் மெல்லத் தேய்ந்து மறைய, நர்மதாவின மனம் பதறிக் கொண்டிருந்தது.

'இது என்ன வம்பு? போக வேண்டிய உயிரைக் காப்பாற்றியவனை இப்படி யெல்லாமா பேசுவார்கள். படித்தவர்களாக இருந்தால் என்ன, பாமரராக இருந்தால் என்ன! அடுத்தவர்களைப் பற்றிப் பேசுவதில் எத்தனை ஆர்வம்!

ஒருவரைப் பற்றி எதுவுமே தெரியாமல் இப்படிப் பேசலாமா? இவர்களுக்கும் அந்தச் சிவகாமிக்கும் பெரிதாய் வித்தியாசம் இல்லையே... கடவுளே! நான் யாரென்று தெரியும் முன்பே இவ்வளவு பேசுகிறார்களே... கணவனை இழந்து அநாதையாய் நிற்கிறேன் என்று தெரிந்தால்... இன்னும் என்னவெல்லாம் பேசுவார்களோ!

இனி என் வாழ்நாள் முழுக்க இப்படி அடுத்தவர்களை எண்ணிப் பயந்து கொண்டேதான் வாழ வேண்டுமா? அந்த மனோகர் உண்மையில் நல்ல இதயம் கொண்டவராக இருக்கலாம். என் மீதுள்ள இரக்கத்தில் சிறு உதவி செய்தால்கூட இவர்கள் அதற்கும் புதிதாய் அர்த்தம் கண்டு பிடிப்பார்களே!

இவர்களது பொழுது போக்கிற்கு நான்தான் விளையாட்டுப் பொருளா? இதே எண்ணம் மனோகரின் அக்காவிற்கும் வந்திருக்குமோ? அதனால்தான் வந்ததும்

வராததுமாகத் தன்னை வெளியேற்றுவதில் குறியா இருக்கிறானோ?

அதுகூட நல்லதுக்குத்தான். இங்கிருந்து இத்தலை அவப்பெயர்களைச் சம்பாதிப்பதைவிட ஏதோ ஒரு அநா ஆசிரமத்தில் அநாதைகளோடு அநாதையாய் வாழ்ந் விட்டுப் போகலாம். சீக்கிரமாய் இங்கிருந்து போய் விடுவ நல்லது.

மனம் கனக்க, மூடிய விழிகளில் இருந்து கண்ணீ இறங்கியது. நெஞ்சு விம்மியது. இன்னும் என்னென்ன துயரங்கள் எனக்காகக் காத்திருக்கின்றனவோ? எப்படி எதி கொள்ளப் போகிறேனோ?' எதிர்காலம் மிரட்டியது. சுற்றிலு கொடிய இருள் சூழ்ந்திருப்பது போல் பயமாய் இருந்தது.

இருளில் பாதை தெரியாமல் கல்லின் மீதும் முள்ளி மீதும் ஓடித் தடுமாறி விழுந்து தனியே தவித்து ஓவெ கத்திக் கதறினாள். சட்டெனக் கண்களைத் திறந்தாள். உட முழுக்க வியர்த்துக் கொட்டியது.

கணவனின் மறைவுக்குப் பின் அடிக்கடி தோன்று கனவு இது. கனவோ... கற்பனையோ! ஆனால் ஒவ்வொரு முறையும் பயந்து பதறி எழுவது வழக்கமாயிற்று. இந்த கனவிற்குப் பயந்தே இரவெல்லாம் கண்களை மூடாம விழித்தே இருப்பாள்.

இன்று பகலிலும் அதே கனவு. தனிமைப் பய எதிர்காலப் பயம். அடுத்தவர்களின் பேச்சு. ஏளன அலட்சியம். புறக்கணிப்பு. ஏமாற்றம்... சிவசங்கரி சொன் அநாதை ஆசிரமம்... அதைப் பற்றிய பயம். படபட



எல்லாம் மொத்தமாய்ச் சேர, நர்மதாவின் உடல் வெடவெட என நடுங்கத் துவங்கியது.

லேசாய்த் துவங்கிய நடுக்கம் மெல்ல மெல்ல அதிகரிக்க, மேனி நெருப்பாய்க் கொதிக்க ஆரம்பித்தது.



# 11

விட்டு விட்டுத் துடிக்கும் என்
இதயத்தில் விடாமல் துடிப்பது
உன் நினைவுகள் மட்டுமே!

தன் முன் அமர்ந்திருந்த நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோதும் மனோகரின் நினைவுகள் நர்மதாவைச் சுற்றியே அலைந்து கொண்டிருந்தன. விழித் திருப்பாளா? வலி குறைந்திருக்குமா? மாத்திரையின் வீரியத்தில் உறங்கியிருப்பாளோ?

எதற்கும் ஒரு முறை பார்த்துவிட்டு வரலாமா? யோசனையாய்க் கழுத்தில் மாட்டியிருந்த ஸ்டெதஸ் கோப்பைக் கழற்றினான். மேஜை மீதிருந்த அழைப்பு மணியை அழுத்தியதும் நர்ஸ் எட்டிப் பார்த்தாள்.

"டாக்டர்!"

"சிஸ்டர்! டாக்டர் சதீஷை வரச் சொல்லுங்க."

"யெஸ் டாக்டர்!" - அவள் விலகிய மறுநிமிடமே வந்து நின்றான் சதீஷ்.

"குட் மார்னிங் டாக்டர்!"

"மார்னிங் சதீஷ். ரொம்ப பிஸியா இருக்கியா?"

"நோ டாக்டர்! எக்ஸ்ரே ரிப்போர்ட் பார்த்திட் இருந்தேன்."

"ஒரு டென் மினிட்ஸ் இங்கே இருந்து பேஷண்ட் பார்த்துக்கிறியா?"

"ஷ்யூர் டாக்டர்!"

"நான் இப்ப வந்திடுவேன்."

"நான் பார்த்துக்கிறேன் டாக்டர். நிதானமா வந் போதும்!" - என எதிரே இருந்த இருக்கையில் அமர்ந் அடுத்த வரிசையில் இருந்த பெண்மணியை அழைத் வைத்தியம் பார்க்க ஆரம்பித்து விட்டவனைப் புன்ன யோடு பார்த்தான் மனோகர்.

தன்னை விட நான்கு வயது இளையவன். பயங்க சுறுசுறுப்பு. ஒரு வினாடியைக்கூட வீணாக்காம உழைப்பவன். துடிப்பானவன். உண்மையானவ சலிப்போ அலுப்போ காட்டாமல் இன்முகத்தோடு சேவ செய்பவன். குழந்தைகள் நல அறுவைச் சிகிச்சை நிபுண

சதீஷ் தன் மருத்துவ மனையில் பணிபுரிவ மனோகருக்கும் பெரிய பலம். ஆனந்தமும் கூட. மனோக இன்னும் அங்குதான் நிற்கிறான் என்பதைக் கூ கவனியாமல் தன் முன்னே இருந்த பெண்மணியி மென்மையான குரலில் பேசினான்.

"இதோ பாருங்கம்மா... எப்பவுமே லேசான ஜுர வந்ததும் நீங்க ஹாஸ்பிடலுக்குக் குழந்தையைக் கூட்டி வந்திடுங்க. இப்போ பாருங்க. நூத்தி ரெண்டு டிகிரி ஜுர இருக்கும்.



"ரெண்டு வயசுக் குழந்தையால இவ்ளோ ஜுரத்தைத் தாங்க முடியுமா? அதான் மயங்கி விழுந்திருக்கு. இனிமே இப்படி அஜாக்கிரதையா இருக்காதீங்க."

"ஸாரி டாக்டர்! லைட்டா காய்ச்சல் அடிச்சதும் ஜுரம் மருந்து கொடுத்தேன். கேட்கலை!"

"இப்போ... நான் தர்ற மருந்தைச் சுடுதண்ணியில கலந்து கொடுங்க. ஜுரம் குறைஞ்சிடும். எதுக்கும் நாளைக்கும் ஒரு வாட்டி கூட்டிட்டு வாங்க..." என வேகமாய் மருந்து மாத்திரைகளை சதீஷ் எழுத ஆரம்பிக்க, புன்னகை யோடு அறையை விட்டு வெளியேறினான் மனோகர்.

எதிர்ப்பட்ட நர்ஸ்களின் வணக்கத்தைப் பெற்றுக் கொண்டு, அடுத்த பகுதிக்குள் நுழைந்து, நர்மதாவின் அறையை அடைந்து; சத்தமில்லாமல், மெதுவாய்க் கதவைத் திறந்தவன் மின்சாரம் தீண்டினாற் போல் அதிர்ந்தான்.

கட்டிலில் படுத்திருந்த நர்மதாவின் உடல் ஒருபுறமாக வெட்டிக் கொண்டிருக்க, தலை கட்டிலின் விளிம்பில் பட்டு இடித்துக் கொண்டிருந்தது. வலது கையில் செருகியிருந்த ஊசி எதிலோ செருகிக் கொள்ள, டியூப் மூலமாக இரத்தம் ஏறிக் கொண்டிருந்தது.

கைகளும் கால்களும் துடித்துக் கொண்டிருக்க, பற்கள் கிட்டித்துப் போயிருக்க, "நோ...." - என்ற வீறிடலோடு கட்டிலை நெருங்கி, முதல் வேலையாய்க் கையில் செருகி யிருந்த ஊசியைப் பிடுங்கி எறிந்தான்.

இரத்தம் வழிந்த கையில் கைநிறையப் பஞ்சை எடுத்து அழுத்திப் பிடித்துக் கொண்டான். மறுகையால்

கட்டிலில் இடித்துக் கொண்டிருந்த தலையைப் பற்றித் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

"நர்மதா! என்ன ஆச்சு? என்ன பண்ணுது உங்களுக்கு?" - கண்களில் கண்ணீர் சுரக்க, பதட்டமாய்க் கேட்டவனின் முகம் தெளிவின்றித் தெரிய, அவனிடம் பேச இயலாமல் கண்ணீர் வழிந்தது.

அவசரமாய் அவளது கண்ணீரைத் துடைத்தான். "நர்மதா! நர்மதா!! அக்கா... ஜான்ஸி... சிஸ்டர்ஸ்... எல்லாரும் எங்கே போனீங்க?" - மனோகரின் கூச்சலில் நர்ஸும் பின்னேயே ஜான்ஸி ராணியும் ஓடிவர, சீறினான்.

"என்ன பண்ணிட்டு இருக்கீங்க எல்லாரும்? இதுதான் பேஷண்ட்டைப் பார்த்துக்கிற லட்சணமா?"

"ஸாரி ஸார். மை காட்! எவ்ளோ பிளட்! ஐயோ! பிட்ஸ் வந்திருக்கு. நர்ஸ்... உடனே சிவசங்கரி மேடத்தைக் கூட்டிட்டு வா!" - என ஜான்ஸி வேகமாய்த் தனது பணியைத் தொடர்ந்தாள்.

இரண்டு மூன்று பாட்டில்களில் மருந்தை ஏற்றி ஊசி போட்டுவிட்டுத் தலைக் காயத்திற்கு மருந்தை வைத்துக் கட்டும்போது சிவசங்கரியும் அம்பிகாவும் ஓடி வந்தனர்.

"என்னாச்சு? மனோ! நீ எப்போ வந்தே?"

"என்னை விசாரிப்பது இருக்கட்டும். முதலில் நர்மதாவைப் பார்!" - கடுப்பாய்க் கூறியவனைக் குழப்பமாய்ப் பார்த்துவிட்டு, அவன் மடியில் படுத்திருந்த நர்மதாவைப் பார்த்தாள்.

"ஜான்ஸி! இந்தப் பொண்ணுக்கு என்னாச்சு?"



"மேடம்! பிட்ஸ் வந்ததுல தலை கட்டில்ல இடிச்சு... ட்ரிப்ஸ் ஏறின ஊசி கிராஸாகி பிளட் கசிஞ்சி..."

"மை காட்! இவ பக்கத்தில யாரும் இல்லையா?"

"இப்பத்தான் மேடம் செக் பண்ணிட்டு மத்த பேஷண்ட்ஸை கவனிக்கப் போனேன்."

"என்னத்தை செக் பண்ணினீங்க? உடம்பு பூரா அனலா தகிக்குது. என்ன மருந்து கொடுத்தீங்க?" - மனோகர் சீறினான்.

"இல்லை ஸார். நானும் டாக்டர் அம்பிகாவும் வந்து செக் பண்ணும்போது ஜுரம் எதுவும் இல்லை. பல்ஸ் எல்லாம் நார்மலா இருந்தது. சார்ட்ல குறிச்சிட்டுத்தான் போனேன்."

"அதுக்குள்ள எப்படி இவ்வளவு ஜுரம் வந்தது? ஜுரம் அதிகமாகி பிட்ஸ் வந்திருக்கு. நான் மட்டும் வரலைன்னா என்ன ஆகியிருக்கும்?"

"மனோ! விடு... நான் பார்த்துக்கிறேன்."

"ம்... இப்படித்தான் சொன்னே! நானும் உன் பேச்சைக் கேட்டுட்டுப் போனேன். இப்ப பார்த்தியா?"

"மனோ! என்ன பேசுற நீ? இது ஒரு ஆக்ஸிடெண்ட்."

"நோ... இது உங்க அஜாக்கிரதை. ஹாஸ்பிடலுக்குன்னு வந்துட்டா ஒவ்வொரு பேஷண்ட்டும் நம்ம குழந்தைங்கன்னு நீதானே அக்கா சொல்வாய். இப்போ இந்தக் குழந்தையை எப்படி அம்போன்னு விட்டுட்டுப் போனே?"

"மனோ! நான் திவ்யாவை அனுப்பினேன்டா. ஜான்ஸி, திவ்யா எங்கே?"

"பார்மஸியில பார்த்தேன் டாக்டர்!"

"எக்ஸ்கியூஸ் மீ மேம்!" - என்ற மெல்லிய குரலில் அனைவரும் திரும்ப, வெள்ளை உடுப்பணிந்த இளம்பெண் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

"திவ்யா! நான் உன்கிட்ட என்ன சொன்னேன்? நீ என்ன செய்துட்டு வர்றே?" - சிவசங்கரி முகம் கடுக்கக் கேட்டதும் திவ்யா துணுக்குற்றாள்.

"மேடம்! பதினெட்டாம் ரூம்ல உள்ள பேஷண்ட்டுக்குத் தேவையான மருந்து லிஸ்ட்டைப் பார்மஸியில கொடுத்து வந்தேன் மேடம்!"

"நீ லேட் பண்ணினதால இங்கே என்ன ஆகியிருக்கு, பாரு!"

உள்ளே வந்து நர்மதாவைப் பார்த்தவள், பதட்டமாய் பாண்டேஜ் துணியை எடுத்து மணிக்கட்டில் வழிந்த இரத்தத்தைச் சுத்தம் செய்து கட்டுப் போட்டாள். ஆடைகளை ஒழுங்கு செய்து கட்டிலில் படுக்க வைத்துப் போர்வையால் மூடினாள்.

நர்மதாவின் உடல் துடிப்பு அடங்கியிருக்க, கண்கள் செருகி அரை மயக்கத்தில் இருந்தாள். சிவசங்கரி நர்மதாவைப் பரிசோதித்துவிட்டு ஜான்ஸியிடம் திரும்பினாள்.

"ஜான்ஸி! இனிமே ட்ரிப்ஸ் வேண்டாம். இன்னும் அரைமணி நேரம் கழிச்சு ரெண்டு இன்ஜெக்ஷன் போடு. இவ விழிச்சதும் சூடா பால் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட வை. இந்த டேப்லெட்டைக் கொடு."



"ஓ.கே. மேடம்!"

"திவ்யா! நீ நர்மதா கூடவே இருந்து பார்த்துக்க. இன்னிக்கு நைட் டியூட்டி யார்?"

"ரோகிணி மேடம்!"

"அவ வந்தப்புறம்தான் நீ கிளம்பணும்... புரியுதா?"

"யெஸ் மேடம்!"

"ஓ.கே. ஜான்ஸி! நீ உன் வார்டுக்குப் போ. அரைமணி நேரத்துக்கு ஒரு முறை வந்து செக் பண்ணிக்கோ."

"ஓ.கே. மேடம்!"

"மனோ! வா, போகலாம்."

"இல்லக்கா. நீ போ... நான் கொஞ்ச நேரம் இருந்திட்டு வர்றேன்."

"மனோ! என்னாச்சு உனக்கு?"

"ஏன்?"

"வொர்க்கிங் ஹவர்ஸ்ல நீ இங்கே வந்து உட்கார்ந்தா உன் பேஷண்ட்ஸை யார் பார்த்துப்பா?"

"சதீஷ்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டுத்தான் வந்தேன்."

"சதீஷ்... அப்போ அவன் வேலையை?"

"அக்கா, ப்ளீஸ்! உன் கண்டிப்பையெல்லாம் கொஞ்சம் ஓரம் கட்டி வை. என்னைக் கொஞ்ச நேரம் அமைதியா இருக்க விடு!" - என்ற தம்பியைக் கூர்மையாய்ப் பார்த்தாள் சிவசங்கரி.

வேலை விஷயத்தில் அலட்சியமாய் இருப்பவனல்ல மனோகர். அதுவும் பெண்கள் பகுதிக்கு அநாவசியமாய் ஒரு நாளும் வந்ததில்லை. தன்னிடம் பேச வேண்டும் என்றால் கூட போனிலே பேசுவானே தவிர இங்கு வந்து பேச மாட்டான்.

அப்படிப்பட்டவன் இன்று தனது பொறுப்பை இன்னொருவனிடம் ஒப்படைத்துவிட்டு, இந்தப் பெண்ணின் அருகே வந்து தவம் கிடக்கிறான் என்றால்... இந்தப் பெண் யார்? இவளுக்காகத் தன்னிடமே கோபப்படுகிறான். இவளுக்கு ஒன்று என்றால் பதறித் துடிக்கிறான்!

எதற்காக? எதுவாக இருப்பினும் தம்பியிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிவதை நன்றாய் உணர்ந்து கொண்டாள் சிவசங்கரி. அதனால் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமைதியாய் வெளியேறினாள்.

திவ்யா அமைதியாய்ச் சுவரோரம் நின்று கொள்ள, மனோகரின் கண்கள் நர்மதாவைப் பார்த்துக் கொண்டிருந்தன. சீரான சுவாசத்தோடு உறங்கிக் கொண்டிருந்தவளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். குளிர்ந்து போயிருந்தது.

காய்ச்சல் நின்று போய் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. எழுந்து சென்று மின்விசிறியைச் சுழல விட்டான். மென்மையான துணியை எடுத்து முகத்தை ஒற்றி எடுத்தான். தலைக் காயத்தை மெல்ல வருடினான். நாடித்துடிப்பைச் சரி பார்த்தான்.

அவனது செய்கைகளை மௌனமாய் வியப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவை அழைத்தான். வேகமாய் நெருங்கி வந்தாள்.



"டாக்டர்..."

"சிஸ்டர்! ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"சொல்லுங்க டாக்டர்!"

"இவங்களுக்குக் கொஞ்சம் டிரெஸ் வாங்கணும். எனக்கு லேடீசுக்கெல்லாம் துணி எடுத்துப் பழக்கமில்ல... நீங்க கொஞ்சம் வாங்கிட்டு வர முடியுமா?"

"எப்போ ஸார் வாங்கணும்?"

"டியூட்டி முடிஞ்சு போகும்போது பணம் தர்றேன். நீங்க நாளைக்கு வரும்போது வாங்கிட்டு வந்தா போதும்."

"ஓ.கே. டாக்டர்!"

"இவங்க கன்சீவா இருக்காங்க. ஸோ! கொஞ்சம் ஃப்ரீ சைஸ் நைட்டி, நாலு புடவை, மேட்சிங் பிளவுஸ் எல்லாமே வாங்கிட்டு வந்திடுங்க."

"நான் பார்த்து எடுத்திட்டு வர்றேன் டாக்டர்!"

"தேங்க்யூ. ஸாரி சிஸ்டர்!"

"எதுக்கு டாக்டர்?"

"என்னாலதான் அக்கா உங்ககிட்ட கோபமா பேசிட்டாங்க!"

"பரவாயில்லை டாக்டர்! தப்பு எம்பேர்லதான். மேடம் சொன்னதும் நான் வந்திருக்கணும். நான் இருந்த ரூம்ல உள்ள பேஷண்ட்டோட ஹஸ்பண்ட் வீட்டுக்குப் போயிருக்கார். அதனால அவங்களுக்குப் போட வேண்டிய மெடிஸன் எல்லாம் பார்மஸியில சொல்லிவிட்டு வர்றதுக்குள்ள இப்படி ஆயிடுச்சி. ஸாரி டாக்டர்!"

நல்ல வேளையா நான் வந்தேன்.

"இட்ஸ் ஓ.கே. இல்லேன்னா..."

"வெரி ஸாரி டாக்டர்!"

"இனிமே இப்படி நடக்காமப் பார்த்துக்கங்க"

"கண்டிப்பா டாக்டர்!"

"சரி... இப்போ உங்களுக்கு வேற வேலை எதுவும் இருக்கா?"

"பத்தாம் நம்பர் ரூம்ல உள்ள பேஷண்ட்டுக்கு பிளட் டெஸ்ட்டுக்கு பிளட் கலெக்ட் பண்ணி லேபுக்கு அனுப்பணும்."

"ஓ.கே. நீங்க போய் அந்த வேலையை முடிச்சிட்டு வாங்க. நான் இங்கே இருக்கேன்."

"டாக்டர்! நீங்களா?"

"ம்... நான் கவனிச்சிக்கிறேன். நீங்க போயிட்டு வாங்க."

"ஓ.கே. டாக்டர்!" - என்றவாறு திவ்யா சென்றுவிட, அமைதியாய்க் கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்தான் மனோகர். மின்விசிறியின் ஓசையைத் தவிர, வேறெந்த ஓசையும் இல்லாத அமைதி. குளிர்ந்த காற்று.

இரவெல்லாம் விழித்திருந்த களைப்பில் கண்கள் செருகின. தலையை உதறித் தூக்கத்தை விரட்டியபோது, நர்மதாவிடம் லேசான முணுமுணுப்புக் கேட்டது. சட்டென எழுந்து கட்டிலை நெருங்கினான்.

வலியால் முகத்தைச் சுருக்கியவாறே ஏதோ பேசியது போல் உதடுகள் அசைய, செவியைக் கூர்மையாக்கி அவளது முகத்தருகே குனிந்தான்.



"அப்பா! பயம்மா இருக்குப்பா. அம்மா... என்னையும் கூட்டிட்டுப் போயிடும்மா... பயம்மா இருக்கும்மா!" - மிக மெல்லிய குரலில் நர்மதா கூற அதிர்ந்தான்.

பரிவாய் அவளது கேசம் வருடினான். "நர்மதா! என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பயப்படுறீங்க?"

"அப்பா!"

"நான்தான் உங்க பக்கத்திலேயே இருக்கேனே... பிறகென்ன பயம்?" - மனோகரின் மென்குரலில் நர்மதாவின் காதுமடல்கள் அசைந்தன. விழிகளைத் திறக்க முயற்சித்துத் தோற்றுப் போனாள்.

"நர்மதா! கண்ணைத் திறக்க வேண்டாம். தூங்கணும்... சரியா...?"

"ம்..."

"எதுக்கும் பயப்படக் கூடாது. நான் உங்க பக்கத்துல தான் இருக்கேன்."

"சரிப்பா!"

"சரி... தூங்குங்க!" - என லேசாய்த் தட்டிக் கொடுத்தான். கண்களைத் திறவாமலேயே அந்தக் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள் நர்மதா. லேசாய் வியந்து பின் புன்னகைத்தான் மனோகர். அவள் பற்றியிருந்த தன் கரத்தைப் பார்த்தான்.

பெற்றவளின் கரங்களைப் பயமாய், பாதுகாப்பிற்காய்ப் பற்றிக் கொண்ட ஒரு மழலையின் பற்றுதலைப் போன்று இருந்தது. அவளது உடல் நடுக்கத்தை உணர்ந்து அவளது கையை இதமாய்ப் பற்றிக் கொண்டான்.

"அப்பா!"

"என்னடா?"

"என்னை விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா!"

"இல்லை... போக மாட்டேன்."

"எனக்குன்னு வேற யாருமே இல்லைப்பா!"

"நான் இருக்கேன்டா உனக்கு..."

"என்னையும் கூட்டிட்டுப் போயிடுங்கப்பா. அண்ணனும் அண்ணியும் திட்டினா நான் கேட்டுக்கிறேன்."

"உன்னை யாரும் திட்ட மாட்டாங்க. நான் இருக்கேனில்ல...!"

"சரிப்பா..."

"நர்மதா! நீ ஒண்ணும் குழந்தை இல்லடா. உனக்கே ஒரு குழந்தை பிறக்கப் போகுது. நீ இப்படிப் பயப்படலாமா?"

"இல்லப்பா... எனக்கு அநாதை ஆசிரமத்தை நினைச்சா ரொம்ப பயம் வந்திடுது..."

"என்ன?" - லேசாய் அதிர்ந்தான்.

"ஆமாம்ப்பா... மேடம் என்னை அங்கே கொண்டு போய் விட்டுடுவாங்களாம். அப்பா! நீங்களே கூட்டிட்டு...." - நர்மதாவின் பேச்சு காதில் கேட்கவில்லை. அவள் சொன்ன வார்த்தை இதயத்தில் சம்மட்டியால் அடித்தது போல் வலித்தது.

அநாதை ஆசிரமமா? இவளை அங்கே கொண்டு சேர்ப்பதாய் யார் சொன்னது? மேடம் என்றால்...



அக்காவாய் இருக்குமோ? சுரீரென்ற கோபத்தில் வேகமாய் எழுந்தான்.

தன் வேலையை முடித்துவிட்டு வந்த திவ்யாவிடம் நர்மதாவின் கரத்தை ஒப்படைத்துவிட்டு, முகம் முழுக்கக் கோபச் சிவப்புடன் சிவசங்கரியின் அறையை நோக்கிச் சென்றான். அவள் டெலிவரி ரூமில் இருப்பதாகத் தகவல் வந்ததும் பற்களைக் கடித்துக் கொண்டு காத்திருக்கத் தொடங்கினான்.

## 12



அவள் என்னை நினைக்க
மறந்தாலும் நான் அவளை
மறக்க நினைக்க மாட்டேன்!
ஏனென்றால் அவள் என்
நினைவுகள் மட்டுமல்ல - என்
இதயத்தின் துடிப்பு!

ஆபரேஷன் தியேட்டரில் நின்று அறுவைச் சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த பிரபாகரனின் முன் வந்து நின்றான் உதவி மருத்துவர் நரேந்திரன். கையில் பிரபாகரனின் செல்போன்.

"டாக்டர்! ரொம்ப நேரமா உங்க செல் பெல் அடிச்சிட்டே இருக்குது."

"ஸ்விட்ச் ஆஃப் பண்ணிடு நரேன். ஆபரேஷன் முடிஞ்சதும் பேசுறேன்."

"அம்மான்னு நினைக்கிறேன் டாக்டர்!"

"அம்மாவா!" - வியப்பாய்க் கேட்டுக் கொண்டே போனைக் கையில் வாங்க. அது மீண்டும் விறிட்டு அழைத்தது. திரையில் தன் வீட்டுத் தொலைபேசி எண் தெரிய, போனைக் காதிற்குக் கொடுத்தான்.

"ஹலோ!"

"டாக்டர் பிரபாகரன் இருக்காரா?" - புதிய ஆண் குரல்.

"ஆமா. நான்தான் பேசறேன். நீங்க யாரு?"

"தம்பி! நாங்க உங்க வீட்டில இருந்துதான் பேசுறோம். நீங்க கொஞ்சம் வீடு வரை வந்திட்டுப் போக முடியுமா?"

"வீட்டுக்கா? என்ன விஷயம்?"

"நேர்ல வாங்க தம்பி."

"ஸாரி! நான் இப்போ ஆபரேஷன் தியேட்டர்ல நிக்கிறேன். என்ன விஷயம்னு சொல்லுங்க. நீங்க யாரு?"

"தம்பி நான்..." - ரிஸீவர் இன்னொரு கைக்கு மாறியது. இப்போது பேசியது ஒரு பெண் குரல்.

"டாக்டர்! உங்கம்மா திடீர்னு மயங்கி விழுந்திட்டாங்க. மூச்சே இல்லை. கொஞ்சம் சீக்கிரம் வாங்க!" - பதட்டமாய்ப் பேசிய குரலில் திடுக்கிட்டான்.

"அம்மாவுக்கு என்ன ஆச்சு?"

"எங்களுக்கு ஒன்னுமே புரியலை... நீங்க உடனே வாங்க டாக்டர்!"

"இதோ... இ... இப்பவே வர்றேன்!" - எனப் பதட்டமாய் போனைக் கட் பண்ணினான்.



பிரபாகரனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நரேந்திரன் பதறினான்.

"டாக்டர்! என்ன ஆச்சு? ஏன் பதறுறீங்க?"

"நரேன்! அ... அம்மா மயங்கி விழுந்திட்டாங்களாம். வீட்டில இருந்து போன்..."

"டாக்டர்! நீங்க உடனே வீட்டுக்குக் கிளம்புங்க."

"நரேன்! ஆபரேஷனுக்காக பேஷண்ட்டை ரெடி பண்ணியாச்சு. இந்த நேரத்தில எப்படி... நான்..."

"அம்மாவுக்கு என்ன ஆச்சுன்னு முதல்ல பாருங்க, டாக்டர்! இங்கே நாங்க பார்த்துக்கிறோம்..."

"நரேன்! நீ தனியா எப்படிச் சமாளிப்பே?"

"வேற யாராவது ஒரு டாக்டரைக் கூப்பிட்டுக்கிறேன் டாக்டர். நீங்க கிளம்புங்க..."

"வேற... யாரு? நரேன்! மனோகரை வரச் சொல்லட்டுமா?"

"போதும் டாக்டர். அவர் வந்தா ரொம்ப ஹெல்ப் ஃபுல்லா இருக்கும்."

"ஒன் செகண்ட்!" - என்றவன் தனது செல்லில் மனோகரைத் தொடர்பு கொள்ள, உடனே போனை எடுத்தான் மனோகர்.

"சொல்லுங்க பிரபா! என்ன திடீர்னு போன்?"

"மனோ! வெகு அவசரம். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?"

"சொல்லுங்க பிரபா."

"மனோ! இங்க ஒரு பேஷண்ட்டுக்கு அப்பெண்டிக்ஸ் ஆபரேஷன் செய்யணும். கொஞ்சம் வர முடியுமா?"

"எப்போ வரணும்?"

"உடனே கிளம்பி வா. அவசரம்!"

"பிரபா! ஏன் உங்க குரல் ரொம்ப நெர்வஸ்ஸா இருக்கு."

"இப்ப பேச நேரமில்ல மனோ. நீ உடனே புறப்பட்டு வா. இங்கே நரேன் இருக்கார். ரெண்டு பேரும் சேர்ந்து கவனமா செய்யுங்க. செய்திடலாமா?"

"தாராளமா. ஆமா நீங்க ஹாஸ்பிடல் வர மாட்டீங்களா?"

"இல்லை... அர்ஜென்ட்டா வீட்டுக்குப் போறேன். நேர்ல எல்லாம் சொல்றேன். நீ உடனே வர்றியா?"

"இதோ வந்திட்டே இருக்கேன்."

"தேங்க் யூ மனோ! அப்புறம் இன்னொரு விஷயம்."

"சொல்லுங்க."

"நீ என்னோட ஹாஸ்பிடலுக்கு வர்றது சங்கரிக்குத் தெரிய வேண்டாம்."

"தெரியாது."

"தேங்க் யூ மனோ! கமான். க்விக்கா வந்திடு..." - என்றவாறு போனை வைத்து நரேனிடம் பல குறிப்புகளைக் கூறிவிட்டுப் பதட்டமாய்க் காரை எடுத்துக் கொண்டு காற்றாய்ப் பறந்து வீடு வந்து சேர்ந்தபோது பலமாய் அதிர்ந்தான்.



போர்டிகோவில் நான்கு கார்கள் நின்று கொண்டிருக்க, வாசலுக்கு வெளியே ஏராளமான செருப்புகள். வீட்டினுள் பலத்த பேச்சுக் குரல்கள். பிரபாகரனின் இதயம் கலங்கிப் போனது.

அம்மாவிற்கு ஏதேனும் ஆகிவிட்டதா? அதற்குள் இத்தனை பேருக்கு எப்படித் தெரிந்தது? கடவுளே! நேற்று முழுக்க வீட்டிற்கே வராமல் இருந்து விட்டேனே... அம்மாவிற்கு என்ன செய்யுதோ... நான் அருகே இல்லாமல் போய்விட்டேனே...!

தயக்கமாய்ப் பதறும் கரங்களால் காரைத் திறந்து கொண்டு இறங்க, வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த பெரிய மனிதர் பிரபாகரனைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக வரவேற்றார்.

"அடடே! மாப்பிள்ளை வந்தாச்சு. எல்லாரும் வாங்க... வாங்க..." - அவர் போட்ட கூச்சலில் உள்ளே இருந்து மேலும் ஏழெட்டு நபர்கள் வெளியே வர, குழப்பமாய் அவர்களைப் பார்த்தான்.

'மாப்பிள்ளையா? யார் இவர்கள்? எதற்காக நம் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்...' என அசையாமல் நின்றவனை இரண்டு பெரியவர்கள் வந்து கைப்பற்றி அழைத்தனர்.

"என்ன மாப்பிள்ளை திகைச்சுப் போய் நிற்கிறீங்க. முதல்ல உள்ளே வாங்க. ஆஸ்பத்திரியில இருந்து களைச்சுப் போய் வந்திருப்பீங்க. முதல்ல காபி, பலகாரம் சாப்பிடுங்க."

"யாரு நீங்க?" - என்றவாறே தனது கரத்தை இழுத்துக் கொண்டான்.

"எல்லாம் சொல்றேன். வாங்க மாப்பிள்ளை!"

"அம்மாவுக்கு என்னாச்சு?"

"அம்மாவுக்கென்ன ஜம்முன்னு இருக்காக. சும்மாவா? மாமியார் ஆகப் போறாங்கள்ல... அந்தச் சந்தோஷம்!"

"மாமியாரா? எ... என்ன சொல்றீங்க?"

"அட! நல்ல விஷயத்தை வெளியே நின்னா பேசறது? வாங்க மாப்பிள்ளை..." எனப் பலவந்தமாய் அவனை வீட்டிற்குள் அழைத்துச் செல்ல, பிரபாகரனின் முகம் கோபத்தில் சிவந்தது.

"விடுங்கய்யா... நான் எவ்வளவு முக்கியமான வேலையை விட்டுட்டு வந்திருக்கேன். நீங்க என்ன விளையாடுறீங்களா? யாரு எனக்குப் போன் பண்ணினது?"

"நான்தான்!" - என்றவாறு முன்னே வந்து நின்றாள் அவள். கண்களில் குறும்பும் ஆசையும் மின்ன, முகம் முழுக்கப் புன்னகையுமாய் நின்றவளை ஏறிட்டான்.

"யார் நீ?"

"நான் காஞ்சனா."

"எதற்காக எனக்குப் போன் பண்ணினாய்?"

"உங்களை வீட்டிற்கு வரவழைக்க..."

"அதான் ஏன்னு கேட்டேன்?"

"நாங்கள்லாம் உங்களைப் பார்க்க வேண்டாமா? அதுக்குத்தான்!"

"என்னைப் பார்க்கணும்னா என்னோட ஹாஸ்பிடலுக்கு வரணும்."



"என்ன பிரபாகர் இது? நாங்க என்ன நோயாளியா... ஹாஸ்பிடலுக்கு வர! நாங்க வந்தது எங்க வீட்டுக்கு வரப்போற மாப்பிள்ளையைப் பார்க்க..."

"வாட்?" - அதிர்ந்து பின் வாங்கினான்.

"ஆமா. நீங்கதான் மாப்பிள்ளை. நான்தான் பொண்ணு. பிரபாகர் - காஞ்சனா. பேர் பொருத்தம் எப்படியிருக்கு?"

"நான்சென்ஸ்! இந்தப் பேச்செல்லாம் என்கிட்ட வெச்சுக்காதே. பல்லு எகிறிடும்."

"அட! டாக்டர் சாருக்குக் கோபமே வராதுன்னு எல்லாரும் சொன்னாங்க. என்னப்பா இவருக்கு இவ்வளவு கோபம் வருது?" - கேலியாய்க் காஞ்சனா கேட்க, பெரிய தட்டில் அனைவருக்கும் குளிர்பானம் கொண்டு வந்த சந்திரா பெருமையாய்ச் சிரித்தாள்.

"உரிமை உள்ள இடத்திலதாம்மா கோபம் வரும்."

"அம்மா..." - கோபமாய்த் தாயை நெருங்கினான்.

"பிரபா! போய்க் கை, கால் அலம்பிட்டு நல்லதா டிரெஸ் பண்ணிட்டு வா."

"அம்மா! என்ன பண்றீங்க நீங்க?"

"டேய்! எல்லாரும் உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்காங்க. போட்டோவைப் பார்த்தே உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். நம்ம வீட்டையும் உன்னையும் பார்த்திட்டுப் போகலாம்னு வந்திருக்காங்க. பொண்ணைப் பார்த்தியா? எவ்வளவு அழகு! நிறையப் படிச்சிருக்காளாம். அவ அப்பா பெரிய நகைக்கடையே வெச்சிருக்காராம். நீ மட்டும் சரின்னு சொன்னா...?"

"அம்மா! ஏன் இப்படி டார்ச்சர் பண்றீங்க? இந்தக் கருமமெல்லாம் வேண்டாம்னு எத்தனை முறை சொல்றது?"

"மாப்பிள்ளை! ஏன் அம்மாகிட்ட இப்படிக் கோபப் படுறீங்க? அம்மா எது செய்தாலும் அது உங்க நன்மைக் குத்தானே செய்வாங்க."

"ஹலோ! இது எனக்கும் என் அம்மாவுக்கும் நடக்கிற பிரச்சனை. நீங்க யாரும் இதுல தலையிட வேண்டாம். கிளம்புங்க...!"

"பிரபா! வீட்டுக்கு வந்தவங்ககிட்ட இப்படித்தான் மரியாதை இல்லாம பேசுறதா? இதுக்குத்தான் பெரிய படிப்பெல்லாம் படிச்சியா?"

"அம்மா! நான் திரும்பவும் சொல்றேன். எனக்குக் கல்யாணம் பண்ற எண்ணமே இல்லை. எல்லாரையும் போகச் சொல்லுங்க."

"மாப்பிள்ளை! நீங்க நடந்து போனதை மனசில வெச்சிட்டு இப்படிக் கோபப்படலாமா? அந்தப் பொண்ணோட அப்பனுக்கு வரதட்சிணை கொடுக்க வக்கில்லாம போயிருக்கலாம். ஆனா, நான் என் பொண்ணுக்காக எத்தனை கோடி வேணும்னாலும் தர்றேன்."

"இதோ பாருங்க. உங்க கோடியைத் தெருவில கிடக்கிற பிச்சைக்காரங்களுக்குக் கொடுங்க. புண்ணியமாவது கிடைக்கும்."

"பிரபா! என்னடா பேச்சு இது?" - சந்திரா முகம் கடுத்தாள்.

"அம்மா! என்னை இப்படிக் கேவலமா விலை பேசத்தான்... உங்களுக்கு உடம்பு முடியலைன்னு போன்



பண்ணினீங்களா? பெத்த பிள்ளைகிட்டயே நாடகம் ஆடுறீங்களா?"

"மிஸ்டர் பிரபாகர்! ஆன்ட்டிகிட்டே ஏன் கோபப் படுறீங்க? உங்களுக்குப் போன் பண்ணி வரச் சொன்னது நான். எது பேசுறதா இருந்தாலும் என்கிட்ட பேசுங்க!"

"வெட்டித்தனமா யார்கிட்டயும் பேசிட்டிருக்க எனக்கு டயமில்ல!" - வேகமாய்த் திரும்பி வாசலை நோக்கிச் சென்றவனை ஓடி வந்து தடுத்தாள் காஞ்சனா.

"இப்போ எங்கே போறீங்க?"

"ஹாஸ்பிடலுக்குப் போகணும். வழியை விடு."

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"நான் யார்கிட்டயும் பேச விரும்பலை!"

"இப்படியெல்லாம் ஒரே வார்த்தையில சொல்லிடக் கூடாது பிரபாகர். ஏன்னா நாம சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கப் போறோம். அப்புறம் என்கிட்ட பேசாம வேற யார்கிட்ட பேசுவீங்க?"

"ஏய்... நீ...?"

"வெயிட் பிரபாகர்! நான் பேசிடுறேன். அப்பா உங்களைப் பத்திச் சொல்லும் போது எனக்கு ரொம்ப இன்ட்ரெஸ்ட் இல்லை. முப்பத்தைந்து வயசுக்காரனைப் போய்க் கட்டணுமான்னு யோசிச்சேன்.

"உங்க போட்டோ பார்த்ததும் இவரை நேர்ல பார்த்தா என்னன்னு தோணிச்சு. அதான் அப்பாகிட்ட சொல்லி இன்னிக்கே வந்திட்டோம்.

"ஆனா... உங்களை நேர்ல பார்த்த பிறகு நீங்கதான் என் கணவர்ன்னு டிஸைட் பண்ணிட்டேன். உங்க கோபம், உங்க பேச்சு, கம்பீரம், ஹேண்ட்ஸம் எல்லாமே... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. கல்யாணத்தை எப்போ வெச்சிக்கலாம்னு சொல்லிட்டு... நீங்க உங்க டியூட்டியைப் பார்க்கக் கிளம்புங்க!" - என்றவளைப் புருவம் நெரியப் பார்த்தான் பிரபாகரன்.

"என் கல்யாணத்தைப் பத்தி நான்தான் முடிவெடுக்கணும்."

"தாராளமா எடுங்க. ஆனா பொண்ணு நான்தான்!"

"பொண்ணு நீதான். ஆனா மாப்பிள்ளை வேற பார்த்துக்க. நான் உனக்குக் கிடைக்க மாட்டேன்."

"பிரபாகர்!" - அதட்டினாள் காஞ்சனா.

"உனக்கு மட்டுமில்ல... வேற எந்தப் பெண்ணுக்குமே நான் கிடைக்க மாட்டேன்."

"ஏன்? சந்நியாசம் வாங்கப் போறீங்களா?"

"தேவையில்லை. என்னோட சேவையே எனக்குப் போதும். கிட்டத்தட்ட இதுவும் இறைபணிதான்."

"சாமியார் மாதிரி பேசாதீங்க பிரபாகர்! ஏதோ உங்க கெட்ட நேரம் கல்யாணம் நின்னு போச்சு. அதுக்காகக் கல்யாணமே வேண்டாம்னு சொல்லலாமா?"

"ஓஹோ! கல்யாணம் நின்னு போனதை மட்டும்தான் அம்மா சொன்னாங்களா? வேற எதையும் சொல்லலையா?" - நக்கலாய்ப் பிரபாகர் கேட்க, முகம் மாறினாள் காஞ்சனா.



"வேற என்ன?"

"கல்யாணப் பொண்ணு யாருன்னு தெரியுமா? அவளுக்கும் எனக்கும் என்ன பந்தம்னு தெரியுமா?"

"பிரபாகர்... நீங்க என்ன சொல்றீங்க?"

"என் சங்கரி இன்னும் இங்கேதான் குடியிருக்கா. அவளைத் தவிர வேற யாருக்கும் என் இதயத்திலயோ வாழ்க்கையிலயோ இடம் கிடையாது!" - என்றவாறு தன் நெஞ்சைத் தொட்டுக் காட்ட...

காஞ்சனா மட்டுமில்ல... அனைவருமே முகம் மாறினர். பெண்ணின் தந்தை சந்திராவை நெருங்கினார்.

"என்னம்மா இது! உங்க புள்ளை என்னவெல்லாமோ சொல்றாரே!"

"அது... அது வந்து..." - சந்திரா தடுமாற, பிரபாகரன் சிரித்தான்.

"அவங்ககிட்ட கேட்டா அவங்க என்ன சொல்வாங்க? நான் சொல்றேன்... கேளுங்க. கல்யாணத்துக்கு முன்பே சங்கரியை நாலு வருஷமா விரும்பினவன் நான். கல்யாணம் நின்னு எட்டு ஒன்பது வருஷம் ஆகுது. இப்பவும் அவளைத்தான் விரும்புறேன். கடைசி வரை அவளை மட்டும்தான் விரும்புவேன்!" - மகனின் குரலில் தொனித்த உறுதியில் சந்திரா வாயடைத்துப் போனாள்.

"இதோ பாருங்க. உங்க பொண்ணுக்கு என்னை விட இளமையா வசதியா எத்தனையோ மாப்பிள்ளை கிடைக்கலாம். அதில ஒண்ணைத் தேர்ந்தெடுத்துக் கட்டி வையுங்க. இப்பக் கிளம்புங்க!" - பிரபாகரன் உறுதியாய்க் கட்டளையாய்ச் சொல்ல, வந்திருந்தவர்கள் தங்களுக்குள்

ஏதேதோ பேசிக் கொள்ள. காஞ்சனா அசையாமல் நின்றாள்.

"ஸாரி மிஸ்டர் பிரபாகர்! இட்ஸ் டூ லேட்?"

"வாட்?"

"நான் உங்களைப் பார்க்கிறதுக்கு முன்னால இந்த விஷயம் தெரிஞ்சிருந்தா உங்க பக்கமே திரும்பியிருக்க மாட்டேன். ஆனா எப்போ உங்களைப் பார்த்து என் மனசுல உங்களைக் கணவராய் முடிவு பண்ணினேனோ அப்பவே உங்களை யாருக்கும் விட்டுத் தரக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்...

"ஸோ... நீங்க எனக்குத்தான். எனக்கு மட்டும்தான். இதுவரை உங்க மனசில யார் இருந்தாலும் சரி. ஐ டோண்ட் கேர். பட்.. இனிமே நான் மட்டும்தான் இருக்கணும். ஓ.கே.?"

வாய் விட்டுச் சிரித்தான் பிரபாகரன். அவனது சிரிப்பில் கடுப்பேறியவள் பற்களைக் கடித்தாள். "இப்ப ஏன் சிரிக்கிறீங்க?"

"நானாக உன்னைப் பெண் பார்க்க வரவில்லை. உன்னிடம் என்னைப் பிடித்திருக்கிறதா எனக் கேட்கவில்லை. என் வீட்டிற்கும் வரச் சொல்லவில்லை. நீயே வந்தாய்... பேசினாய்... பார்த்தாய்.. இதில் எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை."

"வாட் டூ யூ மீன்?"

"உனது வார்த்தைகள் என்னிடம் எந்தப் பாதிப்பையும் உண்டு பண்ணாது என்கிறேன். நினைத்த நேரமெல்லாம் மனதை மாற்றுபவனல்ல நான்."

"மாற்றித்தான் ஆக வேண்டும்."



"நீ உன் முடிவை மாற்றித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை!"

"பிரபாகர்!" - ஆத்திரமாய்க் குரல் கொடுத்தவளை... சற்றுப் பயமாய்ப் பார்த்தாள் சந்திரா. என்ன இந்தப் பெண்? இத்தனை பேர் முன்னிலையில் இப்படிக் கோபப்படுகிறாளே! இவளைத் தன் மகனுக்குப் பெண் கேட்டது தவறோ? லேசான பயம் எட்டிப் பார்த்தது.

ஆனால் பிரபாகரன் எதற்கும் அசரவில்லை. காஞ்சனாவின் தகப்பன் முன் வந்து நின்றான்.

"இதோ பாருங்க. நீங்க யார் எவர்ன்னு எனக்குத் தெரியாது. உங்க பேர்கூடத் தெரியாது. தெரிஞ்சுக்கவும் விரும்பலை. என் மனசில இருக்கிறதை நான் சொல்லிட்டேன். யதார்த்தத்தைப் புரிஞ்சிட்டு என்னை டிஸ்டர்ப் பண்ணாமப் போயிடுங்க."

"தம்பி! அந்தப் பொண்ணு உங்களை வேணாம்னு சொல்லிட்டதா அம்மா சொன்னாங்களே?"

"ஆமாம். என் மேல கொஞ்சம் கோபத்தில இருக்கா... என் மேல எந்தத் தப்பும் இல்லைன்னு அவளுக்குத் தெரியும்போது நிச்சயமா என்னைத் தேடி வருவா. அதுக்காகத்தான் நான் காத்திருக்கேன்."

"ஒருவேளை வரலைன்னா?"

"நிச்சயமா வருவா. ஏன்னா அவ மனசிலயும் நான் இருக்கேன்."

"பிறகேன் உங்களை விட்டுட்டுப் போனா?" - வெடுக்கெனக் கேட்டாள் காஞ்சனா.

"சந்தர்ப்ப சூழ்நிலையால அவ முன்னால நான் குற்றவாளியா நிக்கிறேன். சீக்கிரமே நான் நிரபராதின்னு புரிஞ்சுக்குவா."

"எப்போ அறுபது வயசிலயா?" - நக்கலாய்க் கேட்டாள்.

"ஏன்? எண்பது வயசுகூட ஆகட்டுமே. அப்போதும் என்னோட நேசம் குறையாது."

"இந்த சினிமா டயலாக் எல்லாம் தேவையில்லை. அவ மனசுல நீங்க இல்லை. அது கன்ஃபார்ம்ட்!"

"நோ. எனக்கு எவ்வளவு வேதனை இருக்கோ... அதே வேதனை என் சங்கரிக்கும் இருக்கு. அதனாலதான் அவளும் தனி மரமாவே நிக்கிறா!"

பளிச்சென மலர்ந்தாள் காஞ்சனா. "அப்போ அவ கல்யாணம் பண்ணிக்கிட்டா நீங்களும் பண்ணிக்குவீங்க."

"நிச்சயமாய்! அவள் சம்மதித்தால் மறுகணமே அவளைத் திருமணம் செய்து கொள்வேன்."

"ம்ப்ச்! நான் அந்த அர்த்தத்தில் கேட்கலை!"

"பின்னே?"

"ஒருவேளை அந்தச் சங்கரி வேறு யாரையும் திருமணம் செய்தால்..."

"நோ... ஒருபோதும் அப்படி நடக்காது."

"நடந்து விட்டால்?" - காஞ்சனாவின் கேள்வியில் முகம் மாறினான்.

"சொல்லுங்க பிரபாகர்! அப்படி எதுவும் நடந்தால் நீங்கள் என்னை மணந்து கொள்வீர்களா?"



"நீ நினைப்பது போல் எதுவும் நடக்காது. அப்படி நடந்தால்... அதற்கு மேலும் நான் காத்திருக்க மாட்டேன்!" - இறுகிய குரலில் அவன் சொல்ல, லேசாய்க் கைதட்டினாள் காஞ்சனா.

"பேச்சு மாற மாட்டீங்களே?"

"மாட்டேன்..." - என்றவன் விறுவிறுவென வெளியேறித் தன் காரில் ஏறிச் சென்று விட... புன்னகையோடு சந்திராவை நெருங்கினாள் காஞ்சனா.

"அத்தை! கவலைப்படாதீங்க. எனக்கு நீங்கதான் மாமியார். நான்தான் உங்க மருமக. எனக்கு அந்தச் சங்கரியைப் பத்தின தகவல் வேண்டும்!" - என இயல்பாய்ப் பேச...

சந்திராவின் பெற்ற வயிறு துடித்தது. தன் மகன் சொன்ன வார்த்தையின் கடைசியை அழுத்தி உச்சரித்தானே! அதற்கு என்ன பொருள்? இருக்க மாட்டேன் என்றால்? உடல் முழுக்கப் பயரேகை ஓடியது.

# 13



வயதும் கூடிக் கொண்டே போகிறது
அதன் அடையாளம் முகத்தில் தெரிகிறது
கல்யாணக் கனவுகள் புகைபோல்
மறைய எதிர்காலம் எங்கே - எனத்
தினமும் தேடிக்கொண்டே இருக்கிறேன்!

இரவு வெகுநேரம் ஆனபின்பே மனோகரின் கார் வீட்டினுள் நுழைய, தன் அறையில் அமர்ந்து மருத்துவப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்த சிவசங்கரி புத்தகத்தை மூடி மேசை மேல் வைத்துவிட்டு வெளியே வந்தாள். தாயின் அறையை எட்டிப் பார்த்தாள்.

கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந்த தாட்சாயிணி ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, ஓசைப் படாமல் அறைக் கதவைச் சாத்திவிட்டு வாசலை நோக்கிச் சென்றாள்.

அதற்குள் வேலைக்காரப் பெண்மணி கதவைத் திறந்துவிட, மனோகர் உள்ளே வந்து ஷூக்களைக் கழற்றிக் கொண்டிருந்தான்.

"கமலாம்மா! டிஃபன் எடுத்து வையுங்க!" - என்றாள் சிவசங்கரி.

"வேணாம் கமலாம்மா. எனக்கு ஒரு கிளாஸ் பால் மட்டும் போதும்."

"ஏன் தம்பி! சூடா ரெண்டு தோசை சுட்டுத் தரட்டுமா?"

"வேண்டாம் கமலாம்மா. பசி இல்லை... பால் மட்டும் போதும்."

"சரிங்க தம்பி!" - என அந்த அம்மாள் சமையல் அறையை நோக்கிச் செல்ல, தம்பியின் முன் கை கட்டியவாறு நின்றாள் சிவசங்கரி.

"ஏன்டா டிஃபன் வேண்டாம்?"

"பசிக்கலை!" - முகத்தைப் பாராமலே சொன்னான்.

"ஏன் பசிக்கலை?"



"அதை வயித்துக்கிட்டத்தான் கேட்கணும்!"

"என்னடா? பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்கு."

"கமலாம்மா! பால் வேண்டாம்."

"ஐயா! இதோ கொண்டாந்துட்டேன். வயசுப்புள்ள வெறும் வயித்தோட படுக்கக் கூடாது!" - என்றவாறே பால் டம்ளரை நீட்டினாள் கமலா.

மௌனமாய் வாங்கிக் குடித்துவிட்டு, காலி டம்ளரைக் கொடுத்துவிட்டு எழுந்து தன் அறையை நோக்கிச் செல்ல, கோபமாய் அவன் பின்னே சென்றாள் சிவசங்கரி.

"நில்லுடா! என்ன எதுவுமே பேசாம போற?"

"என்ன பேசணும்?"

"எங்கே போயிட்டு வர்றே?"

"ஹாஸ்பிடலுக்குத்தான்."

"பொய் பேசாதே!"

"நான் ஏன் பொய் சொல்லணும்?"

"நீ எங்கே போயிட்டு வந்தே? முதல்ல அதைச் சொல்லு..."

"பிரபாகரன் ஹாஸ்பிடலுக்கு..." - துணிச்சலாய்ச் சொன்னவனை அதிர்ச்சியாய்ப் பார்த்தாள்.

"எ... என்ன சொன்னே?"

"பிரபாவோட ஹாஸ்பிடலுக்குப் போய் ஒரு ஆபரேஷன் பண்ணிட்டு வந்தேன்."

"ஏன்? நீ ஏன் அங்கே போற?"

"டாக்டர்ஸ்க்குள்ள இதெல்லாம் சகஜம்தானே!" - என்றவாறே உடைகளை மாற்றினான்.

"அதுக்காக அவன் கூப்பிட்டதும் போயிடுவியா? அவன் செய்தது எல்லாம் மறந்து போச்சா?"

"இதையே இன்னும் எத்தனை வருஷமாக் கேட்பே? அப்படி அவர் என்னதான் பண்ணிட்டாரு?" - மனோகரின் கோபத்தில் இன்னும் அதிர்ந்தாள்.

"ம... மனோ!"

"இதோ பாருக்கா. ஆயிரம் தப்பைப் பண்ணினவன் கூடத் தான் விரும்புற பொண்ணுகிட்ட உத்தமன் வேஷம் தான் போடுவான். ஆனா பிரபா எந்தத் தப்புமே செய்யாம பழி ஏத்துட்டு இருக்கார். பிரபா நல்லவருக்கா!"

"அப்போ நம்ம அப்பா?"

"ஏன்? நம்ம அப்பாவுக்கு என்ன?"

"அப்பா எப்படி இறந்தாங்கன்னு மறந்து போச்சா உனக்கு?"

"அக்கா! அன்னிக்கு என்ன நடந்ததுன்னு உனக்கோ எனக்கோ தெரியாது. அப்பாவுக்குத் திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்தா அதுக்கு பிரபாகர் எப்படிப் பொறுப்பாவார்?"

"டேய்! அப்பாவுக்கு ஒண்ணும் திடீர்னு ஹார்ட் அட்டாக் வரலை. அந்தப் பிரபாவோட அம்மா கேட்ட வரதட்சிணைப் பணத்தால வந்த மரணம் அது!"

"சரி... நீ சொல்றது உண்மைன்னு வெச்சிக்குவோம். வரதட்சிணை கேட்கிறதோ கொடுக்கிறதோ தப்புங்கிறது



ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனா இப்பவும் அந்த வழக்கம் இருக்கத்தானே செய்யுது?"

"என்ன?"

"வரதட்சிணை வேணாம்னு சொல்ற ஆம்பிளைங்களைத் தேடித்தான் பிடிக்கணும்."

"டேய்! அவங்க செய்த தப்பை நீ நியாயப் படுத்துறியா?"

"இல்லைக்கா. நடைமுறையைப் புரிஞ்சுக்கன்றேன். பொண்ணு எடுக்கிற வீட்ல பேரம் பேசுறது வழக்கம் தான். ஆனா நம்மால எது முடியுமோ அதைத்தானே செய்யணும்னு வாக்குக் கொடுக்கணும். அப்பா ஏன் வீம்பா அஞ்சு லட்சம் தர்றதா சொல்லணும்.

"கடைசி நேரம் பணம் கிடைக்காம தலைகுனியணும். என்னால இவ்வளவு தாம்ப்பா செய்ய முடியும்னு கௌரவமா சொல்லியிருக்கலாமே. பேசிட்டு வார்த்தை மாறினா... அது ஏமாத்துற மாதிரிதானே! பையனைப் பெத்தவங்களுக்குக் கோபம் வராதா?"

"மனோ! என்னடா பேசுற நீ?"

"அக்கா! உன்னோட கோபம் நியாயமானதே இல்லை. அப்படியே கோபம் வந்தாலும் உனக்கு நம்ம அப்பா மேலயோ இல்ல... உன் மாமியார் மேலயோதான் வரணும். இடையில இருக்கிற ஒரு பாவமும் அறியாத பிரபாகர் மேல ஏன் கோபப்படுற?"

"அப்போ அவர் தப்பே செய்யலைங்கிறியா? பெத்தவளைப் பேசவிட்டுக் கேட்டுட்டுத்தானே இருந்தார்... ஒரு வார்த்தை தட்டிக் கேட்டாரா?"

"அவர் பேசினதை யார்தான் கேட்டாங்க. நீ கேட்டியா முதல்ல?"

"மனோ!"

"அவர் உன்னை எவ்வளவு விரும்பியிருந்தா... உன் படிப்பு முடியட்டும்னு காத்திருந்து குடும்பத்தோட வந்து பெண் கேட்டார். அன்னிக்குத் திருமண மண்டபத்தில உன்கிட்ட எவ்வளவு கெஞ்சினார். அப்பாவோட உயிர் பிரியறதுக்குள்ளே தாலி கட்டிடுறேன்னு மன்றாடினாரே!

"நீ காது கொடுத்துக் கேட்டியா? அவரைப் பேச விட்டியா? எவ்வளவு அவமானப்படுத்தி வெளியே அனுப்பின? அன்னிக்கு மட்டுமில்ல... இன்னிக்கு வரைக்கும் அவரை நீ அவமானப்படுத்திட்டுத்தான் இருக்கே.

"ஆனா அவரு எப்பவுமே உன்னை விரும்பிட்டுத்தான் இருக்கார். அக்கா! ஒரு பொண்ணுக்கு இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைப்பானா? எத்தனையோ லவ்வர்ஸ் ஒரு சில வார்த்தையிலயே மனக் கசப்பு வந்து பிரிஞ்சு போறதைப் பார்த்திருக்கேன்.

"ஆனா... நீ எத்தனை முறை விரட்டினாலும் உன் பின்னாலேயே நிழலா வர்றாரே... அதுக்கு என்ன அர்த்தம்? உன் மேல அவர் வெச்சிருக்கிற உண்மையான நேசம்தான். அதை ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்கிற?"

பற்களைக் கடித்தவாறு முகம் கன்றிவிட மௌனமாய் நின்றாள் சிவசங்கரி.

"அவருக்கு என்ன வேற பெண்ணே கிடைக்காமலா உன்னைச் சுத்தி வர்றாரு. இன்னிக்குக்கூட பொண்ணு வீட்டுக்காரங்க வந்திட்டுப் போனாங்களாம், தெரியுமா?"



கோபமாய் நிமிர்ந்தாள். "அதைப்பத்தி எனக்கு என்ன கவலை?"

"அதானே! நீ யாரைப் பற்றித்தான் கவலைப் பட்டிருக்கே? அம்மாவைப் பத்தி... என்னைப் பத்தி... உன்னைப் பத்தி... நம்ம குடும்பத்தைப் பத்தி என்னிக்காவது கவலைப்பட்டிருக்கியா? பிறகெப்படி அவரைப் பற்றிக் கவலைப்படுவாய்?"

"மனோ! நீயா இப்படிப் பேசுற? எப்படி... எப்படிடா மாறின? ஒரே நாள்ல உன்னை அவன் பக்கமா மாத்திட்டானா அவன்?"

"முட்டாள்தனமா பேசாதே அக்கா. நான் ஒண்ணும் இன்னிக்கு மட்டும் பிரபாகரைப் பார்க்கலை. எப்பவுமே எங்களுக்குள்ள பேச்சுவார்த்தை இருக்கு. அடிக்கடி மீட் பண்ணிட்டுத்தான் இருக்கோம்."

"ஓ! அப்போ அவன் சொல்லித்தான் நீ வந்து ஆடுறியா?"

"நான் ஒண்ணும் சாவி கொடுத்து ஆடுற பொம்மை இல்லை."

"உன் பேச்சு அப்படித்தான் இருக்கு. என்னையே எடுத்தெறிஞ்சு பேசுற அளவுக்கு, நம்ம அப்பாவோட மரணத்தையே மறக்கிற அளவுக்கு நீ மாறிட்டே... இல்லை, அவன் உன்னை மாத்தியிருக்கான்."

"நிறுத்துக்கா. மாறிட்டேன்... மாறிட்டேன்றியே... நீ மாறலியா? உன் மனச்சாட்சியைக் கொன்னுட்டு இதயத்தைக் கல்லா மாத்திட்டுக் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாம நடந்துக்கிறியே... இதுவா உன்னோட இயல்பு?"

"என்னடா சொல்றே?"

"அந்தப் பொண்ணுகிட்ட என்ன சொன்னே நீ?"

"எந்தப் பொண்ணுகிட்ட?"

"நர்மதாகிட்ட..."

"என்ன சொன்னேன்?" - புரியாமல் விழித்தாள்.

"அநாதை ஆசிரமத்தில் சேர்த்து விடுறேன்னு சொன்னியா?"

"ஆமா, சொன்னேன்."

"எப்படிக்கா உனக்கு மனசு வந்தது? இறுகிப் போய்க் கல்லாவே மாறிப் போச்சா உன்னோட இதயம்?"

"ஏன்டா! யாரோ ஒரு பொண்ணு. உன் கார்ல அடிபட்டதுக்காக வைத்தியம் பண்ணியாச்சு. இனி அவ எதிர்காலத்தை அவதானே முடிவெடுக்கணும்."

"நெஞ்சில ஈரம் இல்லாம பேசாதேக்கா. புருஷனை இழந்து வயித்துல குழந்தையோட... போக்கிடம் இல்லாம இருக்கிற பொண்ணுகிட்ட ஆறுதலா நாலு வார்த்தை பேசாம..."

"மனோ! நாம பேசுற ஆறுதல் அவ வாழ்க்கைக்குப் போதுமா?"

"போதாதுதான். ஆனா அவளோட மனக்காயத்துக்குப் போடுற மருந்தா இருக்குமே. வெளிக்காயத்துக்கு மருந்து போட்டா போதுமா?"

"இப்ப என்ன சொல்ற? காலம் பூரா நம்ம ஹாஸ்பிடல்லயே வெச்சுக்கலாம்கிறியா?"



"அது முடியாதுதான். ஆனா அவளை அனுப்ப ஏன் அத்தனை அவசரப்படுறே. அவளுக்குத் தேவை நிம்மதியான ஓய்வு. நல்ல கவனிப்பு. இதை நம்மால கொடுக்க முடியும். நம்ம கவனிப்புல அவ சீக்கிரம் குணமாகிடுவா. அதுக்கப்புறம் தானே அவளை அனுப்புறதைப் பத்தி யோசிக்கணும்.

"அதை விட்டுட்டு விபத்துல இருந்து காப்பாத்திட்டு... மறு நிமிஷமே இப்படி ஒரு வார்த்தையைச் சொன்னா... அந்தப் பெண்ணோட மனசு எவ்வளவு பாடுபடும்னு ஒரு நிமிஷமாவது யோசிச்சியா?"

"டேய்! அவளை நம்ம ஹாஸ்பிடல்ல வெச்சுக்கிறது சிக்கல்தான்!"

"ஏன்?"

"இவ வீட்ல உள்ளவங்க இவளைக் காணோம்னு போலீஸ்ல கம்ப்ளையிண்ட் ஏதாவது பண்ணியிருந்தா?"

"சும்மா இருக்கா. வயிற்றுப்பிள்ளைக்காரியை வீட்ல வெச்சுக்கத் துப்பில்லாம ஜாதகம்... கிரஹம்னு வெளியே அனுப்பினவங்க போலீஸ்ல சொல்லித் தேடுவாங்களா? ரொம்ப நிம்மதியா இருப்பாங்க."

"அதுக்காக நாம சும்மா இருக்க முடியுமா? ஏதாவது ஹோம்ல சேர்த்து விட்டுட்டா பிரச்சனை வராது."

"நோ. அப்படி யெல்லாம் எங்கேயும் சேர்க்க வேண்டாம்."

"ஏன்?"

"அந்தப் பொண்ணு நீ சொன்னதை வெச்சுப் பயந்து ஜுரத்துல ஏதேதோ புலம்பிட்டு இருக்கு. பார்க்கவே கஷ்டமா இருக்கு."

"அப்போ?"

"அவளுக்கு டெலிவரி ஆகிறவரைக்கும் நம்ம ஹாஸ்பிடல்லயே இருக்கட்டும். தாயும் சேயும் நல்லபடியா உடம்பு தேறினப்புறம் அவ எங்கே போக விரும்புறாளோ அங்கே அனுப்பிடலாம்."

"மனோ! ஏதாவது யோசித்துத்தான் பேசுறியா?"

"நல்லா யோசித்து விட்டேன். உனக்குச் சிரமம்னா சொல்லு. நான் என்னோட பாதுகாப்புல வெச்சிக்கிறேன்."

"பிரச்சனையை விலை கொடுத்து வாங்குற, மனோ!"

"எது வந்தாலும் நான் பார்த்துப்பேன். இப்ப உன் விஷயத்துக்கு வா. உன் எதிர்காலத்தைப் பத்தி என்ன முடிவெடுத்திருக்க?"

"ஏன்? எனக்கென்ன வந்தது?"

"வயசு ஏறுதுக்கா. எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போற?"

"மனோ! என்ன நினைச்சிட்டு இருக்க உன் மனசில?"

"நான் நினைப்பது இருக்கட்டும். நீ சொல்லு. அந்தப் பிரபாகரனை மறந்திட்டியா?" - நேராய்க் கேட்ட தம்பியைக் காண்பதைத் தவிர்த்து மறுபுறமாய்த் திரும்பினாள்.

"பதில் சொல்லுக்கா. உன் மனசுல அவர் இல்லை யில்ல...?"

"எதுவுமே இல்லை. நீ வெட்டித்தனமா பேசுறதை விட்டுட்டு படு..." - என நகர முயன்றவளைத் தடுத்தான்.

"நில்லுக்கா. இத்தனை வருஷமா உன்னை உன் போக்குல விட்டது தப்பாப் போச்சு."



"என்ன?"

"இன்னிக்குச் சில முக்கியமான முடிவுகள் எடுத்தே ஆகணும்."

"என்ன... என்ன முடிவு?" - சிவசங்கரியின் குரல் இடறியது.

"உன்னோட திருமணம் நடந்தாத்தான் சிலருக்குத் திருமணம் நடக்கும் போலிருக்கு."

"மனோ! நான் எத்தனையோ முறை சொல்லி யிருக்கேன். எனக்குக் கல்யாணமே வேண்டாம்னு..."

"உன்னோட முடிவு அடுத்தவங்களையும் பாதிக்குதே!"

"என்ன?"

"நீ இப்படித் தனியா வாழுறதுக்குத் தானும் ஒரு காரணம்ங்கிற குற்ற உணர்வில பிரபாகரனும் உன்னை மாதிரியே தனியா நிக்கிறாரு. அவரைப் பெத்தவங்களும் பாவம் இல்லையா? ஒரே புள்ளை இப்படியே இருந்திடு வானோன்னு வேதனைப்படுறாங்க.

"அதோட பிரபாகரனைத்தான் கட்டுவேன்னு ஒரு பொண்ணு தவம் கிடக்கிறாளாம். இப்படி இத்தனை பேரோட வாழ்க்கை உன்னால பாதிக்கணுமா? நம்ம அம்மாவைப் பாரு. மருந்தால தூங்கிட்டு இருக்காங்க. இது எல்லாமே உன் ஒருத்தியோட முடிவாலே மாறிடும்."

சிவசங்கரியின் மனம் போர்க்களமானது.

'யார் அந்தப் பெண்? பிரபாகரனைத்தான் கட்டுவேன் என்று தவம் செய்பவள்? பிரபாவுக்கும் அவள் மேல்

விருப்பமோ? அதனால்தான் இவனைப் பேசச் சொல்லி அனுப்பினானா?' கண்ணீர் வந்து விடுமோ எனப் பதறிப் பற்களைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இல்லை. அப்படி எதுவும் இருக்காது. எங்கும் எப்போதும் பிரபாவின் கண்கள் என்னை மட்டுமே தேடும். வேறு எந்தப் பெண்ணையும் பார்க்காது. விரும்பாது. பிரபாவைப் பற்றி எனக்குத் தெரியும். கிலோ கணக்கில் வெறுப்பைப் போட்டு மூடி வைத்திருந்த போதும் அடி மனதிலிருந்த நேசம் லேசாய்த் தலை தூக்கியது.

தமக்கையின் முகமும் மௌனமும் எதையோ உணர்த்தத் தனக்குள் சிரித்துக் கொண்டான் மனோகர். அவன் எதிர்பார்த்த மாற்றம் சிவசங்கரியின் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிய, விடாமல் தொடர்ந்தான்.

"அந்தப் பொண்ணும் பாவம்தானே, அக்கா?"

"எ... எந்தப் பொண்ணு?"

"அதான் பிரபாவுக்காகப் பார்த்து வெச்சிருக்கிற பொண்ணு!"

"ஓ! எல்லாம் பேசி முடிச்சாச்சா?" - லேசான ஏமாற்றம் தொனித்தது.

"கிட்டத்தட்ட முடிஞ்ச மாதிரிதான். ஏதோ நகைக்கடைக்காரர் பொண்ணாம். ரிச் ஃபேமிலி போலிருக்கு."

"பிறகென்ன? கட்டிக் கொள்ள வேண்டியதுதானே! பணம் தாராளமாய்க் கிடைக்குமே!" - கடுப்பாய்ச் சொன்னாள்.

"பிரபாவுக்குத் தேவை பணம் இல்லைக்கா. அவர்கிட்ட இல்லாத பணமா? அவருக்குத் தேவை உன் சம்மதம்தான்!"



"என்ன? என் சம்மதமா?"

"ஆமாம். அதற்காகத்தானே இத்தனை வருஷமா வெயிட் பண்றார்."

"இவர் எவளையோ கட்டிக்க நான் சம்மதிக்கணுமா? நான்சென்ஸ்!"

"அந்தப் பொண்ணைக் கட்டிக்க இல்லக்கா. உன்னைக் கட்டிக்கத்தான்!"

"என்ன?" - வியப்பும் கோபமும் துளி சந்தோஷமுமாய்ச் சிவசங்கரி கேட்க, புன்னகைத்தான் மனோகர்.

"அக்கா! அந்தப் பொண்ணுதான் அவரை விரும்புறா. ஆனா பிரபா மனசுல நீதான் இருக்கே!"

"மனோ!"

"அக்கா! பிரபா கலங்கி நின்னு நான் ஒருநாளும் பார்த்ததில்லை. ஆனா இன்னிக்கு என்கிட்ட பேசும் போது அவர் கண்ல ஈரத்தைப் பார்த்தேன்!" - தம்பியின் வார்த்தையில் திகைத்தாள்.

"மனோ! என்ன சொல்றே?"

"நீயும் அவர் மனசைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறியாம். அவர் அம்மாவும் புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்களாம். அவருக்குத் தெரியாமலே கல்யாண ஏற்பாடைப் பண்ணிக் கஷ்டப்படுத்துறாங்களாம்."

"அ... அதுக்கு நான் என்ன பண்றது?"

"அக்கா! நீ உன் கோபத்தை எல்லாம் தள்ளி வெச்சிட்டு அவர்கிட்ட பேசுக்கா. அவர் பக்கம் உள்ள

நியாயத்தைக் காது கொடுத்துக் கேளு. அப்படியும் உனக்கு அவர் மேல கோபம் தீரலைன்னா... நான் சொல்ற மாதிரி செய்."

"என்ன செய்யணும்?"

"நீ உடனே கல்யாணம் பண்ணிக்கணும். அதுதான் எல்லாப் பிரச்சனைக்கும் ஒரே தீர்வு!" - மனோகர் உறுதியாய்ச் சொல்ல, அதிர்ந்து போய் நின்றாள் சிவசங்கரி.

# 14



காயம்பட்ட என் மனதை
வருடிவிடும் நீ தென்றலா
மயிலிறகா பூங்கொத்தா?
இல்லை, தினமும் நான் கைகூப்பி
வணங்கும் கடவுளா?

**மா**டியறையின் ஜன்னல் வழியே வெளிப்புற அழகைப் பார்த்துக் கொண்டு படுக்கையில் அமர்ந்திருந்தாள் நர்மதா. சூரியக் கதிர்கள் பட்டு ஜன்னலில் கண்ணாடிக் கதவுகள் பளீரிட்டன. உயரமாய் வளர்ந்திருந்த நாகலிங்க மரத்தில் ஏராளமாகப் பூக்கள் பூத்திருந்து கண்ணைப் பறித்தன.

அதன் அருகே நின்ற பவளமல்லிகை மரத்தில் பூத்திருந்த மலர்கள் இதமாய் வீசிய காற்றில் உதிர்ந்து கொண்டிருந்தன. அணில்களும் குருவிகளும் ஓடியாடி,



விளையாடித் தன் பங்கிற்குச் சில மலர்களை உதிர்த்துப் பூமிக்குப் பரிசளிக்க, அவர்களின் விளையாட்டை ரசனையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தபோது உள்ளே நுழைந்தாள் திவ்யா.

"குட் மார்னிங் மேடம்!"

"குட் மார்னிங் சிஸ்டர்!"

"நைட் நல்லாத் தூங்குனீங்களா?"

"ம்... விடிஞ்ச பிறகுதான் விழிச்சேன்."

"குட். தலையில வலி எப்படி இருக்கு?"

"பரவாயில்லை சிஸ்டர்!"

"ஓ.கே. கட்டு மாத்திடலாமா?" - என்றவாறே தலையில் கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்த்தாள் திவ்யா.

"சிஸ்டர்! பஞ்சை எடுக்கும் போது பார்த்து எடுங்க. வலிக்கும்..."

"மெதுவா எடுக்கிறேன். வலிக்காது!" - என்றவாறே கட்டைப் பிரித்துக் கட்டிலின் அடியில் இருந்த பிளாஸ்டிக் கூடையில் போட்டுவிட்டு, கையோடு கொண்டு வந்த ட்ரேயில் இருந்த பஞ்சால் காயத்தை ஒற்றியெடுத்தாள்.

"ஷ்ஷ்...ஸ்..." - வலியில் முனகினாள் நர்மதா.

"அவ்வளவுதான். டாக்டர் வந்து பார்த்த பிறகு மருந்து வெச்சுக் கட்டிடலாம். இப்போ டவல் பாத் எடுத்திடலாமா?"

"சிஸ்டர்! நான் குளிச்சிடுறேனே?"

"நோ... நோ... காயம் ஆறும் வரை குளிக்கக் கூடாது."

"குளிக்காம இருந்தா எப்படியோ இருக்கு சிஸ்டர்!"

"ஒரு நாலு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க. பிறகு குளிக்கலாம்."

"ம்..." - அரை மனதோடு நர்மதா தலையாட்ட, மிருதுவான துணியைக் கொதிநீரில் நனைத்துப் பிழிந்து அவளது உடம்பைத் துடைத்தாள் திவ்யா.

"கையில காயம் ஆற ஆரம்பிச்சிடுச்சு. எதிலயும் இடிச்சுக்காம பார்த்துக்கணும்."

"சரி சிஸ்டர்!"

உடம்பைத் துடைத்து, லேசாய் பவுடர் போட்டுவிட்டுக் கவரில் இருந்த நைட்டியை எடுத்தாள் திவ்யா.

"சிஸ்டர்! இன்னிக்கும் நைட்டியா? புடவை கட்டிக்கிறேனே!"

"கையில உள்ள காயம் ஆறட்டும். ப்ளவுஸ் போட முடியாதில்ல... நைட்டிதான் ஈஸியா போட முடியும். லேசா கையைத் தூக்கிக்குங்க..." - தலை வழியாக நுழைத்து ஆடையை மாற்றிவிட்டுப் புன்னகைத்தாள் திவ்யா.

"உங்களுக்கு கரெக்ட்டா இருக்கா மேடம்?"

"ம். ரொம்ப மிருதுவாவும் இருக்கு. தேங்க் யூ சிஸ்டர்!"

"எனக்கு ஏன் நன்றி சொல்றீங்க?"

"நீங்கதானே ட்ரெஸ் எல்லாம் வாங்கிட்டு வந்தீங்க?"

"வாங்கினது மட்டும்தான் நான். வாங்கச் சொன்னது-பணம் தந்தது எல்லாமே டாக்டர் ஸார்தான்!"

"என்ன? யாரு மனோகர் சாரா?"



"ம். அன்னிக்கு பிட்ஸ் வந்ததே. அப்பத்தான் சொன்னாங்க."

"ஓ!" - ஒற்றை வார்த்தையோடு நிறுத்தி விட்டவளின் கூந்தலைக் கைகளால் கோதிப் பின்னலிட்டவாறே கேட்டாள் திவ்யா.

"மேடம்! டாக்டர் ஸார் உங்களுக்கு உறவா?"

நர்மதா தடுமாறினாள். "இ... இல்லையே! அப்படியெல்லாம் இல்லை."

"நிஜமாவா சொல்றீங்க?"

"ஆமா! ஏன் கேட்கிறீங்க?"

"இல்லை மேடம்! அன்னிக்கு சிவசங்கரி மேம் என்னைத்தான் உங்க ரூமுக்கு வரச் சொன்னாங்க. நான் வர்றதுக்குள்ளே உங்களுக்கு பிட்ஸ் வந்திடுச்சு. நல்ல வேளையா டாக்டர் ஸார் வந்து பார்த்திட்டாங்க.

"எங்க எல்லாருக்கும் செம டோஸ் விட்டார். அவங்க அக்காவைக்கூட விடல்ல... அவ்வளவு கோபம் அவருக்கு இதுவரைக்கும் வந்ததே இல்லை. நாங்கள்லாம் பயந்து போயிட்டோம்."

"ரொம்பத் திட்டினாரா?"

"ம்... நாங்க சரியா கவனிக்காததாலதான் இப்படி ஆகிப் போச்சுன்னு ஒரே திட்டு. அதுக்குப் பிறகும் கூட உங்களை விட்டு நகரவே இல்லை. கூடவே இருந்து கவனிச்சிட்டார்."

நர்மதா குழம்பிப் போனாள். அன்று நடந்தவை லேசாய் நினைவு வர, யாரோ தன் கேசத்தை

வருடினார்களே... என்னைத் தட்டிக் கொடுத்துத் தூங்க வைத்தது போல்... அப்பாவிடம் கூடப் பேசினேனே.... அதெல்லாம் கனவென்றுதானே நினைத்தேன்.

அது கனவில்லையா? நிஜமா? ஐயோ! எதையெல்லாம் உளறி வைத்தேனோ, தெரியவில்லையே! என்னுடன் பேசியது இவரா? என்னைப் பரிவாய் ஆறுதலாய் வருடியது இன்னொரு ஆடவனின் கரங்களா? தன்னையும் மீறி உடல் ஒரு முறை அதிர்ந்தது.

"என்னாச்சு மேடம்?"

"இல்லை... ஒண்ணுமில்லை!"

"சரி. ஹார்லிக்ஸ் கலந்து தர்றேன். குடிச்சிட்டு இருங்க. இப்போ டாக்டர் வருவாங்க."

"யா... யாரு?"

"இன்னிக்கு அம்பிகா மேம் வருவாங்க!" - என்றதும் லேசான நிம்மதியோடு மூச்சுவிட்ட நேரம் வாசலில் நிழலாடியது.

"ஹலோ... குட் மார்னிங்!" - பளிச்சென்ற புன்னகையோடு வந்து நின்றவன் மனோகர். கையில் பெரிது பெரிதாய் பாலிதீன் கவர்கள்.

"குட் மார்னிங் டாக்டர்!" - என்றாள் திவ்யா.

"மார்னிங் சிஸ்டர்! நர்மதாவுக்குச் சாப்பிட என்ன கொடுத்தீங்க?"

"ஹார்லிக்ஸ் கலந்துட்டு இருக்கேன் டாக்டர்!" - என்றவளிடம் தன் கையிலிருந்த கவர்களைக் கொடுத்தான்.



"சிஸ்டர்! இதுல ஹார்லிக்ஸ், ஆப்பிள், சாத்துக்குடி எல்லாமே இருக்கு. ஒன் அவர்க்கு ஒருதரம் நர்மதாவுக்குக் கொடுங்க. பிளாஸ்க் வாங்கிட்டு வந்திருக்கேன். குமாரை அனுப்பி கேன்டீன்ல இருந்து சூடா பால் வாங்கி வெச்சுக்கங்க."

"சரி டாக்டர்!" - என அவள் வாங்கிக் கொள்ள, புன்னகையோடு நர்மதாவை நெருங்கினான்.

"என்ன நர்மதா! எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன் டாக்டர்!"

"வலி குறைஞ்சிருக்கா?" - என்றவாறு அவளது இடக்கையின் மணிக்கட்டைப் பற்றி, நாடித் துடிப்பைச் சரி பார்க்க, நர்மதாவின் உடல் உதறிக் கொண்டது.

இதமாய் வீசிய நறுமணத்தோடு அவன் தன்னை நெருங்கி நின்றதும் மென்மையாய்க் கரத்தைப் பற்றியதும், உள்ளப் படபடப்பு அதிகரித்தது. யோசனையாய் அவளை நிமிர்ந்து பார்த்தவன், மேஜை மேலிருந்த கருவியை எடுத்து அவளது கையில் மாட்டி இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தான்.

"நர்மதா! ஏன் டென்ஷனா இருக்கீங்க. பி.பி. ஏறுது பாருங்க. கர்ப்பமா இருக்கும் போது டென்ஷனாகக் கூடாது. பி.பி. ஏறினா குழந்தையைப் பாதிக்கும்."

"சரி... சரி... டாக்டர்!"

"ம். பேபியோட அசைவுகள் தெரியுதா?"

"ம்..." - தலையாட்டினாள்.

"ஓ.கே! சிஸ்டர் தர்றதை கரெக்டா சாப்பிடணும். நீங்களும் உங்க குழந்தையும் ரொம்ப வீக்கா இருக்கீங்க. மருந்தெல்லாம் சரியா சாப்பிடுறீங்களா?"

"சாப்பிடுறேன் டாக்டர்!"

"வெரிகுட்!" என்றவாறு தலைக் காயத்தைப் பரிசோதித்தான். நர்ஸிடம் திரும்பினான்.

"சிஸ்டர்! மருந்தை எடுத்திட்டு வாங்க. கட்டுப் போட்டுடலாம்."

"யெஸ் டாக்டர்!" - என்றவாறு அவள் மருந்து ட்ரேயோடு வர, காயத்தைச் சுத்தம் செய்து அவன் கட்டுப் போட்டு முடிப்பதற்குள் திணறிவிட்டாள் நர்மதா.

அவனது தொடுதலும் பரிவும் அன்மையும் மென்மையும் நர்மதாவைத் திணறடித்தது. மருத்துவன் என்ற முறையில் அவன் செய்யும் பணி இது. ஆனால் தன் மனம் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறது? அன்று ஜான்ஸியும் அம்பிகாவும் பேசிய வார்த்தைகள்.

இன்று திவ்யா சொன்ன நிகழ்வுகள். இவை அனைத்தோடு சேர்ந்து மனோகரின் அன்பும் பரிவும் மனக்குளத்தைக் கலங்கடித்துக் கொண்டிருந்தது. இவனிடம் கேட்டுவிடலாமா? என்னிடம் ஏன் இத்தனை பரிவு எனக் கேட்டால் என்ன சொல்வான்?

ஒருவேளை இவனது இயல்பே இதுதானோ? அன்றுகூடத் தன் அக்காவிடம் எகிறினானே. ஒவ்வொரு நோயாளியும் நமக்குக் குழந்தைகள் என்று. அந்த எண்ணத்தில்கூடத் தன்னிடம் பரிவாய் நடந்து கொள்ளலாம்.



அதைப் பார்த்து மற்றவர்கள் தவறாகப் பேசலாம். நானும் அப்படி நினைக்கலாமா? அது எத்தனை பெரிய பிழை! தன் உயிரைக் காப்பாற்றி இதோ இதுவரை கண்ணை இமை காப்பது போல் காப்பவனைச் சந்தேகப் படலாமா?

இவன் என் தாய், தந்தை. நான் வணங்கும் தெய்வம். இவனைப் பொறுத்தவரை நான் ஒரு சாதாரண நோயாளி. அவன் பாஷையில் சொல்வதென்றால் நான் ஒரு குழந்தை. ஆம்! குழந்தையைப் போல்தான் கவனித்துக் கொள்கிறான்.

ஒரு தாயின் பரிவை இவன் பார்வையில் பார்க்கிறேன். இதற்குத் தவறான சாயம் பூசிவிடக் கூடாது. இவன் மனித உருவில் வாழும் தெய்வம். தெய்வத்தைக் களங்கம் கற்பிக்கக் கூடாது.

தன் காயத்தைச் சுற்றிக் கட்டுப் போட்டவனை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நர்மதா. அவளது பார்வை அவனுக்கு எதை உணர்த்தியதோ? தன் வேலையை நிறுத்தி அவளைப் பார்த்தான்.

"என்னம்மா?"

அவசரமாய்த் தலையசைத்தாள். "ஒண்ணுமில்ல...!"

"பசிக்குதா? திவ்யா! என் ரூம் டேபிள்ல ஒரு பேக் இருக்கும். எடுத்திட்டு வாங்களேன், ப்ளீஸ்!"

"இதோ டாக்டர்!" - அவள் நகர்ந்ததும் தன் வேலையைத் தொடர்ந்தான்.

இறுக முடிச்சிட்டுக் கத்தரியால் மீதமிருந்த துணியைக் கட் பண்ணினான்.

கையிலிருந்த காயத்திற்குப் பஞ்சில் மருந்தை ஊற்றி ஒற்றி யெடுத்தான். இப்போது அவனது தொடுதல் தக்கவில்லை.

"நர்மதா! உங்களுக்குச் சப்பாத்தி பிடிக்குமா?"

"ம்... ம்... பிடிக்கும்."

"எங்க அம்மா பண்ணினது. உங்களுக்கு வீட்ல இருந்தே டிஃபன் எடுத்திட்டு வந்திட்டேன். திவ்யா வந்தும் சாப்பிட்டு டேப்லெட் போடுங்க. சரியா?"

"சரி!"

"வேற என்ன வேணும்னாலும் தயங்காம என்கிட்ட கேட்கணும். என்ன...?"

"ம்..." - கண்ணோரம் கசியத் தலையாட்டினாள்.

"உங்களால முடிஞ்சா லைட்டா ரூமுக்குள்ளேயே நடங்க. மெதுவா நடக்கணும்."

"சரிங்க... டாக்டர்!"

"மதியச் சாப்பாடு அனுப்பி வைக்கிறேன். ஈவினிங் வந்து பார்க்கிறேன்..."

"டாக்டர்!"

"ம்?"

"வந்து... என்னை... இதுக்கு முன்னாலேயே உங்களுக்குத் தெரியுமா?" - தயக்கமாய்க் கேட்டே விட்டாள்.

அழகாய்ப் புன்னகைத்தான் மனோகர்.

"தெரியாதே! ஏன் கேட்கிறீங்க?"



"இல்லை. சும்மாதான். வந்து... என்னை... இவ்வளவு அக்கறையா அன்பா கவனிச்சுக்கிறீங்களே!"

"இது என்னோட கடமை நர்மதா."

"கடமைப்பட்டவங்க யாரும் என்னை இப்படிக் கவனிச்சுக்கலியே டாக்டர்?"

"நர்மதா! நான் சொல்லியிருக்கேனில்ல... கசப்பான சம்பவங்களை மறந்திடணும். நல்ல விஷயங்களை மட்டும் நினையுங்க."

"டாக்டர்! இந்த உதவியை வாழ்நாள் முழுக்க நானும் என் குழந்தையும் மறக்க மாட்டோம்!" - கண்ணீரோடு கை கூப்பினாள்.

மறுப்பாய்த் தலையசைத்தான். "கண்கலங்கக் கூடாது. அமைதியா ரெஸ்ட் எடுங்க. வேற எதைப் பத்தியும் நினைக்கக் கூடாது."

"ச... சரிங்க டாக்டர்!"

"நர்மதா! உங்க அப்பா பேர் என்ன?"

"ஏன் டாக்டர்?"

"சும்மாதான் கேட்டேன்."

"அப்பா பேரு ராமானுஜம்."

"ஓ! உங்க அண்ணனோட மனைவிக்கு எந்த ஊர்?"

"அது கேரளா பக்கம். திருச்சூர்."

"ஓஹோ! சரி. திவ்யா வந்தாச்சு. நீங்க சாப்பிடுங்க. நான் ஈவினிங் வர்றேன். சிஸ்டர்! பார்த்துக்குங்க..." -

என்றவாறு அவன் வெளியேறிய பிறகும் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள் நர்மதா.

தன் தந்தையின் பெயரை எதற்குக் கேட்டான்? ஒன்றும் சொல்லாமலேயே போய்விட்டானே! குழப் மானாள்.

"சிஸ்டர்!"

"சொல்லுங்க மேடம்."

"டாக்டரம்மா ஹாஸ்பிடலுக்கு வரலியா?"

"வர்றாங்களே... ஏன்?"

"என்னை வந்து பார்க்கவே இல்லையே?"

"அப்படியெல்லாம் இல்லை. நேற்றுக்கூட வந்தாங்க நீங்க தூங்கிட்டு இருந்தீங்க."

"சிஸ்டர்! இந்த டாக்டரம்மாவுக்குக் கல்யாண ஆயிடுச்சா?"

"இன்னும் இல்லை."

"ஏன்னு தெரியுமா?"

"கல்யாணம் பண்ணினா மருத்துவ சேவை இரவும் பகலுமா பார்க்க முடியாதாம்."

"அப்போ மனோகர் சாருக்கு?"

"அக்கா கல்யாணம் பண்ணிக்காம தானு பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதமா இருக்கார். பாவ இவங்க ரெண்டுபேரையும் நினைச்சு அவங்க அம்மாதா துரும்பா இளைச்சிட்டாங்க."

"அவங்க அம்மா இங்கே வருவாங்களா?"



"ம்ஹூம். கோவிலுக்குப் போவாங்க. அப்போ பார்த்திருக்கேன்."

"டாக்டரோட அப்பா?"

"அவங்க எப்பவோ இறந்திட்டாங்களாம். நான் பார்த்ததில்ல! சரி மேடம். சாப்பிடுங்க... மாத்திரை போடணுமே!" – என்றவாறு தட்டில் சப்பாத்தியை வைத்துக் குருமாவை உற்றி நீட்டினாள்.

மௌனமாய் வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தாள் நர்மதா. சப்பாத்தி மனோகரின் மனதைப் போலவே வெகு மென்மையாய் இருக்க, நர்மதாவின் முகம் தன்னையும் மீறிப் புன்னகைத்தது. வெகுநாட்களாய் மனதை ரணப் படுத்திக் கொண்டிருந்த காயம் லேசாய் ஆறத் துவங்கியது.

# 15



சென்றது கண் உறக்கம்
நெஞ்சில் நின்றது உன் மயக்கம்
இங்கு ஓய்வதேது தேய்வதேது
உந்தன் ஞாபகம்!

**ப**ம்மிய வயிறோடு தன் முன் அமர்ந்திருந்த பெண்ணிடம் பரிசோதனைகளை முடித்துவிட்டு நிமிர்ந்தாள் சிவசங்கரி. முகத்தில் மென்மையான புன்னகை.

"உஷா! ஒன்னும் பயமில்ல. எல்லாம் நார்மலா இருக்கு. இன்னும் ஒன் வீக்ல டெலிவரி ஆயிடும்."

தாய்மையின் பூரிப்போடு மிளிர்ந்த அந்த இளம் பெண் பூவாய் மலர்ந்தாள்.

"தேங்க் யூ டாக்டர்!"

"இனிமே கனமான பொருள்களை எல்லாம் தூக்கக் கூடாது. ட்ராவல் பண்ண வேண்டாம். எந்த நேரம் வலி வந்தாலும் உடனே ஹாஸ்பிடல் வந்துடுங்க. சரியா?"

"சரிங்க டாக்டர்!"

"சரி. போயிட்டு வாங்க."

"வர்றேன் டாக்டர்!" - என அவள் புன்னகையோடு விடைபெற, சிவசங்கரி மேஜை மீதிருந்த பெல்லை அழுத்தினாள். ஒரு நிமிட இடைவெளிக்குப் பின் மீண்டும் அழுத்த, அந்த அழகான பெண் உள்ளே நுழைந்தாள்.

"மே ஐ கமின் டாக்டர்?"

"யெஸ். கமின்!" - என நிமிர்ந்தவள் லேசாய் வியந்தாள். இவளைப் பார்த்தால் ஹாஸ்பிடலுக்கு வந்ததைப் போல் தோன்றவில்லையே! யோசனையாய் வந்தவளை அளந்தாள் சிவசங்கரி.

ஒல்லியாய் உயரமாய்த் தந்த நிறத்தில் முகம் ஜொலித்தது. முதுகு வரை அடர்த்தியாய்ப் படர்ந்த கூந்தல் சுதந்திரமாய்ப் பறந்து கொண்டிருந்தது. கை இல்லாத ரவிக்கையும் கற்கள் பதித்த ஷிபான் புடவையும், அதை அவள் கட்டியிருந்த விதமும் அபாரமாய் இருந்தது.

கறுப்பு நிறப் புடவையும் ரவிக்கையும் அவளது தந்த நிறத்தை இன்னும் எடுப்பாய்க் காட்ட, லேசாய்ப் பொறாமை எழுந்தது. புடவையில் பதிந்திருந்த கற்கள் இரவு நேர



வானத்தைப் போல் பளிச் பளிச்சென நட்சத்திரங்களாய் மின்னின.

கை கால் கழுத்து விரல்கள் என எங்கும் தங்கம் ஜொலித்தது. இவை எல்லாவற்றையும் விட அந்த முகம்... வெகு நேர்த்தியாய் அழகு செய்யப்பட்ட முகம். அதில் தெரிந்த உற்சாகம்... துடிப்பு... இவை அனைத்தையும் பார்க்கும் தன் பார்வையை மீட்க முடியாமல் தடுமாறிப் போனாள் சிவசங்கரி.

பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் நானும் இப்படித்தான் இருந்தேன். ஆனால் இப்போது... இப்போது எப்படி இருக்கிறேன்? கண்ணாடி முன் நின்று தன்னை ரசித்து வருடக் கணக்காகி விட்டதே!

"என்ன மேடம்? ப்ரீஸாகிட்டீங்க? உட்காரச் சொல்ல மாட்டீங்களா?" - கொஞ்சலாய்க் கேட்டவாறே, எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள் அவள்.

சட்டென மீண்டவள், "சொல்லுங்க! என்ன ப்ராப்ளம்?" - என்றாள். வந்தவள் அழகாய்ச் சிரித்தாள்.

"நீங்கதான் ப்ராப்ளம்?"

"என்ன?" - திகைப்பாய்க் கேட்டாள் சிவசங்கரி.

"நீங்கதானே மிஸ் சிவசங்கரி?"

"ஆமா."

"அப்போ நீங்கதான் என்னோட ஒரே ப்ராப்ளம்!"

"ஹலோ! யார் நீ?"

"ஐ யம் காஞ்சனா! மயிலாப்பூர்ல என்னோட பேர்ல ரெண்டு ஜுவல்லரி இருக்கு!" - சற்றே பெருமையாய் அவள் சொல்ல, சிவசங்கரிக்குள் ஏதோ அடைத்தாற் போலிருந்தது.

'மனோகர் சொன்ன பெண் இவள்தானோ? இவள் ஏன் என்னைத் தேடி வர வேண்டும்?' - குழப்பமாய்ப் பார்க்கும் போதே கேலியாய்ச் சிரித்தாள் காஞ்சனா.

"இப்போ... நான் யாருன்னு தெரியுதா?"

"ஸாரி! நான் மயிலாப்பூர் பக்கம் போனதே இல்லை."

"வாட்?"

"இப்போ எதுக்காக இங்கே வந்திருக்கன்னு சொல்லு. உடம்புக்கு என்ன?" - கடுப்பை மறைத்தபடியே கேட்டாள்.

"என் உடம்புக்கென்ன? ஐ யம் பெர்ஃபெக்ட்லி ஆல்ரைட். அப்படியே ஏதும் நோய் வந்தாலும் இந்த மாதிரி ஜுஜுபி ஹாஸ்பிடலுக்கெல்லாம் வர மாட்டேன்!" - காஞ்சனாவின் ஏளனமான பேச்சில் உஷ்ணமாய் நிமிர்ந்தாள் சிவசங்கரி.

"அப்ப கிளம்பு!"

"என்ன மேடம்! இப்படிப் பட்டுன்னு சொல்லிட்டீங்க. உடனே கிளம்பிப் போறதுக்கா என் வேலையெல்லாம் விட்டுட்டுக் காரை எடுத்திட்டு வந்திருக்கேன்."

"இந்த மாதிரி சின்ன ஹாஸ்பிடலுக்கு ஏம்மா இவ்ளோ மெனக்கெட்டு வந்தாய்? அப்படி என்ன அவசியம் உனக்கு?"

"இருக்கே... அவசியம் இல்லாமல் வருவேனா?"

"என்ன அவசியம்னு சொல்லு."



"மேடம்! நான் எப்படி இருக்கேன்?"

"என்ன?"

"இல்லை. நான் உள்ளே வந்ததும் அப்படியே பிரமிச்சுப் போய்ப் பார்த்தீங்களே! அதான் கேட்கிறேன். நான் எப்படி இருக்கிறேன்?"

"இதைக் கேட்கவா காரை எடுத்துக் கொண்டு வந்தாய்? நான் அழகிப் போட்டிகளுக்கு நடுவராய் இருந்ததில்லை. நான் ஒரு சாதாரண டாக்டர்!"

"ம். நல்லாப் பேசுறீங்க! ஆனா நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலையே... அப்போ அதுக்கு என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம்?"

"உங்களைவிட நான் ரொம்ப அழகுதானே?"

"ஹேய்! என்ன? வம்பு பேச வந்தாயா? வேறு எவளாவது வேலை வெட்டி இல்லாதவ கிடைச்சா போய் வம்பளந்து கொண்டிரு. அவுட்!" - சிவசங்கரியின் கோபத்தை வெகுவாய் ரசித்துச் சிரித்தாள்.

"அடேயப்பா! டாக்டரம்மாவுக்கு எவ்ளோ கோபம் வருது? பாவம்தான்!"

"என்ன? யார் பாவம்?"

"உங்ககிட்ட வர்ற பேஷண்ட்ஸைச் சொன்னேன்..."

"அதைப்பத்தி நீ கவலைப்பட வேண்டாம். கிளம்பு. எனக்கு வேலை இருக்கு!" - என்றவாறு பெல்லை அழுத்த, நர்ஸ் எட்டிப் பார்த்தாள்.

சிவசங்கரி வாயைத் திறக்குமுன், காஞ்சனா முந்திக் கொண்டாள். "சிஸ்டர்! நாங்க கொஞ்சம் பர்ஸனலா பேசிட்டு இருக்கோம். இனிமே வர்ற பேஷண்ட்டை அம்பிகாகிட்ட கூட்டிட்டுப் போங்க. ஓ.கே. யு கேன் கோ!" - உத்தரவாய்க் காஞ்சனா சொல்ல, தலையசைத்தாள் நர்ஸ்.

"யெஸ் மேடம்!"

"ஏய்! லலிதா... நான்..." - எனச் சிவசங்கரி குரல் கொடுக்க, இடையில் தடுத்தாள் காஞ்சனா.

"விடுங்க மேடம்! அதான் நான் சொல்லிட்டேனே... பிறகென்ன? நீ போம்மா."

"ம்..." - என்றவாறு அவள் கதவைச் சாத்திவிட்டுச் செல்ல, முகம் முழுக்கக் கோபமாய்க் காஞ்சனாவை ஏறிட்டாள் சிவசங்கரி.

"உன் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கே?"

"பிரபாகரனைத்தான்!" - சற்றும் தயங்காமல் அவள் சொல்ல, மூச்சுவிட மறந்தாள் சிவசங்கரி.

"எ... என்ன சொன்னே?"

"தமிழ்லதானே சொன்னேன். உங்களுக்குக்கூட அவரைத் தெரிஞ்சிருக்கலாம். தி ஃபேமஸ் ஹார்ட் சர்ஜன் டாக்டர் பிரபாகரன் இருக்காரில்ல... அவரைத்தான் என் மனசில நினைச்சிட்டு இருக்கேன்."

இதயத்தில் ஏதோ ஒரு நரம்பு அறுபட்டதைப் போல் உணர்ந்தாள் சிவசங்கரி. அதன் வலியை முகத்தில் காட்டாமல் நிமிர்வாய் அமர்ந்து, "இதை ஏன் என்னிடம் சொல்கிறாய்?" - எனக் கேட்டதில் காஞ்சனாவின் புன்னகை அதிகரித்தது.



"உங்ககிட்ட சொல்லாம வேற யார்கிட்ட சொல்றதாம்?"

"வாட்?"

"மேடம்! என்ன இருந்தாலும் நீங்க அவருடைய க...."

"ஸ்டாப் இட்."

"முழுசாக் கேளுங்க மேடம். நீங்க அவருடைய கடந்த காலத்தில் அவருக்கு மனைவியா பேசப்பட்டவங்க. மணவறை வரைக்கும் வந்தவங்க..."

"அதுக்கு இப்போ என்ன?"

"சாதாரணமா திருமணப் பேச்சு முடிவானதும் இந்தப் பொண்ணுதான் என் மனைவின்னு ஆணும்... இவர்தான் தன் கணவர்ன்னு பெண்ணும் நினைக்கிறது இயல்புதானே!"

"ஓ! ஷிட். இப்போ என்ன சொல்ல வர்ற?" - பொறுமையின்றிக் கத்தினாள்.

"ஒருவேளை அந்த மாதிரி உங்க மனசில ஏதாவது எண்ணம்?"

"என் மனசில எந்தக் குப்பையும் கிடையாது."

"உங்க மனசில எவ்வளவு குப்பை இருக்குன்னு கேட்கலை. என்னோட பிரபாகர் இருக்காரான்னு கேட்டேன்..." - கொஞ்சும் குரலில் பேசிக் கொண்டிருந்தவளின் தொனி மாறியது. சற்றே மிரட்டலாய் ஒலித்தது.

'என்னோட பிரபாகர்!' என்ற வார்த்தையில் சற்றுக் கூடுதலாகவே அழுத்தம் கொடுத்துக் கேட்டாள். சிவசங்கரியின் குரலும் உயர்ந்தது. காஞ்சனாவைக் கடுப்பேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு மிக அலட்சியமாய்ச் சொன்னாள்.

"நான் குப்பைன்னு சொன்னது உன்னோட பிரபாகரையும் சேர்த்துத்தான்."

கோபமாய்ச் சீறி எழுந்தாள் காஞ்சனா. "என்ன சொன்னீங்க? அவர் உங்களுக்குக் குப்பையா?"

"வேண்டாத பொருளை எல்லாம் அப்படித்தானே சொல்வாங்க?"

"அப்போ என்னோட பிரபாகர் உங்களுக்கு வேண்டாத பொருளா?"

"ஆமா... ஆமா...!"

"அப்போ என்கிட்ட கொடுத்திடுங்க."

"எ... என்ன?" - லேசாய்த் திடுக்கிட்டாள்.

"ஆமா. நான் அவரை விரும்புறேன். அவரைத்தான் கட்டிக்கப் போறேன்."

"அது உன் விருப்பம். என்னிடம் ஏன் சொல்கிறாய்?"

"எங்க கல்யாணத்துக்குத் தடையாய் இருப்பதே நீங்கதானே?" - காஞ்சனாவின் குற்றச்சாட்டில் பலமாய் அதிர்ந்தாள்.

"எ... என்ன? நானா?"

"ஆமா! உங்களைக் குப்பையாய் அவர் ஒதுக்க வில்லை. ஏதோ அபூர்வமாய்க் கிடைத்த பொக்கிஷம் போல் உங்களையும் உங்கள் நினைவுகளையும் பத்திரமாய்ப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்."

கொதிக்கும் வெயிலில் சுடுமணலில் நடந்து கொண் டிருந்தபோது குளிர்ந்த நீரோடை தன்னைத் தேடி வந்து



நனைத்ததைப் போல் சிலிர்த்தது. அதன் குளிர்ச்சியை மனதால் உணர்ந்தாள் சிவசங்கரி. கடுகடுவென்றிருந்த அவளது முகத்தில் தோன்றிய சிலகணநேர இன்பத்தைக் கண்ட காஞ்சனாவின் கோபம் அதிகரித்தது.

"ஆனால் நான் அவரை அப்படியே விடப் போவதில்லை. இன்னும் ஒரே மாதத்தில் எங்கள் திருமணம் நடந்தே தீரும்!" - உறுதியான குரலில் காஞ்சனா கூற, கேலியாய்ப் புன்னகைத்தாள்.

"வாழ்த்துக்கள்!"

"வாழ்த்துச் சொன்னா மட்டும் போதாது."

"வேறென்ன? கல்யாணத்துக்கு மொய் வைக்கணுமா?"

"தேவையில்லை. எங்க கல்யாணம் நடக்கும் முன்பே உங்களுக்குக் கல்யாணம் நடந்தாகணும்."

"எ... என்ன?" - அதிர்ச்சியில் தன் இருக்கையை விட்டே எழுந்தாள் சிவசங்கரி.

"ஆமா! உங்க கல்யாணம் நடந்த பிறகுதான் எங்க மேரேஜ் நடக்கும்."

"வாட் நான்சென்ஸ்?" என்ன உளர்ற?

"நடக்கப் போறதைச் சொல்றேன்."

"யாரோட விருப்பத்துக்காகவும் நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது. முதல்ல வெளியே போ."

"நான் போறது இருக்கட்டும். முதல்ல என்னோட கேள்விக்குப் பதில் சொல்லுங்க."

"என்ன கேட்கப் போறே?"

"நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை?"

"அது என் சொந்த விஷயம்."

"இந்தச் சப்பைக்கட்டெல்லாம் வேண்டாம். எனக்கு உண்மையான பதில் வேணும்."

"உன்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"அவசியம் இருக்கு. ஏன்னா நீங்க இப்படி இருக்கிறதுக்குத் தானும் ஒரு காரணம்கிற குற்ற உணர்விலதான் அவர் என்னை ஏத்துக்கத் தயங்குறார்."

"அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது."

"அப்போ நீங்க கல்யாணம் பண்ணிக்க மாட்டீங்க?"

"எனக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை."

"அப்போ... நான் நினைச்சதுதான் சரி..." - என்றாள் ஏளனமாய்.

"என்ன சரி?"

"உங்களால் என் பிரபாகரை இன்னும் மறக்க முடியவில்லை... அப்படித்தானே?"

"வாயை மூடு."

"என் வாயை மூடிட்டா சரியாப் போயிடுமா? அதான் ஊரே பேசுதே! நீங்க அவரைத்தான் நினைச்சிட்டு இருக்கீங்கன்னு..."

"ஏய்! உனக்கு அவ்வளவுதான் மரியாதை. வெளியே போடி"



"எனக்கு ஒரு முடிவு தெரியாம போக மாட்டேன்." - அழுத்தமாய் அவள் சொல்ல, பொறுமை இழந்தாள் சிவசங்கரி.

"இப்ப... என்ன முடிவு தெரியணும் உனக்கு?"

"உங்க மனசுல அவர் நினைப்பு இருக்கக் கூடாது. அவர் எனக்கு மட்டும்தான். மனசுலகூட அவரை யாரும் நினைக்க விடமாட்டேன்."

"பைத்தியமாடி நீ? நான்தான் அப்படி எதுவும் இல்லைன்னு எத்தனை முறை சொல்றது?"

"சொன்னாப் போதாது. செயல்ல காட்டணும்."

"என்ன?"

"ஆமா! அவரோட நினைப்பு உங்களுக்கு இல்லைன்னா நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?"

"எனக்கு ஆயிரம் கடமைகள் இருக்கு. இதில கல்யாணத்திற்கான நேரமோ ஆசையோ இல்லை."

"இதை அவர்கிட்ட வந்து சொல்லுங்க."

"யாருகிட்ட?"

"பிரபாகிட்ட..."

"நானா... எதுக்கு? ஏன் நான் சொல்லணும்?"

"நீங்க சொன்னாத்தான் நம்புவார். அவரோட மனசில நீங்க அவரைத்தான் இன்னும் நினைச்சிட்டு இருக்கிறதா நம்பிட்டு இருக்கார். நீங்களே வந்து அப்படியெல்லாம் எதுவும் இல்லை. எனக்குச் சேவைதான் முக்கியம்.

அதுக்காகத்தான் கல்யாணமே பண்ணிக்காம இருக்கேன்னு சொன்னாப் போதும்.

"தன்னோட வீணான கற்பனைகளை தூக்கிப் போட்டுட்டு உடனே என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிடுவார். மத்தப்படி என்னை அவருக்கும் பிடிக்கும்..." - என்றாள் சங்கரியை ஆராய்ந்து கொண்டே.

"இல்லை... என்னால முடியாது!" - தடுமாறினாள்.

"ஏன்? ஏன் முடியாது?"

"யாரையும் பார்க்கவோ பேசவோ நான் விரும்பலை!"

"உங்க விருப்பத்தை விட மத்தவங்களோட வாழ்க்கையைப் பத்தி யோசிங்க. ஏதோ ஒரு காலத்தில உங்களை விரும்பினார் என்பதற்காக... காலம் பூரா அவர் இப்படியே இருக்கணுமா?"

"நான் ஒன்றும் யாரையும் எனக்காகக் காத்திருக்கச் சொல்லவில்லையே?"

"அது அவருக்குப் புரியவில்லையே! பைத்தியம் மாதிரி உங்க பேரைத்தான் சொல்லிட்டு இருக்காரு. இந்த மேட்டரைச் சொன்னது கூட அவர்தான்."

"என்ன மேட்டர்?"

"அவ கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் உன்னையே கட்டிப்பேன். முதல்ல அவ கல்யாணம் முடியட்டும். வெயிட் பண்ணு என்கிறார்."

சிவசங்கரியின் முகம் இருண்டது. "அப்படின்னு அவரே சொன்னாரா?"



"ஆமா! அவர் வீட்ல வெச்சு... எங்க உறவுக்காரங்க முன்னாலேயே சொன்னாரு. அதான் உங்களைப் பார்க்க வந்தேன்."

"சரி! நீ போ. உங்க கல்யாணம் நடக்கும்..." - என்றாள் இறுகிய குரலில்.

"எப்படி?"

"நடக்கும். போ..."

"நீங்க வந்து பேசுறீங்களா அவர்கிட்ட?"

"அது என்னால முடியாது."

"பின்னே?"

"அவருக்கோ உனக்கோ என்னால எந்த இடைஞ்சலும் இருக்காது. நீ போ!" - எனத் தன் இருக்கையில் அமர்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"எப்படியோ இந்தப் பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்தால் போதும்!" - என்றவாறு ஒயிலாய் நடந்து அவள் வெளியேற, சிவசங்கரியின் கண்கள் தன் கட்டுப்பாட்டை மீறிக் கசியத் துவங்கின.

சிவசங்கரியின் அறையை விட்டு வெளியேறிய காஞ்சனாவின் நடையில் துள்ளல் தெரிந்தது. வெகு உற்சாகமாய் அவள் வெளியேற, அப்போதுதான் அந்தப் பிரிவிற்குள் நுழைந்து கொண்டிருந்த மனோகரின் கண்களில் அவள் தெரிந்தாள்.

நேர் எதிரே வந்தவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கடந்து செல்ல, காஞ்சனாவின் கண்கள் தானாய்ச் சிமிட்டின.

# 16



மண்ணில் விழுந்த மழைத்துளியாய்
உன் நினைவுகளை என்னுள்
புதைத்துக் கொண்டு - வெளியே
பாலைவனமாய்க் காட்சியளிக்கிறேன்!

**க**ண்களை இறுக மூடிக்கொண்டு நெற்றியை இரு கரங்களாலும் பற்றிக் கொண்டு இருக்கையில் சாய்ந்திருந்தாள் சிவசங்கரி. கண்களில் இருந்து கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. இத்தனை ஆண்டுகளாய் வறண்டிருந்த கண்களில் இப்போது எப்படி ஊற்று எடுத்து விட்டது?

எதற்காக அழவேண்டும்? யாரோ யாரையோ கட்டிக் கொண்டு போகட்டும்... என உதடுகள் கூறினாலும் உள்ளம் உள்ளே அழுது கொண்டிருந்தது. எத்தனை மூடி போட்டு மறைத்தாலும் நேசம் மறையுமா?

தந்தையின் மரணத்திற்குக் காரணமானவன் என்ற வெறுப்பால், தனக்குத் தானே வேலி போட்டுக் கொண்டிருந்த போதும், எங்கு சென்றாலும் சங்கரி என்றவாறே தன் முன் அவன் வந்து நிற்கும்போது கர்வமாகத்தான் இருந்தது. அந்தக் கர்வம்தான் அவனது வார்த்தைகளை நின்று நிதானமாய்க் கேட்க விடாமல் தடுத்தது.

இப்போதுகூட அந்தக் கர்வம்தான் இந்தக் காஞ்சனாவிடம் உண்மையைக் கூறவிடாமல் தடுத்தது. 'ஆமாம்! பிரபாவின் நினைவால்தான் இன்னும் திருமணம்



செய்து கொள்ளாமல் இருக்கிறேன். என் மனதில் அவர் தான் இருக்கிறார்!' என்று அவளிடம் நேராய்ச் சொல்ல முடியவில்லையே!

அதே சமயம் தன் தந்தையின் மரணம் கண்முன்னே வந்தது. லேசாய் இளகத் துவங்கிய மனம் இறுக ஆரம்பித்தது. ஒரு உயிரின் முடிவில் பிரிந்த நேசம் பிரிந்ததாகவே இருக்கட்டும்.

மீண்டும் அவனை நினைப்பதே பாவமாயிற்றே!

இவனுடன் வாழ எப்படி நினைத்தேன்? இவன் கையால் தாலியை வாங்கிக் கொண்டு என் தாயின் திலகமில்லாத முகத்தைப் பார்க்க முடியுமா?

தன் தாயின் மங்களத்தைச் சிதைத்தவனின் கையால் எனக்குக் குங்குமமா?

'நோ!' - லேசான வீறிடலோடு கண்களைத் திறந்தாள் சிவசங்கரி. லேசாய் காயத் துவங்கியிருந்த கண்களை அழுத்தமாய்த் துடைத்துக் கொண்டாள்.

மனம் மீண்டும் பாறையாய், பாலைவனமாய் ஈரமின்றி இறுகிப் போய்விட, சிலகணத் தீவிர யோசனைக்குப் பின் ஒரு தீர்மானமான முடிவோடு மேஜை மீதிருந்த தொலைபேசியை எடுத்தாள்.

'டொக்... டொக்...' - என்ற மெலிதான ஒலியுடன் கதவு தட்டப்பட, ரிஸீவரை வைத்துவிட்டுக் குரல் கொடுத்தாள்.

"கமின்!"

"அக்கா! ரொம்ப பிஸியா?" - என்றவாறே உள்ளே நுழைந்தான் மனோகர்.

"வா மனோ! உட்கார்." - சகோதரியின் குரலும் முகமும் அவள் சற்றுமுன் அழுதிருக்கிறாள் என்பதை உணர்த்தியது. மனம் பதறிவிட,

"அக்கா! என்ன முகமெல்லாம் சிவந்திருக்கு? உடம்பு எதுவும் சரியில்லையா?" - என அருகே வந்து நெற்றியில் கை வைத்தான்.

"இல்லைடா! சும்மா லேசான தலைவலிதான்."

"பொய் சொல்லாதேக்கா. உன் முகம் இப்படிக் கன்றிப் போயிருக்கே?"

"மனோ! காலையில இருந்து ஒரே தும்மல். அதனால தலையும் வலிக்குது. வேறொண்ணுமில்லை."

"அக்கா! மத்தவங்க மேல காட்டுற அக்கறையை உன் மேலயும் கொஞ்சம் காட்டுக்கா. மெடிஸன் எடுத்தியா?"

"இன்னும் இல்லை."

"என்னக்கா நீ? எப்பவுமே அலட்சியமா விடக்கூடாது தலைவலி... ஜுரமா ஆயிடுச்சின்னா குணமாக ஒன் வீக் ஆகும். நீ ஹாஸ்பிடல் வராம ஒரு நாள் கூட இருக்க மாட்டே... உன் உடம்பைக் கவனிக்க வேண்டாமா?"

"சாதாரணத் தலைவலிதான்டா."

"நாம சாதாரணமா நினைக்கிறதுதான் சில சமயம் தீராத தலைவலியா மாறிடுது!" - என்றான் மனோகர் சீரியஸாய்.

"என்னடா சொல்றே?"

"நடக்கிறதைச் சொன்னேன். அக்கா! இப்ப கொஞ்ச நேரம் முன்னால இங்கே ஒரு பொண்ணு வந்தாளா?"



திடுக்கென நிமிர்ந்தாள். "ய... யாரு? யாரைக் கேட்கிற?"

"ஒரு ப்ளாக் கலர் ஸாரி கட்டிட்டுப் போனாளே!"

"எனக்கு ஞாபகமில்லையே... ஏன் கேட்கிறே?" - படபடப்பாய்க் கேட்டாள்.

"அந்தப் பொண்ணை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. அதான் கேட்டேன்."

"ஏதாவது பேஷண்ட்டைப் பார்க்க வந்திருப்பாளோ என்னவோ?"

"அப்போ உன்னைப் பார்க்க வரலையா?"

"எ... என்னை ஏன் பார்க்க வரணும்? யார் அவ?"

"அது தெரியாமத்தானே நான் கேட்கிறேன். சரி... அவ யாரா இருந்தா நமக்கென்ன? அக்கா! உனக்கு ஒரு இன்ஜெக்ஷன் போடவா?"

"வேண்டாம்ப்பா. கொஞ்ச நேரம் படுத்து எழுந்தா சரியாகிடும்."

"சரி... நீ வீட்டுக்குக் கிளம்பு. போய் ரெஸ்ட் எடு."

"இப்பவேவா?"

"அக்கா! நீ மதியச் சாப்பாடும் சாப்பிடலை. இப்ப டயம் என்ன? நாலு மணியாகுது. போ. போய்ச் சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்துட்டு முடிஞ்சா நைட் வா. இல்லைன்னா நாளைக்கு வந்தா போதும்... கிளம்பு."

"இல்லடா. இருக்கட்டும்... ஈவினிங் சேர்ந்தே போயிடலாம்."

"ம்ப்ச்! சொன்னாக் கேள். உன் முகமே சரியில்ல... பேசாம வீட்டுக்குப் போ. தினமும் லேட் நைட்லதானே வீட்டுக்குப் போறோம். பாவம் அம்மா! மாத்திரை போட்டுட்டு தூங்கிடுறாங்க.

"இன்னிக்கு கொஞ்சம் சீக்கிரமா போய் அம்மாகூட பேசிட்டு இரு. சந்தோஷப்படுவாங்க. அதோட அம்மாவுக்கு இந்த மன்த் இன்னும் செக்-அப் பண்ணலியே... இன்னிக்குப் பண்ணிடு. நானும் கொஞ்ச நேரத்தில வந்திடுறேன்."

"நீயும் இப்போ வந்திடேன்."

"இல்லக்கா! நேற்று முழுக்க நர்மதாவைப் பார்க்க வரலை. அதான் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன். ஒரு ஒன் அவர்ல வந்திடுறேனே..." - என்ற தம்பியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

என்றும் இல்லாத ஒரு பிரகாசம் தெரிந்தது. இது இன்று நேற்றாய் அல்ல. அந்தப் பெண் இங்கு வந்து சேர்ந்த நாள் முதலாய்த் தெரிகின்ற பிரகாசம்தான். அவளது பெயரைச் சொல்லும் போது அவனது முகத்தில் எத்தனை மலர்ச்சி!

இதே மலர்ச்சியைச் சில காலமாய்த் தானும் அனுபவித்து இருந்ததால் அதற்கான காரணம் புரிந்ததில் மனம் குதூகலித்த போதும் ஏதோ ஒன்று உறுத்தியது. இவன் மனதில் அந்தப் பெண் இருக்கலாம்.

ஆனால் அவள் மனதில் என்ன இருக்கிறதோ? வயிற்றில் சுமையோடு கணவனை இழந்து ஆதரவற்று நிற்பவளை மணம் முடிப்பது பெரிய விஷயம்தான். தன்



தம்பியைப் போல் மணாளன் கிடைத்தால் அந்த நர்மதாவின் வாழ்வும் சோலையாகி விடும்தான்.

ஆனால் இவனை அவள் மனம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே! மனோகர் ஒவ்வொரு முறை வரும்போதும் பரிவும் கனிவுமாய்ப் பார்த்துக் கொள்கிறான். அவளது தேவைகளை உணர்ந்து தானே உதவுகிறான். ஆனால் இது மட்டும் அவள் மனதை மாற்றுமா?

ஒருவேளை அவளை ஒதுக்கிய உறவுகள் சொந்தம் கொண்டாட வந்து நின்றால்? கையோடு அழைத்துப் போய் விட்டால்? அந்தப் பெண்ணே இறந்து போன தன் கணவனை மறக்க இயலாது என்று மறுத்து விட்டால்? பிறகு மனோவின் கதி என்ன ஆகும்?

அவனும் என்னைப் போல் நினைத்தவளை மணம் முடிக்க முடியாமல், மறக்கவும் இயலாமல், தினம் தினம் அனலில் இட்ட புழுவாய்த் துடிக்க வேண்டுமா? வேண்டாம். இந்த வலியும் துன்பமும் என்னோடு போகட்டும். மனோ பாவம்! இளகிய மனதுக்காரன். எப்போதும் புன்னகையோடு வலம் வருபவன்.

எதையும் சமாளிக்கும் குணமுள்ள என்னாலேயே இந்தத் துன்பத்தை ஜீரணிக்க முடியவில்லையே! என் தம்பி எப்படித் தாங்கிக் கொள்வான்? வேண்டாம். அவனால் முடியாது. இப்படி ஒரு வலியை அவனை அனுபவிக்கவிடக் கூடாது.

எதையுமே முதலில் பேசித் தெளிவுபடுத்தி விட்டால் தேவையற்ற கனவுகளும் கற்பனைகளும் தோன்றாது.

மனோவிடமும் நர்மதாவிடமும் நாமே இதைப் பற்றிப் பேசினால் என்ன? இந்த நேசம் திருமணம் என்ற பந்தத்தில் இணையும் என்று தெரிந்த பிறகு வளரட்டுமே!

முதலில் மனோ மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

லேசாய்த் தொண்டையைச் செருமினாள். "மனோ!"

"சொல்லுக்கா."

"நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"கேளுக்கா!"

"நான் எந்தத் தவறான கண்ணோட்டத்தோடும் கேட்கலை. உன் மேல உள்ள அக்கறையாலும் அன்பாலும் தான் கேட்கிறேன்."

"என்ன விஷயம் அக்கா! இவ்வளவு பூடகமா பேசறே?"

"மனோ! நான் கேட்கிற கேள்விக்குத் தயவு செய்து உண்மையை மட்டும் சொல்லு. நமக்குள்ள தயக்கமோ ஒளிவுமறைவோ வேண்டாம்."

"உன்கிட்ட எதையுமே இதுவரை நான் மறைச்சதில்லையே அக்கா!"

"அந்த நம்பிக்கையிலதான் கேட்கிறேன், மனோ! தயங்காம உன் மனசில உள்ளதைச் சொல்லுவியா?"

"கேளுக்கா... சொல்றேன்."

"மனோ! அந்த... நர்மதாவை உனக்கு ஏற்கெனவே தெரியுமா? ஐ மீன் அவ மேரேஜுக்கு முன்னால..."



"அக்கா! நான்தான் அன்னிக்கே சொன்னேனே... என் கார்ல வந்து விழுந்து அடிபட்டப்பதான் அவளை முதல் முதலா பார்த்தேன்."

"நிஜமாவா?"

"ப்ராமிஸ்ஸா!"

"என்னால நம்பவே முடியலை மனோ!"

"ஏன்?"

"இல்லை. அந்தப் பொண்ணு மேல நீ எவ்வளவு பிரியமா இருக்க... அதான்...!"

"உண்மைதான்க்கா... எனக்கே ஆச்சரியமாத்தான் இருக்கு. என்னவோ தெரியலைக்கா. அவளைப் பார்த்த நிமிஷத்தில இருந்தே என் மனசுல ஏதோ இனம் புரியாத உணர்வு. அதை என்னன்னு சொல்லத் தெரியலை. பட்! அவளுக்கு எதுவும் ஆயிடக் கூடாதுன்னு மனம் பதறிச்சு. அவளைக் காப்பாத்தியே ஆகணும்னு ஒரு வெறி.

"அதான் உடனே நம்ம ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டு வந்தேன். அக்கா! அவ பேரென்ன ஊரென்னன்னு தெரியாது. அவ கல்யாணமானவன்னு கூடத் தெரியாம அவமேல ஏதோ ரொம்ப வருஷமா பழகின மாதிரி ஒரு பிரியம் வந்திடுச்சு.

"ஆனா அவ கன்சீவா இருக்கிறதா ஜான்ஸி சொன்னதும் எனக்கு என் மேலயே வெறுப்பாகிப் போச்சு. ஆனாலும் அவளுக்கு எதுவும் ஆகிடக்கூடாதுன்னுதான் பதறினேன். எப்படியோ அவளுக்கு நல்லபடியா குணமாச்சு. நினைவு திரும்பினதும் அவ கதையெல்லாம் சொன்னா.

"அக்கா! அந்த நிமிஷமே அவளை என் மனசு முழுசா ஏத்துக்கிச்சு. கடைசி வரை அவளை என் கண்ணுக்குள்ள வெச்சுப் பாதுகாக்கணும். அவ இழந்த பூவையும் பொட்டையும் அவளுக்கு நான் கொடுக்கணும்னு அப்பவே நான் முடிவு பண்ணிட்டேன்!" - கண்களில் நேசம் மின்னச் சொன்ன தம்பியை விழிகள் விரியக் கேட்டுக் கொண்டிருந்தாள் சிவசங்கரி.

"மனோ! எப்படிடா... இதெல்லாம்?"

"எனக்கும் புரியலைக்கா... நாமளும் எத்தனையோ ஆயிரம் பொண்ணுங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனா எந்தப் பொண்ணுமே என்னைத் திரும்பிப் பார்க்க வெச்சதில்ல. ஆனா இவளை ஆயுசு முழுக்கப் பார்த்திட்டே இருக்கணும் போல இருக்கும்.

"ஒரு சிலரைப் பார்த்ததுமே மனசுல பதிஞ்சு போயிடுவாங்கல்ல. அதே மாதிரி இவளும் மனசுக்குள்ள பதிஞ்சிட்டா. கடைசி வரைக்கும் அவளுக்கும் அவளோட குழந்தைக்கும் ஒரு நல்ல பாதுகாவலனா இருக்கணும்னு ஆசைப்படுறேன்க்கா!"

"மனோ! இது... இதெல்லாம் சரியா வருமா?"

"ஏன்க்கா?"

"நர்மதாகிட்ட உன் மனசைச் சொல்லிட்டியா?"

"இன்னும் இல்லைக்கா..."

"ஏன்டா?"

"முதல்ல அவ குணமாகட்டும். அவ மனசில உள்ள பழைய ரணங்கள் ஆறட்டும். என்னை அவ மனசு விரும்பும்போதுதான் என் விருப்பத்தைச் சொல்லணும்."



"இல்ல மனோ! முதல்லயே சொல்லிட்டா பரவாயில்லைன்னு நான் நினைக்கிறேன்."

"தப்புக்கா! இப்பவே சொன்னா இவன் இந்த எண்ணத்தோடுதான் நம்மைக் காப்பாற்றினானோ என்று நினைக்கத் தோன்றும். அந்த நினைவு என் மேல் வெறுப்பை வரவழைக்கும். இப்ப என்கிட்ட சகஜமா பேசிட்டு இருக்கா!

"என்னை நம்பித் தன்னோட மன வேதனையைச் சொல்றா... இதுவே போதும் எனக்கு. கணவனா ஏத்துக்கிறதைவிட ஒரு நண்பனா ஏத்துக்கிட்டதே பெரிய விஷயம். போகப் போக அவளுக்கு என் மனசு புரியும். புரிய வைப்பேன்!"

"நான் வேணா பேசிப் பார்க்கட்டுமா, மனோ?"

"வேண்டாம்க்கா... அன்பு, நேசம் இதெல்லாம் தானா வரணும். அடுத்தவங்களோட வற்புறுத்தல்ல வரக் கூடாது."

"எதுவா இருந்தாலும் சீக்கிரம் நடக்கணும், மனோ!"

"அக்கா?"

"நாளாக ஆக... அவ வயிறு பெரிசாகுமே. குழந்தை பெத்துக்கும் முன்னால உங்க கல்யாணம் முடிஞ்சா நல்லது. பொறக்கப் போற குழந்தை உன் குழந்தையா பொறக்கட்டும். அப்போதானே அதன் எதிர்காலம் நல்லா இருக்கும்."

"ரொம்ப தேங்க்ஸ்க்கா!"

"எதுக்குடா?"

"நான் கூட இதெல்லாம் யோசிக்கலை. என்னதான் சொல்லு... பெண்கள் பெரிய ஆட்கள்தான். உங்களோட முன்னெச்சரிக்கை உணர்வும் பலவிதச் சிந்தனைகளும் எனக்கு வரலியே?"

"பெண் புத்தி பின் புத்தி என்பார்களே! அதற்கான முழு அர்த்தம் இதுதான். பின்னால் வருவதை யெல்லாம் யோசித்துச் செயல்படுவது நாங்கள்தான்."

"ஒப்புக் கொள்கிறேன் சகோதரி! உங்களின் புத்திசாலித் தனத்திற்குத் தலை வணங்குகிறேன்..." - எனத் தலை தாழ்த்தி வணங்கினான்.

தன்னைப் பற்றிய கவலைகள் மறந்து லேசாய்ச் சிரித்தாள் சிவசங்கரி.

"நாம இப்படிப் பேசி எவ்வளவு நாளாச்சு?"

"எல்லாமே நம்ம கையிலதான்க்கா இருக்கு. நீ நினைச்சா நம்ம வீடு பழையபடி கலகலப்பா மாறிடும்."

"மனோ! என்ன சொல்றே?"

"நான் சொன்னதைப் பத்தி யோசிச்சியாக்கா?"

"எ... எதைப் பத்திக் கேட்கிற?"

"பிரபாகிட்ட பேசச் சொன்னேனே..."

சட்டென முகம் கடுத்தாள். "அந்தப் பேச்சை விடு, மனோ!"

"அப்படிச் சொல்லாதே அக்கா. ஒரே ஒருமுறை பேசிப் பார். உன்னிடம் பேச அவர் எத்தனை முறை முயற்சிக்கிறார், தெரியுமா? நீதான்..."



"வேண்டாம் மனோ. இனி எதைப் பற்றியும் பேசிப் பயனில்லை..." - சொல்லும்போதே தொண்டை அடைத்தது.

"அக்கா!"

"மனோ! அவனால் நான் பொருளையோ பணத்தையோ இழந்திருந்தால் என் மனதைத் தேற்றிக் கொண்டிருப்பேன். ஆனால் நாம இழந்தது நம்ம குடும்பத்தின் ஆணிவேரை. அப்பாவை இழந்து அம்மா படும்பாட்டை நம்மால் பார்க்க முடிகிறதா?

"அம்மாவின் கண்ணீரைப் பார்க்கத் துணிவில்லாமல் தானே இப்படி ஹாஸ்பிடலே கதின்னு கிடக்கிறோம். இதுக்கெல்லாம் காரணம் யாரு? அவன்தானே... அவன் முகத்திலா என்னை விழிக்கச் சொல்கிறாய்?"

"அவன் வேண்டாமென்றால் வேறு முடிவை எடு அக்கா!"

"அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, மனோ! ஆனா என் மனசில இருக்கிற வெறுப்போடும் கசப்போடும் யாரை மணந்தாலும் என்னால் நிம்மதியாய் வாழ முடியாது. அப்படி ஒரு இக்கட்டில் தானாய்ப் போய் மாட்டிக் கொள்ள வேண்டுமா?"

"அதற்காகக் காலம் பூரா இப்படியே இருந்திடுவியா?"

"ம்ப்ச்! பார்க்கலாம். முதல்ல உன் விருப்பம் நிறைவேறட்டும்."

"அதெப்படிக்கா! உன்னை இப்படி வைத்துக் கொண்டு நான் எப்படி என் வாழ்க்கையை அமைத்துக் கொள்வேன்?"

"மனோ! வீண் பிடிவாதம் பண்ணாதே!"

"இல்லக்கா. என்னோட முடிவுல எப்போதுமே மாற்றம் இல்லை. ஒருவேளை நர்மதா என்னை ஏற்றுக் கொண்டாலும் உனக்கு ஒரு நல்லது நடக்காமல் எனக்கும் நடக்காது."

"மனோ!"

"இதுதான் என்னோட முடிவு. இதை மாற்ற முயற்சி செய்யாதே. அதுக்குப் பதிலா உன் மனசை மாத்திக்க... தேத்திக்க ட்ரை பண்ணு. பிரபாவைத்தான் நீ கட்டிக்கணும்னு சொல்ல மாட்டேன். யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடு. முடிவு உன் கையில்.

"இதற்கு மேலும் நாம் அம்மாவை வதைத்தால் அது பெரிய பாவம். எந்த முடிவெடுத்தாலும் சீக்கிரம் எடுக்கா. வீட்டுக்குப் போ. பொறுமையா இருந்து நான் சொன்னதை யோசி. உனக்கு இப்ப தேவை தனிமை. அந்தத் தனிமைதான் தெளிவான முடிவைத் தரும். கிளம்புக்கா!" - சிவசங்கரியின் கையைப் பற்றி எழுப்பினான்.

தம்பி சொன்ன தனிமை தனக்கும் தேவை என்பதை உணர்ந்தவள் அமைதியாய் எழுந்தாள். தன்னுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுத் தம்பியைத் திரும்பிப் பார்த்தாள்.

மென்மையான புன்னகையோடு நின்றவனைப் பார்க்கையில் மனம் கனத்தது.

இவனது வாழ்விற்காகவேனும் தான் ஒரு நல்ல முடிவை எடுத்தே ஆக வேண்டும் என்ற முடிவோடு காரை நோக்கிச் சென்றாள்.



# 17



உண்மையான அன்பைச் சொல்லிப்
புரிய வைக்க முடியாது! அந்த
அன்பிற்கு உரியவர்கள் மட்டுமே
அதை உணர முடியும்!

**பூ**ஜையறையில் அமர்ந்திருந்தாள் தாட்சாயிணி. உதடுகள் ஏதோ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருக்க, கண்கள் இடது காலைத் தூக்கி நர்த்தனமாடிக் கொண்டிருந்த நடராஜரின் உருவத்தையே வெறித்துக் கொண்டிருந்தன. அறை முழுக்கப் பூக்களின் நறுமணமும் சாம்பிராணிப் புகையுமாய்த் தெய்வீக மணம் கமழ்ந்தது.

கதம்ப மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த இறைவனின் திருவுருவத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். நிற்காமல் நீர் வழிந்து கொண்டே இருந்தது. மனம் விம்மியது.

இன்னும் எத்தனை காலங்கள் என் பெண் தனித்திருப்பாள்? அவளுக்கென்று குடும்பம், குழந்தைகள் எப்போது அமையும்? என் வாழ்நாள் முடியும் முன் அவளை மாலையும் கழுத்துமாய் பூவும் பொட்டுமாய்ப் பார்த்துவிட மாட்டேனா?

அவளது இன்பமான வாழ்வைப் பார்த்து அவள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளைக் கொஞ்சி மகிழ முடியாதா? இதுவரை எவ்வளவு வருத்தம் இருந்தாலும் அக்காவும் தம்பியும் இருக்கும்போது வீடு கலகலப்பாகத்தான் இருக்கும்.

ஆனால் கடந்த சில நாட்களாய் அந்தக் கலகலப்பு மறைந்து விட்டிருந்தது. மனோகர் கூடுமானவரை மருத்துவ மனையிலேயே தங்கிவிடுகிறான். சங்கரி தாய் உறங்கிய பின்பு வீட்டிற்கு வருகிறாள். விடியுமுன் மருத்துவமனைக்குச் சென்று விடுகிறாள்.

அப்படியே இருவரும் வீட்டில் இருந்தாலும் நேருக்கு நேராய்ப் பேசிக் கொள்வதில்லை. சிரிப்பதில்லை. ஒன்றாய் அமர்ந்து சாப்பிடுவதில்லை. பிள்ளைகள் இருவருக்கும் இடையே ஏதோ பனிப்போர் நடப்பது தெரிகிறது.

ஆனால் அதற்கான காரணம்தான் புரியவில்லை. பெற்றவளிடம் மனம் விட்டுப் பேசப் பிள்ளைகளுக்கு நேரமில்லையா... மனம் இல்லையா... எனப் புரியாமல் கலங்கிப் போயிருந்தாள்.

கணவன் இருந்த வரை ஒன்றாய்க் கூடி ஆடிக் களித்த இல்லம் இன்று வெறுமையாய் மிரட்டியது. கமலாவும் தன் மகளின் பிரசவத்திற்காக விடுப்பில் சென்றுவிடப் பேச்சுத் துணைக்குக் கூட ஆளின்றி... விடிந்தது முதல் பூஜையறையிலேயே தவம் கிடக்கிறாள்.

ஒரு மனிதனின் மரணம் ஒட்டு மொத்தக் குடும்பத்தையே புரட்டிப் போட்டுவிடுகிறதே! இனி இந்த வீட்டில் எப்போது வசந்தம் மலரும்? பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி முழுமை பெறும்? தன் கடைசி மூச்சுக்குள் பிள்ளைகளின் மணக்கோலத்தைப் பார்க்க முடியுமா?

பலவித எண்ணங்களோடு அமர்ந்திருந்தவளுக்கு லேசாய்த் தலை சுற்றுவதைப் போல் இருந்தது. காலையில் இருந்தே ஒன்றும் சாப்பிடாதது நினைவு வர மெல்ல



எழுந்தாள். பார்வை மங்கியது போல் தெளிவில்லாமல் இருந்தது.

என்ன ஆயிற்று எனக்கு? தலையை உதறிக் கொண்டாள். மெல்லச் சுவரைப் பற்றியவாறே பூஜையறையை விட்டு வெளியே வந்தாள். உடல் தடதடத்தது. தடுமாறி நகர்ந்து சோபாவில் அமர்ந்தாள். தண்ணீர் ஜக்கை எடுத்துக் கடகடவெனக் குடித்தாள். இன்னும் படபடப்பு அடங்கவில்லை.

ஏதேனும் சாப்பிடலாம் என எழுந்தபோது அழைப்பு மணி இசைத்தது. இந்த நேரத்தில் யார் என யோசனையாய்க் கதவருகே சென்றவள் குரல் கொடுத்தாள்.

"யாரு?"

"அம்மா! நான் பிரபாகர் வந்திருக்கேன்..." - என்ற குரலில் அவசரமாய்க் கதவைத் திறந்தாள்.

"வாப்பா. உள்ளே வா!"

"அம்மா! வீட்ல யாரும்... குறிப்பா சங்கரி இல்லையே?"

"அவங்க வர நடுச்சாமம் ஆகும்ப்பா. நீ வா... உட்கார்!" - எனத் திரும்பியவள் மீண்டும் தடுமாற, பதறி அவளைப் பற்றிக் கொண்டான்.

"அம்மா! என்னாச்சு?"

"என்னவோ தெரியலைப்பா. இன்னிக்குத் தலைசுத்தல் அதிகமா இருக்கு."

"சாப்பிட்டீங்களா? மாத்திரை போட்டீங்களா?"

"இன்னும் இல்லைப்பா."

"என்னம்மா நீங்க? உங்களுக்கு ஏற்கெனவே ஷுகர், பி.பி. எல்லாம் இருக்கே. இப்படி சாப்பிடாம இருக்கலாமா?" - என்றவாறே சோபாவில் அமர வைத்தான். ஃபேனைச் சுழலவிட்டான்.

"அம்மா! இன்னிக்கு என்ன சமையல் பண்ணினீங்க? சாப்பாடு இருக்கா? இல்ல... வெளியில போய் வாங்கிட்டு வரவா?"

"வேண்டாம்ப்பா. காலையில பண்ணின டிஃபன் இருக்கு."

"டிஃபனா? ஏம்மா காலையில இருந்தே சாப்பிடலையா நீங்க?"

"சாப்பிடத் தோணலைப்பா..."

"என்னம்மா இது? இப்படிச் சாப்பிடாம இருந்தா உடம்பு என்னாகும்?" - உரிமையாய்க் கடிந்து கொண்டே, டைனிங் டேபிளில் இருந்த ஹாட் பாக்ஸைத் திறந்து இரண்டு தோசையை எடுத்துத் தட்டில் வைத்தான். சட்னி கிண்ணத்தைத் திறக்க, வாடை வீசியது.

"அம்மா! சட்னி கெட்டுப் போயிடுச்சு. இட்லி மொளகாப் பொடி இருக்கா?"

"அந்தச் சின்ன பாட்டில்ல இருக்குப்பா. நானே வர்றேன்..."

"நீங்க அங்கேயே உட்காருங்க. எழுந்து விழுந்து வைக்காதீங்க. நான் கொண்டு வர்றேன். நல்லெண்ணெய் எங்கே இருக்கு?"



"கிச்சன் ஷெல்ப்ல இருக்கும்ப்பா..."

"ஓ.கே. பால் இருக்கா?" - கேட்டுக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்து ஸ்டவ்வைப் பற்ற வைத்துப் பாலைச் சூடேற்றினான். சிறிய கிண்ணத்தில் மிளகாய்ப் பொடியை வைத்து நல்லெண்ணெய்யால் அதைக் குளிப்பாட்டினான்.

பால் பொங்கி வர, ஸ்டவ்வை அணைத்து விட்டுச் சர்க்கரை இல்லாத காபி கலந்து சாப்பாட்டுத் தட்டையும் காபி தம்ளரையும் கொண்டு வந்து தாட்சாயிணியின் கையில் கொடுத்தான்.

"சாப்பிடுங்கம்மா!" - என்றவாறே எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டவனைக் கண்களில் நீரோடு பார்த்தாள் தாட்சாயிணி.

"சாப்பிடுங்கம்மா..."

"பிரபா! என்னை மன்னிச்சிடுப்பா..."

"அம்மா! என்ன இது? ஏன் பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்க?"

"இல்லப்பா! உன்னைப் பார்க்க எனக்கு எவ்வளவு சங்கடமா இருக்கு தெரியுமா? எப்படிப்பட்ட பிள்ளை நீ! இப்போ..."

"அம்மா! முதல்ல சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்."

"இல்லப்பா... நான் உன்கிட்ட..."

"சாப்பிட்டு மாத்திரை போட்டுட்டு பேசலாம்மா. நானே உங்ககிட்ட பேசணும்னுதான் வந்தேன்."

"என்ன விஷயம்ப்பா?"

"சாப்பிடுங்க, சொல்றேன்..." - அவனிடம் பேச வேண்டுமே என்ற அவசரத்தில் வேகமாய்ச் சாப்பிட்டுக் காபியைக் குடித்து முடித்தாள். களைப்புப் போய்விட, தானே எழுந்து மேஜையின் டிராயரைத் திறந்து மாத்திரைகளை விழுங்கிவிட்டு, ஃபிரிட்ஜைத் திறந்து குளிர்பான பாட்டிலை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"இந்தாப்பா... கூல் ட்ரிங்க்ஸ் சாப்பிடு!"

"இருக்கட்டும்மா... நான் இதெல்லாம் சாப்பிடறதில்லை."

"ஏம்ப்பா? மாங்கோ ட்ரிங்க்ஸ்ன்னா விரும்பிக் குடிப்பியே?"

"அது அப்போ! இப்பல்லாம் குடிக்கிறதில்லை. எல்லாம் வெறுத்துப் போச்சு!"

வருத்தம் இழையோடச் சொன்னவனைப் பார்க்கையில் மனம் நொந்தது.

எத்தனை கலகலப்பாய் வளைய வந்த பிள்ளை. இவன் வந்தாலே வீடு கலகலக்குமே! பாட்டும் சிரிப்பும் கூத்துமாய் இருந்த வீடு இன்று மௌன விரதம் பூண்டுள்ளது. இவனும்தான் சிரிப்பைத் தொலைத்து வெறுமையான பார்வையோடு... எப்படி மாறிப் போய் விட்டான்!

எது இவனை இப்படி மாற்றியது? தன் மகளின் உதாசீனமா? தன் கணவனின் மரணமா? இல்லை... இவற்றை எல்லாம் விட முக்கியக் காரணம் நான்தான். என்னால்தான்... என் மௌனத்தால்தான்... இந்தப்



பிள்ளையின் கலகலப்பு, சந்தோஷம், துள்ளல் எல்லாம் பறிபோனது.

பெற்ற பிள்ளைகள் இருவரும் இயந்திரத்தனமாய் மாறியதற்கும் இந்த வீட்டின் மயான அமைதிக்கும் என் மௌனம்தான் காரணம். அந்தக் குற்ற உணர்வுதானே தன்னை உருக்குகிறது. இதற்கு மேலும் மௌனமாய் இருந்து என்ன சாதிக்கப் போகிறேன்?

"பிரபா!" - மெல்லிய குரலில் அழைத்தாள். நிமிர்ந்தவனின் கண்களில் ஈரம். பதறிப் போனாள் தாட்சாயிணி.

"பிரபா! என்னப்பா! என்னாச்சு? கண்ணெல்லாம் கலங்கிப் போயிருக்கே?"

"அம்மா! சங்கரி மாறவே மாட்டாளா?"

"என்னப்பா கேள்வி இது? அவளைப் பற்றி உனக்குத் தெரியாதா?"

"தெரியும்மா. அதனாலதான் என்னோட சங்கரி எப்படியும் என்னை ஏத்துப்பாங்கிற நம்பிக்கையில இத்தனை வருஷமா காத்திட்டு இருக்கேன்."

"நானும் அந்த நல்ல நாளுக்காகத்தான் கடவுளை வேண்டிக்கிட்டு இருக்கேன்."

"ஆனா, நாம நினைக்கிறது நடக்காது போல் இருக்கும்மா..." - என்றான் தொண்டை அடைக்க.

"ஏம்ப்பா அப்படிச் சொல்றே?"

"எனக்குப் புதுசு புதுசா வேற தலைவலியெல்லாம் வருது."

"என்னப்பா சொல்ற?"

தன் வீட்டிற்கு வந்த காஞ்சனாவின் குடும்பம் பற்றியும் காஞ்சனாவின் உறுதியான முடிவையும் சுருக்கமாய்க் கூறினான். கேட்டுக் கொண்டிருந்த தாட்சாயிணியின் முகமும் மாறியது.

இத்தனை நாளாய் எப்படியும் தன் மகளுக்காகப் பிரபாகரன் காத்திருப்பான். அவள் மனம் மாறியதும் இருவரும் ஒன்றாய் இணைவார்கள் என்ற நம்பிக்கை இப்போது ஆட்டம் கண்டது.

யார் அந்தப் பெண்? ஒருவேளை அவளே போராடி இவனை மணந்து கொண்டால்... என் மகளின் நிலை? ஐயோ! கடைசி வரை இப்படியே இருந்து விடுவாளே! இந்த வீட்டிற்கு மருமகனோ மருமகளோ வர வாய்ப்பே இல்லையா?

சுவரில் மாட்டியிருந்த போட்டோவில் தெரிந்த கணவனை வெறித்தாள். இந்த ஒழுக்கம் கெட்ட மனிதருக்காக ஏன் மூன்று குழந்தைகளின் வாழ்வைப் பாழாக்க வேண்டும்? வாழ்ந்த வரையிலும் இவரால் நிம்மதி இல்லை. இறந்த பிறகும் நிம்மதி கிட்டவில்லை.

இந்த மனிதரைப் பெரிய மனித குல மாணிக்கம், வைரம் என்றல்லவா சங்கரி நினைத்துக் கொண்டிருக்கிறாள்! இவரின் மறுபக்கம் தெரிந்தால்தான் அவளது மனம் மாறும் என்றால் நிச்சயமாய் உண்மைகளைச் சொல்வதில் தவறில்லை.

வாழும் போது மனைவியை மனுஷியாகவே மதிக்காத இவரது லீலைகளை இனியும் ஏன் மறைத்துப் பாதுகாக்க வேண்டும்? உண்மை தெரியாதபட்சத்தில் அவள் மனம்



மாறப் போவதில்லை. பிரபாகரின் வார்த்தைகளைக் கேட்கப் போவதும் இல்லை. உண்மையைப் பிரபாகரன் சொன்னாலும் அவள் நம்புவது சாத்தியமில்லையே!

நானே சொல்லிவிட்டால்? நிச்சயம் நம்புவாள். இறந்து போன ஆன்மாவை இழிவுபடுத்தக் கூடாது. குடும்ப கவுரவம் சிதையக் கூடாது என எட்டு வருடங்களாய் மனதிற்குள் போட்டுப் புதைத்த ரணங்கள், அவலங்கள் மனக்கூட்டைப் பிளந்து கொண்டு வெளியே வரத் துடித்தன.

இறந்து போனவருக்காக உயிரோடு வாழவேண்டியவர் களின் மனதைச் சாகடிக்க வேண்டுமா? இனியும் இதை மூடி வைப்பதில் அர்த்தமில்லை. தீர்க்கமான முடிவோடு போனை எடுத்து மகளின் எண்ணை அழுத்தினாள்.

காரில் வந்து கொண்டிருந்த சிவசங்கரி தனது செல்போன் சிணுங்கியதும் எடுத்தாள்.

"அம்மா!"

"சங்கரி! உடனே வீட்டுக்கு வா."

"வீட்டுக்குத்தான்மா வந்திட்டு இருக்கேன். என்னம்மா? எதுவும் அர்ஜென்ட்டா?"

"ஆமா! வழியில எங்கேயும் நிற்காதே. உடனே வீட்டுக்கு வா."

"என்ன விஷயம்மா?"

"நேர்லதான் பேசணும். போனை வெச்சிடு!" - பதட்டமாய் எழுந்தான் பிரபாகரன்.

"அம்மா! என்ன காரியம் பண்றீங்க? இப்ப ஏன் சங்கரியை வரச் சொல்றீங்க?"

"இத்தனை வருஷமா நாம பட்ட கஷ்டத்துக்கு இன்னிக்கு ஒரு தீர்வு கிடைக்கணும் பிரபா!"

"அம்மா...!"

"ஆமா. இனியும் அவ மனசு தானா மாறும்னு எதிர்பார்க்கிறது முட்டாள்தனம். அவ அப்பாவைப் பத்தின எல்லா உண்மைகளையும் அவகிட்ட சொல்லப் போறேன்."

"ஐயோ! அம்மா! அவசரப்படாதீங்க."

"இல்லப்பா! ஒவ்வொரு முறையும் நான் சொல்ல நினைக்கும்போதெல்லாம் நீதான் தடுத்தே... ஆனா இப்போ உன்னோட பொறுமைக்கும் காத்திருப்புக்கும் எந்தப் பலனும் இல்லாம போச்சே. இனியும் நான் சொல்லாம விட்டா என்னை மாதிரி ஒரு சுயநலவாதி யாரும் இருக்க மாட்டாங்க."

"இல்லம்மா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. சங்கரிகிட்ட எதுவும் சொல்ல வேண்டாம். ப்ளீஸ்... எனக்காக...!"

"பிரபா! உனக்காகத்தான் நான் சொல்லப் போறேன்..."

"வேண்டாம்மா. சங்கரியால அதை யெல்லாம் தாங்கிக்க முடியாது. அவங்க அப்பாவைப் பத்தி ரொம்ப உயர்வா நினைச்சிட்டு இருக்கா. அவ மனசுல அவருக்காக ஒரு கோயிலே கட்டி வெச்சிருக்கா. அதை நாம இடிக்க வேண்டாம்."



"பிரபா! அது ஒரு கற்பனைக் கோட்டை. உண்மை தெரிஞ்சா... அது தானா மறைஞ்சிடும். உண்மையில உனக்குத்தான் கோயில் கட்டணும். நீ நடமாடும் தெய்வம்."

"என்னம்மா நீங்க?"

"உண்மையாத்தான் சொல்றேன், பிரபா. விரும்பிய பெண்ணோட குடும்ப மானத்தைக் காப்பதற்காக நீ குற்றவாளியாய் நிற்கிறாய். உன் தாயைக் குற்றம் சுமத்தி... பிரச்சனையைத் திசை திருப்பி... இந்தக் குடும்பத்தை, எங்களின் கௌரவத்தைக் காப்பாத்தி இருக்கிறாய்."

"அம்மா! போனதைப் பற்றிப் பேச வேண்டாம். நான் இங்கு வந்ததே வேறு ஒரு காரணத்திற்காக..."

"என்னப்பா?"

"அந்தப் பொண்ணு என் மேல உள்ள ஆசையில சங்கரியை நேரே ஹாஸ்பிடல்ல போய்ப் பார்த்திருக்கா."

"ஐயோ! எப்போ?"

"இன்னிக்குத்தான். சங்கரியைப் பார்த்திட்டு நேரே என்னோட ஹாஸ்பிடலுக்குத்தான் வந்தா..."

"என்னப்பா சொன்னா?"

"எல்லாமே சொன்னாள். ஆனா நமக்குத் தேவை சங்கரி கடைசியா சொல்லி அனுப்பிய வார்த்தைகள்தான்..."

"என்ன சொன்னாளாம்?"

"அம்மா! என்னால எந்த இடைஞ்சலும் வராது. உனக்கும் பிரபாவுக்கும் கண்டிப்பா கல்யாணம் நடக்கும்னு சொன்னாளாம்."

"என்ன?" - திகைத்தாள் தாட்சாயிணி.

"ஆமாம்மா. இதுவரை எத்தனையோ முறை நான் சங்கரிகிட்ட பேசியிருக்கேன். என் சார்பா மனோ பேசியிருக்கான்.

"அப்பல்லாம் சங்கரி இந்த மாதிரிப் பேசினதில்ல... இன்னிக்கு இந்த வார்த்தையைச் சொல்லியிருக்கான்னா எனக்கு ரொம்ப பயமா இருக்கு."

"ஏன்?" - பயமாய்க் கேட்டாள்.

"சங்கரி... ஏதாவது தவறான முடிவு எடுத்திடுவாளோன்னு..."

"தம்பி! என்ன சொல்றே?"

"பயப்படாதீங்கம்மா. நிச்சயமா தற்கொலை பண்ணிக்க மாட்டா!"

"பின்னே?"

"ரொம்ப நாளாவே சங்கரி ஏதாவது ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக்கிட்டு அங்கேயே தங்கிச் சேவை செய்யணும்னு சொல்லிட்டு இருக்கிறதா எனக்குத் தகவல் கிடைச்சது. ஒருவேளை அப்படி எங்கேயும் போயிடுவாளோன்னுதான் பயப்படறேன்."

"இதெல்லாம்... எனக்குத் தெரியாதே!"

"எனக்கும் மத்த டாக்டர்ஸ் சொல்லித்தான் தெரியும். ஒருவேளை என் மேல உள்ள வெறுப்புல அந்த முடிவுக்குப் போயிடுவாளோன்னுதான் உங்களைப் பார்க்க வந்தேன்."

"பிரபா! இப்போ என்ன பண்றது?"



"சங்கரி வந்ததும் பேசுங்கம்மா. என்னால அவளுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காதுன்னு சொல்லுங்க. அவ என் கண்ல படுற தூரத்துல இருந்தா அதுவே எனக்குப் போதும்."

"பேசாம உண்மையைச் சொல்லிடலாம், பிரபா. இன்னும் எத்தனை காலம்தான் மறைக்கிறது. இதனால யாருக்கு என்ன லாபம்?"

"வாழ்ந்த வரைக்கும் விஸ்வநாதன் சாரோட செயல்பாடுகள் உங்க பிள்ளைகளுக்குத் தெரியலை. இனிமே தெரிய வேண்டாம்மா. எப்பவும் போல அவங்க மனசில அவர் தெய்வமாவே இருக்கட்டும்."

"அதுக்காக நீ ஏன்ப்பா பழி ஏத்துக்கணும்? நீ என்ன பாவம் பண்ணினே? உன் அம்மாகூடப் பாவமில்லையா?"

"அம்மா வரதட்சிணை கேட்டது பெரிய தப்பும்மா. அதுக்கான தண்டனையைத்தான் அவங்களுக்குக் கொடுத்திருக்கேன். அதோட தன்னோட தவறாலதான் தன் புள்ளை கல்யாணமே வேண்டாங்கிறான்னு நினைச்சிட்டு இருக்காங்க.

"அந்த நினைப்பு இருக்கிற வரைக்கும் நானும் அவங்க கல்யாணப் பேச்சில இருந்து தப்பிச்சுட்டு இருக்கேன். இந்தக் காஞ்சனா பொண்ணுதான் எல்லாத்தையும் கெடுத்துட்டா. நானும் கோபப்பட்டுத்தான் பேசுறேன். ஆனா அவ எதுக்கும் பயப்பட மாட்டேங்கிறா! "

பிரபாகரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே போர்டிகோவில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

வேகமாய் ஜன்னலருகே சென்றான் பிரபாகரன். சங்கரியின் கார் வந்து நிற்க, பதறினான்.

"அம்மா! சங்கரி வந்திட்டாளே... இப்ப என்ன பண்றது?"

"நீ ஏன்ப்பா பதறுறே? அமைதியா இரு. வரட்டும்..."

"என்னம்மா நீங்க? என்னை இங்கே பார்த்தா அவளோட கோபம் இன்னும் அதிகமாகும்."

"பிரபா! நீ உட்காரு. அவ வரட்டும். எல்லாம் பேசிக்கலாம். எதையுமே நேராப் பேசிட்டா எந்தக் கோபமும் வெறுப்பும் வராது. உட்கார் நீ!"

தாட்சாயிணி சொல்ல, அவஸ்தையாய் அமர்ந்தான் பிரபாகரன்.

காரை விட்டு இறங்கிய சிவசங்கரியின் முகம் மாறியது. புருவம் நெரிய வாசலில் நின்ற காரைப் பார்த்தாள்.

இது பிரபாகரனின் கார் ஆயிற்றே. இது ஏன் இங்கு நிற்கிறது? அவன் இங்குதான் இருக்கிறானா?

அதற்காகத்தான் அம்மா அத்தனை அவசரமாய் போன் செய்தார்களா?

மனோவின் விஷயத்தில் லேசாய் மாறியிருந்த கோபம் மீண்டும் விஸ்வரூபம் எடுக்க...

முகம் முழுக்கக் கோபச் சிவப்புடன் விடுவிடுவென வீட்டிற்குள் நுழைந்தாள்.

வாசலுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த பிரபாகரனைக் கண்டதும், ஆத்திரமாய் அவனை நோக்கி வர, லேசான உதறலுடன் பிரபாகரன் தானாய் எழுந்து நின்றான்.



# 18



மௌனமாய்த்தான்
அழுகின்றேன் - எப்படியோ
தெரிந்து விடுகிறதே - என்
கை விரல்களுக்கு!

**நா**கலிங்க மரத்தின் அடர்ந்த கிளைகளில் சின்னஞ் சிறிய கூடு ஒன்று அம்சமாய்ப் பாதுகாப்பாய்க் கட்டப் பட்டிருந்தது. சிறு கிண்ணம் போல் அமைக்கப்பட்டிருந்த கூட்டில் புதிதாய் மூன்று குருவிகள் பிறந்திருந்தன. குருவிக் குஞ்சுகளுக்கு மிகுந்த பசி போலும். 'கீச்கீச்' என விடாமல் கத்திக் கொண்டே இருந்தன.

தாய்க்குருவி தன் சிறகுகளால் வருடிவிட்டும் தன் அலகு மூலம் தலையைக் கோதியும் குஞ்சுகளின் குரல் ஓய்ந்தபாடில்லை. சத்தம் அதிகரித்துக் கொண்டே போகத் தாய்க்குருவி மேலே உள்ள கிளையை நோக்கிச் சற்று வினோதமான ஒலியை எழுப்பியது.

சில நொடிகளில் இன்னொரு குருவி பறந்தோடி வந்தது. கூட்டின் மேல்புறத்தில் நின்றவாறு குஞ்சுகளுக்கு ஏதோ ஊட்டியது. மூன்று குஞ்சுகளும் வாயைத் திறந்து கொண்டே இருக்க, அந்தக் குருவி தன் வாயில் கொண்டு வந்திருந்த உணவைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டு ஊட்டியது.

குருவிக் குஞ்சுகளின் ஓசை லேசாய் அடங்கிவிட, எஞ்சியிருந்த உணவைத் தாய்க்குருவிக்கு ஊட்டியது.

ஓ! இதுதான் தந்தைக் குருவியா? பிள்ளைகளுக்காக இரை தேடச் சென்றிருந்ததோ? கணவனின் வருகைக்காகத்தான் தாய்ப்பறவை அந்த வினோத ஒலியை எழுப்பியதோ!

அற்புதமான கூடு. அருமையான குடும்பம். அனைவரும் பசியாறிவிடத் தந்தைக் குருவி மீண்டும் இரை தேடப் பறந்து சென்றது. தாய்ப்பறவை தன் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் பதுக்கிக் கொள்ள, லேசான ஒலி மட்டுமே கேட்டது. உறங்க ஆரம்பித்து விட்டதோ?

மாடியறையின் ஜன்னல் கம்பியைப் பற்றிக் கொண்டு அந்தப் பறவைக் கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்த நர்மதாவின் விழிகளில் நீர் நிறைந்து கோடாய் இறங்கியது. இதுதான் குடும்பம். ஒரு குடும்பத்தை நடத்தத் தாய், தந்தை என இருவரும் வேண்டும். குழந்தைகளைப் பராமரிக்க, பாதுகாக்கத் தாய் வேண்டும் என்றால்... அவர்களுக்கு உணவளிக்க அவர்களைத் தன் பாதுகாப்பு வளையத்துக்குள் வைத்துக் கொள்ள, மற்றவர்களிடமிருந்து காப்பாற்றத் தந்தை வேண்டும்.

ஆனால் என் பிள்ளைக்கு? மனம் விம்மியது. வயிற்றில் உருவான போதே எல்லா உறவுகளும் உதறித் தள்ளிவிட்டதே! இனி எனக்கும் என் பிள்ளைக்கும் யார் உண்டு? நாளைக் குழந்தை பிறந்து தந்தை எங்கே என்று கேட்குமே...? தந்தையின் தோளுக்கும் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்குமே? அதை எப்படித் தேற்றுவேன்?

பிறக்கப் போவது ஆணோ பெண்ணோ? அதை எப்படி வளர்க்கப் போகிறேன்? எனக்கே போக்கிடம் இல்லாமல் நிற்கிறேனே.... இனி என் பிள்ளைக்கும்



சேர்த்தல்லவா அடைக்கலம் தேடியாக வேண்டும். இரண்டு வயிற்றுக்கும் சேர்த்து உழைக்க வேண்டும். அதற்கான பிழைப்பைத் தேடி அலைய வேண்டும்.

எங்கே சென்று வேலை தேடுவது? எங்கே பாதுகாப்பாய்த் தங்கிக் கொள்வது? இத்தனை நாளாய் இந்த மருத்துவமனையில் அனைவரின் பராமரிப்பில் மனோகரின் பாதுகாப்பில் அவன் நிழலில் வாழ்ந்தாயிற்று. காயமும் ஆறிக்கொண்டு வருகிறது. வயிற்றில் சிசுவும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இனி எத்தனை நாள் இங்கே இவர்களுக்குப் பாரமாய் இருக்க முடியும்? அவர்களாக வெளியேறச் சொல்லும் முன் நாமாக வெளியேறுவதுதானே மரியாதை. இதுவரை தன்னைத் தேடியும் யாரும் வரவில்லையே... எப்படித் தேடுவார்கள்?

நம் வீட்டிற்கு வராமல் இருந்தாலே போதும் என்றிருப்பார்களே தவிர... வீட்டை விட்டு அனுப்பினோமே... அவள் என்ன ஆனாள் என்று வருத்தப்படவோ தேடவோ யார் இருக்கிறார்கள்? தன் மீதே இரக்கம் வரக் கண்களில் கரகரவென நீர் நிற்காமல் வழிந்தது.

"நர்மதா!" - காதோரமாய்க் கேட்ட மென்மையான அழைப்பில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

வழக்கமான புன்னகையோடு நின்றிருந்த மனோகரின் முகம் நர்மதாவின் கண்ணீரைக் கண்டதும் மாறியது. பதட்டமாய் நெருங்கினான்.

"நர்மதா... என்னாச்சு? ஏன் அழறீங்க?"

"டாக்டர்! நான்... எனக்கு..." - விம்மினாள்.

"அழாதீங்க ப்ளீஸ். என்னாச்சு? காயம் வலிக்குதா? உடம்புக்கு எதுவும் பண்ணுதா? அக்காவை வரச் சொல்லவா? முதல்ல உட்காருங்க..." - அவளது தோள் பற்றி அழைத்துக் கட்டிலில் அமர வைத்தான்.

அவனது பரிவு இன்னும் தாக்க, கண்ணீர் அதிகரித்தது. அதைத் துடைத்து விட்டான் மனோகர்.

"நர்மதா! இப்ப ஏன் அழறீங்க? யாராவது எதுவும் சொன்னாங்களா?"

"ம்ஹூம்."

"உடம்புக்கு எதுவும் பண்ணுதா?"

"ம்ஹூம்."

"பிறகேன் அழணும். நான்தான் அழக்கூடாதுன்னு சொல்லியிருக்கேனில்ல..." - சிறு கண்டிப்புடன் அவன் சொல்ல, கண்ணீரோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஏனோ அவனைக் கண்டதும் மீண்டும் கண்ணீர் சுரந்தது.

"நர்மதா! என்னன்னு சொல்லுங்களேன். அழாதீங்க ப்ளீஸ்!"

"டாக்டர்!"

"ம்..."

"என்னை... எப்போ போகச் சொல்வீங்க டாக்டர்?" - சற்றே திணறலாய் அவள் கேட்க, புரியாமல் விழித்தான் மனோகர்.

"எங்கே?"

"இல்லை... எனக்குக் காயம் ஆறிப்போச்சே. உடம்பு குணமானதும் வெளியே அனுப்பிடுவீங்கள்ல?"



"யார் சொன்னது?"

"டாக்டர்!" - வியப்பாய் விழிகளை விரித்தாள்.

"இதோ பாருங்க நர்மதா. உங்களுக்கா தோணும் வரை உங்களை எங்கும் அனுப்புவதாக இல்லை."

"டாக்டர்! அதுக்காக... நான் எவ்வளவு நாள் இங்கே இருக்க முடியும்? உங்களுக்கும் சிரமம்தானே?"

"நர்மதா! என்ன பேசுறீங்க?"

"டாக்டர்! எனக்கு... உங்க ஹாஸ்பிடல்லயே ஏதாவது வேலை போட்டுத் தர்றீங்களா?" - தயக்கமாய்க் கேட்டாள்.

"வேலையா?"

"எந்த வேலையா இருந்தாலும் போதும், டாக்டர். கொடுக்கிற வேலையைச் செய்துட்டு இப்படி ஓரமா இருந்துக்கிறேன்."

"நர்மதா...!"

"டாக்டர்! எனக்கு வெளியே யாரையும் தெரியாது. உங்களை... இந்த ஹாஸ்பிடலை விட்டுப் போக எனக்குப் போக்கிடமும் கிடையாது. இதைவிடப் பாதுகாப்பான இடமும் கிடைக்காது டாக்டர்!"

"இதைவிடப் பாதுகாப்பான இடம் கிடைச்சா போயிடுவீங்களா?"

"டாக்டர்! நீங்க... அந்த... அனாதை ஆசிரமத்தைச் சொல்றீங்களா?" - கேட்கும்போதே உடல் நடுங்கியது.

"சேச்சே! இது வேற இடம்."

"வேண்டாம் டாக்டர்! எனக்கு இங்கேயே ஏதாவது வேலை கொடுங்க. வேலை செய்து உங்க கடனை அடைச்சிடுறேன்."

"கடனா? என்கிட்ட எப்போ வாங்கினீங்க?"

"என்ன டாக்டர்! எனக்காக எவ்வளவு செலவு பண்ணியிருக்கீங்க? அதெல்லாம் கடன்தானே! நான் திருப்பித் தரவேண்டாமா?" - இயல்பாய்க் கூற, மனோகரின் முகம் மாறியது.

சில கண நேர மௌனத்திற்குப் பிறகு எதுவும் பேசாமல் வெளியேற முயன்றவனைக் குரல் கொடுத்துத் தடுத்தாள் நர்மதா.

"டாக்டர் ஸார்! என்ன ஒண்ணுமே பேசாம கிளம் பிட்டீங்க. நான்... எதுவும் தப்பா சொல்லிட்டேனா?"

"இல்லை. நான்தான் தப்பா நினைச்சிட்டேன்..." - திரும்பியும் பாராமல் அவன் சொல்ல, எழுந்து அவன் முன் வந்து நின்றாள்.

"என்ன? தப்பா நினைச்சீங்களா... யாரை?"

"ஸாரிங்க... நான் ஏதோ மனிதாபிமானத்தோட இதையெல்லாம் செய்தேன். ஆனா உங்க கண்ணுக்குக் கடன்காரன் மாதிரி தெரியுறேன் போலிருக்கு."

"ஐயோ டாக்டர்! என்ன இப்படிச் சொல்றீங்க?"

"நீங்கதானே இப்போ சொன்னீங்க?"

"இல்லை டாக்டர். நான் சும்மா...."

"நோ... நோ... மனசுல உள்ளதுதான் வார்த்தையில வரும். உங்க மனசுல நான் ஒரு கடன்காரனாத்தான் இருக்கேன்."



விசுக்கெனக் கண்ணீர் எட்டிப் பார்த்தது. "அந்த வார்த்தையைச் சொல்லாதீங்க டாக்டர். உங்களை நான் தெய்வமா நினைச்சுட்டு இருக்கேன். நீங்க மட்டும் என்னைக் காப்பாத்தலைன்னா நானும் என் புள்ளையும் எப்பவோ காத்தோட கரைஞ்சு போயிருப்போம்."

"நர்மதா! இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு சொன்னேனே..."

"ஆமா ஸார். அன்பு காட்டுற அம்மாவா... கண்டிப்புல தகப்பனா... ஆறுதல் சொல்ற தோழியா... கருணையில கடவுளா... இது எல்லாம் மொத்தமான உருவமாத்தான் என் கண்ணுக்குத் தெரியறீங்க!

"என் கூடப் பொறந்தவனுக்கோ என் புகுந்த வீட்டுச் சொந்தத்துக்கோ இல்லாத அன்பு, அக்கறை எல்லாம் உங்ககிட்ட பார்க்கிறேன் ஸார். இந்த அன்பான தெய்வத்தை விட்டு வேற எங்கும் போகப் பிடிக்காமத்தான் இங்கேயே வேலை கேட்டேன். அதில தெரியாம ஒரு வார்த்தையை விட்டுட்டேன். மன்னிச்சிடுங்க... டாக்டர்!" - எனக் கைகூப்பிய வளைத் தடுத்தான் மனோகர்.

"நர்மதா! அழாதீங்க. நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். "

"ஆனா... நான் இப்போ சொன்னது எல்லாமே சத்தியமான வார்த்தைகள் டாக்டர்! எனக்கு ஏதாவது வேலை தருவீங்களா?"

"நர்மதா! இந்த நிலைமையில என்ன வேலை செய்வீங்க?" - அவன் எதைக் குறிப்பிடுகிறான் எனப் புரிந்ததும் விரக்தியாய்ச் சொன்னாள்.

"நான் வேலை கேட்டதே இதற்காகத்தான் டாக்டர்!" - என்றாள் தனது மேடிட்ட வயிறைப் பார்த்தபடி.

"நர்மதா! நான் சொல்றபடி செய்யுறீங்களா?"

"சொல்லுங்க டாக்டர்!"

"நீங்க என் வீட்டுக்கு வந்திடுறீங்களா?" - நிதான மாய் அவன் கேட்டதும் திகைத்துப் போனாள் நர்மதா. பார்வையில் லேசாய்ப் பயரேகை தோன்றியது.

"டாக்டர்!"

"நர்மதா! வீட்ல அம்மா இருக்காங்க. நானும் அக்காவும் இங்கேயே முழு நேரத்தையும் செலவாக் கிடுறோம். அம்மாவோட உட்கார்ந்து பேசக்கூட டயம் கிடைக்கிறதில்ல... பாவம் அம்மா! ரொம்பக் கஷ்டப்படுறாங்க, தனியா இருக்க. அதான் உங்ககிட்ட கேட்கிறேன். எங்க வீட்டுக்கு வந்திடுறீங்களா?"

மனோகரின் பதிலில் சுவாசம் சீராக, மெல்ல மூச்சுவிட்டாள். ஒரே கணத்தில் இவரைத் தப்பாக நினைத்து விட்டோமே! பதறிய மனதைத் தட்டி அடக்கினாள்.

"நர்மதா! உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா வேண்டாம்."

"அப்படியில்ல டாக்டர்! இதுக்கு உங்க அம்மா... அக்கா ஒத்துப்பாங்களா?"

"அவங்ககிட்ட நான் பேசுறேன். உங்களுக்கும் பாதுகாப்பான இடம் அமையணும். அது எங்க வீடா இருந்தா உங்களைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாம என்னோட வேலையை நான் பார்க்க முடியும். அம்மாவுக்கும் பேச்சுத் துணைக்கு ஆள் கிடைச்ச மாதிரி இருக்கும்.



"அம்மா உங்களை நல்லாப் பார்த்துப்பாங்க நர்மதா! ரொம்ப நல்லவங்க. பார்த்ததுமே உங்களுக்குப் பிடிச்சிடும். எந்தப் பயமும் வேண்டாம். வர்றீங்களா?"

"வர்றேன் டாக்டர். உங்க அம்மாவாச்சே... நிச்சயமா நல்லவங்களாத்தான் இருப்பாங்க. ஆனா...?"

"என்ன நர்மதா?"

"ஸார்! வந்து...."

"சும்மா சொல்லுங்க."

"டாக்டர்! எம் புள்ளை உண்டான நேரம்தான் தன்னோட..."

"ப்ளீஸ் நர்மதா! நான் ஒண்ணும் பத்தாம்பசலி இல்லை. இந்த மாதிரி ஸில்லித்தனமான மூடநம்பிக்கை யெல்லாம் தூக்கிக் குப்பையில போடுங்க. இந்த நினைப்பு உங்களுக்கு வரவே கூடாது."

"ச... சரிங்க டாக்டர்!"

"நீங்க வேணா பாருங்க நர்மதா. இந்த ஜூனியர் வர்ற நேரம் எங்க வீட்ல எல்லாமே நல்லதே நடக்கப் போகுது!" - மனோகர் சொன்னதும் புன்னகைத்தாள். கண்களில் நீர் கோர்த்தது.

"தேங்க்யூ டாக்டர்!"

"எதுக்கு?"

"எம்புள்ளையைப் பத்தி முதன்முறையா நீங்கதான் நல்ல விதமா பேசறீங்க. அதான்... ரொம்ப நன்றி டாக்டர்!"

"நர்மதா! நல்லதோ கெட்டதோ நாம செய்யுற செயலைப் பொறுத்துதான் எல்லாம் நடக்கும். இதுக்காக

யாரையும் நாம குறை சொல்லக் கூடாது. வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க."

"சரிங்க டாக்டர்!"

"சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. இன்னும் ரெண்டு நாள்ல நம்ம வீட்டுக்குப் போயிடலாம்."

"ம்..."

"மெடிஸன் எல்லாம் கரெக்ட்டா சாப்பிடுறீங்களா?"

"ம்... சாப்பிடுறேன்."

"சரி... நான் வரட்டுமா?"

"டாக்டர்!"

"ம்?"

"உங்க வீட்ல என்னைக் கூட்டிட்டுப் போனா எதுவும் சொல்ல மாட்டாங்கள்ல...?"

"நர்மதா! உங்களை இப்பவே கூட கூட்டிட்டுப் போயிடலாம். ஆனா திடுதிப்புன்னு போய் நின்னா நம்மளை அம்மா வேற மாதிரி நினைச்சுக்கக் கூடாதில்ல... அதனால நான் வீட்ல போய் அம்மாகிட்ட பேசிட்டு அழைச்சிட்டுப் போறேன். அதோட அம்மாவுக்கும் ரொம்ப நாள் ஆசை..."

"என்ன ஆசை?"

"தன்னோட பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வெக்கணும். அவளுக்குப் பிரசவம் பார்க்கணும். பேரக் குழந்தைகளைச் சீராட்டி வளர்க்கணும்னு... அது உங்க மூலமாவது நிறைவேறட்டுமே...!"

"டாக்டர்?"



"நர்மதா! உங்களுக்கு யாருமே இல்லைன்னு நினைச்சு இனிமே வருத்தப்படாதீங்க. நாங்க இருக்கோம். நம்ம வீடு இருக்கு. இந்தக் குழந்தை ராஜயோகத்தோட பிறக்கப் போகுது. ராஜாவாட்டம் வளரப் போகுது."

"போதும் டாக்டர்! எனக்கு இது போதும். வேற எதுவும் வேண்டாம்!" - கண்கள் கசியச் சொன்னவளைப் பார்த்துப் புன்னகைத்தான் மனோகர்.

"நர்மதா! உங்களுக்கு இன்னும் எவ்வளவோ நல்லது நடக்கப் போகுது. நீங்க இழந்ததெல்லாம் திரும்பக் கிடைக்கப் போகுது."

"டாக்டர்!"

"சீக்கிரமே உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வருவேன்."

"எ... என்ன நல்ல செய்தி?" - லேசான திடுக்கிடலோடு கேட்டாள்.

"அது சஸ்பென்ஸ்!"

"டாக்டர்! சொல்லிட்டுப் போங்களேன்."

"ம்ஹூம். சொல்ல மாட்டேன். செயல்ல காட்டுறேன். வரட்டுமா?" - புன்னகையோடு அவன் வெளியேற, குழப்பமாய்க் கட்டிலில் அமர்ந்தாள்.

'என்ன நல்ல செய்தி? எதைச் செயலில் காட்டப் போகிறார்?' - தன் எதிர்காலத்தைப் பற்றிய பயம் போய்விட, புதிதாய்த் தோன்றிய பயத்துடன் கண்களை மூடிக் கொள்ள, அதே இருளான பாதை - கனவு - வந்து இன்னும் மிரட்டியது. கண்களைத் திறந்து கொண்டு திடுக்கிடலோடு எழுந்தாள்.

இது என்ன கொடுமையான கனவு! ஒரு நிமிடமும் கண்களை மூட விடாமல் இம்சிக்கிறதே! அன்று கணவனின் சடலத்தைப் பார்த்த நாளில் தொடங்கிய கனவு இது. இன்று வரை மிரட்டுகிறதே! மனதின் ஆழத்தில் புதைந்தவைதானே கனவாய் வரும் என்பார்கள்?

இனி என் வாழ்வு இருள் நிறைந்த முள்காடு என்பதைச் சொல்லாமல் சொல்கிறதோ இந்தக் கனவு. சில நாட்களாய் மருந்துகளின் உதவியோடு உறங்கியதில் மறைந்து போயிருந்த கனவு இன்று மீண்டும் பயம் வந்ததும் திரும்ப வருகிறது.

டாக்டர் போகும்போது ஏன் அப்படிச் சொல்லிவிட்டுப் போனார்? எதை எண்ணிப் பயப்படுகிறேன்? என்ன சொல்லப் போகிறார்? இவரை நம்பி இவரது வீட்டிற்குப் போகலாமா? அவர்கள் என்னை ஏற்றுக் கொள்வார்களா? பலவிதச் சிந்தனைகளோடு மெல்ல அறையை விட்டு வெளியேறி, நீளமான வராந்தாவில் நடை போட்டுக் கொண்டிருந்தாள்.

மாலை வேளையில் கொஞ்ச நேரம் நடப்பது உடம்புக்கும் குழந்தைக்கும் ஆரோக்கியம் என ஜான்ஸி சொல்லியிருந்தாள். அறைக்குள் அடைந்து கிடப்பதை விட, இப்படி வராந்தாவில் காலார நடப்பது மனதுக்கும் இதமாகவே இருந்தது.

வரிசையாய் இருந்த அறைகளில் பெரும்பாலான அறைக் கதவுகள் மூடப்பட்டே இருந்தன.

சில அறைகளில் உறவினர் கூட்டம் கலகலத்தது. விசாரிப்புகள்... அறிவுரைகள்... ஆறுதலான பேச்சுகள்... தனக்குத்தான் எந்த உறவுகளும் வரவில்லை.



விரக்தியான புன்னகையோடு ஒரு அறையைக் கடக்கையில்... அந்த அறையின் கதவைத் திறந்து யாரோ வெளியில் வர, சற்று ஒதுங்கியே நடந்தாள். வெளியே வந்த அந்தப் பெண் நர்மதாவைப் பார்த்துவிட்டு, உற்சாகமாய்க் கூவினாள்.

"அண்ணி!"

நடந்து கொண்டிருந்தவள் சட்டென நின்றாள். 'இது... இது உமாவின் குரல் ஆயிற்றே!' திரும்பியவளின் கண்கள் மலர்ந்தன.



# 19

விஷம் என்று நினைத்தது
அமுதமாகிப் போனது!
மெய்யென்று எண்ணியது
பொய்யாகிப் போனது!

நேராய்ப் பிரபாகரனை நெருங்கிய சிவசங்கரி, கொத்தாய் அவனது சட்டையைப் பற்றினாள். கண்களில் கனல் பறக்க, உறுத்து விழித்தாள்.

"உன் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கே? என் தம்பியை எனக்கெதிரா தூண்டி விட்டே... எவளோ ஒருத்தியை அனுப்பி மிரட்டின... இப்போ என் அம்மாவையும் உன் பக்கம் இழுக்கலாம்னு வந்தியா? வெளியே போடா!"

"சங்கரி! நான் எதுவும் பண்ணலை?"

"நீ சொல்லாமலா அவ என் ஹாஸ்பிடலுக்கு வந்து என்னையே மிரட்டிட்டுப் போறா? என்னவோ சொன்னி யாமே! நான் கல்யாணம் பண்ணினதும் அவளைக் கட்டிக்கிறேன்னு..."

"இல்லை சங்கரி! அப்படி எதுவும் நான் சொல்லலை. அவளே..."

"வாயை மூடு. உன்னைப் பத்தி எனக்குத் தெரி யாது? நீ..." என்றவளை அவனிடமிருந்து விலக்கினாள் தாட்சாயிணி.

"விடுடி அவரை! ஒரு வளர்ந்த ஆம்பிளைய சட்டையைப் பிடிச்சிட்டு சண்டை போடுற... அசிங்கமா இல்லே?"

"அம்மா! உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. இவன்..."

"நிறுத்துடி. உனக்கு என்ன தெரியும் இவரைப் பற்றி?"

"அம்மா...!"

"கத்தாதே! பூனை கண்ணை மூடிக்கிட்டு உலகமே இருண்டு போச்சுன்னு சொல்ற மாதிரி! இன்னும் எத்தனை வருஷம்தான் இப்படிக் குருடாவே இருப்பே?"

"அம்மா ப்ளீஸ்! சங்கரியைத் திட்டாதீங்க. நான்... நான் கிளம்புறேன்!" - எனப் பிரபாகரன் நகர, அவனை நிறுத்தினாள் தாட்சாயிணி.

"அட நில்லுப்பா! இவளுக்குப் பயந்துட்டு ஏன் போறே?"

"பயமில்லைம்மா. ப்ரியம். நான் சங்கரி மேல வெச்சிருக்கிற உண்மையான ப்ரியம். என்னால அவ மனசு எப்பவுமே கஷ்டப்படக் கூடாது."



"நிறுத்து. பெரிய புத்தன் மாதிரிப் பேசாதே. இப்படி யெல்லாம் பேசினா அப்படியே மயங்கி உன் பின்னாடி வந்திடுவேன்னு நினைச்சியா? அதுக்கு வேற ஆளைப் பாரு!"

"சங்கரி! ஆத்திரம் கண்ணை மறைக்கலாம். ஆனா புத்தியை மறைக்கக் கூடாது. ஏன் இப்படி மாறிட்டே?"

"எல்லாத்துக்கும் காரணம் நீதானே! கேவலம் பணத்துக்கு ஆசைப்பட்டு எங்க அப்பாவைக் கொன்ன கொலைகாரன் நீ! நீ கொன்னது என் அப்பாவை மட்டுமில்ல... என் மனசையும்தான்..."

"சங்கரி! இப்பவும் சொல்றேன். நீ என்னைத் தப்பா புரிஞ்சிட்டு இருக்க... நான் எந்தத் தப்பும் பண்ணலை. என்னை நம்பு!"

"உன்னை நம்புறதா? கடுமையான விஷத்தோட உலவுற நாகத்தைக்கூட நம்பலாம். உன்னை நம்பக் கூடாது. நீ துரோகி. நம்பிக்கைத் துரோகி. என்னையும் என் அப்பாவையும் நம்ப வைத்துக் கழுத்தறுத்த துரோகி."

"சங்கரி! வாயை மூடு."

"அம்மா! நீங்க பேசாதீங்க. எப்படி வாழ்ந்தவங்க நீங்க. இன்னிக்கு பூவிழந்து பொட்டிழந்து வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்து நிரந்தரமான நோயாளி ஆனதுக்கு யார் காரணம்? இவன்தானே! இவனை வீட்டுக்குள்ள விட்டதே தப்பு! ஏன் விட்டீங்க?"

"வேண்டாம் சங்கரி. அம்மாவைத் திட்டாதே... ஏற்கெனவே அவங்க உடம்பு முடியாம இருக்கு..."

"என் அம்மாவைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ வெளியே போ!" - வாசலை நோக்கிக் கை நீட்டினாள். பிரபாகரின் முகம் விரக்தியாய்ப் புன்னகைத்தது.

"போறேன். கடைசி வரை நீ மாறப் போறதில்ல... உன்னைத் தவிர எனக்கு வேற வாழ்க்கையும் இல்லை. நான் போயிடுறேன். உன்னை விட்டு நிரந்தரமாப் போயிடுறேன்..." - என்றவாறு விருட்டென விலகி வெளியேறினான்.

பெரிதாய் மூச்சு வாங்கியவாறே இருக்கையில் பொத்தென அமர்ந்தாள்.

மகளை நெருங்கினாள் தாட்சாயிணி.

"ரொம்ப நல்ல காரியம் பண்ணியிருக்கே... ஒரு அற்புதமான பிள்ளையோட மனசைக் கொன்னுட்டே... இப்ப அவர் சொல்லிட்டுப் போறதைப் பார்த்தா நீதான் கொலைகாரியா நிற்கப் போறே!"

"அம்மா!"

"அப்படிக் கூப்பிடாதே. நீ என் மக இல்லை. என் மகளுக்கு என்னோட பொறுமையில பாதியாவது இருந்திருக்கும். நீ என் பெண்ணே இல்லை."

"அம்மா!"

"உனக்கு அப்படியே உன் அப்பன் புத்தி. யாரையும் பேசவிடாம தானே பேசி முடிச்சிடுற ஆணவம். அடுத்தவங்க மனசை நம் பேச்சு பாதிக்குமேங்கிற உணர்வு இல்லாத அகம்பாவம். அப்படியே அந்த மனுஷனோட கேவலமான புத்திதான் உனக்குக் கொட்டிக் கிடக்குது."

"அம்மா! அப்பாவைப் பத்தித் தப்பா பேசாதீங்க."



"தப்பா பேசலைடி. உண்மையைப் பேசுறேன். இத்தனை வருஷமா மனசுக்குள்ளேயே போட்டுப் புழுங்கிட்டு இருந்த உண்மையைப் பேசுறேன்."

"அம்மா!"

"பிரபா உத்தமர்டி. அவரை மாதிரி ஒரு புள்ளை யாருக்கும் கிடைக்காது. உன் அதிர்ஷ்டம்... உன்னைத் தேடி அவரே வந்தார். ஆனா நீ..."

"அம்மா! மறுபடி மறுபடி அவனுக்கே சப்போர்ட் பண்ணிப் பேசாதீங்க. அவனைப் பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாது."

"தெரியும்டி. எல்லாம் தெரியும். உனக்குத்தான் எதுவும் தெரியாது."

"அம்மா...!"

"உன் அப்பாவைக் கொன்னுட்டான்னு வார்த்தைக்கு வார்த்தை அந்தப் புள்ளை மேல பழியைப் போடுறியே...! உன் அப்பா எப்படிச் செத்தார்ன்னு உனக்குத் தெரியுமா?" - ஆவேசமாய்க் கேட்ட தாயைக் குழப்பமாய்ப் பார்த்தவாறு எழுந்து நின்றாள் சிவசங்கரி.

"அம்மா! எ... என்ன சொல்றீங்க?"

"உன் அப்பா ஒண்ணும் வரதட்சிணைப் பணம் கொடுக்க முடியலையேன்னு வருத்தப்பட்டு நெஞ்சுவலி வந்து சாகலை!"

திக்கென அதிர்ந்தாள். "பி... பின்னே?"

"செய்த தப்புக்குப் பயந்து... அளவுக்கதிகமா குடிச்சதாலதான் செத்தார்."

"அம்மா!" - கத்தினாள் சிவசங்கரி.

"நம்ப முடியலை இல்லே... உங்கப்பா குடிப்பாருன்னு சொன்னதுக்கே இப்படிக் கத்துறியே...? அவர்கிட்ட இல்லாத கெட்ட பழக்கமே இல்லைன்னு சொன்னா நம்புவியா? அந்தப் பழக்கங்களை விட முடியாம மேலும் மேலும் கடனாளியா ஆனார்ன்னு சொன்னா நம்புவியா?"

"அம்மா! என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படி அப்பாவைப் பத்தி தப்புத் தப்பா பேசுறீங்க?"

"இல்லடி... நீதான் தப்பாப் புரிஞ்சிட்டு இருந்தாய். இத்தனை வருஷமா தன்னோட தப்பை உங்க அப்பா சாமர்த்தியமா மறைச்சிட்டு இருந்தார் உங்ககிட்ட... ஆனா கூடவே இருந்து எல்லாவிதக் கஷ்டங்களையும் அனுபவிச்சவ நான். எனக்குத் தெரியாதா?

"சங்கரி! எந்தத் தாயும் பெத்த பொண்ணுகிட்ட சொல்லக் கூசுற விஷயம் இது. ஆனா சொல்ல வேண்டிய கட்டாயத்தில நான் இருக்கேன். சொன்னா தாங்கிக்க முடியுமா... உன்னால?"

"எ... என்னம்மா?"

"உன் அப்பாவுக்கு நான் மட்டும் மனைவியில்ல..."

"அம்மா... ஆ ஆ..."

"இது சத்தியமான உண்மை. உன் அப்பாவுக்குத் தினம் ஒரு பொண்ணு வேணும்."

"நோ... நோ... நான் நம்ப மாட்டேன்..." - காதுகளை மூடிக் கொண்டாள் சிவசங்கரி. உடல் நடுங்கியது.



"நீங்க பொய் சொல்றீங்க. பிரபாவுக்காகத்தானே இப்படியெல்லாம் பேசுறீங்க? கட்டின புருஷனையே இழிவு படுத்த எப்படியம்மா உங்களுக்கு மனசு வந்தது?"

அப்போதுதான் வாசலுக்கு வந்த மனோகர் சகோதரியின் கேள்வியில் திடுக்கிட்டான். ஏதோ பெரிதாய் வாக்குவாதம் நடந்திருப்பதை உணர்ந்து தயக்கமாய் உள்ளே நுழைந்தான். தம்பியைக் கண்டதும் வீறிட்டுக் கொண்டே தம்பியிடம் ஓடினாள் சிவசங்கரி.

"தம்பி! இந்த அம்மா... நம்ம அப்பாவைப் பத்தி அசிங்கமாப் பேசுறாங்கடா. அம்மா ஏன் இப்படி மாறினாங் கன்னு கேளுடா...!"

மனோகர் திகைப்பாய்த் தாயை ஏறிட்டான். "அம்மா! என்ன இது?"

"மனோ! கதவைச் சாத்திட்டு ரெண்டு பேரும் என்கூட வாங்க!" - என்றவாறு தந்தையின் அறையை நோக்கிச் சென்றாள். புரியாத பார்வையோடு கதவைப் பூட்டிவிட்டு இருவரும் தாயைப் பின்தொடர, தாட்சாயிணி மகனை அழைத்தாள்.

"மனோ! மேலே உள்ள கப்போர்டுல ஒரு லெதர் பேக் இருக்கும்... எடு."

"அதுல என்னம்மா இருக்கு?"

"எடு... சொல்றேன்!" - உறைந்த குரலில் அன்னை சொல்ல, மறுபேச்சின்றிக் கட்டிலின் மேல் ஏறி நின்று, சற்று எம்பி அந்தக் கறுப்புநிறத் தோள்பையை எடுத்தான். அதை வாங்கிக் கட்டிலின் மேல் வைத்தாள்.

"ரெண்டு பேரும் உட்காருங்க!" - என்றவாறு கட்டிலில் அமர்ந்து அந்தப் பையைத் திறந்தாள். லேசாய்த் துருப் பிடித்திருந்த ஜிப் லேசாய்த் திணறிவிட்டுத் தன் வாயைத் திறந்தது. அதற்குள் கைவிட்டு, ஒரு வெள்ளைநிறக் கவரை எடுத்துச் சிவசங்கரியின் கையில் கொடுத்தாள்.

"பிரிச்சுப் பாரு!"

"எ... என்ன இது?"

"உன் அப்பாவோட லீலைகள்..." - என்றாள் வெறுப்பாய்.

"அம்மா!" - சிவசங்கரியின் குரல் நடுங்கியது.

"உன் கல்யாணம் நின்னு போனதற்குப் பிரபாவோ அவன் அம்மாவோ காரணம் இல்லம்மா... இந்தப் போட்டோக்கள்தான் காரணம். பிரிச்சுப் பாரு!"

விரல்கள் நடுங்க அந்தக் கவரைப் பிரித்தாள். வழுக்கிக் கொண்டு மடிமேல் சிதறிய போட்டோக்களைப் பார்த்த மனோவும் சிவசங்கரியும் உறைந்து போயினர். அனைத்துப் போட்டோக்களிலும் விஸ்வநாதன் அரைகுறை ஆடையோடு பல பெண்களோடு புரண்டு கொண்டிருந்தார்.

தீயைத் தொட்டதுபோல் அவற்றைத் தட்டி விட்டாள் சிவசங்கரி. உடல் முழுக்கக் கூசியது. அனைவருமே இளம்பெண்கள். பணத்திற்காக உடம்பை விற்பவர்களாக இருக்குமோ? இவர்களுடனா அப்பா அலைந்தார். அதுவும் இத்தனை வயதிற்கு மேல்... வீட்டில் வளர்ந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு... குமட்டியது.

மனோவின் கண்கள் இரத்தமெனச் சிவந்தன. தாயின் தோளைப் பற்றி உலுக்கினான்.



"அம்மா! என்னம்மா இதெல்லாம்?"

"சொல்றேன்ப்பா... சொல்லக் கூசினாலும் சொல்லித் தான் ஆகணும்..." - உலர்ந்திருந்த கண்களால் சுவரில் மாட்டப்பட்டிருந்த கணவனது புகைப்படத்தை வெறித்தாள் தாட்சாயிணி.

"உங்க அப்பாவை எனக்குக் கல்யாணம் செய்தப்போ உங்க அப்பா ஒரு டாக்டர்கிட்ட வேலை செய்திட்டு இருந்தார். பார்க்க கம்பீரமா இருந்ததால எங்க அப்பாவுக்கு உடனே பிடிச்சுப் போச்சு. இவர்தான் தன் மருமகன்னு முடிவு பண்ணி என்னைக் கட்டி வெச்சாங்க. நான் வீட்டுக்கு ஒரே பொண்ணுங்கிறதால எல்லாச் சொத்தையும் எனக்குத் தந்து உங்க அப்பாவுக்கு அஞ்சு மாடி உயரத்தில ஒரு ஆஸ்பத்திரியும் கட்டிக் கொடுத்தாங்க."

"ஹாஸ்பிடலா? இப்போ எங்கேம்மா அது?"

"அது இப்ப ஏதோ ஒருத்தி கைக்குப் போய் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலா மாறிடுச்சு."

"மை காட்!"

"ஆரம்பத்துல உங்க அப்பா என்கிட்ட நல்ல விதமாத்தான் இருந்தார். ஆனா பணமும் சொத்தும் கைக்கு வந்ததும் உங்க அப்பாவோட செயல்பாடுகள் மாறிப் போச்சு. வேளாவேளைக்கு வீட்டுக்கு வர்றது நின்னு போச்சு. கேட்டா வேலை அதிகம்னு சொல்வார். நானும் நம்பினேன். மருத்துவத் தொழில்ல இதெல்லாம் சகஜம்தானேன்னு விட்டுட்டேன்.

"ஆனா அதுதான் பெரிய தப்பாப் போச்சு. நீங்க ரெண்டு பேரும் பிறந்த பிறகு எனக்கு உங்களைக்

கவனிக்கிறதே முழு நேர வேலையாப் போச்சு. உன் அப்பாவோட ஆட்டமும் அப்பத்தான் அதிகமாகிப் போச்சு. சாதாரணமா நான் எங்கேயும் வெளியே போறதில்ல...

"சங்கரி பெரியவளானதும் அவளுக்குத் தேவையான நகைகள் வாங்க நானும் என் அப்பாவும் ஒரு நகைக் கடைக்குப் போனோம். அப்பத்தான் அவரை முதன் முறையா வேற ஒரு பொண்ணோட பார்த்தேன். வைர நகை செக்ஷன்ல...!"

"யாரும்மா அது?"

"எனக்குத் தெரியாது. ஆனா அவகூட உரசிக்கிட்டு ஒவ்வொரு நகையா அவளுக்கு மாட்டி அழகு பார்த்திட்டு இருந்தார். துரதிர்ஷ்டவசமாய் அதை என் அப்பாவும் பார்த்திட்டார். அப்பவே என் அப்பா பாதி செத்துட்டார். தட்டிக் கேட்கணும்னு துடிச்சவரை நான்தான் தடுத்தேன்."

"ஏன்மா?"

"வீட்ல வயசுக்கு வந்த பெண்ணை வெச்சுக்கிட்டு எப்படி அவர்கிட்ட இதைப் பத்திக் கேட்கிறது? பகல் முழுக்க அவர் வீட்டுக்கு வர்றதில்ல... முழு நேரமும் தண்ணியில மூழ்கிட்டு இருந்ததால ஹாஸ்பிடல்ல மத்த டாக்டர்ஸ் அவங்க விருப்பத்துக்குக் கொள்ளையடிக்க ஆரம்பிச்சிட் டாங்க. அதைக்கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு உங்க அப்பா போதையில விழுந்து கிடந்திருக்கார்.

"கடைசியா ஹாஸ்பிடலும் போன பிறகுதான் என் அப்பா சுதாரிச்சார். மிச்சமிருந்த சொத்தை உங்க பேர்ல எழுதிட்டாங்க. உங்க படிப்புக்கான முழுச் செலவையும்



அவரே செய்தார். நீங்க படிப்பை முடிக்கிற நேரம் கண்ணையும் மூடிட்டார்.

"அதுக்கப்புறம் உங்க அப்பாவோட டார்ச்சர் அதிகமாச்சு. பணம் கொடுன்னு நச்சரிக்க ஆரம்பிச்சார். நானும் உங்களுக்கு ஒரு நல்லது நடக்கிற வரை இதெல்லாம் சகிச்சுத்தான் ஆகணும்னு மனசையும் உடம்பையும் கல்லாக்கிக் கொண்டு இருந்தேன்.

"அந்த நேரம்தான் பிரபாவோட வீட்ல இருந்து உன்னைப் பெண் கேட்டு வந்தாங்க. மாப்பிள்ளையைப் பார்த்ததும் எனக்கு ரொம்ப சந்தோஷம். உன்னை விரும்பித் தேடி வந்தது தெரிஞ்சதும் நிச்சயமா நம்ம பொண்ணு நல்லா இருக்கும்னு உடனே சம்மதிச்சேன்.

"சங்கரி! நீ நினைக்கிற மாதிரி பிரபா வீட்ல யாருமே வரதட்சிணை கேட்கலைம்மா. உன்னை மட்டும்தான் கேட்டாங்க."

"அம்மா!"

"ஆமாம்மா. நல்லபடியா நிச்சயதார்த்தம் முடிஞ்ச பிறகு உன் அப்பாதான் பிரபா வீட்ல போய் வரதட்சிணையா அஞ்சு லட்சம் தர்றேன்னு சொல்லியிருக்கார்."

"என்ன?"

"ம்... அவர் பொண்ணு புகுந்த வீட்டுக்குப் போகும்போது கௌரவமாத்தான் போகணும். நாளைக்கு அவ புருஷனோ மாமியாரோ நீ என்ன கொண்டு வந்திட்டே என்று ஒரு வார்த்தை கேட்டுடக் கூடாது. போற இடத்தில தன்னோட பொண்ணு வருத்தப்பட்டுக் கண்ணீர் சிந்தக் கூடாதுன்னு ஆயிரம் காரணம் சொன்னார்.

"நானும் நம்பினேன். அவர் எவ்வளவு மோசமான வராய் இருந்தாலும் உங்க விஷயத்தில ரொம்ப அன்பாத் தான் இருந்தார். அதுவும் சங்கரி மேல அலாதி ப்ரியம். அதனால பொண்ணுக்குக் கல்யாணம்னதும் மாறிட்டார்ன்னு நினைச்சேன். கல்யாணச் செலவுக்குன்னு அவர் கேட்ட பணத்தையெல்லாம் தயங்காம கொடுத்தேன். ஆனா..."

"ஆனா... என்னம்மா?"

"எப்படிச் சொல்லுவேன்?"

"ஏம்மா... என்னாச்சு?"

"என்கிட்ட வாங்கின மொத்தப் பணத்தையும் குடிக்கிற துக்கும் கூத்தடிக்கிறதுக்கும்தான் செலவழிச்சிருக்காரு!" - என்றாள் கசப்பாய்.

"என்ன? திரும்பவுமா?"

"அவர் அதையெல்லாம் நிறுத்திட்டதா நான்தான் நினைச்சிட்டு ஏமாந்திருக்கேன். ஆனா அவர் நிறையப் பேர்கிட்ட கடன் வாங்கி அவரோட வேலையைச் செய்திட்டுத் தான் இருந்திருக்கார்."

"ச்சே...!" - வெறுப்பாய் முகம் சுழித்தாள் சங்கரி.

"அவரோட சாமர்த்தியத்தால நமக்கெல்லாம் தெரியாம மறைச்சிருக்கார். அவர் அதை மட்டும் மறைக்கலை."

"வேற?"

"ஏற்கெனவே சில சமயம் நெஞ்சுவலி வந்திருக்கு. அதைக்கூடச் சொல்லலை. டாக்டர் இனிமே குடிக்கவே கூடாது. அது உயிருக்கே ஆபத்தாயிடும்னு சொன்னதைக்



காதிலேயே வாங்காம இருந்திருக்கார். இதெல்லாம் எனக்குக் கடைசி நேரத்திலதான் தெரிஞ்சது."

"இது... இதெல்லாம் எப்படிம்மா உங்ககிட்ட வந்தது?" - போட்டோவைக் காட்டிக் கேட்டான் மனோகர்.

"சங்கரியோட கல்யாணத்திற்கு முந்திய நாள் வந்தது. அந்த நாளை என்னால என் கடைசி மூச்சு வரைக்கும் மறக்கவே முடியாது!" - முகம் முழுக்க வேதனையோடு கண்களை மூடிக் கொண்டாள் தாட்சாயிணி.



## 20

முடிவே இல்லாத பாதையில்
பயணிக்கின்றேன் - முடிவாய்
நீ இருப்பாய் என்று!

மாப்பிள்ளை அழைப்பு முடிந்து திருமண மண்டபம் முழுக்கக் கூட்டம் நிறைந்து வழிய, தாட்சாயிணி தன் கணவரைத் தேடி அலைந்தாள். வந்திருந்த உறவினர் களைக் கவனிக்க, பெண்ணைப் பார்க்க வருபவர்களை அறைக்குள் அழைத்துச் செல்ல, என மேடை மீது ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்ததில் கால்கள் கடுத்தன.

வெளியே வைப்பதற்கான அலங்கார வளைவிற்கான வேலையில் மனோவும் அவனது நண்பர்களும் கூடியிருக்க, சாப்பாடு நடக்கும் அறையைக் கவனிக்க ஆளில்லாமல் கணவனைத் தேடி அலைந்தாள்.

'எங்கே போய் விட்டார் இவர்? சாப்பாடு பரிமாறும் போது கவனிக்கவில்லை என்று குறை கூறுவார்களே உறவுக்காரர்கள். இந்த நேரம் பார்த்துச் சொல்லாமல் கொள்ளாமல் எங்கு சென்றார்?' - பொருமலோடு எதிர்ப்பட்டவர்களிடம் எல்லாம் விசாரித்துக் கொண்டிருக்க, மனோவின் நண்பன் திலீபன் சொன்னான்.

"அம்மா! அப்பா மொட்டை மாடியில ரொம்ப பிஸியா இருக்கார்."

"என்ன? அங்கே என்ன செய்கிறார்?" - என நகர முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"வேண்டாம்மா. நீங்க போக வேண்டாம்."

"ஏன்?"

"அப்பா கூட்டாளிகளோட சேர்ந்து ஃபுல் தண்ணியில இருக்கார்..." - என்றதும் தலையில் இடி விழுந்தாற்போல் துடித்தாள் தாட்சாயிணி.

ஆத்திரமும் அழுகையுமாய் மூன்று மாடிகளைக் கடந்து மேல் தளத்திற்கு வந்தபோது இரண்டு ஆண்கள் கீழே இறங்கிக் கொண்டிருந்தனர். தாட்சாயிணியைக் கண்டதும் இருவரும் வேகமாகப் போய்விட, குழப்பமாய்க் கணவனைத் தேடினாள்.

வெறும் தரையில் மல்லாந்திருந்தார் விஸ்வநாதன். அவரைச் சுற்றிலும் நாலைந்து காலி பாட்டில்கள் உருண்டு கொண்டிருந்தன. அதோடு தரையில் சிதறிக் கிடந்தவை கருத்தைக் கவர, குனிந்து ஒன்றை எடுத்தவள் மின்சாரம் தீண்டியதைப் போல் அதிர்ந்தாள். அது ஒரு புகைப்படம்!



யாரோ ஒரு பெண்ணுடன் மிக நெருக்கமாய் இருந்தார் விஸ்வநாதன். மனம் குமுற, இன்னொன்றை எடுத்தாள். அதில் வேறொரு பெண்ணுடன், அதே கோலத்தில் இருப்பதைப் பார்த்துச் சுத்தமாய் நொறுங்கிப் போனாள்.

தரையில் மடங்கி அமர்ந்து கண்ணீர் விட்டாள். கட்டிய மனைவிக்கு எத்தனை பெரிய துரோகத்தை இழைத்து விட்டார். இதை யெல்லாம் பார்ப்பதற்கா இத்தனை வருடங்களாய்ப் பொறுமையாய் இருந்தேன்.

பொறுமையாய் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பார்களே! அந்தப் பொறுமையை இவர் தனக்கு வழங்கிய அனுமதியாய் எடுத்துக் கொண்டாரே! கடவுளே! விடிந்தால் பெண்ணுக்குத் திருமணம். மண்டபம் முழுக்க ஊரும் உறவும் கூடியிருக்க... இது என்ன அசிங்கம்?

யாராவது இதைக் கண்டால் குடும்ப மானம் போய் விடுமே! என் குழந்தையின் திருமணம்கூட நின்றுவிடுமே! பெண்ணின் திருமணம் நல்லபடியாய் நடந்து முடிய வேண்டுமே! அதற்காகத்தானே இத்தனை நாளாய் இந்த நெருப்பின் மீது வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

கூடாது. இது யார் கண்ணிலும் படக்கூடாது. கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

மளமளவெனக் கணவரைச் சுற்றிலும் உள்ள புகைப்படங்களைச் சேகரித்துப் புடவைத் தலைப்பில் மடித்து மறைத்து இடுப்பில் செருகினாள்.

கணவரைப் பட்பட்... என அடித்து எழுப்பினாள். எழ முடியாமல் புரண்டவரைக் கைப்பற்றித் தூக்கித் தோளில்

சாய்த்து, ஒவ்வொரு படிக்கட்டாக இழுத்து இரண்டாவது மாடியில் இருந்த தங்களது உடைமைகளை வைத்திருந்த அறைக்குள் தள்ளிக் கதவைப் பூட்டினாள். மீண்டும் கதவைத் திறந்து போட்டோக்களைப் பத்திரப்படுத்தினாள்.

முகத்தைச் சரி செய்து கொண்டு கீழே இறங்கி வருகையில் பிரபாகரனின் அம்மா எதிரில் வந்தாள். முகம் முழுக்கப் புன்னகை.

"என்ன சம்பந்தியம்மா! எங்கே போயிட்டீங்க? ரொம்ப நேரமா தேடிட்டு இருக்கேன்."

"வந்து... மன்னிச்சிடுங்க. ஒரே கால்வலி. நடக்கவே முடியலை. அதான் ரூம்ல போய் மாத்திரை போட்டுட்டு வந்தேன்."

"அடடா! ரொம்ப வலிக்குதா?"

"ம். ஆமா... மாத்திரை போட்டிருக்கேன். சரியாகிடும்."

"சம்பந்திம்மா! இப்படி வாங்க. இந்தச் சேர்ல உட்காருங்க..." - என மேடை முன்னே இருந்த முதல் வரிசையில் அமர வைத்தாள் சந்திரா. பதட்டமாய் மறுத்தாள் தாட்சாயிணி.

"ஐயோ! நான் உட்கார்ந்தா வர்றவங்களை எப்படிக் கவனிக்கிறது?"

"அட! சும்மா உட்காருங்க. வர்றவங்களை நான் பார்த்துக்கிறேன். இப்படிக் கால்வலியோட அலைஞ்சா காலையில கல்யாணத்துக்குத் தெம்பா நிக்க முடியுமா? பேசாம உட்காருங்க..." - உரிமையாய் அதட்டினாள் சந்திரா.

"இல்லை சம்பந்தி! லேசான கால்வலிதான்."



"கல்யாண அலைச்சல்னா சும்மாவா? நீங்க உட்காருங்க. பொண்ணு மாப்பிள்ளையைக் கல்யாணக் கோலத்துல பார்க்கணுமில்ல... நல்லா பாருங்க!" - என அவள் விலகிச் செல்ல, தாட்சாயிணியின் கண்கள் மேடைக்குச் சென்றன.

கருநீல கோட் சூட்டில் ராஜகுமாரன் போல் பிரபாகரன் நிற்க, அவனருகே தங்கநிறப் பட்டில் உடல் முழுக்கத் தங்க நகைகளால் ஜொலிஜொலிக்க, அதற்குச் சிகரம் வைத்தாற்போல் முகம் முழுக்கப் புன்னகையும் பூரிப்புமாய் நாணச்சிவப்போடு நின்ற மகளைப் பார்க்கையில் மனம் நிறைந்தது.

ஒரு நிம்மதி மூச்சோடு இருக்கையில் அமர்ந்து மகளின் திருமணக் கோலத்தை ஆசை தீரக் கண்டு களித்தாள். பெற்ற வயிறு குளிர்ந்துவிட, உடல் முழுக்கப் புல்லரித்தது. இதைக் காணத்தானே தவமிருந்தேன். கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அந்தக் கணம் கணவனோ அந்தப் புகைப்படமோ நினைவிற்கு வரவில்லை. மனம் முழுக்க மகளின் பொன்முகம்தான் நிறைந்திருந்தது.

நண்பர்களின் உற்சாகத்தில் பிரபாகரன் சங்கரியைத் தோளோடு அணைத்துக் கொள்ள, பளிச் பளிச்சென போட்டோ ஃபிளாஷ் மின்னியது. குளிர்பானப் பாட்டிலில் இரண்டு ஸ்ட்ரா போட்டுக் குடிக்க வைத்தனர். காட்பரீஸ் சாக்லெட்டைப் பிரித்து, ஊட்டிவிடச் சொல்லினர்.

மொத்தத்தில் மேடையே கலகலத்தது. சங்கரியின் பொன்முகம் வெட்கச் சிவப்போடு பேரழகாய் மின்னியது.

இடையிடையே அவளின் காதருகே குனிந்து ஏதேதோ பேசிச் சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தான் பிரபாகரன்.

ஒரு வழியாய்ப் பத்து மணிக்குப் பிறகே ராமச்சந்திரன் மேடையேறி அனைவரையும் அதட்டினார்.

"போதும்ப்பா... போட்டோ எடுத்தது. மணமக்கள் கொஞ்ச நேரமாவது தூங்க வேண்டாமா? எல்லாரும் போய்ச் சாப்பிட்டுப் படுங்க. காலையில அஞ்சு மணிக்கு முன்ன எழுந்துக்கணும். ம்... கிளம்புங்க..."

"டேய் மாப்பிள்ளை! தூங்கிடாதே... சாப்பிட்டு சிஸ்டரை அவங்க ரூமுக்கு அனுப்பிட்டு நீ மொட்டை மாடிக்கு வர்ற... விடிய விடிய இன்னிக்குப் பார்ட்டிதான்..." - என்றான் ஒருவன்.

ராமச்சந்திரன் பதறினார். "இதோ பாருங்கப்பா. கல்யாண வீட்ல வந்து அசிங்கம் பண்ணிடாதீங்க. எந்தப் பார்ட்டியும் வேண்டாம்."

"அங்கிள்! பார்ட்டின்னதும் தண்ணிதான்னு நினைச்சிடு வீங்களா? நாங்க யாருமே ட்ரிங்க்ஸ் சாப்பிடுறதில்ல... சும்மா மாப்பிள்ளையைக் கேலி, கிண்டல்னு பண்ணுவோம். மேரேஜுக்கு அப்புறம் இதெல்லாம் பண்ண முடியாதில்ல..."

"ஏன்டா?" - மாலையைக் கழற்றியவாறே கேட்டான் பிரபாகரன்.

"நீ ரொம்ப பிஸியாகிடுவே... உன்னைக் கையிலயே பிடிக்க முடியாது."

"ஏன்?"



"மச்சான்! கொஞ்சமாவது பிரெய்னை யூஸ் பண்ணுடா. நீ ஹனிமூன் போயிடுவல்ல... அதைச் சொல்றான்!" - என மற்றொருவன் எடுத்துச் சொல்ல, மீண்டும் சிரிப்பலை பரவியது.

வெட்கம் பிடுங்கித் தின்னத் தலையைக் கவிழ்ந்து கொண்டாள் சங்கரி. அதைப் பார்த்த பிரபாகரன் நண்பர்களை விரட்டினான்.

"டேய்! எங்க ஆள் ரொம்ப சங்கோஜப்படுது. நீங்க கிளம்புங்க..."

"பார்த்தியா? இன்னும் தாலியே கட்டலை. அதுக்குள்ள எங்களையெல்லாம் கழட்டி விடுறியே! சரி... போகுது விடு. சிஸ்டர் பாவமேன்னு போறோம்!" - என நண்பர்கள் கூட்டம் விலக, மணமக்கள் சாப்பிட்டு முடித்ததும், மகளை மணமகள் அறைக்கு அழைத்துச் சென்றாள் தாட்சாயிணி.

நகைகளைக் கழற்றிப் பத்திரப்படுத்திவிட்டு, மகளைப் படுக்க வைத்தாள்.

"கொஞ்ச நேரமாவது தூங்கு சங்கரிம்மா. அப்பத்தான் காலையில முகம் ஃப்ரெஷ்ஷா இருக்கும்."

"சரிம்மா!" என்ற சங்கரியால் உடனே தூங்க முடியவில்லை. கல்யாணப் பெண்ணிற்கே உரிய படபடப்பு... தயக்கம்... ஒருவிதப் பயம். பலவற்றையும் சிந்தித்துப் படுக்கையில் புரண்டவள் உறங்கத் துவங்கியபோது மணி இரண்டு.

மகள் தூங்கி விட்டாள் என்று தெரிந்ததும் தாட்சாயிணி எழுந்தாள். அறைக் கதவைச் சாத்திவிட்டுக் கணவரை

அடைத்த அறையைத் தேடிச் சென்றாள். மண்டபம் முழுக்க அறை இருளாய் இருக்க, கீழே மணமேடையை அலங்கரிக்கும் பணி நடந்து கொண்டிருந்தது.

முழுக்க முழுக்கப் பூக்களால் அலங்காரம் செய்வதற்கு மனோகர் ஏற்பாடு செய்திருக்க... மூட்டை மூட்டையாய் ரோஜாக்களும் சம்பங்கி மலர்களும் குவித்து வைக்கப்பட்டிருந்தன. மண்டபம் முழுக்க ரம்மியமான மணம் பரவியிருந்தது.

பட்டுப் புடவை சரசரக்க, கடைசியில் இருந்த அறையை நெருங்க, எதிரே வந்தவனைக் கண்டதும் மிரண்டாள் தாட்சாயிணி. முகம் முழுக்கச் சட்டென்று வியர்த்துக் கொட்ட, படபடப்பாய் நின்றவளைப் பார்த்துக் குழப்பமானான் பிரபாகர்.

"அத்தே! என்ன இந்த நேரத்தில... இங்கே?"

"அது... வந்து... சீர் சாமான் எல்லாம் இந்த ரூம்ல தான் இருக்கு. எல்லாம் சரியா இருக்கான்னு... பார்த்திட்டுப் போக வந்தேன்."

"அதெல்லாம் சரியா இருக்கும் அத்தே! நீங்க போய்க் கொஞ்ச நேரமாவது படுங்க. ஏற்கெனவே நீங்க ஷுகர் பேஷண்ட். இப்படி ரெஸ்ட் இல்லாம அலையக் கூடாது."

"ச... சரி தம்பி!"

"போங்க அத்தே!"

"ம்... ஆமா! நீங்க தூங்கலியா?"

"ஃபிரெண்ட்ஸ் எல்லாம் மாடியில இருக்காங்க. அவங்களுக்கு கூல் ட்ரிங்க்ஸ் எடுக்க வந்தேன்."



"சரி. நீங்க எடுத்துட்டுப் போங்க..." - அவன் கடந்து சென்றதும் ஒருமுறை தயக்கமாய்ப் பார்த்துவிட்டு அறைக் கதவைத் திறந்தாள்.

உள்ளே பொருட்களோடு பொருட்களாய் உருண்டு கொண்டிருந்தார் விஸ்வநாதன். அவசரமாய்க் கதவைப் பூட்டிவிட்டுக் கணவனை நெருங்கித் தட்டி எழுப்பினாள்.

"என்னங்க! என்னங்க! எழுந்திருங்க..." - மனைவியின் குரலில் அலறியடித்துக் கொண்டு எழுந்தார் விஸ்வநாதன்.

"ஐயய்யோ! விடிஞ்சிடுச்சா?"

"என்னங்க... நான்தான்!"

"நீயா? நீ ஏன்டி எழுப்பின?" - கண்களைக் கசக்கிக் கொண்டே கேட்டார்.

"ஏங்க! இன்னும் கொஞ்ச நேரத்துல நம்ம பொண்ணுக்குக் கல்யாணம். இந்த நேரத்தில நீங்க இப்படிக் கிடந்தா என்னங்க அர்த்தம்? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பார்த்தா என்ன ஆகும்?"

"போடி பைத்தியக்காரி. அவன் அவனுக்கு ஆயிரம் கவலை. எவ்வளவு கஷ்டப்பட்டுக் கவலை மறந்து தூங்கினேன் தெரியுமா? எல்லாத்தையும் கெடுத்திட்டியேடி!"

"என்ன சொல்றீங்க?"

"தாட்சா! இன்னிக்குப் பொழுது விடியவே கூடாதுன்னு கடவுளை வேண்டிக்க!" - ரகசியமாய்ச் சொன்னவரை மிரட்சியாய்ப் பார்த்தாள்.

"எ... எதுக்குங்க?"

"விடிஞ்சா... இத்தனை வருஷமா காப்பாற்றி வெச்சிருந்த மொத்த மானமும் கப்பலேறிடும்."

"என்ன உளர்றீங்க?"

"பத்தினிங்கள்லாம் சாமி கும்பிட்டா சூரியன் மறையாது. பச்சை மரம் பத்தி எரியும்னு சொல்வாங்கள்ல... அதே மாதிரி இன்னிக்கு விடியவே கூடாதுன்னு நீ சாமி கும்பிடு. நீதான் பத்தினியாச்சே!"

"என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படிப் பேசுறீங்க? விடிஞ்சாத்தானே நம்ம பொண்ணு கல்யாணம் நடக்கும்?"

"என்னடி கல்யாணம்... கல்யாணம்னு கீறல் விழுந்த ரெக்கார்டு மாதிரி ஒரே வார்த்தையைச் சொல்லிட்டு இருக்கே... என்னைப் பத்தி எதுனா கவலைப்படுறியா? நான் இப்போ எந்த இக்கட்டுல மாட்டியிருக்கேன் தெரியுமா?"

"எ... என்ன? என்ன இக்கட்டு உங்களுக்கு?"

"தாட்சா! விடியறதுக்குள்ள எனக்கு அம்பது லட்சம் வேணும்டி!"

"என்ன? அ...அம்...பது லட்சமா?" - தலை சுற்றியது தாட்சாயினிக்கு.

"ஆமாண்டி. நீ தருவியா? உடனே தருவியா?"

"என்ன விளையாடுறீங்களா? அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்? எதுக்கு உங்களுக்கு இவ்வளவு பணம்?"

"அதையெல்லாம் நீ கேட்கக் கூடாது. கேட்டா பணத்தை மட்டும்தான் தரணும். கேள்வி கேட்கக் கூடாது."



"என்கிட்ட ஏது பணம்? நீங்க கேட்ட அஞ்சு லட்சத்துக்கே எவ்வளவு கஷ்டப்பட்டுப் போயிட்டேன்...!"

"ஏய்! பொய் சொல்லாதேடி. நீ அமுதசுரபி ஆச்சே. பணத்தை எடு!"

"புத்தியோடதான் பேசறீங்களா? நீங்க என்ன ஐம்பது ரூபாயா கேட்டீங்க... தூக்கித் தர்றதுக்கு?"

"அப்போ நீ பணம் தரமாட்டே?" - கண்கள் சிவக்க, குரல் தடுமாறக் கேட்டவரைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டாள்.

"கடவுளே! என்கிட்ட ஏதுங்க அவ்வளவு பணம்?"

"பணம் இல்லாட்டி என்ன? நகைகள் இருக்கில்ல... அதைத் தா. நான் சமாளிச்சுக்கிறேன்."

"என்ன?"

"சீக்கிரம் தா. அஞ்சு மணிக்கெல்லாம் அவனுங்க வந்திடுவானுங்க."

"ய... யாரு?"

"ம்? உன் மச்சானுங்க. கேள்வி கேட்காதேன்னு சொன்னேனில்ல...?"

"அப்படியா! சரி... இப்ப என்கிட்ட பணமும் இல்லை... நகையும் தர முடியாது. நான் கல்யாண வேலையைப் பார்க்கணும். நீங்க இங்கேயே கிடங்க..." - என எழுந்த மனைவியின் காலில் தடாலென விழுந்தார் விஸ்வநாதன்.

"ஐயோ! என்ன இது?" - பதறியவளின் காலை இறுகப் பற்றிக் கொண்டார்.

"தாட்சா! நீயும் என்னைக் கைவிட்டுடாதே தாட்சா! அந்தப் புரோக்கர் பய தினுசு தினுசா அயிட்டத்தைக் கூட்டிட்டு வருவான். நானும் சுகபோகமா இருந்திட்டேன். இப்போ என்னன்னா என்னைப் பலவிதமா போட்டோ எடுத்து மிரட்டுறான்.

"இன்னிக்கு அஞ்சு மணிக்குள்ள அம்பது லட்சம் கொடுக்கலைன்னா அந்தப் போட்டோவையெல்லாம் பிரிண்ட் பண்ணிக் கல்யாணத்துக்கு வர்றவங்க கிட்டல்லாம் கொடுத்திடுவானாம். என்னைக் காப்பாத்து தாட்சா!" - முற்றிலும் தெளியாத போதையோடு அவர் அழ, உறைந்து போனாள் தாட்சாயிணி.

முகம் முழுக்க வெறுப்பை உமிழ, அவர் பற்றியிருந்த தன் காலை உதறினாள். "அடப்பாவி மனுஷா! நீ செய்த தப்புக்கு இப்போ எம்புள்ளை வாழ்க்கையில்ல பறிபோகப் போகுது. ஐயோ! ஊரே கூடியிருக்கே... இந்த நேரத்தில நான் என்ன பண்ணுவேன்? எப்படி இந்தக் கல்யாணத்தை நடத்துவேன்?"

விஸ்வநாதன் தயங்காமல் சொன்னார். "கல்யாணத்தை நிறுத்திடு!"

துல்லியமாய் அதிர்ந்து நிமிர்ந்தாள். "எ... என்ன?"

"ஆமா! கல்யாணத்தை எப்ப வேணா பண்ணிக்கலாம். ஆனா மானம் போச்சுன்னா திரும்ப வருமா?"

"இதெல்லாம் கண்டவகூடச் சுத்தும்போது தெரியலையா?"

"இப்படியெல்லாம் நடக்கும்னு நினைச்சேனா? போனதைப் பத்திப் பேசாதே. முதல்ல கல்யாணத்தை நிறுத்திடு. உடனே வீட்டுக்குப் போயிடலாம்."



"எவ்வளவு சுலபமா சொல்லிட்டீங்க! இந்தக் கல்யாணம் நடக்க நான் பட்ட பாடு..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கல்யாணத்தை நிறுத்திடு!"

"உங்க புத்தி ஏன் இப்படிப் போகுது? இப்ப எதுக்காகக் கல்யாணத்தை நிறுத்தணும்?"

"கல்யாணத்தைக் குறிவெச்சுத்தானே மிரட்டுறான். கல்யாணமே நின்னு போச்சுன்னா யார்கிட்ட போய்க் காட்டுவான்?"

தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் தாட்சாயிணி. "ஐயோ! கடவுளே! குடிச்சிக் குடிச்சி மூளை மழுங்கிப் போச்சா உங்களுக்கு? பணம் கேட்டவன் பணம் கிடைக்கலைன்னதும் அந்த ஆத்திரத்தில அக்கம்பக்கம் உள்ளவங்க கிட்ட காட்ட மாட்டானா? அப்போ உங்க மானம் போகாதா?"

"அதான் பணம் கேட்கிறேன். நீ அதையும் தர மாட்டேங்கிறே. நான் வேற என்ன செய்ய முடியும்?"

"நீங்க என்ன செய்தாலும் சரி. நான் இந்தக் கல்யாணத்தை நடத்தியே தீருவேன்."

"அப்போ உன் தாலியும் இன்னிக்கே இறங்கிடும்!" - ஒரு மாதிரியான குரலில் அவர் கூற, திடுக்கிட்டாள்.

"எ... என்ன சொல்றீங்க?"

"இதோ பாரு தாட்சா! இப்பவே உன் கழுத்துல கிடக்கிற நகையும் சங்கரிக்குச் செய்து வெச்சிருக்கிற நகையும் என் கைக்கு வந்தாகணும்."

"ஐயோ!"

"அப்படி எதுவும் நடக்கலைன்னா நான் சொன்னது நடக்கும்...."

"புள்ளையோட நகையைத் தந்தா கல்யாணம் எப்படி நடக்கும்?"

"இப்பவே கல்யாணம் நடக்கிறது சந்தேகம்தான்..."

"எ... என்ன?"

"ஆமா தாட்சா! சம்பந்தி வீட்டுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை நான் செலவு பண்ணிட்டேன்."

"எ... என்ன?"

"சம்பந்தி அம்மாக்கிட்ட தாலி கட்டும்போது தர்றதா வாக்குக் கொடுத்திருக்கேன். நான் பணம் தரலைன்னா அந்த அம்மா தன்னோட புள்ளையைத் தாலி கட்ட விடமாட்டா. கல்யாணம் தானா நின்னுடும்!" - வில்லன் பாணியில் அவர் பேசிக் கொண்டே போக, தாட்சாயிணியின் தலைசுற்றல் அதிகமாகியது.

இரண்டு நாட்களாய்ச் சாப்பிடாமல்... தூங்காமல் அலைந்த அலைச்சல், நேற்று இரவு கணவரின் அலங் கோலமான புகைப்படங்களைப் பார்த்த அதிர்ச்சி. இரவு முழுக்க ஏற்பட்ட மன உளைச்சல் எல்லாமுமாய்ச் சேர்த்து தாட்சாயிணியின் இதயத்தைப் பலமாய்த் தாக்கியது.

மகளின் திருமணம் என்ன ஆகுமோ என்ற பயம். பதட்டம்... உடம்பு முழுக்கப் பரவி வியர்வை ஆறாய்ப் பெருகியது. கண்கள் செருகிவிட, பெருமுயற்சி செய்து எழ முயற்சித்தவள் அப்படியே மயங்கிச் சரிந்தாள்.



நினைவுகள் முழுக்க மறையும் முன்பே தன்னுடைய நகைகளை யாரோ கழற்றுவதை உணர்ந்தாள். மறுக்க முயற்சித்தபோதும் உடல் ஒத்துழைக்கவில்லை.

தூரத்தில் எங்கோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. காதருகே பாத்திரங்களின் ஓசை கேட்டது. சில ஆண் குரல்கள் தெளிவின்றிக் கேட்டன. கண்களைத் திறக்க முயன்று முடியாமல் ஆழமான மயக்கத்திற்குச் சென்றாள் தாட்சாயிணி.

உதடுகள் மட்டும் அசைந்து கொண்டிருந்தன.

"ஐயோ! என் பொண்ணு கல்யாணம்... என் பொண்ணு கல்யாணம்..."

"பயப்படாதீங்க... கல்யாணம் நல்லபடியா நடக்கும். நான் இருக்கேன். பயப்படாதீங்க!" - என ஆறுதலான ஆண்குரல் கேட்டது. இது தெய்வத்தின் குரலா... மனிதரின் குரலா எனப் பிரித்தறிய முடியாத குழப்பத்தில் மயக்கத்தின் பிடியில் ஆழ்ந்து போனாள்.

# 21



கண்ணீர் ஒரு அருமருந்து
கோபங்களையும் காயங்களையும்
மனச் சோகங்களையும்
வெளியேற்றும் சக்தி - அதற்கு
மட்டுமே உண்டு!

கண்ணோரம் துளிர்த்திருந்த நீரைச் சுண்டி யெறிந்தாள் தாட்சாயிணி. உறைந்த பனியாய் இறுகி அமர்ந்திருந்த பிள்ளைகளைப் பார்த்தாள்.

"நான் கண்விழிச்சுப் பார்த்தப்போ என் பக்கத்துல பிரபாகர் இருந்தார். உங்க அப்பா கழற்றிய நகையை என்கிட்ட தந்து போட்டுக்கச் சொன்னார். உன் அப்பாவைத் தேடினேன்.

"பிரபாகர்தான் மாமா குளிக்கப் போயிருக்காங்க. ரெடியாகி வர்றதுக்குள்ள உங்ககிட்ட கொஞ்சம் பேசணும் அத்தேன்னு சொன்னார். அவர் கையில ஒரு போட்டோ இருந்தது."

"போட்டோவா?"

"ம்... மாடியில சிதறிக் கிடந்த போட்டோவில ஒண்ணு எனக்கே தெரியாம விட்டுப் போச்சு போலிருக்கு. அது பிரபா கையில கிடைச்சிருச்சு."

சிவசங்கரியின் முகம் இருண்டு போனது. "என்ன? அப்படின்னா... பிரபாவுக்கு எல்லாமே தெரியுமா?"

"தெரியும். அவர்தான் உன் அப்பாக்கிட்ட பேசி... சமாதானம் பண்ணி... இந்தப் பிரச்சனையை நான் சரிபண்ணிடுறேன். முதல்ல கல்யாணம் நடக்கட்டும்னு சொல்லி அனுப்பினாராம். இந்த விஷயம் யாருக்கும் தெரியாம பார்த்துக்கங்கன்னு என்கிட்ட சொன்னார்.

"நானும் அந்தப் போட்டோக்களையெல்லாம் இந்தப் பேக்ல போட்டு மறைச்சி வெச்சிட்டுக் கல்யாணத்துக்கு ரெடியாகிட்டேன். நேரம் ஆனதும் பிரபா மாப்பிள்ளையா மண மேடையில உட்கார்ந்திருந்தாரு.



"உன்னை அழைச்சிட்டுப் போக... உன் தோழிப் பொண்ணுங்க எல்லாம் வந்தாங்க. அந்தச் சமயத்தில உன் அப்பாவுக்கு ஏதோ போன் வந்தது. யார் என்ன பேசினாங்கன்னு தெரியாது. ஆனா ரொம்பக் கோபமா காச்மூச்சுன்னு கத்தினார். நான் எவ்வளவோ சமாதானப் படுத்தியும் கேட்கலை. என் கண்ணு முன்னாலேயே இடுப்புல செருகியிருந்த பாட்டிலைத் திறந்து குடிச்சார்."

"என்னம்மா...? விஷமா?" - மனோகர் பதட்டமாய்க் கேட்டான்.

"இந்த நிமிஷம் வரைக்கும் அது என்னன்னு எனக்குத் தெரியலை. குடிப்பழக்கம் அதிகரிச்சதால அவரால குடிக்காம இருக்க முடியலை. ஏதோ விஸ்கின்னுதான் நான் நினைச்சேன். ஆனா குடிச்ச பத்து நிமிஷத்தில நெஞ்சைப் பிடிச்சிட்டு விழுந்திட்டாரு.

"சங்கரி மணமேடை ஏறப் போன சமயம் அது. உடனே பதறி எல்லாருமா ஓடிவந்து பார்த்தாங்க. பிரபாகர் உடனே செக் பண்ணிட்டு அளவுக்கதிகமா குடிச்சதால ஏற்பட்ட மாரடைப்புன்னு கண்டுபிடிச்சிட்டார். ஆனா அதை அப்படியே சொல்லாம வெறும் ஹார்ட்-அட்டாக்ன்னு மட்டும் சொன்னார்.

"குடிச்சிக் குடிச்சி அந்தக் குடியே அவருக்கு விஷமாகிப் போச்சு. கல்யாணம் நின்னுடக் கூடாதுன்னு நான் பிரபாகரன்கிட்ட மன்றாடினேன். அதனால அவரும் உன்கிட்ட எவ்வளவோ கெஞ்சினார். ஆனா சம்பந்தியம்மா சும்மா பேசினதை நீ வரதட்சிணை கேட்டதாலதான்னு தப்பாப் புரிஞ்சுகிட்டு..."

"இல்லம்மா... இல்லை. நான் தப்பாப் புரிஞ்சுக் கலை..." - அவசரமாய் மறுத்தாள்.

"அப்போ ஏன் அப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணின?"

"அம்மா! ஒரு நாலு மணி இருக்கும். அப்போ அப்பா என் ரூமுக்கு வந்தாங்க."

"உன் ரூமுக்கா? ஏன் வந்தார்?"

"எதுக்குன்னு தெரியலை. அலமாரியைத் திறந்து ஏதோ தேடிட்டு இருந்தாங்க. என்னப்பான்னு கேட்டேன். கல்யாணத்துல ஒரு சின்ன சிக்கல்ம்மா. மாப்பிள்ளைக்கு ஹாஸ்பிடல் கட்டணுமாம். அதுக்காக அஞ்சு லட்ச ரூபாய் டௌரி கேட்கிறாங்கன்னு சொன்னார்."

"ஐயோ! அப்படியா சொன்னார்?"

"ஆமா! மாப்பிள்ளையோட அம்மா உடனே கேட் கிறாங்க. என் கையில அவ்வளவு பணம் இல்லை. அதான் அம்மா ஏதாவது வெச்சிருக்காளான்னு தேடுறேன்னு சொன்னாங்க. அதுக்குள்ள என்னை அலங்கரிக்க எல்லாரும் வர ஆரம்பிச்சிட்டாங்க. அதனால வெளியே போயிட்டாங்க."

"பாவி மனுஷன். எவ்வளவு பொய் சொல்லி யிருக்கார்!"

"அப்பவே பிரபா மேல எனக்கு ஒரு வெறுப்பு வந்திடுச்சு. கல்யாணத்தை நிறுத்திடலாம்னுதான் நினைச்சேன். ஆனா அப்பா திடீர்ன்னு நெஞ்சைப் பிடிச்சிட்டுச் சாய்ந்ததும் என்னோட மொத்தக் கோபமும் பிரபா மேல திரும்பிடுச்சு..."



"பிரபா மேல எந்தத் தப்பும் இல்லம்மா. நீ கோபப் பட்டுக் கத்தும்போதே நான் உண்மையைச் சொல்லி யிருப்பேன். ஆனா அத்தனை களேபரத்திலும் பிரபாதான் என்னைச் சொல்ல விடாம தடுத்தார்.

"அத்தே! நடந்தது எதுவும் யாருக்கும் தெரிய வேண்டாம். மாமாவே போனப்புறம் இந்த அசிங்கம் ஏன் வெளியே வரணும். சங்கரியோட மனசுல அவ அப்பா ஒரு தெய்வம்னு நினைச்சிட்டு இருக்கா. அந்த நினைப்பை அழிக்க வேண்டாம். அது காலம்பூரா நம்ம குடும்பத்துக்கு ஒரு அவமானச் சின்னமாகிடும்!'னு சொன்னார்."

"எ... என்ன?"

"ஆமாம்மா. உங்க அப்பா பேர் அசிங்கப்பட்டுடக் கூடாதுன்னு நீ பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டார். அந்தப் பழிக்குத் தன் தாயைப் பயன்படுத்திக்கிட்டார். சம்பந்தியும் ஒருவேளை பணம் தர முடியாமத்தான் இறந்துட்டாரோன்னு குற்ற உணர்வுல பேசாம இருந்துட்டாங்க."

"இதை யெல்லாம் ஏன்மா இத்தனை வருஷமா மறைச்சீங்க?"

"அப்பா இறந்த பிறகுதான் அவர் எவ்வளவு கடனாளியா இருந்தார்ன்னு நமக்குத் தெரிஞ்சது. மொத்தச் சொத்தும் போச்சு. விட்டதை மீட்கணும்னு நீங்க ரெண்டு பேரும் கடுமையா உழைக்க ஆரம்பிச்சீங்க. இதில சங்கரி யோட வெறுப்பு அளவுக்கதிகமாப் போச்சு.

"பிரபாவோட பேச்சை மட்டுமில்ல... கல்யாணப் பேச்சை எடுத்தாலே சீறினா... எரிஞ்சு விழுந்தா... எல்லாம்

போகப் போகச் சரியாகிடும்னு பார்த்தேன். ஆனா காலம் தான் போச்சே தவிர, உன் அக்கா மனசே மாறலையே...?

"இதுல நம்மை எல்லாம் விட ரொம்ப பாதிக்கப்பட்டது பிரபாதான். எந்தத் தப்பும் செய்யாம, விரும்பினவளோட வெறுப்பைச் சம்பாதிச்சுகிட்டு, பெத்தவங்களோட விருப்பத்தையும் நிறைவேத்த முடியாம... பாவம்டா! அந்தப் புள்ளை ரொம்பக் கஷ்டப்பட்டுப் போச்சு!" - ஒரு பெருமூச்சோடு தாட்சாயிணி சொல்ல, சிவசங்கரியைப் பார்த்தான் மனோகர்.

"அக்கா! உன்கிட்ட எத்தனையோ வாட்டி சொன்னேனே! பிரபா பேசுறதைக் காது கொடுத்துக் கேளுன்னு... கேட்டியா? இப்பப் பாரு! உனக்கே தெரியாம நீ அவரை எவ்வளவு நோகடிச்சிருக்கே!"

சிவசங்கரியின் மூக்கு விடைத்தது. ஒவ்வொரு முறையும் தன் பின்னே வந்த பிரபாவின் நினைவு வந்தது. அத்தனை முறையும் அவனைத் திட்டி அவமானப்படுத்தியதும் நினைவு வந்தது. உடையத் தயாராய் இருந்த கண்ணீரை அடக்கினாள்.

"எத்தனையோ முறை மனசு தாங்காம உன்கிட்ட உண்மையைச் சொல்லணும்னு நினைப்பேன் சங்கரிம்மா. ஆனா பிரபாதான் அவ மனசை வேதனைப்படுத்துற உண்மையைச் சொல்லி நாங்க சேர வேண்டாம். என்னோட உண்மையான நேசம் அவளை மாத்திடும்னு சொல்லித் தடுத்துட்டார்.

"ஆனா நீ கடைசி வரை அவரோட அன்பைப் புரிஞ்சுக்கவே இல்லை. சங்கரி! நான் இப்படித் தேய்ந்து



போனதற்குக் காரணம் உன் அப்பா மரணமில்லம்மா... உன்னோட இந்த நிலைமைதான். என்னோட குற்ற உணர்வுதான்.

"இப்பக்கூட பிரபா இங்கே எதுக்கு வந்தார் தெரியுமா? அந்தப் பொண்ணு எப்படியோ ஹாஸ்பிடலுக்கு வந்து ஏதேதோ சொன்னாளாமே! அதுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லைன்னு சொல்லத்தான் வந்தார். சங்கரி மாறவே மாட்டாளாம்மான்னு கேட்டுக் கண் கலங்கினார்.

"சங்கரி! அந்தப் புள்ளை கலங்கி நான் பார்த்ததே இல்லை. கல்யாணம் நின்னப்போ கூட நீ அத்தனை பேர் முன்னால அவரைத் தாறுமாறா பேசினப்போ கூட அவர் கலங்கலைடி. ஆனா இன்னிக்கு அந்தப் புள்ளை கண்ணில கண்ணீரைப் பார்த்தேன். என்னால தாங்க முடியலை.

"அந்த உத்தமமான புள்ளையை இதுக்கு மேலயும் தவிக்க விடக் கூடாதுன்னுதான் இன்னிக்கு இந்த உண்மையை உங்ககிட்ட சொன்னேன். இந்தப் போட்டோவை எல்லாம் எப்பவோ எரிச்சிருக்கணும்.

"ஒருவேளை இந்த உண்மைகளைச் சொல்லாமலே நான் இறந்துட்டா... பிரபாகர் மேல உள்ள பழி அப்படியே இருந்திடுமோன்னுதான் இதை எரிக்காம வெச்சிருந்தேன். இப்பச் சொல்லு. பிரபாகர் மேல எந்தத் தப்பும் இருக்கா? தன்னோட மாமனார் மேல சேற்றை வாரிப் பூசிடக் கூடாதுன்னு எல்லாப் பழியையும் ஏத்துக்கிட்டாரே!

"அவரைப் போல ஒரு அருமையான பையன் கிடைப்பாரா? இந்த விஷயம் அவங்க வீட்லகூட யாருக்கும் தெரியாது. இன்னிக்கு வரைக்கும் அதை அவர் யார்

கிட்டயும் சொல்லாம இருக்காருன்னா அவர் எவ்வளவு உத்தமரா இருக்கணும்.

"அவரையா வேணாம்னு ஒதுக்கினே? அவரையா வெளியே போன்னு சொன்னே? சொல்லு சங்கரி!" - ஆவேசமாய்க் கேட்ட அன்னையை நிமிர்ந்தும் பாராமல் குன்றிப் போய் அமர்ந்திருந்தாள் சிவசங்கரி.

"என்னக்கா... எதுவுமே பேசாம இருக்கே... ஏதாவது பேசேன்!"

"எ... என்ன பேசறது?"

"நீ செய்தது எவ்ளோ பெரிய தப்புன்னு உனக்குத் தெரியாதா?"

"ம்..."

"பிரபா மேல எந்தத் தப்புமே இல்லைன்னு புரிஞ்சிடுத் தில்ல!"

"ம்... ம்..."

"உடனே பிரபாவைப் பார்க்கணும்னு தோணலையா உனக்கு?"

"ம்... தோணுது."

"பிறகேன் இப்படியே உட்கார்ந்திருக்கே? முதல்ல பிரபாவைப் போய்ப் பார். அட்லீஸ்ட் ஃபோனாவது பண்ணேன்."

"அதுக்கு முன்னால வேற ஒரு வேலை இருக்குடா!"

"என்ன வேலை?" - மனோகர் புரியாமல் கேட்க, வெறித்த பார்வையோடு எழுந்தாள் சங்கரி. வேகமாகச்



சென்று சுவரில் சந்தன மாலையோடு தொங்கிக் கொண்டிருந்த விஸ்வநாதனின் பெரிய புகைப்படத்தைக் கழற்றி எடுத்தாள்.

"அக்கா! என்ன செய்யப் போறே?"

"மனோ! பூஜையறையில கூட இதே மாதிரி ஒரு படம் இருக்குல்ல?"

"ம்..."

"அதையும் எடுத்திட்டு வா."

"என்னக்கா பண்ணப் போறே?"

"எடுத்திட்டு வா, சொல்றேன்..." - சகோதரியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அமைதியாய்ச் சென்று எடுத்து வந்தான். இரண்டு புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறமாய்ச் சென்றாள்.

"சங்கரி! என்னம்மா பண்ணப் போறே?" - தாட்சாயிணியும் எழுந்து கூடவே வர,

"இது எங்கே இருக்கணுமோ அங்கே வைக்கப் போறேன்ம்மா!" - என்றாள் மரத்த குரலில்.

பின்பக்கமாய் இருந்த பெரிய குப்பைத் தொட்டியை நெருங்கினாள். இரண்டு புகைப்படத்தையும் தூக்கி யெறிந்தாள். ச்சீலிரென்ற சத்தத்தோடு உடைந்து நொறுங்கி விடத் திருப்தியாய்ப் புன்னகைத்தாள்.

"இது இருக்க வேண்டிய இடம் இதுதாம்மா!" - என்றவாறு வேகமாக விலகி வெளியேறினாள்.

காரை நெருங்கியவள் நின்று பின்னால் நின்ற தாயையும் தம்பியையும் பார்த்தாள்.

"அம்மா! நான் பிரபாவைப் பார்த்துட்டு வர்றேன்."

இருவரும் முகம் மலர்ந்தனர். "போயிட்டு வாடா கண்ணு!"

"மனோ! அவசரக் குடுக்கை மாதிரி போன் பண்ணிச் சொல்லிடாதே. நான் போய் நின்னதும் என் பிரபாவோட முகம் எப்படி மாறுதுன்னு நான் பார்க்கணும்..."

"அடேயப்பா! அம்மா கேட்டீங்களா? என் பிரபாவாம். எவ்வளவு உரிமை பாருங்க!"

"ஏன்? எப்பவுமே அவர் என்னோட பிரபாதான்."

"சரியம்மா! உன் பிரபாவை நீயே வைத்துக் கொள். இப்போ போயிட்டு எப்போ வருவே?"

"அதெல்லாம் சொல்ல முடியாதே!"

"ஓ.கே. ஹாஸ்பிடலுக்கு ஒன் வீக் லீவு விட்டுட வேண்டியதுதான்..."

"டேய்! உதைபடப் போறே."

"போதும்... போதும்... அக்காவும் தம்பியும் எப்ப வேணா பேசிக்கலாம். முதல்ல பிரபாவைப் போய்ப் பார். மனம் கலங்கிப் போனாரே..." - தாட்சாயிணி அவசரப்படுத்த, காரில் ஏறினாள்.

"வர்றேன்ம்மா..."

"அக்கா! நான் வேணா காரை ஓட்டிட்டு வரவா?"

"போடா. கரடியை யாராவது கூட்டிட்டுப் போவாங்களா?"



"அடிப்பாவி! நான் கரடியா? இப்பவே போன் பண்றேன்... பிரபாவுக்கு!"

"என் தம்பி பண்ண மாட்டானே..."

"ம்... இப்ப மட்டும் கரடி தம்பி ஆயிடுச்சோ?"

"போதும் மனோ. அவ போயிட்டு வரட்டும். நீ கிளம்பும்மா...!" - என அன்னை கையசைக்க, காரைத் திருப்பிக் கொண்டு சீறிக் கிளம்பினாள் சிவசங்கரி.

ஒரு பெரிய நிம்மதிப் பெருமூச்சுடன் நெஞ்சில் கை வைத்துக் கொண்டாள்.

"ஹப்பா! எத்தனையோ வருஷமா இழுத்திட்டு இருந்த பிரச்சனை ஒரு வழியா முடிவுக்கு வந்திடுச்சுப்பா. ரொம்ப நிம்மதியா இருக்கு!" - என்ற அன்னையை அணைத்தபடி வீட்டுக்குள் அழைத்து வந்து அமர வைத்தான்.

மறக்காமல் தந்தையின் சல்லாபப் போட்டோக்களை எரித்துச் சாம்பல் ஆக்கிக் கரைத்தான். சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்த தாயின் காலடியில் வந்து அமர்ந்து கொண்டான்.

"அம்மா!"

"என்னப்பா?"

"உங்ககிட்ட இப்படி உட்கார்ந்து பேசி நிறைய நாளாச்சும்மா..."

"ஆமாம்ப்பா... எல்லாருமே இயந்திரமா மாறிட்டோம்."

"இனிமே அந்த நிலைமை மாறிடும். அக்கா கல்யாணம் பண்ணிட்டுப் போயிடுவா. அப்புறம் நாம ரெண்டு பேரும்தான்... இல்லம்மா...?"

"ம்ஹூம். சங்கரியோட கல்யாணத்தப்பவே உனக்கும் கல்யாணம் பண்ணி வெச்சிடுவேன். இத்தனை நாள் தனியே இருந்தது போதும். உடனே இந்த வீட்டுக்கு மருமக வேணும்."

"அம்மா!"

"என்னப்பா?"

"எனக்கு... எப்படிப்பட்ட பொண்ணா பார்ப்பீங்க?"

தாட்சாயிணி சிரித்தாள். "என்னடா கேள்வி இது? என் புள்ளை ராஜாவாட்டம் இருக்கான். அவனுக்கேத்த ராஜகுமாரியைத் தேடிப் பிடிக்கணும். மனோ! உனக்கு என்ன மாதிரி பொண்ணு வேணும்? டாக்டர் பொண்ணா... இல்லே...?"

"அம்மா! நான் கேட்கிற பெண்ணைப் பார்ப்பீங்களா?"

"கண்டிப்பா... நீதானே வாழப் போறவன். உன் விருப்பம்தான் முக்கியம். சொல்லுப்பா!"

"அம்மா! எனக்கு நர்மதாவைப் பிடிச்சிருக்கும்மா...!" - தாயின் கால் விரல்களை அழுத்தி விட்டுக் கொண்டே மனோ சொல்ல, தாட்சாயிணி மகனின் கேசத்தை வருடினாள்.

"நர்மதாவா! யாருப்பா அது?"

"அது... அவ இப்போ நம்ம ஹாஸ்பிடல்லதான் இருக்கா..."

"ஓ! மருமகளும் டாக்டர்தானா?"

"இல்லம்மா..."

"அப்போ நர்ஸா?"



"இல்லம்மா பேஷண்ட்!"

"பேஷண்ட்டா? என்னப்பா சொல்றே?"

"அம்மா! நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா கேட்டுட்டு நல்ல முடிவாச் சொல்லுங்கம்மா!"

"என்னப்பா? சொல்லு... யார் அவ?"

"நர்மதா! ஒரு இளம் விதவைம்மா. அதோட... கர்ப்பமாவும் இருக்கா?" - சொல்லிவிட்டுத் தாயை நிமிர்ந்து பார்க்க, பலமாய் அதிர்ந்தாள் தாட்சாயிணி. கேசத்தை வருடிக் கொண்டிருந்த கரங்கள் தானாய்த் தன் பணியை நிறுத்திக் கொண்டன.

"மனோ! நீ... என்னடா சொல்ற?"

"ஆமாம்மா. அவளுக்குன்னு யாருமே இல்லைம்மா..." - எனத் தொடங்கி, நர்மதாவின் வாழ்க்கை வரலாறை விவரிக்க, மூச்சு விடவும் மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மா! அவளோட இந்த நிலைமைக்கு யாரும் காரணமில்ல. ஆனா இதை அந்த முட்டாள் ஜனங்களால ஏத்துக்க முடியலை. பாவம்மா... வயித்தில குழந்தையோட ஒரு பொண்ணு சாகத் துணிஞ்சா அவ மனசு எவ்வளவு புண்ணாகிப் போயிருக்கும்.

"அந்தப் புண்ணுக்கு மருந்தா அவளோட குழந் தைக்குத் தகப்பனா நான் இருக்கணும்னு ஆசைப் படுறேன்ம்மா... பொறக்கும் போதே ஒரு குழந்தை தகப்பன் இல்லாமப் பொறக்கிறது எவ்வளவு கொடுமை!"

"ம்... ரொம்பக் கொடுமைதான்."

"அதை மாத்தனும்னு நினைக்கிறேன்ம்மா. கடைசி வரை அவளைக் கண் கலங்காம பார்த்துக்கனும்னு ஆசைப்படுறேன். நீங்க என்னம்மா சொல்றீங்க?" – எனக் கேட்ட மகனைப் பார்த்து நெக்குருகிப் போனாள் அன்னை.

பெண்கள் என்றாலே போகப் பொருள், அடிமைகள் என நினைத்த தகப்பனுக்கு இப்படி ஒரு பிள்ளையா? சேற்றிலே செந்தாமரை மலர்வது போல்... இந்த முத்து என் வயிற்றில் பிறந்திருக்கிறது. இவன் என் பிள்ளை. நான் சுமந்து பெற்ற பிள்ளை.

என் அன்பையும் பரிவையும் கருணையையும் பொறுமையையும் வாங்கிக் கொண்டு பிறந்த பிள்ளை. எத்தனை உயர்வான மனம் என் பிள்ளைக்கு! விதவைகளை மணம் முடிப்பதற்குப் பெரிய மனம் வேண்டும்! அதுவும் வயிற்றுப் பிள்ளையோடு வருபவளை ஏற்றுக் கொள்கிறேன் என்கிறானே!

இவனல்லவோ மாமனிதன். இவனைப் பெற்றதற்காக என் வயிறு பாக்கியம் செய்திருக்கிறது. இவன் என் பிள்ளை! மனம் கர்வம் கொண்டது. முகம் காணாத அந்த நர்மதாவின் மேல் அன்பு சுரந்தது. என் மகனின் மனதைக் கவர்ந்தவள். அவள்தான் இந்த வீட்டின் மருமகள். அவள் வயிற்றில் வளர்வது என் பேரக் குழந்தை.

தாட்சாயிணி மனதளவில் அவர்களை முழுதாய் ஏற்றுக் கொண்டாள். தாயின் மௌனம் மனோவைப் பயமுறுத்தியது.

"என்னம்மா? நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்க வில்லையா?"



"சேச்சே! என் பிள்ளையின் மனம் எத்தனை உயர் வானது என்று பூரித்துவிட்டேனப்பா... எனக்குப் பரிபூரணச் சம்மதம். எப்போதப்பா வீட்டிற்கு அழைத்து வரப் போகிறாய்?"

"அம்மா!" – ஆனந்தமாய்த் தாயைக் கட்டிக் கொண்டான்.

"உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம்ப்பா."

"தேங்க்யூம்மா. தேங்க்யூ ஸோ மச்!" – தாயின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"போதும்டா... சரி, சங்கரிக்கு இந்த விஷயம் தெரியுமா?"

"ம்... சொல்லிட்டேன்."

"அந்தப் பொண்ணுகிட்ட?"

"இன்னும் சொல்லலம்மா... கொஞ்சம் தயக்கமா இருக்கு."

"ஏம்ப்பா?"

"கொஞ்ச நாள் போகட்டும்மா. நானே சொல்லி டுறேன்."

"சரிப்பா... உனக்கு எது சரின்னு படுதோ... அப்படியே செய்."

"நாளைக்கே நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திடவா?" – ஆர்வமாய்க் கேட்ட மகனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"சரிப்பா...!"

"அம்மான்னா அம்மாதான். என் செல்ல அம்மா!"

"அதை மாத்தனும்னு நினைக்கிறேன்ம்மா. கடைசி வரை அவளைக் கண் கலங்காம பார்த்துக்கணும்னு ஆசைப்படுறேன். நீங்க என்னம்மா சொல்றீங்க?" - எனக் கேட்ட மகனைப் பார்த்து நெக்குருகிப் போனாள் அன்னை.

பெண்கள் என்றாலே போகப் பொருள், அடிமைகள் என நினைத்த தகப்பனுக்கு இப்படி ஒரு பிள்ளையா? சேற்றிலே செந்தாமரை மலர்வது போல்... இந்த முத்து என் வயிற்றில் பிறந்திருக்கிறது. இவன் என் பிள்ளை. நான் சுமந்து பெற்ற பிள்ளை.

என் அன்பையும் பரிவையும் கருணையையும் பொறுமையையும் வாங்கிக் கொண்டு பிறந்த பிள்ளை. எத்தனை உயர்வான மனம் என் பிள்ளைக்கு! விதவைகளை மணம் முடிப்பதற்குப் பெரிய மனம் வேண்டும்! அதுவும் வயிற்றுப் பிள்ளையோடு வருபவளை ஏற்றுக் கொள்கிறேன் என்கிறானே!

இவனல்லவோ மாமனிதன். இவனைப் பெற்றதற்காக என் வயிறு பாக்கியம் செய்திருக்கிறது. இவன் என் பிள்ளை! மனம் கர்வம் கொண்டது. முகம் காணாத அந்த நர்மதாவின் மேல் அன்பு சுரந்தது. என் மகனின் மனதைக் கவர்ந்தவள். அவள்தான் இந்த வீட்டின் மருமகள். அவள் வயிற்றில் வளர்வது என் பேரக் குழந்தை.

தாட்சாயினி மனதளவில் அவர்களை முழுதாய் ஏற்றுக் கொண்டாள். தாயின் மௌனம் மனோவைப் பயமுறுத்தியது.

"என்னம்மா? நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"



"சேச்சே! என் பிள்ளையின் மனம் எத்தனை உயர்வானது என்று புரிந்துவிட்டேனப்பா... எனக்குப் பரிபூரணச் சம்மதம். எப்போதப்பா வீட்டிற்கு அழைத்து வரப் போகிறாய்?"

"அம்மா!" - ஆனந்தமாய்த் தாயைக் கட்டிக் கொண்டான்.

"உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம்ப்பா."

"தேங்க்யூம்மா. தேங்க்யூ ஸோ மச்!" - தாயின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"போதும்டா... சரி, சங்கரிக்கு இந்த விஷயம் தெரியுமா?"

"ம்... சொல்லிட்டேன்."

"அந்தப் பொண்ணுகிட்ட?"

"இன்னும் சொல்லலம்மா... கொஞ்சம் தயக்கமா இருக்கு."

"ஏம்ப்பா?"

"கொஞ்ச நாள் போகட்டும்மா. நானே சொல்லிடுறேன்."

"சரிப்பா... உனக்கு எது சரின்னு படுதோ... அப்படியே செய்."

"நாளைக்கே நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திடவா?" - ஆர்வமாய்க் கேட்ட மகனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"சரிப்பா...!"

"அம்மான்னா அம்மாதான். என் செல்ல அம்மா!"

"சரி... அந்தப் பொண்ணு இங்கே வரச் சம்மதிப்பாளா?"

"இப்போதைக்கு அவளுக்கொரு பாதுகாப்பான இடம் வேணும்னு சொல்லி... இங்கே வரச் சம்மதிக்க வெச்சிருக்கேன். வரட்டும்! உங்களை... நம்ம வீட்டை... என்னை அவளுக்கு நிச்சயமாப் பிடிக்கும். அப்படி பிடிச்ச பிறகு என் மனசைச் சொல்லலாம்னு இருக்கேன்ம்மா..."

"சரிடா கண்ணா! உன் மனசுக்கு எல்லாமே நல்லதா நடக்கும்."

"தேங்க்யூம்மா."

"அவளோட அப்பா... அண்ணன் யாராவது தேடினா பிரச்சனை ஆகிடாதா மனோ! எதுக்கும் அவளோட பிறந்த வீட்டில உள்ளவங்க கிட்ட பேசிட்டாப் பின்னால எதுவும் பிரச்சனை வராது."

"ஆமாம்மா. அதுக்கும் ஏற்பாடு பண்ணிட்டு இருக்கேன்."

"என்ன ஏற்பாடு?"

"அவளோட அண்ணன் இப்போ திருச்சூர்ல இருக்காராம். மனைவிக்குப் பயந்தவர் போலிருக்கு. நம்ம ஷ்யாமை அனுப்பியிருக்கேன். எப்படியாவது விசாரிச்சு அவ அப்பாவைக் கையோட கூட்டிட்டு வரச் சொல்லியிருக்கேன்.

"வந்தாங்கன்னா அவங்ககிட்ட பேசி அவங்க சம்மதத்தையும் வாங்கிட்டு நர்மதாகிட்ட பேசலாம்னு இருக்கேன். சரிதானேம்மா?"

"நீ புத்திசாலிடா கண்ணா! எது செய்தாலும் யோசித்து தான் செய்வே. சரியாவும் செய்வே! முதல்ல நாளைக்கே



என் மருமகளைக் கூட்டிட்டு வா. பார்க்கணும் போல இருக்கு!"

"சரிம்மா... அம்மா! அவகிட்ட எதையும் அவசரப்பட்டுச் சொல்லிடாதீங்க."

"அதெல்லாம் கவனமா இருப்பேன். பயப்படாதே!"

"ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. இனிப்பான விஷயம் பேசியிருக்கோம். ஏதாவது ஸ்வீட் சாப்பிடலாமா?"

"பால் பாயசம் வைக்கட்டுமா?"

"டபுள் ஓ.கே. வாங்க. நாம ரெண்டு பேரும் சேர்ந்து செய்வோம். அக்காவுக்குப் போன் பண்ணி பிரபாவையும் கூட்டிட்டு வரச் சொல்லிச் சேர்ந்தே சாப்பிடலாம்!" - உற்சாகமாகச் சமையலறைக்குள் நுழைந்தான்.

பிள்ளைகளைப் பற்றிய வேதனை விலகிட, சிறு பெண்ணைப் போல் உற்சாகமாக மாறிப் போனாள் தாட்சாயிணி.

# 22



கானல் நீராய்ப் போன
உறவுகள் புதிதாய்ப் பூப்பதேன்?
காலங்கள் போனாலும்
காயங்கள் ஆறவில்லையே!
பழைய உறவுகள் உதிரட்டும்!
புதிய உறவுகள் மலரட்டும்!

திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டு நின்ற நர்மதாவை ஓடி வந்து பற்றிக் கொண்டாள் உமா.

"என்ன அண்ணி அப்படிப் பார்க்கிறீங்க? நான்தான் உமா!"

"என்ன உமா, உன்னைத் தெரியாமல் போகுமா?"

"எப்படி இருக்கீங்க, அண்ணி?"

"ம்... இருக்கேன்."

"நீங்க எப்படி இங்கே? உங்க அண்ணி கூடவா வந்தீங்க?"

"என்ன?"

"செக்-அப்புக்கு வந்தீங்களா, அண்ணி?"

"ம்..."

"ஐயோ! தலையில என்ன?"

"அது சின்னக் காயம். இப்போ ஆறிப் போச்சு."

"அண்ணி! எங்க வீட்டுல இருந்ததைவிட இப்போ நிம்மதியா இருக்கீங்களா? உங்க அண்ணன், அண்ணி எல்லாரும் நல்லாப் பார்த்துக்கிறாங்களா?"

"உமா! நான் என் அண்ணன் வீட்ல இருக்கிறதா யார் சொன்னது?"

"அம்மாதான். வீடு தேடி வந்து கூட்டிட்டுப் போனாங்களாமே! கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருந்தது, அண்ணி!"

"ம்... எப்போ சொன்னாங்க?"



"ஒரு ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் வீட்டுக்குப் போயிருந்தேன். உங்களைப் பார்க்கத்தான் போனேன். நீங்க எங்கேன்னு கேட்டதற்கு உங்க அண்ணனும் அப்பாவும் வந்து கூட்டிட்டுப் போனதா சொன்னாங்க..."

"உங்க அம்மா மாறவே இல்லையா?"

"அண்ணி?" - கேள்வியால் நிமிர்ந்தாள்.

"ஆமா! நீ எங்கே இங்கே? எதுவும் விசேஷமா?"

உமா வெட்கமாய்ப் புன்னகைத்தாள். "அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல... அண்ணி! என் ஃபிரண்ட் ராஜேஸ்வரிக்குக் குழந்தை பிறந்திருக்கு. அதான் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன்."

"நீ மட்டுமா வந்தே?"

"அவங்க வந்து விட்டுட்டுப் போனாங்க. போகும்போது ஆட்டோவில போயிடுவேன். நீங்க எப்படி அண்ணி இருக்கீங்க?"

"ம்... நல்லா இருக்கேன்."

"மருமகன் என்ன சொல்றான்?" - என்றவாறே நர்மதாவின் வயிற்றைத் தொட்டுப் பார்த்தாள். குழந்தை லேசாய் அசைந்தது.

"அண்ணி! நான் தொட்டதும் அசையுது, பாருங்களேன்..."

"ம்... இப்போ அவருக்கு எல்லாமே தெரியுது."

"அண்ணி! எத்தனாவது மாசம் வளைகாப்பு வைப்பாங்க? எங்களையெல்லாம் கூப்பிடுவாங்களா?" - உமா இயல்பாய்க் கேட்க, திடும்மென அதிர்ந்தாள்.

'வளைகாப்பா? எனக்கு...! அதெப்படிச் செய்ய முடியும்? யார் செய்வார்கள்? எப்படிச் செய்வார்கள்? வளைகாப்பென்றால் கைகள் நிறைய வண்ணவண்ண மாய்க் கண்ணாடி வளையல் அணிவிப்பார்கள். தலை நிறையப் பூச்சூடி நெற்றியில் குங்குமம் இட்டுக் கன்னத்தில் சந்தனத்தைக் குழைத்துப் பூசி... சுமங்கலிகள் வாழ்த்தும் விசேஷம் அல்லவா! இதில் ஒன்றைக்கூட என்னால் அணிய முடியாதே!'

வெறுமையாய் இருந்த கைகளை ஏக்கமாய் வருடினாள் நர்மதா. பெருமூச்செறிந்தாள்.

"எனக்கெல்லாம் அந்தக் கொடுப்பினை கிடையாது, உமா!"

"ஏன் அண்ணி?"

"தெரியாத மாதிரி கேட்கிறியே? எல்லாத்தையும் இழந்துட்டு நிக்கிறவ நான்...!"

"ஸாரி, அண்ணி!"

"பரவாயில்லை, விடு."

"இந்த நிலையை மாத்தணும்னுதான் நானும் என் கணவரும் போராடுறோம். ஆனா எதுவும் அமைய மாட்டேங்குது!" - சலித்துக் கொண்டாள் உமா.

"என்ன? எதை மாத்தணும்?"

"உங்களைத்தான் அண்ணி! பூவும் பொட்டுமா உங்களைப் பார்க்கணும்னு..."

"உமா!" - கத்தினாள் நர்மதா. உடல் நடுங்கப்



"ஏன் அண்ணி?"

"என்ன பேசுறோம்னு புரிஞ்சுதான் பேசுறியா?"

"இதுல என்ன தப்பு இருக்கு, அண்ணி?"

"என்ன தப்பா? நீ இப்படிப் பேசுறதே தப்பு!"

"இல்லை, அண்ணி! நீங்கதான் இன்னும் பழைய காலத்திலேயே இருக்கீங்க. உங்களுக்கென்ன அறுபது வயசா ஆயிடுச்சு. அப்படியே விட...?"

"உமா!"

"அண்ணி! போன வாரம் கூட ஒரு அருமையான வரன் அமைஞ்சது. அது விஷயமா உங்ககிட்ட பேசத்தான் வீட்டுக்கே வந்தேன்."

"என்ன?" - அதிர்ந்தாள்.

"ஆமா அண்ணி! அம்மாவுக்கும் உங்க அட்ரஸ் தெரியலியா? எப்படியாவது பேசி முடிச்சிடணும்னு எங்க வீட்டுக்காரர் முயற்சி பண்ணினாங்க. ம்ப்ச்! முடியாமப் போச்சு! இப்போ வேற பொண்ணு பார்த்திட்டாங்க..."

"உமா! இது... இதெல்லாம் தப்பில்லையா?"

"இதுல என்ன அண்ணி தப்பு இருக்கு? உங்களுக்கு வயசு இருபத்திரண்டு. இன்னும் எவ்வளவோ காலம் இருக்கே... கடைசி வரை தனியாவே வாழ்ந்திட முடியுமா?

"உங்களுக்குப் பாதுகாப்பான ஒரு துணையிருந்தா... உங்களைப் பற்றி நாங்களும் கவலைப்படாம இருப் போமில்ல...!"

இதயம் படபடக்க... உமாவைத் தயக்கமாய் ஏறிட்டாள் நர்மதா.

"இதை... ஊர் ஏத்துக்குமா? ஒரு மாதிரி பேச மாட்டாங்களா?"

"இதுல பேச என்ன இருக்கு? ஏன் அண்ணி, நாம கஷ்டப்படும்போது நம்மைக் கண்டுக்காத ஊரைப் பத்தி நாம ஏன் கவலைப்படணும்?"

"இருந்தாலும்..."

"அண்ணி! சின்ன வயசில கணவனை இழக்கிறது ரொம்பக் கொடுமை. முன்னே உள்ள காலத்தில உடனே பெண்களையும் உடன்கட்டை ஏற வைச்சிடுவாங்க. அப்புறம் கொஞ்சம் நிலை மாறிப் பெண்களுக்கு வெள்ளைத் துணி கட்டி வீட்டுக்குள்ளேயே வைச்சாங்க.

"அப்புறம் அதுவும் மாறி வேற கலர் டிரெஸ் போட்டாங்க. கை, கால், கழுத்துன்னு வெறுமையா இல்லாம நகைகூடப் போட ஆரம்பிச்சாங்க. இப்போ இன்னும் மாறி விதவிதமா டிரெஸ் பண்றாங்க. பரந்த மனப்பான்மை உள்ள ஆண்கள் திருமணம் செய்துக்கிற அளவுக்கு மாறியிருக்கு...

"அதனால நீங்க தயங்கவோ பயப்படவோ வேண்டாம். சீக்கிரமே ஏதாவது ஒரு நல்ல வரன் கிடைச்சா உங்க வீட்ல வந்து பேசுறேன். அட்ரஸ் கொடுங்க அண்ணி!"

"இ... இல்ல... வேண்டாம்."

"அண்ணி! மறுக்காதீங்க அண்ணி... உங்களுக்காக இல்லாட்டியும் வயித்துல வளர்ற ஜீவனுக்காக ஒத்துக்கங்க, அண்ணி!"



"உமா! எனக்கு ரொம்பக் குழப்பமா இருக்கு. இப்ப இந்தப் பேச்சு வேண்டாமே!"

"பரவாயில்லை, அண்ணி! நிதானமா இருந்து யோசிங்க. கண்டிப்பா உங்களுக்கு ஒரு துணை அவசியம். நான்தான் பார்க்கணும்னு இல்ல... உங்க அண்ணன் பார்த்தாலும் சரி! மறுக்காம சம்மதிங்க, அண்ணி!

"இனிமேலாவது நீங்க சந்தோஷமா வாழணும், அண்ணி. கல்யாணம் ஆயுசு முழுக்கத் தொடரும் பயணம், அண்ணி. இவ்வளவு சீக்கிரமா முடிஞ்சிடக் கூடாது."

"உமா! என்னை... இந்த நிலைமையில யாரு ஏத்துப்பா?"

"ஏன் அண்ணி இப்படி நினைக்கிறீங்க? எத்தனையோ ஆண்கள் விதவைப் பெண்களை - கணவனால் கைவிடப் பட்ட பெண்களைக் கட்டிக்கிட்டு வாழுறதை நான் பார்த் திருக்கேன். ஒரு சிலர் தங்களோட லட்சியமே இதுதான்னு கூடச் சொல்வாங்க.

"நல்லதும் கெட்டதும் நிறைஞ்சதுதான் அண்ணி உலகம். நாம நல்லதை மட்டுமே பார்ப்போமே... உங்க மேல அன்பும் அக்கறையும் காட்டுற ஜீவன் நிச்சயமா உங்களைத் தேடி வரும்."

நர்மதாவின் மூளைக்குள் பலவித மாற்றங்கள்... குழப்ப முடிச்சுகள்... முடிச்சுகளின் ஊடே மனோகரின் நினைவுகளும் புகுந்து கண்ணாமூச்சி ஆடின. தலையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"என்ன அண்ணி?" - உமா பதறினாள்.

"ஒண்ணுமில்ல... நான் கிளம்புறேன்."

"அண்ணி! அட்ரஸ் தராம போறீங்களே!"

"வேண்டாம், உமா."

"ஏன் அண்ணி?"

"இல்லை... நாங்க எங்க அண்ணியோட ஊருக்குப் போயிடலாம்னு இருக்கோம். எனக்குன்னு எந்த அட்ரஸும் இல்லையே! நீ அதே வீட்லதானே இருக்கே?"

"ஆமா, அண்ணி!"

"நானே வந்து பார்க்கிறேன். சரியா?"

"சரி, அண்ணி!"

"உமா! ஒரு சின்ன உதவி..."

"சொல்லுங்க அண்ணி?"

"வந்து... நீ என்னைப் பார்த்ததை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். உன் அம்மாகிட்டகூட!"

"ஏன், அண்ணி?"

"முறிஞ்சு போன உறவுகள் முறிஞ்சதாவே இருக்கட்டுமே. நான் எங்கே இருக்கேன்னு யாருக்கும் தெரிய வேண்டாம்னு நினைக்கிறேன்."

உமாவின் முகம் வாடியது. "உங்க மனவருத்தம் எனக்குப் புரியுது, அண்ணி. எங்க வீட்ல உள்ளவங்களும் உங்களைக் கொஞ்சமா பேசினாங்க? சரி... போகட்டும், விடுங்க, அண்ணி. எது நடந்தாலும் உங்க நல்லதுக்குத் தான்னு நினைச்சுக்கங்க."



"உமா!"

"ஆமா அண்ணி! எங்க வீட்டில இருந்திருந்தா பேசிப் பேசியே உங்களைக் கொன்னுருப்பாங்க. கண்ணீர்லயே உங்க காலம் முடிஞ்சிருக்கும். அது இல்லாம நீங்க சந்தோஷமா வாழக் கடவுள் செய்த வழி இதுன்னு நினைச்சுக்கங்க."

"உமா! நீ எவ்வளவு பேச்சு பேசுறே!"

சிரித்தாள். "சரி, அண்ணி! நேரமாச்சு. நான் கிளம்புறேன்."

"சரிம்மா..."

"நீங்க எந்த ஊருக்குப் போனாலும் சரி. என்னை மட்டும் மறந்துடாதீங்க."

"உன்னை மறக்க முடியுமா?"

"தேங்க்யூ, அண்ணி. குழந்தை பிறந்தப்புறம் எங்க வீட்டுக்கு வாங்க."

"கண்டிப்பா!"

"வாங்க, அண்ணி, போகலாம். கீழேதானே இறங்கணும்?"

"இ... இல்ல உமா! எனக்கு இன்னும் ரெண்டு டெஸ்ட் எடுக்கணும். லேட்டாகும்... நீ போயிட்டு வா!"

"யார் கூட அண்ணி வந்தீங்க?"

"எம் புள்ளைதான் எனக்குத் துணை. அவன் கூடத்தான் வந்தேன்."

"அசத்திட்டீங்க அண்ணி!" - என்றவள் நர்மதாவின் வயிற்றைப் பார்த்துக் குனிந்து பேசினாள்.

"டேய்! குட்டிப் பையா! அம்மாவைப் பத்திரமாப் பார்த்துக்கோ. அழவிடாதே! உன் அப்பாவும் பாட்டியும் சேர்ந்து உன் அம்மாவை ரொம்ப அழ வெச்சிட்டாங்க. இனிமே அவங்க கண்ல இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வராம பார்த்துக்கிறது உன் பொறுப்பு. சரியா?"

"சரி உமா! நீ கிளம்பு. நேரமாகுதே!"

"வர்றேன், அண்ணி...!"

"உமா! சுடுதண்ணி ஊத்திடுச்சே... அந்தக் காய மெல்லாம் ஆறிடுச்சா?"

"அதெல்லாம் எப்பவோ ஆறிடுச்சி, அண்ணி. நீங்க அதை இன்னும் மறக்கலியா?"

'அதை எப்படி மறக்க முடியும்? அதைச் சாக்காய் வைத்துத்தானே என்னை வெளியே தள்ளினார்கள்!' வாய் வரை வந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு புன்னகைத்தாள். உமாவும் இதமாய்ப் புன்னகைத்துவிட்டுக் கையசைத்து விடைபெற, அவள் போய் விட்டாள் என்று உறுதி செய்து கொண்டு வேகமாய்த் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.

'ம்ஹூம். இனியும் இங்கு இருக்கக் கூடாது. மனோகர் வந்ததும் அவர் வீட்டிற்குப் போய் விட வேண்டும். அப்போது தான் யார் கண்ணிலும் படாமல் இருக்க முடியும். பாதுகாப்பான இடமும் கூட!' - என்றவாறே கட்டிலில் அமர்ந்தாள்.



களைப்பாய் இருந்தது. உடம்பில் மட்டுமல்ல... மனதும் களைத்துப் போனது. கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் என மெல்லக் கட்டிலில் சாய்ந்து ஒருக்களித்துப் படுத்தாள். உமாவின் பேச்சுக்கள் நினைவில் வலம் வந்தன.

'உங்களைப் பூவும் பொட்டுமா பார்க்கணும்னு ஆசைப்பட்டோம்.'

'எப்போ அண்ணி வளைகாப்பு?'

'சின்ன வயசுல கணவனை இழப்பது ரொம்பக் கொடுமை, அண்ணி!'

'உங்களுக்காக இல்லாட்டியும் வயத்தில வளர்ற ஜீவனுக்காகச் சம்மதிங்க அண்ணி.'

தலையை மறுப்பாய் அசைத்துக் கொண்டு கண்களை இறுக மூடினாள்.

'உங்க மேல அன்பும் அக்கறையும் உள்ள ஜீவன் நிச்சயமா உங்களைத் தேடி வரும்.'

யார் அந்த ஜீவன்? மனோகரா? ரோட்டில் விழுந் தவளைக் காப்பாற்றினான். வைத்தியம் செய்தான். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்... எல்லாமே கொடுத்தான். இவற்றை எல்லாம் விட அந்த அன்பு, பரிவு, அக்கறை - இதெல்லாம் எதற்காக என்னிடம் காட்டுகிறான்!

நான் யார் இவனுக்கு? தன் வீட்டிற்கே அழைத்துச் செல்லப் போகிறான். தன் வயிற்றில் வளரும் குழந்தை மீது எவ்வளவு பிரியம் இவனுக்கு! குழந்தைகள் நல மருத்துவ னாயிற்றே! ஆனால் அதையும் தாண்டி ஏதோ ஒன்று அவன் அன்பில் தெரிகிறது.

என்ன அது? என் கண்கள் கலங்கினால் அவன் பதறுகிறானே! ஒரு நொடிகூட வாடி விடாமல் பாதுகாக்கிறானே! இந்த அளவுக்கு அதிகமான அன்புதான் நேசமா? அப்படியென்றால் மனோ என்னை நேசிக்கிறாரா? அவரது அன்பை அடையத் தகுதியானவள் நானா? இது தவறல்லவா? நான் இன்னொருவனின் மனைவி அல்லவா?

மூளையும் இதயமும் இணைந்து வாக்குவாதம் செய்ய, நர்மதாவின் மனம் உறுதியாய் மறுத்தது. 'இல்லை பெண்ணே! இப்போது நீ கைம்பெண். உன்னை மணந்தவன், தான் கட்டிய மஞ்சள் கயிற்றோடு, தன் பந்தத்தையும் அறுத்துக் கொண்டு மண்ணோடு புதைந்து விட்டான்.

இனி உன் வாழ்விற்கு எது ஆதாரம்? கிடைத்த கொம்பைப் பற்றிக் கொள்ளும் தளிர்க்கொடி நீ. ஆதரவாய் நீட்டும் கரத்தைப் பற்றிக் கொள். உன் வாழ்க்கை மலரட்டும். உன் கொடி துளிர்க்கட்டும். உன் எதிர்காலம் வளமான குளிர் சோலையாகட்டும்.'

கண்களை உறக்கம் தழுவ, வழக்கம் போல் அதே கனவு வந்தது. ஆனால் இன்று நர்மதா பதறிக் கண்களைத் திறக்கவில்லை. கனவைக் கலைக்காமல் ஆழமாய்க் கவனித்தாள்.

சுற்றிலும் இருட்டான பாதை. தெளிவற்றுக் கல்லும் முள்ளும் கொட்டிக் கிடக்கும் பாதையில் யாரோ தள்ளி விடுகிறார்கள். தட்டுத் தடுமாறி எழுந்து நடக்க முயற்சிக்கையில், முள்ளும் கல்லும் பாதத்தைப் பதம் பார்க்கின்றன.



இருள் மிரட்டுகிறது. பாதம் நோகிறது. அடுத்த அடியை எடுத்து வைக்க இயலாமல் தடுமாறித் தவிக்கையில், ஏதோ ஒரு தெய்வீகக் குரல் சற்றுத் தூரமாய் ஒலிக்கிறது.

'நர்மதா! வா... எழுந்து வா.'

குரல் கேட்ட திசையைக் குறி வைத்து முன்னேறுகிறாள். இப்போது அந்தக் குரல் பக்கத்தில் ஒலிக்க, பார்வையைக் கூர்மையாக்கித் தேடுகிறாள். யார் என்னை அழைத்தது?

'நான்தான் அழைத்தேன்... வா!' - என்ற பதில் வந்த திசையில் ஒரு துளி வெளிச்சம் ஒளிர்கிறது. இருளில் கிடந்தவளுக்கு வெளிச்சத்தைக் கண்டதும் புத்துணர்வும் நம்பிக்கையும் வந்துவிட, முட்களைப் பற்றிச் சிந்தியாமல் வெளிச்சத்தை நோக்கி ஓடுகிறாள். இப்போது பாதம் நோகவில்லை.

வெளிச்சம் நெருங்கிக் கொண்டே வர, தன்னை அழைத்தது யாரென்று தெரிய... ஆவலாய் இன்னும் வேகமாய் ஓடுகிறாள். திடீரெனப் பாதம் குளிர்கிறது. மெத்தென்ற உணர்வில் கீழே பார்க்க, பசுமையான புல்வெளி. பாதையின் இருபுறமும் மலர்ந்து மணம் வீசும் பலவித வண்ண மலர்கள்!

குளிர் தென்றல் அவளை வருடிச் செல்ல, உடல் வலியும் களைப்பும் மாயமாய் மறைந்துவிட, உற்சாகமாய் ஓடினாள். பொட்டாய்த் தெரிந்த வெளிச்சம் இப்போது விளக்கின் ஒளிபோல் சுடர் விட்டுப் பிரகாசிக்க, அதைக் குறிவைத்து நெருங்கினாள்.

நெருங்கியே விட்டாள். இப்போது விளக்கை வைத்திருந்த உருவம் லேசாய்ப் புலப்பட்டது. அது ஒரு ஆணின் உருவம். முகத்தில் புன்னகையும் கனிவும் தேக்கி வைத்திருந்த உருவம். தன் அருகே வந்தவளை அணைத்துத் தனக்குள் பொத்தி வைத்துக் கொண்டது.

அந்த உருவம் யாரென்று பார்க்க நிமிர்கிறாள். உருவத்தைச் சுற்றிலும் கண்கள் பேசும் அளவிற்குப் பிரகாச ஒளி. கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்க்கிறாள். இது என்ன கடவுளா? தன் கண்ணீரையும் அல்லல்களையும் கண்டு கடவுளே இறங்கி வந்துவிட்டாரா? கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தவள், சிலையாகிப் போனாள். பார்வை நிலைத்துப் போனது.

அது... கடவுள் அல்ல... மனோகர்! மனோதான் நின்று கொண்டிருந்தான். குப்பென வியர்த்துவிடத் திடுக்கிட்டுக் கண் விழித்தாள் நர்மதா.

# 23



நீ என்னருகில் இல்லை
என்பது எத்தனை உண்மையோ
அதே உண்மை நீ எனக்குள்
இருக்கிறாய் என்பது!

பிரபாகரன் தன் அறையில் கண் மூடிப் படுத்திருந்தான். கண்களைத் திறந்தால் தன் வேதனை வெளியே தெரிந்து விடுமோ என்ற அச்சத்தில் அசையாமல் படுத்திருந்தான்.



அரை மணிநேரமாய்ப் பிள்ளை அசையாமல் படுத்திருக்க, நிலை கொள்ளாமல் தவித்தாள் சந்திரா.

வேலை நேரத்தில் ஒருபோதும் வீட்டுக்கு வர மாட்டானே! அப்படியே வந்தாலும் பத்து நிமிஷம் கூட நிற்க மாட்டான். ஓடிக்கொண்டே இருப்பானே! இன்று என்ன ஆகி விட்டது? நெருங்கிச் சென்று கேட்கவும் பயமாக இருந்தது.

அன்று பெண் வீட்டினர் வந்து போனதில் இருந்து தாயிடம் பேசுவதை வெகுவாய்க் குறைத்திருந்தான். அவனிடம் பேசி வாங்கிக் கட்டிக் கொள்ளாதே... எனக் கணவர் ஒருபுறம் எச்சரித்திருக்க, கைகளைப் பிசைந்தவாறே அறைவாசலில் நின்று கொண்டிருந்தாள்.

கணவரை வரச் சொல்லலாமா? தந்தை வந்தால்தான் அவனது கோபம் குறையும். அவரிடம் மட்டும்தான் மனம் திறந்து பேசுவான். போன் பண்ணி வரச் சொல்லலாம் என ஹாலிற்குச் சென்று போனில் கணவரின் செல்லைத் தொடர்பு கொண்டாள்.

வெகுநேரம் பிஸியாகவே இருக்க, ஒரு வழியாய் போனில் கிடைத்ததும் சந்திரா அழுகுரலில் கேட்டாள்.

"ஏங்க, ரொம்ப வேலையா இருக்கீங்களா?"

"இது என்ன கேள்வி சந்து? ஈவினிங் நான் பிஸியா இருப்பேன்னு தெரியாதா?"

"தெரியும். ஆனா..."

"சீக்கிரமா சொல்லு. லோடு ஏத்திட்டு இருக்காங்க. அதை செக் பண்ணணும்."

"வீட்டுக்கு எப்போ வருவீங்க?"

"லேட்டாகும். என்ன விஷயம்?"

"என்னங்க! நம்ம புள்ளை இப்ப வீட்லதான் இருக்கான்."

"வீட்லேயா? ஏன் ஹாஸ்பிடலுக்குப் போகலையா?"

"எங்கேயோ போயிட்டு வந்தாங்க. வந்ததுல இருந்து புள்ளை முகமே சரியில்ல... என்கிட்ட ஒரு வார்த்தை கூடப் பேசலை. அவன் ரூம்ல போய்ப் படுத்திட்டான். இன்னும் எழுந்துக்கலை!"

"சந்து! உடம்பு எதுவும் சரியில்லையா? கேட்டியா?"

"எனக்கு அவன்கிட்ட பேசவே பயமா இருக்குங்க..."

"அடியே! அவன் உன் பிள்ளை. உன் பிள்ளைகிட்ட பேச என்ன பயம்?"

"நான் பேசினாத்தான் எரிஞ்சு விழுறானே!"

"அது நீ செய்த தப்புக்கு... அவன் சொல்லச் சொல்லக் கேட்காம பொண்ணு வீட்டுக்காரங்களை வரச் சொன்னது உன் தப்புதானே?"

"தெரியாம பண்ணிட்டேன். அதுக்காகப் பெத்த தாய் கிட்டயே பேசாம இருக்கலாமா?"

"சரி... சரி. உன் வேதனையை விட்டுத் தள்ளு. முதல்ல புள்ளைகிட்ட போய் உடம்புக்கு என்ன ஏதுன்னு கேளு! உடம்பு முடியலைன்னா உடனே எனக்குப் போன் பண்ணு."



"சரிங்க!"

"போ... போய்ப் புள்ளையைக் கவனி..."

"ம். போனை வெச்சிடவா?" - என்றவாறு போனை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது அசுர வேகத்தோடு தரையைத் தேய்த்துக் கொண்டு வந்து நின்றது சிவப்பு நிறக் கார்.

"யாரு? இவ்வளவு வேகமா வர்றது?" - என யோசனையாய் வாசலருகே வந்தவள்... காரை விட்டு இறங்கியவளைக் கண்டதும் மிரண்டாள்.

'இவளா? இவள் எதற்காக இப்போது வந்தாள்? ஏற்கெனவே பிள்ளையின் முகம் சரியில்லை. இதில் இவள் வேறு என்ன பிரச்சனை செய்யப் போகிறாளோ?' - சற்றுப் பயத்தோடு வாசலில் நின்றவளின் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டினாள் காஞ்சனா.

"என்ன அத்தே, நான் வருவேன்னு தெரியுமா? வாசல்லயே நின்னு வரவேற்கிறீங்க. ஹௌ ஆர் யூ?"

"ம்... இருக்கேன்."

"பிரபா இருக்காரா?" - தோளில் வழுக்கிய துப்பட்டாவைச் சரி செய்தபடியே வெகு அலட்சியமாய் வீட்டினுள் நுழைய, பதட்டமாய் அவளைப் பின் தொடர்ந்தாள் சந்திரா.

"அவன் ஹாஸ்பிடலுக்கு..."

"கார் நிற்குதே!"

"ம். ஹாஸ்பிடலுக்குப் போயிட்டு இப்பத்தான் வந்தான்..." - தயக்கமாய் இழுத்தாள்.

"அவர் ரூம்லதானே இருக்காரு?"

"ம்..."

"சரி, நான் பார்த்துக்கிறேன். அத்தே! நீங்க சில்லுன்னு ரெண்டு கப் ஆப்பிள் ஜூஸ் எடுத்திட்டு வாங்க. ஓ.கே?"

"ஜூஸா? அவன்... அதெல்லாம் குடிக்க மாட்டாம்மா..."

"நான் குடிக்க வைக்கிறேன். நீங்க எடுத்திட்டு வாங்க."

"ம்..."

"ஒண்ணும் அவசரமில்ல... பொறுமையா வந்தாப் போதும்!" - என்றவாறு கூந்தல் துள்ளி விழ, உற்சாகமாய்க் குதித்துக் கொண்டே பிரபாகரனின் அறையை நோக்கிச் செல்ல, சந்திராவின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

'இன்று என்ன கூத்து நடக்கப் போகிறதோ? அவசரப் பட்டு விட்டேனே! இப்போதே என்னை இப்படி விரட்டு கிறாளே! இவள் மட்டும் எனக்கு மருமகளாய் வந்தால் என் நிலை என்ன ஆகுமோ? என் பிள்ளையைப் பந்தாடி விடுவாளே!'

ஏனோ வெகு நாட்களுக்குப் பிறகு சங்கரியின் நினைவு வந்தது. அதிர்ந்துகூடப் பேச மாட்டாள். இப்படிக் கை இல்லாத உடைகள் அணிய மாட்டாள். எந்த வித ஒப்பனையும் இல்லாமலே பேரழகாய் மின்னுவாள்.

இப்போது எப்படி இருப்பாள்? பார்த்துப் பல வருடம் ஆகிவிட்டது. ஒரு முறையாவது நேரில் சென்று பேசி யிருக்கலாமோ? நானாக எந்தப் பணமும் கேட்க வில்லையம்மா... உன் அப்பாதான் வீடு தேடி வந்து



சொன்னார். இதில் என் பிள்ளைக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொல்லியிருக்கலாம்.

ஆனால் நான் சொல்வதை அவள் காது கொடுத்துக் கேட்டிருப்பாளா? வீட்டுக்குள்ளேயே அனுமதித்திருக்க மாட்டாள். எத்தனையோ முறை பேசப்போன கணவனும் மகனும் தோல்வியில் துவண்டுதானே திரும்பி வந்தார்கள். அவளும்தான் என்னவெல்லாம் பேசிவிட்டாள்!

திருமண மண்டபத்தில் ஊரே கூடியிருக்க, என் பிள்ளையின் சட்டையைப் பற்றிக் கொண்டு 'பணத்தாசை பிடித்தவன்! கொலைகாரப்பாவி! ஏமாற்றுக் குடும்பம்!' என்று எத்தனை முறை பழித்தாள்? பிறகெப்படி அவளைப் பார்க்க மனம் வரும்?

"வெளியே போயிடு. ப்ளீஸ்!" - பிரபாகரனின் குரல் கேட்டுப் பதறி வேகமாய் அவனது அறைக்குள் சென்றாள். தாயைக் கண்டதும் அவனது கோபம் தாயின் மீது திரும்பியது.

"இதெல்லாம் உங்க வேலையா? நான் வீட்டுல இருக்கேன்னு இவளுக்குத்தான் போன் பண்ணினீங்களா?"

சந்திரா பதறிப் போனாள். "ஐயோ! இல்லப்பா... நான் அப்பா...."

"பேசாதீங்கம்மா. எனக்குப் பிடிக்காததையே செய்ய ணும்னு முடிவு பண்ணிட்டீங்களா? ஏன் எல்லாருமா சேர்ந்து என்னை டார்ச்சர் பண்றீங்க?"

"பிரபா! இப்ப ஏன் அத்தை மேல பாயுறீங்க? முதல்ல நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க!" - என அவனது

முகத்தைப் பற்றித் தன்புறமாய்த் திருப்பினாள், காஞ்சனா. பட்டென அவளது கையைத் தட்டிவிட்டான் பிரபாகரன்.

"இந்தத் தொட்டுப் பேசுற வேலையெல்லாம் என்கிட்ட வெச்சுக்காதே!" - சீறினான்.

"கட்டிக்கப் போறவ தொட்டா தப்பில்ல... டாக்டர் ஸார்!"

"அதுக்கு வேற ஆளைப் பாரு."

"நான் பார்த்த முத மாப்பிள்ளை நீங்கதான். வேற ஆளைப் பார்க்கிற ஐடியால்லாம் இல்லை. நீங்களே போதும்!" - என்றவாறு அவனருகே அமர்ந்து கொண்டாள்.

கோபமாய் எழுந்தான். "இதோ பாரும்மா! நீ சின்னப் பொண்ணு. அழகாவும் இருக்கே. உனக்கு நான் எதுக்கு? என்னைவிட அழகான பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க. சந்தோஷமா இரு. என்னை விட்டுடு!"

"ஆயிரம் பேர் அழகா இருக்கலாம், பிரபா! ஆனா உங்களை மாதிரி வருமா?"

"விளையாடாதே! கல்யாணம்ங்கிறது விளையாட்டு இல்லை...?"

"இப்ப நீங்கதான் விளையாடுறீங்க, பிரபா. அதுவும் விபரீத விளையாட்டு!"

"என்ன?"

"ஆமா! நான்தான் உங்ககிட்ட தெளிவா சொன்னேனே! நான்தான் உங்க மனைவின்னு. பிறகேன்... அந்தச் சிவசங்கரி வீட்டுக்குப் போனீங்க?"

"அது என் விருப்பம்."



"எது? அவகிட்ட அவமானப்பட்டுத் திரும்பினதா?"

"ஏய்..."

"பிரபா! இதுக்கு முன்னே நீங்க எப்படி வேணா இருந்திருக்கலாம். அவ பின்னாடி அலைஞ்சு அவ திட்டுறதைக் கொஞ்சுறதா நினைச்சிருக்கலாம். ஆனா இப்போ அப்படியில்ல... உங்களுக்கு ஒரு அவமானம்னா அது எனக்கும்தான்!"

"ஏய், நிறுத்து. நீ யார் எனக்கு? சங்கரி என்னோட உயிர். நான் அவளுக்கு மட்டுமே சொந்தமானவன். என்னை என்ன வேணா பேச அவளுக்கு உரிமை இருக்கு. அவளுக்கு மட்டும்தான் உரிமை இருக்கு!" - அழுத்தமாய் அவன் சொன்ன வார்த்தைகள் அப்போதுதான் தயங்கிய படியே வீட்டிற்குள் நுழைந்த சிவசங்கரியின் காதுகளில் தெளிவாய் விழ, அப்படியே நின்றாள்.

உள்ளே காஞ்சனாவின் குரல் ஆவேசமாய்க் கேட்க, மேற்கொண்டு உள்ளே செல்ல இயலாமல், அங்கேயே நின்று கொண்டாள்.

"உங்களுக்கு வெட்கமாயில்ல... இப்படிச் சொல்ல?"

"நான் ஏன் வெட்கப்படணும்? எங்களுக்குள்ள ஆயிரம் இருக்கும். என்னை அவ என்ன வேணா சொல்லுவா!"

"அத்தே! உங்க புள்ளைக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு. சங்கரிப் பைத்தியம். கொஞ்சமாவது மானரோஷம் இருக்குதா, பாருங்க!"

சந்திரா தயக்கமாய் மகனைப் பார்த்தாள். "பிரபா! நீ... நீ... அவ வீட்டுக்குப் போனியா?"

"ஆமா... போனேன்."

"எதுக்குப்பா?"

"சும்மா அவளைப் பார்த்துப் பேசப் போனேன்."

"இல்லை.. என்னைக் கட்டிக்கன்னு அவ காலைப் பிடிச்சுக் கெஞ்சப் போயிருக்கார்..." - சிடுசிடுத்தாள், காஞ்சனா.

"பிரபா! என்னப்பா இதெல்லாம்?"

"அம்மா! இவ யாரு? இவ ஏன் சங்கரியோட ஹாஸ்பிடலுக்குப் போனாள்? போனது மட்டுமில்ல... சங்கரிகிட்ட தாறுமாறா பேசியிருக்கா. அவ என்னைப் பத்தி என்ன நினைப்பா?"

"இப்ப மட்டும் அவ ரொம்ப உயர்வா நினைச்சிட்டு இருக்கா...ன்னு நினைச்சிட்டு இருக்கீங்களா?"

"என்னைப் பத்தி எப்படி வேணா நினைக்கட்டும். ஆனா என் மனசுல நான் அவளை உயர்வான இடத்தில தான் வெச்சிருக்கேன்."

"இப்படி ஏமாளியா இருக்கீங்களே, பிரபா! ஒரு பொண்ணு மேல பிரியம் இருக்கலாம். அதுக்காக இப்படியா?"

"ஹேய்! உனக்கு என்ன தெரியும் எங்களைப் பற்றி? ஏதோ ஒரு தவறுதலால எங்க கல்யாணம் நின்னு போச்சே தவிர, எங்க மனசுல உள்ள நேசம் மாறலை. என் மனசில அவ எப்படி நிலைச்சு நிற்கிறாளோ... அதே மாதிரி அவ மனசிலேயும் நான் இருக்கேன்."



பிரபாகரின் உறுதியான குரலில் வெளியே நின்ற சிவசங்கரியின் கண்கள் நீரைச் சிந்தின.

'பிரபா! நீ மாறவே இல்லை. உன் அன்பு, உன் நம்பிக்கை, உன் மனசு - எதுவுமே மாறவில்லை. உன்னையா இத்தனை வருடங்களாய்த் தண்டித்தேன்? உன் இதயத்தையா நெருப்பாய்ச் சுட்டேன்? சமுதாயத்தில் எத்தனை உயர்ந்த இடத்தில் இருப்பவன் நீ...!

பார்க்கும் போதெல்லாம் உன்னை அவமானப்படுத்தி விரட்டினேனே...! ஆனால் உனக்கு என்மீது துளிகூடக் கோபம் வரவில்லையே! உன் அன்பின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் போனேனே! காமவெறி கொண்டு அலைந்த என் தந்தையைத் தெய்வமாய் நினைத்து, அன்பே உருவான உன்னை விரட்டியடித்தேனே!

என்னை மன்னிப்பாயா, பிரபா? என்னை ஏற்றுக் கொள்வாயா? உன் சங்கரி உன் வீட்டு வாசலில் நிற்கிறேன், பிரபா. எனக்கு உன்னைப் பார்க்கத் தயக்கமாய் இருக்கிறது. வெளியே வாயேன். வந்துவிடேன்!' - மனதிற்குள்ளாகக் கூவினாள் சிவசங்கரி.

"நீங்கதான் மெச்சிக்கணும் அவளை... அவ உங்களைக் குப்பையைவிடக் கேவலமா நினைச்சிட்டு இருக்கா. அந்தச் சிடுமூஞ்சிக்காக என்னையே வேணாம்னு சொல்றீங்களா?"

"ஏய்! பேசாம வெளியே போயிடு. பெண்ணாச்சேன்னு பொறுமையா இருக்கேன். இல்லே...?" - கோபச் சிவப்போடு ஒற்றை விரலை நீட்டி அவன் எச்சரிக்க மிரண்டு போனாள், காஞ்சனா.

"பிரபா! நான்..."

"வாயை மூடு. என் பேரை உச்சரிக்காதே. உன் முகத்தைப் பார்க்கவே விரும்பலை நான். நான்தான் என் முடிவைத் தெளிவாச் சொல்லிட்டேனே... இனியும் ஏன் நிற்கிறாய்? போ... வெளியே!"

"பிரபா! கோபப்படாதேப்பா... நான் பொறுமையா பேசி அனுப்புறேன்."

"சும்மா இருங்கம்மா... எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்தான். இனிமே மாப்பிள்ளை பார்க்கிறேன்... மண்ணாங்கட்டி பார்க்கிறேன்னு இங்கே எவனாவது வந்தான்... இந்த வீட்டுக்கு நான் வர மாட்டேன்."

"ஐயோ! என்னப்பா இது?"

"உண்மையாத்தான் சொல்றேன். ஏய்! நீ ஏன் நிற்கிறே? போ வெளியே!" - பிரபாகரன் கத்திக் கொண்டிருக்கும்போதே, காஞ்சனாவின் கைபேசி அழைத்தது. செல்போனின் திரையைப் பார்த்ததும் லேசாய்ப் பதறி மற்றவர்களைப் பார்த்துக் கொண்டே, போனைக் காதிற்குக் கொடுத்தாள்.

"சொல்லு! இப்ப ஏன் போன் பண்ணினே?" - இரகசியமான குரலில் கேட்க, எதிர்முனையில் இருந்து வந்த தகவலால் முகம் மாறினாள். மௌனமாய் அனைத்தையும் கேட்டுவிட்டுப் போனை கட் பண்ணிக் கைப்பையில் வைத்தாள். சற்றே நிமிர்வாய்ப் பிரபாகரனை ஏறிட்டாள்.

"மிஸ்டர் பிரபாகர்! என்ன சொன்னீங்க?"

"ம்... வெளியே போன்னு சொன்னேன்..." - என்றான் கடுப்பாய்.



"தப்பு பண்றீங்க பிரபா. நான் யாருன்னு தெரியாம என்னை அவமானப்படுத்துறீங்க."

"நீ யாரா வேணா இருந்துட்டுப் போ. ஐ டோண்ட் கேர்."

"இதுக்கெல்லாம் சேர்த்து நிச்சயமா ஒரு நாள் வருத்தப்படப் போறீங்க."

"அந்த ஒரு நாள் வரும்போது பார்த்துக்கலாம். இப்பக் கிளம்பு."

"அத்தே! உங்க பிள்ளைகிட்ட சொல்லி வையுங்க. என்னைப் பகைச்சுக்க வேண்டாம்னு... என்னைப் பற்றி உங்களுக்குச் சரியா தெரியலை..."

"ஏய்! என்ன நீ? பெரிய வில்லி மாதிரி டயலாக் பேசிட்டு இருக்கே. வெளியே போ!"

"போறேன். ஆனா திரும்பி வருவேன். கல்யாணக் கோலத்துல சந்திப்போம். வரட்டுமா?" - கண்களைச் சிமிட்டியவாறே அவள் புறப்பட, வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான் பிரபாகரன்.

இதற்கெல்லாம் நான் கலங்குபவள் அல்ல என்பதைப் போல் கைப்பையைச் சுழற்றிக் கொண்டே வெளியேறியவள், வாசலருகே உறைந்து போய் நின்ற சங்கரியைக் கண்டதும் திடுக்கிட்டாள். மறுகணமே சுதாரித்துக் கொண்டு உதட்டைச் சுழித்தவாறே அவளை நெருங்கினாள்.

"என்ன விஷயம்? இவ்ளோ தூரம் வந்திருக்கீங்க?" - கேள்வியில் அலட்சியம் தொனிக்க, பதில் பேசாமல் நின்றாள் சங்கரி.

"கேட்கிறது காதில விழலையா?"

"பிரபா சொன்னது உன் காதில விழலையா?" - சங்கரியும் அதே தொனியில் கேட்க, முகம் கடுத்தாள் காஞ்சனா.

"என்ன சொல்றே?"

"உன்னை வெளியேதானே போகச் சொன்னார்?"

"ஏய்! நீ யாருடி என்னைக் கேள்வி கேட்க?"

"இந்த வீட்டின் மருமகள். பிரபாகரனின் மனைவியாகப் போகிறவள்..." - அழுத்தமாய்ச் சொல்ல, காஞ்சனாவின் முகம் பலவிதமாய் மாறியது.

"எ... என்ன? என்ன சொன்னே?"

"ஏன்? உனக்குக் காது சரியா கேட்காதா?"

"ஏய்! யாரைப் பார்த்து என்ன கேட்கிறே? இவ்வளவு நாளா இல்லாம திடீர்னு என்ன ஒட்டுதல் உனக்கு?"

"எப்பவுமே எனக்குப் பிரபா மேலயும் அவருக்கு என் மேலயும் ஒட்டுதல் உண்டு. உன்னை மாதிரி இடையில வர்றவளுக்கெல்லாம் அதை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கிளம்பு!"

"சங்கரி! நீங்க யாருமே என்னைச் சரியா புரிஞ்சுக்கலை. அதான் இப்படிப் பேசிட்டு இருக்கீங்க?"

"இதோ பார், காஞ்சனா! எனக்கு உன் மேல எந்த வெறுப்பும் கோபமும் கிடையாது. உண்மையைச் சொல்லணும்னா என் மனசை என்னையே புரிஞ்சுக்க வைச்சது நீதான். அதுக்காக உனக்குக் கோடி நன்றி. இப்ப நான் என் பிரபாகிட்ட பேசணும். ப்ளீஸ்! டோண்ட் டிஸ்டர்ப் மீ. போயிட்டு வாம்மா..." - எனப் புன்னகையோடு சிவசங்கரி



சொல்ல, பற்களைக் கடித்தவாறே வெளியேறினாள், காஞ்சனா.

வந்த வேகத்தில் அவளது கார் புறப்பட்டுச் செல்ல, தன் தயக்கங்களை விலக்கிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள் சிவசங்கரி.

# 24



உனக்கெனத் தந்துவிட்ட
என் இதயத்தில் வேறொரு
நினைவு ஏது? - என் இதயம்
உன்னிடம்தான் உள்ளது
என்ற நினைவை - உன்
வெறுப்பால் பொசுக்கிவிடாதே!

ஆத்திரமாய் அறைக்குள் உலாவிய பிரபாகரனைச் சற்றே பயமாய்ப் பார்த்தாள் சந்திரா. எப்போதும் மென்மையாகவும் இனிமையாகவும் பேசும் பிள்ளை இன்று ஏன் இப்படிச் சுள்ளென்று தவிக்கிறான்? அந்தக் காஞ்சனா ஒரு கோபக்காரி... பிடிவாதக்காரி என்று தெரிந்தும் ஏன் அவளைக் கோபம் கொள்ள வைக்கிறான்?

இது எதில் போய் முடியுமோ, தெரியவில்லை. படபடப்பாய்த் தயங்கியவாறே நின்றவளின் மீது பிரபாகரின் பார்வை விழுந்தது. அன்னையின் பயந்த முகம் அவன் ஆத்திரத்தைத் தணித்தது.

பாவம் அம்மா! எனக்கு நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டு இத்தனை காரியம் செய்கிறாள். என் வெறுப்பையும் அப்பாவின் கோபத்தையும் பெற்றுக் கொண்டு தவிக்கிறாள். வீட்டிலே அடைந்து கிடப்பவளுக்கு இந்தத் தனிமை எவ்வளவு பெரிய தண்டனை! ஆயிரம்தான் கோபம் இருந்தாலும் அதை அன்னையிடம் காட்டலாமா?

சங்கரியின் குடும்ப மானத்தைக் காக்கிறேன் என்று என் தாயை அவள் மனவேதனையை... ஏக்கத்தை நான் உதாசீனப்படுத்தி விட்டேனே... என் சுயநலத்திற்காகப் பெற்றவளைப் பகடைக்காய் ஆக்கிவிட்டேனே! அம்மாவிடம் எந்தத் தவறும் இல்லை என்று தெரிந்த பிறகும் அவளைத் தண்டிக்கலாமா?

மனமும் கண்களும் கனிந்துவிடத் தாயை அழைத்தான். "அம்மா!"

அவனது அழைப்பிற்காகவே காத்திருந்தாற்போல் ஓடி வந்தாள் சந்திரா.

"என்னப்பா?"

"இப்படி உட்காருங்கம்மா!" - தோள் பற்றிக் கட்டிலில் அமர வைத்தான். நம்பமுடியாத பரவசத்தோடு அமர்ந்தாள். ஒருகணத் தயக்கத்திற்குப் பிறகு தாயின் அருகே அமர்ந்து அவள் தோள் மீது சாய்ந்து கொண்டான். கண்கள் கசிந்தன.

பிள்ளையின் செயல்பாடு எதையோ உணர்த்தப் பரிவோடு அவன் தலை வருடினாள், சந்திரா. அந்த வருடலில் சுத்தமாய் உடைந்து போனான். எத்தனை வயதானால் என்ன? தாயின் முன் பிள்ளை குழந்தை



தானே! அன்னையின் பிடியில் கரைந்தே போனான் பிரபாகரன்.

"அம்மா!"

"என்னய்யா?"

"என்னை மன்னிச்சிடுங்கம்மா."

"எதுக்குய்யா?"

"நான்... நான் உங்களை ரொம்பக் காயப்படுத்திட்டேன். உங்க மனசை நோகடிச்சிட்டேன். உங்களோட நியாயமான ஆசையைக்கூட நான் உதாசீனப்படுத்தி விட்டேன். ஸாரிம்மா! வெரி ஸாரி!" - பிரபாகரின் குரல் உடைந்துவிட, கண்களின் ஈரம் தாயைச் சுட்டது.

பதறிப் போனாள் சந்திரா. மகனின் முகத்தைப் பற்றி வருடி, அவனது கண்ணீரைத் துடைத்துத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள். அவளது கண்களும் கலங்கின.

"கண்ணா! மனம் கலங்காதப்பா. நான்தான் படிக்காத முட்டாள். பெத்த பிள்ளையோட மனசையே புரிஞ்சுக்காத முட்டாள்."

"இல்லம்மா. நீங்க நல்லவங்கதான். நான்தான் உங்களைத் தண்டிச்சிட்டேன்."

"பிரபா! நீ அந்தச் சங்கரி மேல இப்படி உசிரையே வெச்சிருப்பேன்னு தெரியாம போச்சுப்பா. என்னை மன்னிச்சிடு ராஜா. நான் வேணா அவ வீட்டுல போய்ப் பேசிப் பார்க்கட்டுமா?"

"வேண்டாம்மா. யார் பேசினாலும் கேட்கிற நிலைமையில அவ இல்லை. எனக்காக நீங்க போய் அவமானப்பட வேண்டாம்."

"பரவாயில்லைப்பா. ஒருமுறை பேசிப் பார்க்கிறேனே!"

"அவ கேட்க மாட்டாம்மா..."

"பிரபா! சத்தியமா சொல்றேன்ப்பா. நானா போய்ச் சம்பந்திகிட்ட பணம் கேட்கலைப்பா. அவர்தான் வந்து... கௌரவம் அது இதுன்னு சொல்லி..."

"எனக்குத் தெரியும்மா. உங்க மேல எந்தத் தப்பும் இல்லை."

"பிரபா?"

"நான்தாம்மா சில விஷயங்களுக்காக உங்க மேலயே பழியைப் போட்டுட்டேன்."

"பிரபா! நீ... என்னப்பா சொல்றே?"

"அம்மா! என்னை எதுவும் கேட்காதீங்கம்மா. ஆனா நான் செய்தது பெரிய தப்பு. என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்கம்மா!"

"நீதான்பா என்னை மன்னிக்கணும். உன் விருப்பம் தெரிஞ்சும் இந்தப் பெண்ணைப் பார்த்தது எவ்வளவு பெரிய தப்பு. இவளாலதானய்யா உன் நிம்மதி கெட்டுப் போச்சு. ஒரு நாளும் இப்படி ஓய்ஞ்சு போய்ப் படுக்க மாட்டியேப்பா!"

பெருமூச்சு விட்டான் பிரபாகரன். "ஆமாம்மா... ஓய்ந்து தான் போயிட்டேன். மனசும் உடம்பும் ரொம்பக் களைச்சுப் போச்சும்மா."

"ஏதாவது சாப்பிடக் கொண்டு வரட்டுமாப்பா?"

"வேண்டாம்மா. அம்மா! நாம... எங்கேயாவது போயிடலாமா?"



திடுக்கிட்டாள். "என்னய்யா சொல்றே?"

"எனக்கு... இங்கே இருக்கப் பிடிக்கலை. வேற ஏதாவது ஊருக்குப் போயிடலாம்."

"பிரபா?"

"ஆமாம்மா! இத்தனை வருஷமா காத்திருந்தேன். சங்கரியோட மனசு மாறிடலை. இனி அது மாறப் போறது மில்லை. ஒரே ஊர்ல இருந்துட்டு அவளைப் பார்க்கும் போதெல்லாம் மனசு வலிக்குதும்மா."

"பிரபா?"

"நாம போயிடலாம்மா... எங்காவது... தொலை தூரமா... யார் கண்ணிலும் படாத தூரத்துக்குப் போயிட லாம். அப்பாகிட்ட பேசுறீங்களா?"

அதுவரை அமைதியாய் நின்று கொண்டிருந்த சங்கரி விம்மலுடன் ஓடி வந்தாள்.

"ஏன் பிரபா! என்னை விட்டுட்டுப் போயிடுவியா? உன்னால போக முடியுமா? தூரமா போயிட்டா என் நினைவு உனக்கு வராதா? சொல்லுடா!" - கட்டிலருகே மண்டியிட்டு அமர்ந்து கண்ணீரோடு கேட்டவளை வியப்பாய்ப் பார்த்துக் கொண்டு எழுந்தான் பிரபாகரன். சந்திராவும் முகம் மலர எழுந்தாள்.

"சங்கரி! இது... இது கனவில்லையே?" - நம்ப முடியாமல் கேட்டவனைக் கட்டிக் கொண்டாள் சிவசங்கரி.

"இல்ல... கனவில்லை. நிஜம். என் கண்ணீர் நிஜம். என் அன்பு நிஜம். என்னை மன்னிச்சிடு பிரபா! இத்தனை நாளா கண்ணிருந்தும் குருடா வாழ்ந்திருக்கேன்.

கங்கையைக் கானல் நீரா ஒதுக்கியிருக்கேன். ஸாரி பிரபா!" - தன்னைக் கட்டிக் கொண்டு கதறியவளை நேசத்தோடு அணைத்துக் கொண்டான்.

கண்களில் துளிர்த்துவிட்ட நீரோடு சந்திரா அறையை விட்டு வெளியேற முயல, "அத்தே!" - என அழைத்தாள் சங்கரி.

"ம்... என்னம்மா!" - நின்றவளின் காலில் விழுந்தாள்.

"என்னை மன்னிச்சிடுங்க, அத்தே!"

பதறி விலகிச் சங்கரியைப் பற்றித் தூக்கினாள். "என்னம்மா... இது?"

"அத்தே! உங்க மேல எந்தத் தப்பும் கிடையாது. எங்க அப்பாதான்..."

"சங்கரி!" - அவசரமாய்க் குரல் கொடுத்து அவளுக்கு மட்டும் புரியும்படி கண்ணசைத்தான். சட்டெனப் புரிந்து கொண்டவளாய்த் தலையசைத்தாள்.

"எங்க அப்பா ஏற்கெனவே ஹார்ட் பேஷண்ட். கல்யாண அலைச்சல்ல மருந்து மாத்திரை சாப்பிடாம டென்ஷன்லதான் போயிட்டார். நான்தான் எதையும் புரிஞ்சுக்காம உங்களைத் தப்பாச் சொல்லிட்டேன். மன்னிச்சிடுங்க அத்தே!"

"போனது போகட்டும்மா... நீ என் வீடு தேடி வந்ததே எனக்குச் சந்தோஷமா இருக்கு. நீ பேசிட்டு இரும்மா. நான் குடிக்க ஏதாவது கொண்டு வர்றேன்..." - உற்சாகமாக வெளியேறினாள் சந்திரா.

சிவசங்கரி பிரபாகரனை ஏறிட்டாள். கண்களில் இன்னும் நம்பிக்கை வராமல் சங்கரியையே இமைக்காமல்



பார்த்துக் கொண்டு நின்றான். அவனை நெருங்கி அவன் முகத்தை இரு கரங்களாலும் பற்றிக்கொண்டாள்.

"பிரபா!"

"ம்..."

"எனக்காக எவ்ளோ வேதனையைத் தாங்கியிருக்க!"

"சங்கரி! இப்போ.. உனக்கு யார் சொன்னது?"

"அம்மாதான்!"

"ஐயோ! எல்லாமே சொல்லிட்டாங்களா?"

"ம்... சொல்லிட்டாங்க. பிரபா! எங்க அப்பா பண்ணின காரியம் தெரியாம உன்னையே குற்றம் சொன்னேனே... உனக்கு ஒருமுறைகூடக் கோபமே வரலியே, பிரபா?"

"வராது சங்கரி! உன் மேல எனக்குக் கோபமோ வெறுப்போ வராது."

"பிரபா!"

"ஏன்னா இன்னும் நான் உன்னை விரும்புறேன்."

நெஞ்சம் கனக்க, அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

"உன்னைப் போய்க் காயப்படுத்திட்டேனே... அவமானப் படுத்தினேனே... எனக்கு விமோசனமே கிடையாது பிரபா!"

"ம்ஹூம். இது ஒரு சாதாரண ஊடல். இதுல ஏன் பாவமும் விமோசனமும் வரணும்?"

"பிரபா! நீ மாறவே இல்லை, பிரபா!" - இறுக்கிக் கொண்டாள்.

"சங்கரி!"

"ம்..."

"இந்த விஷயம்... மனோவுக்கு?"

"தெரியும்."

"ஸாரி சங்கரி! நீ வருத்தப் படுவேன்னுதான் சொல்லாமலே இருந்தோம்."

"அந்த ஆளுக்கு இத்தனை வருஷமா பொய்யான மரியாதை கொடுக்க வெச்சிட்டீங்க, பிரபா! அவர் போட்டோவைப் பூஜையில வெச்சுக் கும்பிட்டோம் தெரியுமா?"

"ஆயிரம் இருந்தாலும் அவர் உன் அப்பாதானே!"

"நோ. கட்டிய மனைவிக்குத் துரோகம் பண்ணின ஒருத்தன் நல்ல புருஷனும் இல்லை. தகப்பனும் இல்லை. போட்டோவெல்லாம் கழற்றிக் குப்பையில போட்டுட்டேன்."

"ஏம்மா?"

"அவர் முகத்தைப் பார்க்கப் பிடிக்கலை, பிரபா!"

"இப்படியெல்லாம் பேசக்கூடாது. அத்தை மனசு கஷ்டப்படுமில்ல..."

"இல்லை பிரபா! அம்மாவுக்காகத்தான் நான் அப்படிப் பண்ணினேன். ஒவ்வொரு முறையும் அவர் போட்டோவைப் பார்க்கும்போது அவருடைய துரோகம்தானே அம்மாவுக்கு நினைவு வரும். அதனாலதான் கழற்றி வீசிட்டேன்."

"சங்கரி!"

"ம்..."

"அந்த... அந்தப் பொண்ணு இப்போ வந்திருந்தா!"



"ம்... பார்த்தேன். பேசினதெல்லாம் கேட்டேன்."

"என்ன? நீ எப்போ வந்தே?"

"அவ கார் வரும்போதுதான் நானும் வந்தேன். உள்ளே வரத் தயங்கி... வெளியே நின்னேன்."

"இது உன் வீடு, சங்கரி. இங்கே வர ஏன் தயங்கணும்?"

"என்னால... முடியலை, பிரபா! நான் எவ்வளவோ பேசிட்டேனே...!"

"அதெல்லாம் மறந்திடு கண்ணு. இனிமேலாவது நம்ம ஃபேமிலி சந்தோஷமா இருக்கட்டும்."

"டேய்! நீ என்னை விட்டுட்டு ரொம்ப தூரமா போகணும்னு சொன்னே இல்ல... எப்படிடா முடிஞ்சது உன்னால?"

"நான் என்னம்மா பண்ணட்டும்? நீ மாறுவே மாறுவேன்னு வெயிட் பண்ணினேன். நீ மாறுவேனான்னு நிற்கிற. எங்கே இங்கே இருந்தா என் மனசு மாறி என் வாயால உண்மையைச் சொல்லிடுவேனோன்னு பயந்துதான் அப்படி ஒரு முடிவை எடுத்தேன்."

"அப்போ என்னை விட்டுட்டுப் போயிருப்பியா?"

"ம்ஹூம். முடியாது... முடியவே முடியாது."

"போயிருந்தேன்னு வை... தேடி வந்து உதைப்பேன்."

"ம்... நீ செய்வே. நீ யாரு... சிவசங்கரியாச்சே!" - பழைய குறும்போடு பிரபாகரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ராமச்சந்திரனின் கார் உள்ளே நுழைந்தது. காரை

விட்டு இறங்கி, வேகமாய் வந்தவரை உற்சாகமாய் வரவேற்றாள் சந்திரா.

"வாங்க... வாங்க. நானே உங்களுக்குப் போன் பண்ணலாம்னு இருந்தேன்."

"சந்து! புள்ளைக்கு ஒண்ணும் இல்லையே... நல்லா இருக்கானா?"

"ம்... ரொம்ப சந்தோஷமா இருக்கான். மருமககூடப் பேசிட்டு இருக்கான்."

புருவம் சுருக்கினார். "என்ன... மருமகளா? யாரு? அந்த நகைக் கடைக்காரன் பெண்ணா? அவ ஏன் திரும்பவும் வந்தா?"

"சத்தமாப் பேசாதீங்க. புள்ளைங்களுக்குத் தொந்தரவா இருக்கும்."

"சந்திரா! நீ செய்யிறது எதுவுமே சரியில்லை. இப்படி வேண்டாத வேலை எல்லாம் செய்திட்டு பிறகு என் புள்ளை பேச மாட்டேங்கிறான். என்மேல எல்லாரும் கோபப் படுறீங்கன்னு உட்கார்ந்து அழற!"

"இனிமே நான் அப்படி அழ மாட்டேன்."

"என்ன? யார்கிட்டயும் சபதம் போட்டிருக்கியா?"

"நான் ஏன்ங்க அழணும்? என் புள்ளைக்கு அவன் மனசுபோல வாழ்க்கை அமையப் போகுதே... அதைக் கண்குளிரப் பார்த்துச் சந்தோஷப்படப் போறேன்."

"மனசு போலவா? அவன் மனசுல அந்த டாக்டர் பொண்ணுதான் இருக்கா... மறந்திடாதே!"



"அது தெரியும்."

"அப்ப நீ அவளைத்தான் பேசி முடிக்கணும். அதுதான் மனசு போல அமையுற வாழ்க்கை."

"நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும் அவதான் என் மருமக!"

"என்னடி சொல்றே? புதிரா பேசுறியே!"

"புதிர் இல்லைங்க. எல்லாமே அதிசயமாத்தான் இருக்கு. என்னால இன்னும் கூட நம்பவே முடியலை!"

"அப்படியென்ன அதிசயம்? என்ன அந்தச் சங்கரியே நம்ம வீடு தேடி வந்திட்டாளா?" - அலட்சியமாய்க் கேட்ட கணவரை வியப்பாய்ப் பார்த்தாள்.

"ஹய்யோ! ஆமாங்க. பிரபா இப்போ அவகூடத்தான் பேசிட்டு இருக்கான்..." - மனம் முழுக்க சந்தோஷமாய்ச் சந்திரா சொல்ல, இப்போது ராமச்சந்திரன் வியந்தார். அவரது முகம் மலர்ந்து பிரகாசமானது.

# 25



கொதிமணலில் நடந்து
களைத்த உன் பாதம் நோகாமல்
முள்ளும் கல்லும் உனைத்
தீண்டாமல் உனை - என்
நெஞ்சில் தாங்கிக் கொள்வேன்!

**வி**டிந்து வெகுநேரம் ஆனபின்பும் இரவில் கண்ட கனவின் தாக்கத்தில் இருந்து விடுபடவில்லை, நர்மதா. இனம் புரியாத ஒரு உணர்வு அவளை ஆட்கொண்டது. இன்பமா, துன்பமா, ஆறுதலா, கலக்கமா, பயமா... எனப் பிரித்தறிய முடியாத ஒரு உணர்வு. ஆனாலும் நினைக்கையில் இதமாய்த்தான் இருந்தது.

குளித்து முடித்துப் புடவை அணிந்து கொண்டு ஜன்னலோரமாய் நின்றாள். கண்கள் கீழே தெரிந்த வாயிற்புறத்தையே ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருந்தன. விதவிதமான கார்களில் மருத்துவர்கள், நோயாளிகள் என வந்து கொண்டிருக்க, கண்கள் மனோகரின் காரை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

ஏதோ சஸ்பென்ஸ் என்றாரே, என்னவாய் இருக்கும்? எப்போதும் சீக்கிரமாய் வந்து விடுவாரே... இன்று ஏன் இன்னும் வரவில்லை? ஏமாற்றமாகவும் ஆர்வமாகவும் பார்த்துக் கொண்டு நின்றவளைச் சிவசங்கரியின் குரல் கலைத்தது.

"ஹாய்! நர்மதா..." - திடுக்கிட்டுத் திரும்பியவள் சங்கரியைப் பார்த்ததும் லேசாய் ஏமாற்றமடைந்து, அதை மறைத்துப் புன்னகைத்தாள். சங்கரியின் எக்ஸ்-ரே கண்கள் அதைத் துல்லியமாய்க் கண்டுகொண்டன.

"என்ன? யாரையும் எதிர்பார்த்திட்டு இருக்கியா?" - கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டாள். அவசரமாய் மறுத்தாள் நர்மதா.

"இ... இல்லையே!"

"என்னைப் பார்த்ததும் ஷாக் ஆயிட்டியா?" - என்றவாறே உள்ளே வந்து வழக்கமான பரிசோதனைகளை



முடித்தாள். சிவசங்கரியிடம் ஏதோ மாற்றம் தெரிய, வியப்பாய் அவளைப் பார்த்தாள் நர்மதா.

சிவசங்கரியின் முகம் எப்போதும் ஒப்பனையின்றி வெறுமையாய்த்தான் இருக்கும். பவுடர்கூடப் போட்டிருக்க மாட்டாள். தலையை ஒட்டிப் பின்னி மடித்து கிளிப் பண்ணியிருப்பாள். கை, கழுத்து என வெறுமையாகவே இருக்கும். விரல்களில் மட்டும் இரட்டை முத்துக்கள் பதித்த மோதிரம் கிடக்கும். இடது கையில் வாட்ச், மற்றப்படி எந்த அலங்காரமும் இருக்காது.

ஆனால் இன்று முழுதாய் மாறியிருந்தாள். தலை குளித்து உலர்த்திய கூந்தலைத் தளர்வாய்ப் பின்னிக் காதோரம் ஒற்றை ரோஜாவைச் செருகியிருந்தாள். நீல நிறப் புடவை. அதில் துளித்துளியாய்க் கற்கள் பதிக்கப்பட்டு மின்னின. அதே நிறத்தில் பிளவுஸ். அதிலும் கை ஓரமாய்ச் சில கற்கள். கழுத்திலும் காதிலும் நீலக்கற்கள் பதித்த மெல்லிய நகைகள். அதே நிறக் கற்கள் பதித்த பிரேஸ்லெட், மோதிரம், நீலநிற ஸ்டிக்கர் பொட்டு. அதன் கீழே சிறுகோடாய்க் குங்குமம்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் முகத்தில் புன்சிரிப்பு. அது கொள்ளை கொண்டது. ஒரே நாளில் பாதி வயது குறைந்தாற் போல் தோன்றினாள் சிவசங்கரி. எப்போதும் கடுகடுவென்றிருக்கும் முகம் இன்று குளிர் நிலவாய் ஜொலித்தது.

டாக்டரம்மா இவ்ளோ அழகா! அப்போ மாப்பிள்ளைகளும் போட்டி போட்டுக் கொண்டு வந்திருப்பார்களே... பிறகேன் இன்னும் திருமணமாகவில்லை? இத்தனை நாளாய் இந்த அழகையும் நளினத்தையும் ஏன் ஒளித்து வைத்திருக்கிறாள்?

யோசனையாய் அமர்ந்தவளின் தலைக்காயத்தைப் பரிசோதித்த சிவசங்கரி நர்மதாவின் கன்னத்தில் தட்டினாள்.

"ம்.. காயம் நல்லா ஆறிடுச்சு. இனி மருந்து மட்டும் வெச்சாப் போதும். சரியா?"

"சரிங்க டாக்டர்!"

"இன்னிக்கே வீட்டுக்கு வந்திடுறியா?"

"டாக்டர்!" - லேசான திடுக்கிடலோடு நிமிர்ந்தாள்.

"மனோ எல்லாம் சொன்னான். நீ எப்போ வருவேன்னு அம்மா ஆவலாய் இருக்காங்க. இன்னிக்கு ஈவினிங் போகலாமா?"

"அ... அவர்... வரலியா?"

"யாரு?"

"உங்க தம்பி..."

"ஓ! அவன் வந்து அழைச்சிட்டுப் போனாத்தான் வருவியா?" - கேலியாய்க் கேட்க, பதறினாள்.

"இல்லை... அப்படி இல்லை."

"ஸாரிம்மா! அவன் வெளியூர் போயிருக்கான். எப்ப வருவான்னு தெரியலை?"

"வெ... வெளியூரா?"

"ம்... அவன் மாமனார் வீட்டுக்குப் போயிருக்கான்..." - இயல்பாய்ச் சொல்வது போல் சங்கரி சொல்ல, நர்மதா பலமாய் அதிர்ந்தாள். குரல் கம்மிப் போயிற்று.

"மா... மாமனாரா? மாமனார்ன்னா...?"



"மாமனார்ன்னா மனைவியோட அப்பா!" - அசலாய்ச் சொன்னாள் சங்கரி. இதயமே இரண்டாய்ப் பிளந்தாற்போல் துடித்துப் போனாள் நர்மதா. கண்ட கனவு புகைபோல் மறையத் துவங்க, மீண்டும் இருளான பாதை கண்முன் தோன்றி மிரட்டியது.

எத்தனை கட்டுப்படுத்தியும் கண்கள் கலங்கிவிட்டன. பார்வையைத் தழைத்துக் கொண்டாள். அடைத்துப் போய் விட்ட தொண்டையை எச்சில் விழுங்கி ஈரமாக்கினாள்.

"மேடம்! அவருக்கு... கல்யாணம் ஆயிடுச்சா?" - கேட்கும்போதே குரல் உதறியது. சிவசங்கரியின் முகம் ரகசியமாய்ப் புன்னகைத்தது.

"இன்னும் இல்லை."

முகம் பிரகாசிக்க நிமிர்ந்தாள் நர்மதா. "அப்போ... மாமனார்ன்னு..."

"அது அவனோட எதிர்கால மனைவியோட அப்பா. கல்யாணம் எல்லாம் பேசி முடிச்சாச்சு. இன்னும் ஒரு பத்து நாள்ல கல்யாணம்!"

சிவசங்கரியின் பதிலில் தூள் தூளாய்ச் சிதறிப் போனாள். லேசாய் அரும்பிவிட்டிருந்த நேசம் வேரோடு பிடுங்கியெறியப்பட்டது. மெல்லத் துளிர்விட்ட கொடியின் மீது யாரோ திராவகத்தை ஊற்றிக் கருகச் செய்தனர். நர்மதாவின் முகம் மீண்டும் இறுகியது. மனம் பாலைவனமாகிவிட விரக்தியாய்ப் புன்னகைத்தாள்.

"என்ன நர்மதா சைலண்ட் ஆகிட்டே... எப்போ வீட்டுக்குப் போகலாம்?"

"வீட்டுக்கா? உங்க வீட்டுக்கு நான் எதுக்கு டாக்டர்?"

"என்ன இப்படிக் கேட்கிற? உனக்கொரு பாதுகாப்பான இடம் வேணும்னு என் தம்பி சொன்னானே... நீகூட வர்றேன்னு சொன்னியாமே?"

"ம்... ம்... சொன்னேன். ஆனா... வேண்டாம் மேடம்!"

"ஏம்மா... என்னாச்சு?"

"உங்க வீட்ல ஒரு நல்ல காரியத்தை வெச்சிட்டு என்னை ஏன் கூப்பிடுறீங்க மேடம்? நான் அந்த மாதிரி இடத்திற்கெல்லாம் வரக்கூடாது டாக்டர்!"

"இது என்ன பைத்தியக்காரத்தனம்! நாங்கள்லாம் அப்படி எதுவும் நினைக்க மாட்டோம். பேசாமல் வா."

"வேண்டாம் மேடம்! உங்களுக்கெல்லாம் பெருந்தன்மையான மனசு இருக்கலாம். ஆனா... எனக்கு... இதெல்லாம் வேண்டாம்."

"எதெல்லாம்?"

"உங்க வீடு... உறவுகள்... உங்க கருணை... இதெல்லாம் வேண்டாம் மேடம்!"

"நர்மதா...!"

"மேடம்! என்னை இன்னிக்கு வெளியே அனுப்பிடுங்க. நான்... போயிடுறேன்."

"என்ன? வெளியே அனுப்புறதா? எங்கே போவாய்?"

"எங்காவது போயிடுறேன் மேடம்! என்னை அனுப்பிடுங்க...." - கண்ணீரோடு கைகூப்பினாள். அவளது கண்ணீரைத் துடைத்தாள் சிவசங்கரி. அந்தக் கண்ணீர்



அவளது மனதைத் தெளிவாய்ச் சொல்லிவிட, திருப்தியாய்ப் புன்னகைத்தாள்.

"இப்ப ஏம்மா அழறே?"

"இல்லை... நான் போகணும்."

"நீ போயிட்டா என் தம்பி வந்து கேட்பானே... நான் என்ன பதில் சொல்றது?"

"போயிட்டேன்னு சொல்லுங்க. செய்த உதவிக்கு நன்றி சொன்னேன்னு சொல்லுங்க."

"அதை நீயே அவன் வந்ததும் சொல்லிட்டுப் போயிடேன்."

"எ... என்ன? நானா?"

"ஆமா. இப்ப நீ போயிட்டேன்னு வை. நான்தான் உன்னை விரட்டினேன்னு என்மேல கோபப்படுவான். அப்புறம் அவனைச் சமாளிக்க முடியாது!" - கைகளை விரித்துச் சொன்னாள் சிவசங்கரி.

"இல்லை... வேண்டாம். நான் இப்பவே போகணும்!" - அவசரமாய் எழுந்தவளைக் கைப்பற்றி அமர வைத்தாள்.

"என் தம்பியை விட்டுட்டுப் போக அவ்வளவு அவசரமா உனக்கு?"

திக்கென அதிர்ந்து நிமிர்ந்தாள். "டா... டாக்டர்?"

"என்ன பார்க்கிற? பாம்பின் கால் பாம்பறியும்னு ஒரு பழமொழி உண்டே, தெரியுமா?"

"ம்..." - தலையாட்டினாள்.

"உன் கண்ணும் கண்ணீரும் உன் மனசைச் சொல்லிடுச்சு நர்மதா! இனியும் எதையும் மறைக்காதே."

"நான்... எதை மறைத்தேன்?"

"மனோகர் கல்யாணம் பண்ணிக்கப் போறது உனக்கு வருத்தமில்லையா?"

"வருத்தமா... எனக்கா? நான் ஏன் வருத்தப்படணும்?"

"உன் வாய்தானே சொல்லுது... முகமும் கண்ணும் வருத்தப்படுதே!"

"இ... இல்லை... நான்..."

"ஓ.கே. இதற்கு மேலும் உன்னைச் சோதிக்க மாட்டேன். நேரிடையாவே கேட்கிறேன். என் தம்பியை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"என்ன?" - அதிர்ச்சியும் வியப்புமாய் நிமிர்ந்தாள்.

"மனோவை உனக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்."

"இப்ப... ஏன் இந்தக் கேள்வி?"

"ம்ப்ச்! கேட்டதற்குப் பதில் சொல்."

"அவர் ரொம்ப நல்லவர். அன்பானவர். அவரை எல்லாருக்கும் பிடிக்கும்."

"அப்போ உனக்கும் பிடிக்கும்?"

"ம்... ம்... பிடிக்கும்..." - தயக்கமாய் ஒப்புக் கொண்டாள்.

"வெரிகுட். இப்போ சொல்லட்டுமா... மனோ எங்கே போயிருக்கான்னு?"



"எ... எங்கே?"

"உன் அப்பாவை அழைச்சிட்டு வரத்தான் போயிருக்கான்!" - காதருகே மென்மையாய்ச் சங்கரி சொல்ல, மேகங்கள் விலகிய முழுநிலவாய் மாறியது நர்மதாவின் அழகு முகம்.

"என்ன... என் அப்பாவையா?"

"ம்... நீதானே அவனது வருங்கால மனைவி? உன் அப்பா மாமனார்தானே!"

"டாக்டர்! நீங்க... என்ன சொல்றீங்க?"

"ஆமா நர்மதா! மனோ மனசுல என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும். அவனும் சொல்லிட்டான். எங்க வீட்ல எல்லாருக்கும் சம்மதம். உன் அப்பாவுடைய சம்மதமும் கிடைச்சா நல்லாயிருக்கும்னு பேசப் போயிருக்கான்."

"அப்பாவோட முகவரி எனக்கே தெரியாதே?"

"அவன் யாரு? கில்லாடியாச்சே... எப்படியோ கண்டுபிடிச்சிட்டான். நேற்று நைட் அவன் ஃபிரண்ட் போன் பண்ணினான். இவர் உடனே கிளம்பிப் போயிட்டாரு. வந்தா உன் அப்பாவோடதான் வருவாராம் துரை!" - கேலியாய்ச் சிவசங்கரி சொல்ல, மீண்டும் கண்கள் கலங்கின.

"இப்போ ஏன் கண் கலங்குற?"

"மேடம்! இது... இதெல்லாம் சரியா? நான்... ஏற்கெனவே மணமானவள்."

"நர்மதா! நடந்து முடிந்ததைப் பத்தி நினைக்கக்கூடாது. கடந்த காலத்தை மறந்திடு. புதுவாழ்க்கை உனக்காகக் காத்திருக்கு. அதைச் சந்தோஷமா ஏத்துக்க. மத்ததை எல்லாம் ஞாபகத்தில இருந்து அழிச்சிடு."

நர்மதா தயக்கமாய்த் தன் வயிற்றைப் பார்த்தாள். "எதை மறந்தாலும் இதை மறக்க முடியாதே, மேடம்!"

"நர்மதா! இது உன் குழந்தை. இது இந்தப் பூமியில் பிறக்கும்போது மனோவின் பிள்ளையாகத்தான் பிறக்க வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் இந்த அவசர முடிவை எடுத்தோம். சிம்பிளாய்க் கோவிலில் வைத்து உங்கள் திருமணத்தை முடித்துவிடுவோம்.

"குழந்தை பிறந்த பிறகு பேர் வைக்கும் விழாவை... அவ்வளவு நாள் ஏன்? ஒன்பதாவது மாதம் சீமந்தம் வைக்க வேண்டுமே... அதைப் பெரிய விழாவாய்க் கொண்டாடி... இதுதான் டாக்டர் மனோகரின் மனைவி என ஊருக்கே அறிமுகம் செய்து விடுவோம். சரியா?"

"மேடம்! இதெல்லாம்... ஏற்கெனவே முடிவு செய்து விட்டீர்களா?"

"மனோ பொறுமையாக இருக்கலாம் என்றுதான் சொன்னான். நான்தான் குழந்தையின் நன்மையைக் கருதி இந்த முடிவை எடுத்தேன். இன்னும் அவனிடம் கூடச் சொல்லவில்லை."

"உங்க அம்மா... இதை ஒப்புக் கொள்வார்களா?"

"அம்மாதான் உன்னை ரொம்ப எதிர்பார்த்திட்டு இருக்காங்க."

"மேடம்! உங்க அம்மா தெய்வம்!" - மனம் நெகிழச் சொன்னாள்.

"உண்மைதான். என் அம்மா தெய்வம்தான். பொறுமையில், கனிவில், அன்பில், கருணையில்... என்



அம்மா ஒரு தெய்வம்தான்!" - சிவசங்கரியின் குரலும் நெகிழ்ந்து போயிருந்தது. இருவரும் மனம் இளக, மௌனமாய் நின்றிருந்த நேரம், உற்சாகமாய் உள்ளே நுழைந்தான் மனோகர்.

"அட! அக்கா, நீயும் இங்கேதான் இருக்கியா?"

"ஏன்? வெளியே போகணுமா?"

"சேச்சே! சும்மா இரு. ஒண்ணும் தப்பில்லை. நர்மதா! உடம்பு எப்படி இருக்கு?"

அவனை நிமிர்ந்து பார்க்கத் தயங்கித் தலை கவிழ்ந்தாள். "ம்... பரவாயில்ல...!"

"மனோ! நீ பேசிட்டு இரு. நான் நெக்ஸ்ட் ரூமுக்குப் போயிட்டு வந்திடுறேன்."

"அக்கா! அவங்களை உன் ரூம்ல உட்கார வெச்சிருக்கேன். நீ போய்ப் பேசிட்டு இரு..." - காதோரமாய் ஆங்கிலத்தில் கிசுகிசுத்தான்.

"ஏன்டா இங்கேயே கூட்டிட்டு வந்திருக்கலாமே?"

"அதுக்கு முன்னால நான் நர்மதாகிட்ட கொஞ்சம் பேசணும்...."

"ஓஹோ. பேசு... பேசு... நான் எப்போ வரணும்?"

"நான் பேசி முடிச்சதும் உனக்கு மிஸ்ட் கால் கொடுக்கிறேன். நீ அவங்களைக் கையோட கூட்டிட்டு வந்திடு."

"உத்தரவு!" - பணிவாய்ச் சிவசங்கரி சொல்ல, இருவரும் சிரித்துக் கொண்டனர். சிவசங்கரி வெளியேறி விட, நர்மதாவை நெருங்கினான்.

"நர்மதா! சாப்பிட்டீங்களா?"

"ம்..."

"நர்மதா!"

"ம்..."

"நம்ம வீட்டுக்குப் போயிடலாமா?"

"ம்..."

"அதுக்கு முன்னால நான் கொஞ்சம் பேசணும்..."

"சொல்லுங்க!"

"என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க, நர்மதா. என் மனசுல பட்டதைக் கேட்கிறேன். நீங்களும் தயங்காம உங்க மனசில படுறதைச் சொல்லிடுங்க. அது எதுவா இருந்தாலும் நான் ஏத்துப்பேன்!" - அவன் எதைச் சொல்ல வருகிறான் என்பது புரிந்துவிட, நெஞ்சம் படபடத்தது.

"ம்..." - மௌனமாய்த் தலையசைத்தாள்.

"நர்மதா! நேரிடையாவே சொல்லிடுறேன். உங்க வயித்துல வளர்ற குழந்தைக்கு ஒரு நல்ல தகப்பனா இருக்க ஆசைப்படுறேன். அதுக்கு உங்க சம்மதம் வேணும்."

வியப்பாய் நிமிர்ந்தாள் நர்மதா. எத்தனை சுலபமாய்த் தன் விருப்பத்தை... தன் மனதைச் சொல்லிவிட்டான். மறுக்கவோ, தயங்கவோ, கோபித்துக் கொள்ளவோ முடியாத கேள்வி! இப்படிக் கேட்டால் யாரால் மறுக்க முடியும்?

விழிகள் விரியத் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.



"குழந்தைக்கு மட்டுமில்ல, நர்மதா... காலம்பூரா உங்களுக்கு ஒரு நல்ல பாதுகாவலனா... நண்பனா... உங்க கணவனா உங்க கூடவே வாழ ஆசைப்படுறேன். உங்களுக்குச் சம்மதம்ன்னா... உங்களை என் மனைவியாக்கி என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன்.

"உங்களுக்கு விருப்பம் இல்லையென்றாலும் பரவாயில்லை. என் விருந்தாளியாய்... பேஷண்ட்டாய் என் வீட்டுக்கு வரலாம். கடைசி வரை எங்க வீட்டில ஒருத்தியா வாழ்ந்திடலாம். உங்களுக்கு எது விருப்பம் என்றாலும் எனக்குப் பரிபூரண மகிழ்ச்சி."

அவனிடம் பேச நா எழாமல் தயக்கமாய் அமைதியாய் அமர்ந்திருந்தாள் நர்மதா. என்னவென்று சொல்வது? எப்படிச் சொல்வது? பதட்டமாய் விரல்களைப் பிரித்து மடித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன நர்மதா, ஒண்ணுமே பேச மாட்டேங்கிறீங்க?" - தவித்தான் மனோகர்.

"எ... என்ன பேசணும்?"

"ஏதாவது பேசுங்க..."

"ஏதாவதுன்னா?"

"ஏதாவதுன்னா... என்னைப் பிடிச்சிருந்தா ஓ.கேன்னு சொல்லுங்க. இல்லைன்னா... 'போடா மடையா! இதெல்லாம் பிடிக்காது!'ன்னு பட்டுன்னு சொல்லிடுங்க."

"அப்படியெல்லாம் சொல்ல முடியாதே?"

"அப்போ ஜாடைமாடையா ஏதாவது சிக்னல் கொடுங்க..."

"எப்படி?"

"எப்படின்னு கேட்டா எப்படிங்க? எனக்கு இதெல்லாம் பழக்கமா என்ன? ஒண்ணு செய்யுங்க. பேசாம... மனோ! எப்போடா நம்ம கல்யாணம்னு கேளுங்களேன். ரொம்ப சந்தோஷப்படுவேன்."

"சரி... மனோ! எப்போடா நம்ம கல்யாணம்?" - அவனைப் போலவே அவள் சொல்லிவிட, மலர்ச்சியாய் அவளை ஏறிட்டான்.

"என்ன கேட்டீங்க? திரும்பக் கேளுங்க..."

"மனோ! எப்போ...டா... நம்ம கல்யாணம்?" - கேட்டுவிட்டு அவள் நாணத்தோடு தலைகவிழ, "ஹேய்!" எனக் கத்தினான்.

"இப்பவே!"

"என்ன?"

"இப்பக்கூட நான் ரெடின்னு சொன்னேன்."

"அதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன்...." - என்றவாறு உள்ளே நுழைந்தாள் சிவசங்கரி.

"ஏன்? ஏன் சம்மதிக்க மாட்டே?"

"என்ன... ஏன்? இது ஹாஸ்பிடல். கல்யாண மண்டபம் இல்லை."

"அக்கா! நீ ஏன் இப்பவே வந்தே? நான்தான் மிஸ்டு கால் கொடுக்கவே இல்லையே?"

"பேய்! உனக்கென்ன, நீ பாட்டுக்குப் பேசிட்டே இருப்ப. நான் எவ்வளவு நேரமா ரெண்டு பெரியவங்களைக் காத்திருக்க வெக்கிறது? அதான் கூட்டிட்டு வந்திட்டேன்."



"யாரு மேடம் ரெண்டு பெரியவங்க?"

"நீயே பாரு! ஸார்... உள்ளே வாங்க!" - என வெளியே பார்த்துக் குரல் கொடுத்தாள் சிவசங்கரி. மனோகர் ஆர்வமாய் நர்மதாவின் முகத்தைப் பார்க்க, அவளது முகம் செந்தாமரை மலராக மலர்ந்து விரிந்தது.

சத்தியமாய் அவள் இதை எதிர்பார்க்கவில்லை. தன் தந்தையைத்தான் அழைத்து வரப் போயிருக்கிறான் எனச் சங்கரி சொல்லியிருந்ததால், தந்தையின் வரவை மட்டுமே எதிர்பார்த்திருந்தாள். ஆனால் இராமானுஜம் கூடவே வந்து நின்றான், அவளது அண்ணன் குருமூர்த்தி.

தந்தையைப் போலவே கண்களில் ஈரமும் பாசமும் மின்ன, நர்மதாவை நெருங்கினான் குருமூர்த்தி. தங்கையின் தலையைப் பரிவாய் வருடிக் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டவனின் உடல் குலுங்கியது. கண்ணீர் பெருகியது.

"அண்ணே!" - பதறினாள் நர்மதா.

"என்னை மன்னிச்சிடு, நர்மதாம்மா... மன்னிச்சிடு, தாயி!"

"அண்ணே!"

"என்னை மன்னிச்சிடும்மா. உன்மேல அன்பில்லாம போகலம்மா... என் சூழ்நிலை! அதான் போயிட்டேன்."

"பரவாயில்லை, அண்ணே! விடுங்க..."

"உன்கிட்ட ஒரு போன் நம்பராவது தந்திருக்கணும். பழைய வீட்டில போய்த் தேடினியாமே! உன்னை இப்படி விட்டுட்டுப் போயிட்டேனே! மனோ சார் வந்து சொன்னதும் துடிச்சிட்டோம்மா...!"

"அண்ணே!" - கண்கள் கலங்கின.

"அண்ணனுக்கு உன்மேல நிறைய அன்பிருக்கும்மா. ஆனா அதை வெளிக்காட்டத்தான் தெரியலை. அதற்கான சந்தர்ப்பமும் அமையலை. உன் அண்ணி சதா கொட்டிக் கிட்டே இருக்காளே... அவளுக்குப் பயப்படுவேனா? இல்லை... உன்னை நினைச்சு வருத்தப்படுறதா?

"ஆனா மனசில உன் நினைப்பு இருக்கு. தினமும் உன்னை நினைப்பேன். இவகிட்ட வந்து தினம் இடிபாடு படுறதுக்கு உன் மாமியார் வீட்லயாவது நிம்மதியா இருப்பேன்னு நினைச்சுத்தாம்மா உன்னை விட்டுட்டுப் போனேன். ஆனா அதுதான் பெரிய தப்பாப் போச்சு!

"என் தங்கத்தை இப்படித் தெருவில தூக்கி வீசியிருக் காங்களே... ஐயோ! உனக்கு ஏதாவது ஆகியிருந்தால்... காலம்பூரா நான் கொலைகாரப் பாவியா நின்னிருப்பேன். என் மனச்சாட்சியே என்னைக் கொன்னிருக்கும்..." - குரல் கம்மப் பேசிய தன் சகோதரனைக் கண்ணில் நீர் மல்க, பிரமிப்புடன் பார்த்தாள் நர்மதா.

இந்தப் பாறைக்குள் இத்தனை ஈரமா! விபரம் தெரிந்த நாள் முதலாய் அன்பாய் ஒரு வார்த்தை பேசியதில்லை. திட்டியதும் இல்லை. அவன் வேலையை அவன் பார்த்துக் கொண்டு போய் விடுவான். திருமணமாகிப் புகுந்த வீடு போன பின்பும் கூட அன்பாய்த் தேடி ஓடி வந்ததில்லை. கணவன் இறந்தபோதுகூட ஒரு ஆறுதல் சொல்லவில்லை.

இவனது நெஞ்சம் கல் என்றுதானே நினைத்தேன்! இவன் மனதிலும் ஈரம் இருக்கிறது. அன்பு இருக்கிறது. அதை வெளிக் கொண்டு வந்தவன் இந்த மனோ! கண்களில்



நன்றியோடு மனோவைப் பார்த்தாள். அவனோ வெகு இயல்பாய்ப் புன்னகைத்துக் கண் சிமிட்டினான்.

மனம் லேசாகி விடப் பரிவாய் அண்ணனின் தோளைத் தொட்டாள். "அண்ணே! என்ன அண்ணே இது?"

"உன்னை இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிருக் கக்கூடாது. தப்பு. பெரிய தப்பு. நீ எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கேம்மா... நாங்க கூட இல்லாமல் போயிட்டோமே... இப்படி வயித்தில பிள்ளையோட நடுத்தெருவில நிக்க வெச்சுட்டாங்களே....!

"பெத்த தகப்பன், கூடப் பொறந்தவன் எல்லாரும் இருந்தும் அநாதையா நின்னுட்டியேம்மா... சாகப் போனியாமே?" - நா தழுதழுக்கக் கூறிய குருமூர்த்தியின் தோளைத் தொட்டான் மனோகர்.

"குரு ஸார்! போனதெல்லாம் போகட்டும். இப்ப உங்க தங்கச்சி சந்தோஷமா இருக்காங்க. அதைப் பத்தி மட்டும் பேசுங்களேன்..."

"ஆமா! நான் ஏன் பழையதைப் பேசணும்? அம்மாடி! உடம்பு எப்படிம்மா இருக்கு? காயமெல்லாம் ஆறிப் போச்சாம்மா?" - அண்ணனின் குரலில் தெரிந்த கனிவும் பரிவும் கண்டு நெகிழ்ந்து போனாள்.

"ம்... ஆறிடுச்சு அண்ணே!"

"தம்பி! உங்களுக்குத்தான் நாங்க நன்றி சொல்லணும். நீங்க மட்டும் பார்க்கலேன்னா... இப்ப என் பொண்ணு...?" - தழுதழுத்தார் இராமானுஜம்.

"அங்கிள்! எல்லாமே ஆண்டவனோட விளையாட்டுன்னு நினைங்க. அவர்தான் நர்மதாவை என் கண்ல காட்டினார். அதற்காகத்தான் நானும் இத்தனை வருஷமா காத்திருந்தேனோ என்னவோ?"

"தம்பி! நீங்க மட்டும் எங்களைத் தேடி வரலைன்னா... எம் பொண்ணு அவ மாமியார் வீட்லதான் இருக்கிறான்னே நினைச்சிட்டு இருந்திருப்போம். என் பொண்ணைப் பத்திரமா பாதுகாத்ததுக்கு ரொம்ப நன்றி தம்பி!"

"ஆமா டாக்டர்! நீங்க மனுஷனே இல்லை... கடவுள்!" - குருமூர்த்தியும் தன் பங்கிற்குக் கைகூப்ப, மனோகர் புன்னகையோடு தலையசைத்து மறுத்துவிட்டு, நர்மதாவைப் பார்க்க, அவளது கண்களும் கலங்கியிருந்தன. அதில் சொல்ல முடியாத பல வார்த்தைகள் அடங்கியிருந்தன.

# 26



ஒரு வானவில் போல் - என்
வாழ்க்கையில் வந்தாய்!
உன் அன்பினால் எனை
வென்றாய்! என் உயிரிலே
நீ கலந்தாய்! இறுதிவரை - உன்னைப்
பிரியாத வரம் வேண்டும்!

தன் வீட்டின் பூஜையறையில் வைத்துப் பெற்றவர்களின் முன்னிலையில் நர்மதாவின் கழுத்தில் தாலி கட்டினான் மனோகர். சுற்றிலும் நின்றவர்கள் தூவிர்த்திருந்த



கண்ணீரோடு அட்சதை தூவி வாழ்த்த, அனைவரின் முன்பும் விழுந்து வணங்கினார்கள்.

தாட்சாயிணி முன்னே வந்து மருமகளைத் தோள் பற்றி எழுப்பினாள்.

"போதும்மா! எல்லார் கால்லயும் விழுந்து எழ வேண்டாம். வயிற்றுப் பிள்ளைக்காரி இப்படி அடிக்கடி குனியக்கூடாது!" - என்ற பரிவான வார்த்தையில் கண்கள் குளமாக, மாமியாரை அணைத்துக் கொண்டாள்.

"எங்க அம்மா இன்னும் சாகலைம்மா... உங்க உருவத்தில என் கண்முன்னே தெரியுறாங்க..."

"கலங்காதேம்மா... நானும் உன் அம்மாதான்!"

இராமானுஜம் நெருங்கி வந்து மகளின் நெற்றியில் முத்தமிட்டார். கண்கள் கசிய வார்த்தையின்றி நின்றவரைக் குருமூர்த்தி அணைத்துக் கொண்டான்.

"அப்பா! கலங்காதீங்கப்பா. அவ சந்தோஷமா வாழ்வா. நாம அழக் கூடாது."

"நான் அழவில்லையப்பா... இது... ஆனந்தக் கண்ணீர்!"

"ஓ.கே. நர்மதா! இது என்னோட பரிசு!" - என்றவாறு கையிலிருந்த நகைகளை அணிவித்தாள் சிவசங்கரி.

"ஐயோ! இதெல்லாம் எதுக்கு?"

"எதுக்கா? இப்போ நீ டாக்டரம்மாவோட மனைவி. இந்த வீட்டு மருமக. இப்படித்தான் இருக்கணும்."

"அக்கா! அதுக்காக நிறையப் போட்டுவிடாதே. அவளுக்குக் கழுத்து வலிக்கும்!" - என்ற மனோகரின் முகத்தில் இடித்தாள்.

"இப்பவே பெண்டாட்டிக்கு சப்போர்ட்டா?"

"இப்ப மட்டுமில்ல... எப்பவுமே!" - எனப் புன்னகைத்தான்.

"பிரபா! நல்லாக் கேட்டுக்கங்க... உங்களுக்கும் பயன்படும்."

"நான்தான் உன்னைப் பார்த்ததுல இருந்தே உன்னோட தாசனாகிட்டேனே... இவன்தான் எங்கிட்ட இருந்து கத்துக்கனும்..." - என்றான் பிரபாகர் பெருமையாக.

"ஆஹா! நிறைய உண்மைகள் வெளியே வரும் போலிருக்கே... பிரபா! சொல்லுங்க கேட்போம்."

"என்ன சொல்லணும்?"

"லேடீஸ் கோபப்படாம நாம எப்படி தாஜா பண்ணனும்? அவங்களைக் கோபப்படாம வைக்க நாம என்ன செய்யணும்னு கொஞ்சம் சொன்னா எனக்கும் யூஸ்ஃபுல்லா இருக்கும்."

"டேய்! என் பிரபாவைப் பார்த்தால் உனக்கு எப்படித் தோணுது?" - இடுப்பில் கை வைத்து முறைத்தாள் சிவசங்கரி.

"கோபப்படாதே அக்கா! அவருக்கு முன் அனுபவம் இருக்குதில்ல... அதான் கேட்டேன்."

"என்ன?"

"ஆமா. நீ கோபமா இருக்கும்போது உன்னை என்னவெல்லாம் பேசி சமாதானம் பேசியிருப்பார். அதில சில டிப்ஸ் எனக்குத் தந்தா என்னவாம்?"



பிரபாகரன் சிரித்தான். "மனோ! லேடீஸோட மனசு அனிச்ச மலர் மாதிரி. சட்டுன்னு வாடிடும். அதை வாடாமல் பார்த்துக்கிற திறமை நம்மை மாதிரி ஜென்ட்ஸ் கையில தான் இருக்கு."

"ரியல்லி! எப்படி?"

"நாம எவ்வளவு அன்பு காட்டுறோமோ அதைப் பல மடங்கா திருப்பி நம்மகிட்ட காட்டுவாங்க. நாம கோபப்பட்டா அது அப்படியே ரிவர்ஸ்ல வரும். ஸோ! நாம எப்பவுமே அவங்களை அன்பா வெச்சிருந்தா அவங்க கோபப்பட வேண்டிய அவசியமும் இருக்காது. நாம தாஜா பண்ண வேண்டிய அவஸ்தையும் இருக்காது."

"வெல்டன் பிரபாகர்! எப்படி... இதெல்லாம்? எங்காவது எங்களுக்கே தெரியாம இதுக்கான பிஹெச்.டி. பண்ணினீங்களா?"

"டேய்! என்ன நீ அவரைப் போட்டுப் படுத்தி எடுக்கிற... அவர் நம்ம வீட்டுக்கு வரப்போற மாப்பிள்ளை!" - தாட்சாயிணி மகனைச் செல்லமாய்க் கடிந்தாள்.

"என்ன மாம், இப்பவே மருமகனுக்கு சப்போர்ட்டா?"

"ஆமான்டா. என் மருமகனைப் போல யார் இருக்கா?"

"இல்ல அத்தே... என்னைவிட... நம்மை எல்லாரையும் விட மனோகர்தான் பெஸ்ட். இவனை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு!"

"பிரபா?"

"யெஸ் மனோ! உண்மையில் நீ ரொம்ப கிரேட். தெரியுமா? உன்னை மாதிரி எல்லா யங்கர்ஸும் இருக்கணும்னு ஆசைப்படுறேன்."

"அப்படியென்ன பெரிசா சாதிச்சிட்டேன் நான்?"

"சாதனைங்கிறது பெரிய பெரிய செயல்ல இல்ல. மீனா மனசுல இருக்கு. நாம நடந்துக்கிற நடைமுறையில இருக்கு... உன் மனசு ரொம்ப பரந்த மனசு."

"போதும்... போதும். இதுவெல்லாம் ஒரு சாதனையா? உங்களை மாதிரி ஆட்களைக் கட்டிக்கிட்டு உங்களுட கடைசி வரை குப்பை கொட்டப் போறோமே... அதுதான் பெரிய சாதனை" - என்றாள் சிவசங்கரி.

"போதும், கண்ணுங்களா! இன்னிக்குத்தான் வீடும் மனசும் நிறைஞ்சு இருக்கு. அதே மாதிரி வயிறும் நிறைய வேண்டாமா? வாங்க சாப்பிடலாம்..." - என்றாள் தாட்சாயிணி.

"மீனா! ஆயிரம் சொல்லு. அம்மா அம்மாதான். நாம எல்லாருக்குமே பசிக்குது. ஆனா யாரும் வாய் விட்டுச் சொல்லலை. ஆனா நாம சொல்லாமலே நம்ம பசியறிஞ்சு சாப்பிடக் கூப்பிடுறாங்க பாரு. இந்தத் தாய்மை உணர்வு உலகிலே பெரிய சாதனை. இதை ஓவர்டேக் பண்ண யாருமே கிடையாது."

"உண்மை. இதை நான் அப்படியே வழிமொழிகிறேன்..." - மீனா நாடகப் பாணியில் கூற, அனைவரும் சிரித்தபடி பூஜையறையை விட்டு வெளியே வந்தனர். அவர்களது கலகலப்பான பேச்சையும், சாமர்த்தியமான பதிலையும், அடுத்தவர் மனம் நோகாமல் பேசும் தன்மையையும் கண்டு பிரமித்து நின்றாள் நர்மதா.

எத்தனை கலகலப்பான குடும்பம்! இனிமேல் இதில் நானும் ஒருத்தி என்ற நினைப்பே தித்தித்தது. அதற்குள்



ராமச்சந்திரனும் சந்திராவும் வந்துவிட... அனைவரும் வாசலில் போய் வரவேற்றனர்.

யார் இவர்கள் எனப் புரியாமல் தயங்கிக் கலங்கியவாறு நின்றவளின் கைப்பற்றி அழைத்தான் மனோகர். கணவனின் முதல் ஸ்பரிசத்தில் உடல் மெல்ல நடுங்க, அதை உணர்ந்து அவனது கரங்கள் அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டன.

"இதுதான் பிரபாவோட அம்மா... அப்பா. ஆசீர்வாதம் வாங்கிடுவோம் வா!" - என்றதும், கணவனுடன் இணைந்து அவர்களது காலில் விழுந்தாள்.

"நல்லா இருங்கம்மா. பூவும் பொட்டுமா தீர்க்க சுமங்கலியா வாழணும்மா..." - மனம் நிறைந்து வாழ்த்தினர் இருவரும்.

"என்ன சம்பந்தி, இவ்வளவு நேரமாக்கிட்டீங்க?" - தாட்சாயிணி கேட்க, அலுத்துக் கொண்டார் ராமச்சந்திரன்.

"அதை ஏன் கேட்கிறீங்க? காலையில இருந்து ஆறு புடவை மாத்தியிருக்கா."

"என்ன?"

"ம்... முதன்முறையா மருமக வீட்டு விசேஷத்துக்குப் போறோம். பளிச்சின்னு இருக்க வேண்டாமான்னு கேட்டு பீரோவையே தலைகீழாப் புரட்டிப் போட்டு கடைசியா எங்க கல்யாணப் பட்டுப் புடவையையே கட்டிட்டு வந்திருக்கா. அதான் இவ்வளவு லேட்."

கணவனை இடித்தாள் சந்திரா. "அவங்க ஒரு கேள்வி தானே கேட்டாங்க. அதுக்கு இத்தனை பதில் தேவையா?"

"கேள்விக்கான பதிலை விளக்கிக் கூற வேண்டாமா?"

"ஆமா! இவர் பெரிய தமிழ் வாத்தியார். விளக்கம் கூற வந்திட்டார். கொஞ்ச நேரம் பேசாம இருங்க."

"சரிம்மா... பேசலை!" - வாயை மூடிக்கொண்ட ராமச்சந்திரனைப் பார்த்து அடக்கமாட்டாமல் சிரித்தான், மனோகர்.

"மனோ! இப்ப ஏன் சிரிக்கிறே?"

"அக்கா! நான்கூட பிரபாவோட பொறுமையைப் பார்த்துப் பலமுறை அசந்திருக்கிறேன். இப்படிக்கூட ஒருத்தரால பொறுமையா இருக்க முடியுமான்னு... ஆனா இப்பத்தான் எனக்குப் புரியுது."

"என்ன புரியுது?"

"இந்தப் பொறுமை யெல்லாம் யார்கிட்ட இருந்து வந்ததுன்னு... மாமா! பிரபா அப்படியே உங்க மாதிரிதான்."

"ரொம்ப சந்தோஷமா இருக்கு, மாப்பிள்ளை. நல்லவேளையா எம்புள்ள என்னை மாதிரி பொறந்தான். இல்லேன்னா..."

"என்ன? என்ன இல்லேன்னா..." - சந்திரா மிரட்ட, பேச்சை மாற்றினார்.

"இல்லைன்னா... உன்னை மாதிரி பிறந்திருப்பான்."

"அப்பா! அருமையான சமாளிப்பு..." - கைதட்டினான் பிரபாகரன். அனைவரும் வாய் விட்டுச் சிரிக்க, சந்திரா தாட்சாயிணியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"என்னை மன்னிச்சிடுங்க."

"எதுக்குப் பெரிய வார்த்தையெல்லாம்..."

"இல்லை. என்னாலதான் இந்தக் குடும்பத்தோட சந்தோஷம் தொலைஞ்சு போச்சு."



"அம்மா! எந்த நேரம் என்ன பேசறீங்க? எதைப் பேசணுமோ அதை மட்டும் பேசுங்க."

"வேற... என்னடா பேசுறது?"

"எங்க கல்யாணத்தைப் பத்திப் பேசுங்க. என்னால இனிமே வெயிட் பண்ண முடியாது!" - பிரபாகரன் கறாராய்ச் சொல்ல முகம் சிவந்தாள் சிவசங்கரி.

"இதுக்குத்தான் நான் சொன்னேன். முதல்ல அக்கா கல்யாணம் முடியட்டும்னு... பிரபா எவ்ளோ ஃபீல் பண்றாரு பாருங்க..."

"ஏன்டா...! இன்னிக்கு நல்ல முகூர்த்தம்தானே! உனக்கும் இப்பவே கல்யாணம் பண்ணிடலாமா?" - என ராமச்சந்திரன் கேட்ட நேரம், ஒரு குரல் குறுக்கிட்டது.

"அதெப்படி? நான் இல்லாம கல்யாணம் நடந்திடுமா?"

அனைவரும் லேசான திடுக்கிடலோடு திரும்ப, காஞ்சனா பெரிய பரிசுப் பொட்டலத்தோடு நின்றிருந்தாள். அனைவரின் முகமும் புன்னகையைத் தொலைத்துவிட, அலட்சியமாய் நர்மதாவை நெருங்கிப் பரிசைக் கொடுத்தாள்.

"ஹேப்பி மேரீட் லைஃப்!"

"தேங்க் யூ!" - நர்மதா புன்னகைத்தாள்.

"யாரும்மா நீ?" - தாட்சாயிணி கேட்க, புரியாமல் விழித்தாள்.

"நான் யாரா? இவங்க யாரும் சொல்லவே இல்லையா?"

"இல்லையே...?"

"சங்கரி! நீங்ககூடச் சொல்லலியா?" - கேலியாய்க் கேட்க, சிவசங்கரி கடுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"நான் இங்க வந்தது யாருக்குமே பிடிக்கலை போலிருக்கு!"

"தெரியுதில்ல... கிளம்பு!" - பட்டெனச் சொன்னான் பிரபாகரன்.

"என்ன பிரபாகர்! சங்கரி பக்கத்தில இருந்ததும் பயம் போயிடுச்சா?"

"அடச்சீ! நீயெல்லாம் ஒரு ரௌடின்னு உன்னை நினைச்சு நான் பயப்படணுமா?"

"பயப்படலை... ஆனா கோபப்படுறீங்களே?"

"ஏம்மா! நீ யாருன்னு சொல்லவே இல்லையே?"

"நான் யாருன்னு சொல்லட்டுமா, பிரபா? சங்கரி... சொல்லிடவா?"

மனோ முன்னே வந்தான். "காஞ்சு! போதும்... நீ பில்-டப் பண்ணியது. யாருன்னு சொல்லிடு. என் அக்கா முகம் பழையபடி மாறிப் போச்சு பார்!"

மனோவின் இயல்பான பேச்சில் பிரபாவும் சங்கரியும் குழப்பமடைய, காஞ்சனா வெள்ளிக் காசுகளைச் சிதற விட்டது போல் சிரித்தாள்.

"என்ன சங்கரி! ரொம்ப பயந்திட்டீங்களா?"

"ஏய் யார் நீ?"

"நான் மனோவோட ஆள்!" - என்றாள் தோளைக் குலுக்கியவாறே.



"என்னது?" - நர்மதாவின் குரல் உயர, பதறினான் மனோகர்.

"ஐயோ! ஏய் காஞ்சு... நீ என் குடும்பத்திலேயே குழப்பத்தை உண்டு பண்ணிடுவ போலிருக்கே... எது பேசுறதா இருந்தாலும் என் மாமாவைப் போல் தெளிவாய்ப் பேசிடு!"

"யாரு? பிரபாவோட அப்பா மாதிரியா?"

"ம்... ம்..."

"ஓ.கே. எல்லாரும் நல்லா கவனியுங்க. நான் மனோவின் தோழி. தன் சகோதரியைப் பிரபாவுடன் சேர்த்து வைப்பதற்கு மனோ என்னிடம் உதவி கேட்டதன் பேரில்... நான் நிறைய ரிஸ்க் எடுத்துக் கொஞ்சம் டிராமா போட வேண்டியதாகி விட்டது.

"அதன் பலனாக இன்று உங்கள் அனைவரையும் ஒன்றாக இந்த வீட்டில் பார்க்கிறேன். ஸோ... இது அனைத்திற்கும் காரணமான எனக்கு நீங்கள் ஒரு கோவிலே கட்டலாம்!" - காஞ்சனா பேசப் பேச, ஒவ்வொருவரின் முகமும் மாறியது.

பிரபாகரனின் முகம் பளீரிட, ஓடிவந்து மனோவைக் கட்டிக் கொண்டான்.

"அடப்பாவி! என்கிட்ட கூடச் சொல்லலியே நீ?"

"சொன்னா... உங்க முகத்தில உண்மையான பெர்ஃபார்மென்ஸ் வந்திருக்குமா?" - புருவத்தைத் தூக்கியவாறே கேட்டான் மனோகர்.

"என்னது? பெர்ஃபார்மென்ஸா? யூ இடியட். உன்னால நானும் பிரபாவும் எவ்வளவு வேதனைப்பட்டோம்.

நீ சைலண்ட்டா இருந்திட்டு என்ன காரியம் பண்ணியிருக்கே? உன்னை விட்டேனா பார்!" - என்றவாறு தம்பியை நெருங்கி முதுகில் மொத்தினாள் சங்கரி.

"ஐயோ! அடிக்காதீங்க!" - என்றவாறே கணவனைப் பற்றிக் கொண்டாள் நர்மதா.

"உன் மனைவியால தப்பிச்சே... இல்ல, உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கி இருப்பேன்!" - பற்களைக் கடித்தாள்.

"அக்கா! என்னோட ஐடியாவாலதான் நீ பிரபாகூடச் சேர்ந்திருக்க. அதை மறந்திடாதே!"

"போதடா. செய்யுறதை எல்லாம் செய்துட்டு பேச்சைப் பாரு."

"மனோ! நான் கிளம்புறேன்டா."

"என்ன அவசரம் காஞ்சு! இருந்து சாப்பிட்டுப் போ."

"வேண்டாம்ப்பா. உனக்குக் கிடைச்ச சாப்பாடே அதிகம். என் முதுகு இதையெல்லாம் தாங்காது!" - என்றாள் பயமாய்.

பிரபாகரன் புன்னகைத்தான். "ஸாரிம்மா... இது மனோ ஏற்பாடு என்று தெரியாமல் உன்னை ரொம்ப திட்டிவிட்டேன். ஸாரி!"

"பரவாயில்லை டாக்டர் ஸார். ஆனா உண்மையில் உங்க அன்பைப் பார்த்து அசந்திட்டேன். மனோவின் அக்கா கொடுத்து வைத்தவள்!"

"இல்லை! நான்தான் கொடுத்து வைத்தவன்..."



"இல்ல. நான்தான் கொடுத்து வச்சவ. பிரபா எனக்குக் கிடைக்க நான்தான் கொடுத்து வெச்சிருக்கணும்."

"அட நிறுத்துங்கப்பா. உங்க எல்லாரையும்விட நான்தான் கொடுத்து வச்சவன்!" - என்றான் மனோகர்.

"ம்ஹூம்! உங்க எல்லாரையும்விட நான்தான் கொடுத்து வச்சவள்" - என்றாள் நர்மதா.

"என்ன?" - அனைவரும் கோரஸாய்க் கேட்டனர்.

"ஆமா! பிரபா அண்ணனுக்கு சங்கரி அண்ணிதான்னு எப்பவோ முடிவான விஷயம். ஆனா... எனக்கு... உங்க யாரையுமே தெரியாது. இப்போ எனக்குன்னு இவ்வளவு சொந்தம் கிடைச்சிருக்கு. தெய்வம் மாதிரி ஒரு கணவன். அம்மா மாதிரி ஒரு மாமியார். கூடப்பிறந்த சகோதரி மாதிரி ஒரு அண்ணி. இதெல்லாம் எனக்குக் கிடைச்சிருக்கே... அப்போ நான்தானே கொடுத்து வெச்சவ?"

"இல்ல!" - மறுத்தான் மனோகர்.

"ஏன்?"

"நம்ம எல்லாரையும் பார்த்துச் சந்தோஷப்படுற அம்மா அப்பாதான்..."

"இப்படிப் பேசிப் பேசி என் மேட்டரை சுல்ல விட்டுடாதீங்கப்பா..." - பிரபாகரன் பரிதாபமாய்க் கேட்க, அனைவரும் சிரித்தனர்.

"நாளைக்கே கல்யாணம்!" - உற்சாகமாய்க் கூவினான் மனோகர். அனைவரும் கைதட்டி ஆர்ப்பரிக்க, நர்மதா மெதுவாய்த் தன் வயிற்றை வருடினாள்.

"கண்ணே! கேட்கிறதா இந்த உற்சாகக் கூக்குரல். நம்மைச் சுற்றி இன்ப வெள்ளம் ஓடுகிறதடா. அம்மாவின் கழுத்தில் புதிதாய்த் தாலி, குங்குமம்... புதிய உறவுகள். அவர்களின் மகிழ்ச்சி... எல்லாம் உனக்குத் தெரிகிறதா?"

"ஒன் மினிட்! நாம எல்லாரும் இப்படி சந்தோஷமா இருக்க முக்கியக் காரணமான ஒருத்தரை நான் உங்களுக்கு அடையாளம் காட்டப் போறேன்!" - மனோகர் சத்தமாய்ச் சொல்ல, அனைவரும் நெருங்கினர்.

"யாரு?"

"யாருடா மனோ?"

"யாருங்க?"

"யாருப்பா?"

"அந்தப் பெருமைக்குரிய மனிதர் என் மனைவியின் வயிற்றில் இருக்கும் என் குட்டி நர்மதாதான்! அவராலதான் இது எல்லாமே நல்லபடியா நடந்தது. இதற்கு முழுக் காரணம் அவர்தான்!" - முகம் முழுக்கப் புன்னகையோடு சொன்ன கணவனைப் பிரமிப்பாய்ப் பார்த்தாள் நர்மதா.

"யாராலும் சாதிக்க முடியாததை வயிற்றுக்குள் இருந்து கொண்டே என் பிள்ளை சாதித்துவிட்டது. அதனால குட்டி ஜானியருக்கு எல்லாருமா சேர்ந்து ஒரு 'ஓ' போடுங்க..." - மனோ சொன்னதும் அனைவரும் உற்சாகமாகக் கத்த, பொங்கிய நேசத்தோடு கணவனை இறுக அணைத்துக் கொண்டாள் நர்மதா.

இப்போது உற்சாகக் கூச்சல் காதைப் பிளந்தது.